

# அருவி ஆறு

பெருக்கு - 04

வெளியீடு

கலாசார பேரவை

வெங்கலசெட்டிகுளம்

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருவி ஆறு

பெருக்கு – 04

வெளியீடு
கலாசார பேரவை
வெங்கலசெட்டிகுளம்

– 2019 –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | "அருவி ஆறு" பெருக்கு - 04 |
| இதழாசிரியர்கள் | : | மலர்க்குழு |
| பக்கம் | : | |
| முதற் பதிப்பு | : | 2019 ஐப்பசி |
| வெளியீடு | : | பிரதேச கலாசார பேரவையும், பிரதேச செயலகமும், வெங்கலசெட்டிகுளம். |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | இரா. ஜயமோகன், அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| பக்க வடிவமைப்பு பதிப்பு | : | நியூ ஸ்கை பதிப்பகம், 1ம் குறுக்குத் தெரு, வவுனியா. |
| விலை | : | ரூபா. 750.00 |
| நிதி அனுசரணை | : | வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம். |


***"இந்நூலில் பிரசுரமாகியிருக்கும் ஆக்கங்களின் மீதெழும் விமர்சனக் கருத்துக்களுக்கு அவ் ஆக்கத்தை எழுதியவரே பொறுப்புடையவராவர்"***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மலர்க்குழு"

| | |
|---|---|
| K. முகுந்தன் | தலைவர், மலர்குழு<br>உதவிப்பிரதேச செயலாளர்,<br>வெங்கலசெட்டிகுளம். |
| K. கிறிஸ்ரி குணராஜா | சிரேஸ்ட முகாமைத்துவ உதவியாளர்,<br>வெங்கலசெட்டிகுளம். |
| அ. அன்ரனி குரூஸ் | உபதலைவர், கலாசாரப் பேரவை,<br>வெங்கலசெட்டிகுளம். |
| K. சற்சுருவேணு | கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,<br>வெங்கலசெட்டிகுளம். |
| சிவ. கஜேந்திரகுமார் | இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,<br>வெங்கலசெட்டிகுளம். |
| ரா. பிறிஸ்கா எல்சி | கலாசார உத்தியோகத்தர்,<br>வெங்கலசெட்டிகுளம். |
| இரா. ஜயமோகன் | அபிவிருத்தி உத்தியோகத்தர்,<br>வெங்கலசெட்டிகுளம். |
| D. கேதீஸ்வரி | அபிவிருத்தி உத்தியோகத்தர்,<br>வெங்கலசெட்டிகுளம். |
| T.S. சாஜித் | அபிவிருத்தி உத்தியோகத்தர்,<br>வெங்கலசெட்டிகுளம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| இல. | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 01. | வெங்கலச்செட்டிகுளம் பிரதேசத்தில் நாகச் சிற்றரசு | 01 |
| 02. | நவீனத்துமானது கலைவரலாற்றில் ஏற்படுத்திய மாற்றம் | 13 |
| 03. | செட்டிகுளத்தாயே நீ வாழியவே | 21 |
| 04. | நம் நாட்டு புலவர்கள் வளர்த்த நாடகக்கலை | 27 |
| 05. | நான்கெழுத்து சொர்க்கம் | 31 |
| 06. | மனிதனின் விஞ்ஞான வளர்ச்சியும் இயற்கையுடனான போட்டியும் | 33 |
| 07. | அம்மா உடனடியாக | 36 |
| 08. | நல் உள்ளம் | 38 |
| 09. | அன்னை, நம்பிக்கை, நட்பு | 42 |
| 10. | உலக மயமாதலில் இந்துக் கலைகளின் வகிபாகம் | 43 |
| 11. | உண்மை உரைக்கலாமா | 47 |
| 12. | இஸ்லாத்தின் பார்வையில் இலஞ்சமும் அதன் சாபக்கேடும் | 48 |
| 13. | பிரார்த்தனைகளுடன் | 52 |
| 14. | மனித மேம்பாட்டிற்கு அவசியமான சுயதொழில் முயற்சி ஒன்றினை ஆரம்பிப்பதற்கான தேவைகளும், அதனை ஆரம்பிப்பதற்கான தொழில்நுட்ப வழி முறைகளும் | 53 |
| 15. | அடையாளப்படுத்திக்கொள் | 61 |
| 16. | ஏதிலி ராஜாக்கள் | 62 |
| 17. | இழந்தது எது? இருப்பது எது? | 65 |
| 18. | இன்றைய கலாச்சாரம் | 66 |
| 19. | வன்னி வயற் பண்பாட்டில் குருவிப் பள்ளு | 69 |
| 20. | இன்று தேடுகின்றேன் | 74 |
| 21. | மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் பணிப்பெண்களின் பயணம் பற்றிய மேலோட்டம் | 76 |
| 22. | மாறிப்போன சமூகம் மங்கிப்போன கலாச்சாரம் | 78 |
| 23. | சமூக மூலதனமும் சிறுவணிக அபிவிருத்தியும் | 80 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. காப்பாற்றமாட்டாயோ பரமசிவா 87

25. உனக்காக ஏங்கி ஓர் உள்ளம் தனிமையிலே 89

26. இயற்கையும் இனமும் உன்னாலே கருகுது 90

27. கையடக்கத் தொலைபேசியின் உளசமூக தாக்கங்கள் 91

28. இலங்கை தகவல் அறியும் உரிமைச்சட்டம் 103

29. மனிதம் எங்கே? 107

30. முதலியார்குளம் பழைய கிராமம் பற்றிய குறுந்தகவல் 108

31. வாழ்ந்து பார் வாழ்க்கை இனிக்கும் 112

32. புத்தளம் பிரதேசமும் குப்பைத் திட்டமும் 113

33. அழிந்து வரும் கலாசாரத்தை பாதுகாப்போம். 118

34. வன்னியில் முத்துமாரி 119

35. பொங்கலோ பொங்கல் 123

36. போதையற்ற ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புவோம். 124

37. தொட்டுணராப் பண்பாட்டு அழிவும் பொருளாதார பாதிப்பும் வீரபுரம் கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு 126

38. மனித மாற்றம் எப்படி 128

39. மனித வாழ்க்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஆதிக்கம். 130

40. சிறுவர்களைப் பாதுகாப்போம். 135

41. இந்திய உளவியலும் மேலைத்தேய உளவியலும். 138

42. அறநூல்கள் காட்டும் பெண்கள்- இல்லாள் 147

43. சமூகப் பாதுகாப்பிற்கு வழி கோலும் மனிதனின் இலக்கியத் தேடல் 149

44. ஆடி அமாவாசை விரதத்தின் சிறப்பு 153




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்கல செட்டிகுளப்பிரதேச
# கீதம்

வாழ்க வாழ்க வாழ்கவே வாழ்கவே
வெங்கல செட்டிகுளப்பிரதேசம்
வளர்க தமிழ்கலை
வளர்க கல்வி வாழ்க நெறியே

(வாழ்க....)

குளம் நிறைந்த வன்னி மண்ணில்
குறையாச் செல்வ பெருநிலம்
வளம் நிறைந்த வவுனியா
மாவட்டத்து உயர் நிலம்

(வாழ்க....)

நெல் வயல் உழுந்து தோட்டம்
நிறைந்த கனிமரங்களோடு
பல்வகை மரங்கள் சூழ்ந்த
பழைமை மிக்க விளைநிலம்

(வாழ்க....)

அருவியாறு பெருகி ஓடும்
அயரா உழைப்பில் மனம் நிறையும்
பிதிர்கடன்களட ஆற்றும் கல்லாறு
பெருகி ஓடி வளரும் பெருக்கும்

(வாழ்க....)

மருவி வனத்துறையும் பழைய
வௌவாலை சிவன் கோயில்
பெரியகட்டு அந்தோனியார்
பெருங்கருணை இஸ்லாத்தோ டொன்றாய்

(வாழ்க....)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா மாவட்டச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி



வவுனியா மாவட்டத்தின் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் பிரதேச பண்பாட்டு விழாவினை அலங்கரிக்கும் "அருவி ஆறு" பாகம் - 04 மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இயற்கை எழில்மிகு வளங்களைத் தன்னகத்தே கொண்ட வவுனியா மாவட்டத்தின் வெங்கலச் செட்டிகுளம் பிரதேசத்தின் கலை கலாசாரத்தினை பிரதிபலித்து, "அருவி ஆறு" எனும் இயற்கையின் பெயரில் வெளிவருகின்ற இந்நூலானது இப் பிரதேசத்தினால் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷங்களில் ஒன்றாகும்.

பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் வாய்ப்புகளிற்காக காத்திருக்கும் கலைஞர்களை அடையாளம் கண்டு அவர்களின் திறமைகளை தேசிய ரீதியில் வெளிப்படுத்திச் செய்வதுடன், பிரதேசம் சார் முக்கிய நிகழ்வுகளை வருடாந்த பதிவுகளாக கொண்டு வெளிவரும் இவ் "அருவி ஆறு" மலர் பிரதேச எதிர்காலத்திற்கு நற்சான்றாக அமையும்.

இம் மலர் வெளியீடானது இனிவரும் காலங்களிலும் ஆண்டு தோறும் சிறப்புற நடைபெற வேண்டுவதுடன், நூல் வெளியீட்டிற்கு பங்களிப்புச் செய்த பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச கலாசாரப் பேரவை உள்ளிட்ட உதவி புரிந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஐ.எம்.ஹனிபா,**
**மாவட்டச் செயலாளர்,**
**வவுனியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

எதிர்காலத்திற்கான எமது பண்பாட்டு இருப்பை பேணவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். சிறந்த கலை பண்பாடுகளையுடைய சமூகம், உயர்ந்த நாகரீகத்தின் அடையாளமாகும். பண்பாட்டுக்கால விழுமியங்கள், நீண்ட காலத்திற்கு நூற்றாண்டு கடந்தும் நிலைபெறுவன. செம்மொழியான தமிழ்மொழி இன்னும் நூறு ஆண்டுகளில் அழிவடையும் நிலை உருவாகியுள்ளதாக, ஐக்கிய நாடுகள் சபையால் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எனவே தமிழ்மொழி ரீதியாகவும், பாரம்பரிய விழுமியங்களிலும், பண்பாட்டு அம்சங்களைக் கொண்டுள்ள நாம், மொழியுடனான எமது பண்பாட்டு பாரம்பரியத்தின் தொன்மைமையயும், ஆவணப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, தமிழ் கலைகளின் இலக்கிய ஆக்கங்களை ஒவ்வொரு பிரதேசத்தினூடாகவும் வெணிக்கொணர வேண்டும்.

அவ்வாறு வெங்கலசெட்டிகுளம் கலாசார பேரவையும், பிரதேச செயலகமும் இணைந்து "அருவி ஆறு பெருக்கு-04" ஆக வெளியீடு செய்யும் இம்மலர் பாரட்டுக்குரிய ஒன்றாகும். கலை பண்பாட்டு ஆர்வலர்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் விதத்தில் எதிர்வரும் காலங்களில், அடுத்த தலைமுறைக்கான இலக்கியப்பதிப்பாக இந்நூல் மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென வாழ்த்தி நிற்கின்றேன்.

திருமதி. சுஜீவா சிவதாஸ்
உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் வாழ்த்துச் செய்தி

வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து வருடந்தோறும் வெளியீடும் 'அருவி ஆறு' எனும் நூல் இவ்வருடமும் பெருக்கு – 04 ஆக வெளிவருவது மிக்க மகிழ்ச்சியே.

பண்டைய காலங்களில் கலை கலாசாரம் என்பது மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்து காணப்பட்டது அக்கால வேலைக் களைப்பை போக்கவும், இன்ப துன்ப நிகழ்வை கழிக்கவும் மருத்துவ செயற்பாடுகளுக்காகவும், தொழில் விருத்தி செய்யவும் கலையை ஒரு உந்து சக்தியாகவும், வழக்கமாகவும் வைத்திருந்தான். இதனை புராண, இதிகாச, வரலாற்று கதைகள் அம்சங்கள் சாட்சியை கொண்டு அறியலாம்.

பின் நவீனத்துவ நாட்களில் மேல்நாட்டு கலை கலாசார கலப்பு, இலத்திரனியல் கருவிகள் வருகை, தொழில்முறைக் கல்வி விருத்தி, சினிமா மோகம் எனப் பலவகையான நவீனத்துவ வளர்ச்சியால், இக்கலை கலாச்சார நாட்டம் மனிதனுக்குள் அற்றுப்போயிற்று. பரந்த அளவில் சிந்திக்கின்ற மனித மூளையை, நவீனத்துவமானது தனது வளர்ச்சியில் உருவான சில கருவிகளை பயன்படுத்தி, ஒரு சுற்று வேலியை அமைத்து முடக்கியது. இதனால் கலை கலாசார அழிவுகள், துஸ்பிரயோகங்கள் குற்றச் செயல்கள் என்பன அதிகரித்தது. கலை கலாசார செயற்பாடுகளில் ஈடுபடும் ஒரு மனிதனிடம் இயற்கையாகவே நற்பண்பும், பணிவும், மரியாதை குணமும் இருக்கும் என்பதை மரபுவழி மணவாழ்க்கை பேசும் வழக்கத்தில் அல்லது முறையில் அறிந்து கொள்ளமுடியும். மீண்டும் அந்த நிலையை தற்கால மனிதனிடம் உருவாக்க, இவ்வகையான படைப்புக்களும், வெளியீடுகளும் துணைபுரியும் என்பது எனது நம்பிக்கை.

அதனடிப்படையில் பிரதேச பாரம்பரிய வரலாற்று அம்சங்களோடு, கலை கலாசார விடயங்கள், விழிப்புணர்வூட்டும் கட்டுரைகள், தொழில்முறைக் கலைவடிவங்கள், நவீன விஞ்ஞான விருத்திகள் என பல்சுவைக் கதம்பமாக இந்நூல் வெளிவருகின்றது. இவ்வாறு வருடந்தோறும் இந்நூல் ஆற்றுப் பெருக்காக பெருக்கெடுக்க வேண்டும். பிரதேச பாரம்பரிய வரலாற்று அம்சங்கள் கலை கலாசார விடயங்களை பாதுகாக்கும் அல்லது அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பொக்கிசமாக வெளிவர வேண்டும் என நான் வாழ்த்தி நிற்கின்றேன். மேலும் இந்நூலிற்கு கட்டுரைகளை வழங்கிய எழுத்தாளர்களுக்கும், மலர்க்குழுவினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**திரு.K.சிவகரன்,**
**பிரதேச செயலாளர்,**
**தலைவர் கலாசாரப் பேரவை,**
**வெங்கலச் செட்டிக்குளம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலர்குழு தலைவரின்
## வாழ்த்துச்செய்தி

வளங்கொளிரும் வன்னிமண்ணில் செட்டிகுளம் எனும் தொன்மைச்சான்றுகள் நிறைந்த பூமியிலே, வற்றாத பெருநதியாய் ஓடிக்கொண்டிருக்கும் "அருவி ஆறு" எனும் நதியின் பெயர் தாங்கி வெளிவரும் இப்பிரதேச நூலுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு ஆனந்தம் அடைகின்றேன். வளர்ந்து கொண்டே இருக்கும் நவீன தொழிநுட்பங்களில் நாட்டம் கொண்டு, கலைகலாசாரம் என்ற விடயங்களில் இருந்து விடுபட்டுச்செல்லும் இக்கால இளஞ்சந்ததியினர், பிரதேச தொன்மைகளையும், அதன்முக்கியத்துவத்தையும், கலைகலாசார விழுமியங்களையும் வருங்காலங்களில் அறிந்துகொள்ள இந்நூல் சான்றாக அமையும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

மதம் சார்ந்தும், பிரதேசத்தில் வாழ்ந்த பண்டைய கால மனிதர்களின் வாழ்க்கை வடிவங்கள் சார்ந்தும், அவர்கள் பயன்படுத்திய பண்பாட்டு அம்சங்கள் சார்ந்தும், ஏராளமான தொன்மைகள் நிறைந்த விடயங்கள் இப்பிரதேச மண்ணில் பரவிக்கிடக்கின்றன. அவற்றையெல்லாம் ஒவ்வொன்றாக, நுண்ணறிவாக அலசி ஆராய்ந்து வருகின்றார்கள் இப்பிரதேசவாழ் ஆராய்சியாளர்கள். அவர்களுடைய ஆராய்ச்சியின் வெளிப்பாடுகளையும், ஏனைய கலை கலாசார அம்சங்களையும் தன்னகத்தே கொண்டு, நான்காவது கிளையாக விரிந்து செல்கின்றது இந்த அருவி ஆறு எனும் நதிப்பிரவாக நூல்.

பெருக்கு - 04 ஆக வெளிவரும் இந்நூலிற்கான நிதி அனுசரணை வழங்கிய வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும், குறுகிய காலத்தினுள் இந்நூல் வெளிவர அயராது பாடுபட்ட மலர்க்குழு உறுப்பினர்களுக்கும், ஆக்கங்கள் எழுதிய எழுத்தாளர்களுக்கும் எனது நன்றியை தெரிவிப்பதோடு, அருவி ஆறு எனும் நூல் வருங்காலங்களிலும் பல்வகை அம்சங்களை தாங்கி பெருக்கெடுக்க வேண்டும் எனவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

திரு. கெ.முகுந்தன்,
தலைவர், மலர்குழு,
உதவிப்பிரதேச செயலாளர்,
வெங்கலசெட்டிகுளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞா.ஜெகநாதன் J.P.,
B.A. Dip in Edu.,
(ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர்)

# வெங்கலச்செட்டிகுளம் பிரதேசத்தில் நாகச் சிற்றரசு

## அறிமுகம்

கி.பி. 3 ஆம் நூற்றாண்டு காலப் பகுதிகளுக்கு முன்பு, தற்போது செட்டிகுளம் என அழைக்கப்படும் குளத்தின் பெயர் அரசன் குளம் என்றிருந்தது. இக்காலப் பகுதியில், குறிப்பாக, கி.பி. 247 ஆம் ஆண்டில், குதிரை மலை இராட்சியத்தை, நாகர் குல இளவரசியான அல்லி அரசாணி ஆண்டு வந்தாள். இந்த அரசியின் ஆணைக்குட்பட்ட முத்தரிப்புக் கடல் பிரதேசத்தில், முத்துக் குளிப்பதற்காகத் தன்னுடைய அடியாட்களுடன், இந்தியாவில் இருந்து வீரநாராயணச் செட்டி என்ற நாட்டுக் கோட்டைச் செட்டி ஒருவன் வந்தான். அந்தச் செட்டியின் பெயர் வீரவராயன் செட்டி என்றும் சில நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தச் செட்டியும் அவனுடைய கூட்டத்தினரும் வந்த மரக்கலம் உடைந்து, குதிரை மலைத் துறைமுகத்தை அண்டிய கடற்கரையில் கரையொதுங்கியது. அவர்கள் அங்கிருந்து கால்நடைப் பயணமாக, வடக்கு நோக்கிப் பயணித்தார்கள். நெடுந்தூரம் பயணித்து, அருவி ஆற்றைக் கடந்து கப்பாச்சி என்ற இடத்தை அடைந்தனர்.

அவர்கள் அங்கே இருந்த சந்திரசேகரர் ஆலயத்தையும், ஆலயத்தில் இருந்த கருங்கல் சிலைகளையும், அண்மித்து இருந்த வெளவாலைக் கேணியையும் கண்டார்கள். தங்களைக் காப்பாற்றிக் கரை சேர்த்த சிவனை வணங்கி நின்றார்கள்.

## செட்டிகுளம்

அவன், தான் கொண்டு வந்த திரவியங்களை அங்கே மறைத்து வைத்து விட்டு, மீளவும் இந்தியாவுக்குச் சென்றான். இந்தியாவில் இருந்து, தனது கோத்திரக் குடும்பங்களில் சிலவற்றை அழைத்து வந்தான். அவர்களைக் கப்பாச்சிக்கு வடக்கே அமைந்திருந்த அரசன்குளம் என்ற இடத்தில் குடியமர்த்தினான். பின்பு, அந்தக் குளத்தைப் புனரமைத்து, அந்தக் குளத்திற்கு செட்டிகுளம் எனப் பெயரிட்டான்.

## வெங்கலச்செட்டிகுளம்

சில காலத்தின் பின்பு, இந்தச் செட்டி இந்தியாவில் இருந்து சிவனுடைய ஒரு பெரிய வெங்கலச் சிலையைக் கொண்டு வந்தான். மக்களுடைய ஆதரவுடன் அந்தச் சிலையைச் சந்திரசேகரர் கோவிலிலே பிரதிஸ்டை செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு வாழ்ந்த பூர்வீகமாக நாகர்குடி மக்கள் கருங்கல் சிலைகளில் பழக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இந்த வெங்கலச் சிலையின்பால் பக்தி மயப்பட்டு, வீரநாராயணச் செட்டியின் மேல் மதிப்பு வைத்து, செட்டிகுளம் என்றிருந்த பெயரை வெங்கலச் செட்டிகுளம் என அழைக்கத் தொடங்கினார்கள்.
வீரநாராயணச் செட்டி குடியமர்த்திய மக்கள் சில காலம் அங்கு வாழ்ந்திருந்தார்கள். தொழில் பிரச்சினை காரணமாக அவர்கள் தங்களுடைய சொந்த இடம் நாடி மீண்டனர். வீரநாராயணச் செட்டியும் அவர்களுடன் சென்றிருக்கலாம் என நம்பப்படுகிறது.

## தொல்பொருள் சான்றுகள்

வெங்கலச் செட்டிகுளம் பிரதேசத்தில், கிறிஸ்து சகாப்தத்திற்கு முந்திய காலத்தில், நாகச் சிற்றரசுகள் இருந்ததற்கான பல தொல்லியற் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. அவற்றில் முதன்மையானதாக, வேரக்கல் நாகச் சிற்றரசு இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன.

வேரக்கல் நாகச் சிற்றரசு இருந்த இடம், தற்போது கண்டுபிடிக்க முடியாத அளவுக்குச் சிதைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அந்தத் தொல்லியற் சான்றுகளைப் பல காலம் பார்த்துப் பழக்கப்பட்ட முறையில், அதனுடைய வரலாற்றையாவது எம்மால் பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கையோடு, இந்தச் சிறிய ஆய்வைத் தொட்டிருக்கின்றேன்.

இதற்காக நாம் எம்முடைய பூர்வீக வரலாற்றைச் சற்றுப் பின்னகர்த்திப் பார்க்கலாம். இந்த வரலாறு எமக்கு, முன் பின் வரலாற்றுத் தொடர்புகளை ஒப்பிட்டுப் பார்க்க உதவியாக அமையும்.

## நாகதீபத்தின் அமைவிடம்

இலங்கையின் பூர்வ குடிகளான நாகர்கள் அரசமைத்து வாழ்ந்த பிரதேசம் நாகதீபம் என வழங்கப்பட்டது. கதம்ப நதி எனப்படும் அருவி ஆறு, நாகபொக்கணை, திரிகூடம் ஆகிய இடங்களுக்கு வடக்கே உள்ள பிரதேசம் நாகதீபம் எனப்பட்டது. நாகதீபத்தில், யாழ்ப்பாணக் குடாநாடு, அதன் அயற் தீவுகள், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்கள் உள்ளடங்குகின்றன.

## நாகர்களின் தொன்மை வரலாறு

இலங்கையிலே தமிழ் வன்னிமைகள், சிங்கள வன்னிமைகள் என்ற இரு பிரதான சமூகக் கட்டமைப்புக்கள் தோற்றம் பெற்றிருந்தமையை பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர் சி.பத்மநாதன் ஆகியோர் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஈழத்தில் குறுணிக் கற்காலப் பண்பாட்டினை முடித்து வைத்து, செம்புக் காலத்தைக் குறிக்கும் பெருங்கற்கால யுகத்தினைத் தொடக்கி வைத்த மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தினராக நாகர் இன மக்களே உள்ளனர் என சிரான் தெரணியாகல குறிப்பிடுகிறார்.

இந்த சிங்கள, தமிழ் வன்னிமைகள் தோற்றம் பெற முன்னரே, வட இலங்கையில் நாகச் சிற்றரசுகள் உருவாகி, வளர்ச்சி பெற்று, தனித்துவமான சமுதாயக் கட்டமைப்பொன்றினை உருவாக்கி இருந்தமைக்கான தொல்லியற் சான்றுகள் அண்மையில் கிடைத்துள்ளன என்று பேராசிரியர் செ.கிருஸ்ணராசா அவர்கள் நாகர் எழு வன்னிக்கு எழுதிய முன்னுரையிலே குறிப்பிட்டிருக்கிறார். பழைய முறிகண்டி, அக்கராயன், உருத்திரபுரம், ஆதிவட்டக்கச்சி, மல்வில், பூநகரி போன்ற இடங்களில் தொல்லியல் ஆய்வுகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தொல்லியற் சான்றுகளான தமிழ்ப் பிராமிச் சாசனங்கள், நாகலிங்கம், இலட்சுமி நாணயங்கள், மட்பாண்ட ஓடுகள், மணிவகைகள், சுடுமண் சிற்பங்கள் போன்றன இப்பிராந்தியத்தின் அக்கால வளர்ச்சியைத் தெளிவாகக் காட்டுவதாக அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆதி சைவர்களான நாகர்கள் நாக வழிபாட்டையும், இயற்கை வழிபாட்டையும், நாகலிங்க வழிபாட்டையும் பின்பற்றியிருக்கிறார்கள். அவர்கள் சில காலங்கள் பௌத்த மதத்தையும் கைக்கொண்டிருந்தனர். தென்னிந்தியாவில், சைவம் மீள எழுச்சி கண்டபோது, மீளவும் சைவத்தைத் தீவிரமாகப் பின் பற்றினார்கள்.

நாகதீபத்தில், மகாகச்சக்கொடி, பெரிய புளியங்குளம், வெடுக்குநாறிமலை ஆகிய இடங்களில், கி.மு. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஐம்பத்தொரு தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கி.மு. 1000 - கி.மு. 800 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த நாகர்களாலேயே, ஈழத்தில் இரும்பின் உபயோகம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. அத்துடன், சுட்ட மட்பாண்டப் பாவனையும், பருத்தி நூல் உடைப் பாவனையும் இக்காலத்தில் வழக்கத்தில் இருந்துள்ளன.

### ஈழத்தில் நாக அரசுகள்

வரலாற்றுக்கு முந்திய காலம் தொடக்கம், ஈழத்தின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர்கள் இங்கு வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். ஆயினும், கி.மு. 6 ஆம் நூற்றாண்டு காலப் பகுதிகளில், கந்தரோடை, மாதோட்டம், குருந்தன்குளம், பூநகரி, களனி, திஸமாறாகாமம் போன்ற இடங்களில் நாக அரசுகள் காணப்பட்டமைக்கான தொல்லியற் சான்றுகள் காணப்படுகின்றன.

### நாகதீபத்தில் பூர்வீக நாக அரசுகள்

நாகதீபம் எனப்பட்ட வட இலங்கையிலே, கந்தரோடை, பூநகரி ஆகிய இடங்கள், நாக அரசுகளின் முதன்மைத் தலைநகரங்களாக இருந்த காலப்பகுதிகளில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகதீபத்தின் ஏனைய பிரதேசங்களிலும் நாகச் சிற்றரசுகள் இருந்தமைக்கான பல தொல்லியற் சான்றுகள் காணப்படுகின்றன.

அவற்றில் முதன்மையானதாக, வவுனியா மாவட்டத்தில், வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வேரக்கல் நாகச் சிற்றரசு காணப்படுகிறது. இந்த இடம் பெரிய புளியாலங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள, சின்னத்தம்பனை என்ற கிராமத்தில் உள்ள குளத்தின் கிழக்குப் பக்கமாக, குளத்தின் அலைகரையின் மேலாக, சின்னத்தம்பனையில் இருந்து கிட்டத்தட்ட நாலு கிலோ மீற்றருக்கு உட்பட்டதாக, அநுராதபுரம் மாவட்டத்தின் எல்லையை அண்டி காணப்படுகிறது.

## ஐதீகக் கதை

வேரக்கல் அரண்மனைச் சிதைவுகளைப் பற்றிய பயங்கர ஐதீகக் கதையொன்றை ஊர்ப் பெரியவர்கள் கூறுவார்கள். ஒவ்வொரு அமாவாசை தினத்தன்றும், பெருமுனியொன்று ஒரு நெருப்புக் கொள்ளியைக் கையில் பிடித்தபடி, ஒரு காலை வேரக்கல் மலையில் வைத்து, மறு காலைச் சின்னத்தம்பனைக் குளக்கட்டில் உள்ள மிகப் பழைமையான புளியமரத்தில் வைக்குமாம்.

மீண்டும் நடையாகக் காலைத் தூக்கி, குளத்தின் பள்ளவான் பகுதிக்கு மேற்காக உள்ள, சாளம்பைப்புலவு என்ற இடத்தில் உள்ள, ஒரு பெரிய மண் குன்றில் கால் வைக்குமாம். அடுத்த நடையாகக் காலைத் தூக்கி, இந்த மண் குன்றுக்குச் சற்றுத் தொலைவில் மேற்குப் பக்கமாக உள்ள இன்னுமொரு மண் குன்றில் காலை வைக்குமாம். மீளவும் வேரக்கல் மலையில் கால் வைத்து, விடிய விடிய இப்படியே இந்த இடங்களைக் காவல் செய்கிறதாம்.

அந்த நேரங்களிலும் சரி அல்லது எந்நேரமானாலும் சரி, அந்த முனியுடைய பாதையை யாரும் குறுக்கறுத்தால், அல்லது அது காவல் காக்கும் இடங்களில் கை வைத்தால், அது ஒரே அடியாக அடித்து விடுமாம். பல வருடங்களின் முன்பு, கிராமங்கள் இருந்த நிலையில், இந்தக் கதையைக் கேட்ட மக்கள் மிகப் பயத்துடன் அவ்விடங்களுக்குச் சென்று, சென்ற காரியங்களை முடித்து விட்டுத் திரும்பி விடுவார்கள்.

## புதையல் பிட்டி

பூர்வீக காலம் தொடக்கம், அவ்விடம், வேரக்கல் புதையல்பிட்டி என்று அழைக்கப்பட்டது. மீன் பிடிக்கும் கரப்பு செய்வதற்குத் தேவையான பிரம்பு வெட்டுவதற்கும், கூழாம்பழம் பறிப்பதற்கும் மக்கள் அவ்விடத்திற்குச் செல்வது வழமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்பொருட்கள்

அங்கு ஒரு நடுத்தர அளவான குளம், கிழக்கு நோக்கிக் காணப்படுகிறது. குளக்கட்டின், புட்டி வான் பகுதியிலும், நடுவிலும், பள்ள வான் பகுதியிலும் மலைகளும் பெருங்கற் குவியல்களும் காணப்பட்டன. பள்ளவான் பகுதியில் இருந்த மலையானது ஏனைய இரண்டு மலைகளை விடப் பெரிதாக இருந்தது. சின்னத்தம்பனைக் குளக்கட்டில் நின்று பார்த்தால், மரங்களுடன் கூடிய அந்த மலை தெரியும்.

கிராமத்தில் வழங்கி வந்த ஐதீகக் கதையை ஆதாரமாக வைத்து, வேரக்கல் பக்கத்தை நோக்கினால் அங்கே, குளக்கட்டின் பள்ளவான் பகுதியில் இருந்த மலையிலே பெரிய செங்கற்களிலான கட்டிடச் சிதைவுகள் காணப்பட்டன. மேற்குப் புறம் கல்மலை மூடலாக இருந்தது. கிழக்குப் பக்கமாகக் கட்டிடச் சிதைவுகள் உள் நோக்கிச் சென்றது. ஆனால், குகை போன்ற அமைப்பில் இல்லாமல் மேலே திறந்தபடி காணப்பட்டது.

சாய்ந்த நிலையில் கருங்கல் தூண்களும், இன்னும் வேறு கல் தளபாடங்களும் உள்ளே குவியல் நிலையில் காணப்பட்டன. உள்ளே வயது மதிக்க முடியாத மிகப் பெரிய சதுரக் கள்ளி மரம் ஒன்று நின்றது. அந்த மரத்தின் நடுக் கிளைப் பகுதியில், பெரிய கருங்குளவிக் கூடு ஒன்று இருந்தது. இந்தக் கள்ளி மரத்தின் அடியை அண்டிய இடத்தில், நிமிர்ந்த நிலையில் இரண்டு பேர்கள் அமரக் கூடிய கல் சிங்காசனம் போன்ற இருப்பிடம் காணப்பட்டது. அது முக வேலைப்பாடுகளுடன் கூடிய கைப்பிடிகளைக் கொண்ட பெரிய கல்லாசனமாகக் காணப்பட்டது.

அது மிக அழுத்தமான மேற்பரப்பைக் கொண்டிருந்தது. ஆசனம் ஆடாதபடி, அதன் கால்கள் நிலத்தில் புதைக்கப்பட்டுக் கல்லில் இறுக்கப்பட்டிருந்தது. ஆசனத்தின் பின் சாய்வுப் பக்கம் மிக உயரமாகவும், வேலைப்பாடுகளுடன் கூடியதாகவும், நடுச் சமச்சீர் வேலைகள் கொண்டமைந்தும் காணப்பட்டது. ஆசனத்தில் இருந்து, தனித்தனியாக இருவர் கால் வைப்பதற்கு வசதியாக பொழிவு வேலைப் பாடுகளுடன் கூடிய, வட்ட வடிவிலமைந்த, மிக அழுத்தமான கற்கள் காணப்பட்டன. கருங்கற்பாறையாக உள்ள மலையில் ஓரடிச்சதுரமான கற்றூண்களை நிறுத்தக் கூடிய குழிகளும் காணப்பட்டன. அவ்விடத்தை நோக்கும் போது, அது ஒரு மாளிகையின் சிதைவுகளாகக் காணப்பட்டது. குளக்கட்டில் நின்று, மேற்கு நோக்கிப் பார்த்தால், சற்றுத் தொலைவில், ஒரு பள்ளமான, தூர்ந்து போன கேணி போன்ற அமைப்புக் காணப்பட்டது.

புளியடிக்கட்டு

முனி கால்வைக்கும் மற்ற இடமான, பெரிய புளிய மரம், சின்னத்தம்பனைக் குளக்கட்டில் நிற்கிறது. அவ்விடத்தைப் புளியடிக்கட்டு என அழைப்பார்கள். இந்தப் புளியடிக் கட்டுக்கு வடக்குப் பக்கமாக கட்டிலே நின்ற வேப்பமரத்தடியில், மிகப் பழைய காலத்தில், குளக்கட்டு முறிப்பெடுத்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஐந்து தலை நாகச் சிற்பம்

குளக்கட்டு முறித்த பின்பு, நீர் இழுத்துப் பாய்ந்த இடத்தில், ஐந்து தலை நாகச் சிற்பம், வேள்வியிலே ஆடுகளை வெட்டப் பயன்படுத்தியிருக்கலாம் என நம்பப்பட்ட பெரிய கத்தி, சூலம் போன்றன கண்டெடுக்கப்பட்டன.

ஐந்து தலை நாகச் சிற்பம் தற்போது, சின்னத்தம்பனைப் பிள்ளையார் கோவிலிலே வைத்து வணங்கப்படுகிறது. கத்தியும், சூலமும் பத்திரகாளி கோவிலிலே வைக்கப்பட்டிருந்தன. 1985 ஆம் ஆண்டு, கிராமம் முழுவதும் வன்செயலால் எரிக்கப்பட்ட நிகழ்வு நடக்கும் வரையும், கத்தியும் சூலமும் பத்திரகாளி கோவிலிலே ஒரு பெரிய இறங்குப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன

### வேள்விக்கத்தி

பரம்பரைப் பூசாரிமார்களினால் இந்தக் கோவில்களில் பூசை செய்யப்படும் வழமை காணப்பட்டது. பூசை செய்யும் போது, நிறைகுடத்தின் மேல், அம்மனுடைய முகவடாகம் வைக்கப்பட்டிருக்கும். அதற்கு முன்பாக அரிசி, பழம், பாக்கு, வெற்றிலை போன்றன அமைந்த மடை போடப்பட்டிருக்கும். இந்தப் மடைக்கும், நிறைகுட அம்மனுக்கும் இடையில் வேள்விக் கத்தி வைக்கப்பட்டிருக்கும்.
பரம்பரைப் பூசாரியாக, நல்லதம்பி என்றழைக்கப்பட்ட, திரு.சி.கோபாலசிங்கம் என்பவர் இறுதியாக இருந்தார். இவருடைய காலத்தில் மேற்கூறப்பட்ட திருப் பொருட்கள் யாவும் மிகக் கவனமாகவும், புனிதமாகவும் பேணப்பட்டிருந்தன.

### பொக்கிணிக்கல்

வேரக்கல் மலைக்குத் தெற்குப் பக்கமாகச் சிறிது தூரத்தில், பரந்த கற்பாறைகளிலே தொப்புள் போன்ற குழி காணப்பட்டது. அதனால் அந்தக் கல்லைப் பொக்கிணிக்கல் என அழைத்தனர். அந்தக் குழியில் உள்ள நீரை மிருகங்கள் குடிக்கக் கூடிய அளவுக்கு அதிலே எந்த நாளும் நீர் இருந்தது. அவ்விடம் தற்போது என்ன நிலையில் உள்ளது என்பதை அறிய முடியாதுள்ளது.

### வேறு தொல் பொருட் தடயங்கள்

முனி கால் வைக்கும் இடங்கள் எனக் கூறப்பட்ட, மற்ற இடங்கள் சின்னத்தம்பனைக் குளத்தின் பள்ளவான் பகுதிக்கு மேற்குப்பக்கமாக சாளம்பைப்புலவு என அழைக்கப்படுகின்ற இடத்தில் இருக்கின்றன. அவற்றை நோக்கும் போது, அங்கே இரண்டு மண் குன்றுகள் காணப்பட்டன. அந்த இரண்டு குன்றுகளிலும், ஆறு சதுரக் கற்றூண்கள் காணப்பட்டன. இவை நில மட்டத்தில் இருந்து, அரை அடி அளவில் உயர்ந்து காணப்பட்டன.

இவை மட்டுமல்லாமல், சின்னத்தம்பனைக்குளத்தின் பிட்டி வான் பகுதியில், சாய்ந்த நிலையில் பல கற்றூண்கள் குவிந்த நிலையில் காணப்பட்டன. அத்துடன், தூண்களைப் பொருத்தக் கூடிய சதுரத் துளைகள் உள்ள அசைக்கக் கூடிய பெரிய கற்களும் சின்னத்தம்பனைக் கிராமத்தில் காணப்படுகின்றன. இவற்றுடன், ஒரு கல் மேசையும் இங்கே காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளை விட, குளக்கட்டின் சோலையன் வான் எனப்படுகிற இடத்திலே, குளத்தின் வான் பாயும் பகுதி காணப்படுகிறது. இப்போது இருப்பதைப் போல, அந்தக் காலத்தில் சீமெந்தால் கட்டப்பட்ட கலிங்கி இல்லை. வான் நீர் பாய்ந்த பகுதியிலே, இரும்பும் கரியும் உருகிக் கலந்த கீச்சுக் கற்கள் காணப்பபட்டன. அதே இடத்தில், கிட்டத்தட்ட ஓரடி நீள அகல உயரங்களைக் கொண்ட இரும்புக் கட்டி ஒன்று காணப்பட்டது. அது மிகப் பாரமானதாக இருந்தது.

### வேரக்கல் நாகச் சிற்றரசு

இந்த தொல் பொருட் சான்றுகளை உற்று நோக்கும் போது, பல பூர்வீக வரலாற்று உண்மைகள் தெரிகிறது. நாக அரசுகள் ஈழத்திலும், நாகதீபத்திலும் இருந்த காலப் பகுதிகளில், வேரக்கல்லிலும் ஒரு நாகச் சிற்றரசு இருந்திருக்கிறது. என்பதைத் தொல்லியல் ரீதியாக நிரூபிக்க முடிகிறது.

கி.மு. 3ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கூறப்படும் பாவற்குளம், முத்தையன்கட்டு என அழைக்கப்படுகிற மண்மலைக்குளம் ஆகியவற்றின் குளக்கட்டுக்களிலே ஐந்து தலை நாக சிற்பங்கள் காணப்படுகின்றன. அதேபோல, சின்னத்தம்பனைக் குளக்கட்டிலும், மதவுவைத்தகுளத்தின் குளக்கட்டிலும் ஐந்து தலை நாக சிற்பங்கள் காணப்பட்டன.

இவற்றை வைத்து நோக்கும் போது, சின்னத்தம்பனையில் உள்ள குளமும் மதவுவைத்தகுளமும் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். என்ற முடிவுக்கு வரலாம். எனவே, வேரக்கல் மலையில் அமைந்திருந்த மாளிகை, கி.மு. 6ஆம் நூற்றாண்டுக்கும் கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாக இருக்கிறது. இது ஒரு நாகச் சிற்றரசாக இருந்திருக்கிறது.

### வேரக்கல் இராசதானியின் ஆட்சிப் பிரதேசம்

இந்த இராசதானியின் கீழ், பொக்கிணிக்கல், பூதுவிளாய்வெளி, வெள்வேற்குளம், அலியன்சாய்ந்தகுளம், ஊமையர் புளியங்குளம், துடரிக்குளம், கற்குளம், ஒலுக்குளம், பாவற்குளம், பூமடு, மணல்குளம், குருவிப்புல்லுக்குளம், ஊடுவெளி, சாளம்பைப்புலவு, வேப்பங்குளம், தணக்கங்குளம், கல்மோட்டை, மதவுவைத்தகுளம், கூழாங்குளம், பெரியபுளியாலங்குளம், சின்னப்புளியாலங்குளம், பெரியகுளம், நெடுங்கரைச்சேனை, மயில்முட்டையிட்டகுளம், அரசடிக்குளம், கற்காரங்குளம், காண்டைக்குளம் போன்றனவும்,

தம்பனைக்குளம், இயங்கன்குளம், புல்லறுத்தமோட்டைக்குளம், சின்னத்தம்பனை, பரசங்குளம், தெகிழங்குளம், வீரமோட்டை, நெடுமோட்டை, பயறிமோட்டை, பாலைமோட்டை, புல்லறுத்தமோட்டை, விடத்தல்காட்டுச் சின்னக்குளம், கல்வீரங்குளம், நேரியகுளம், பெரியநொச்சிக்குளம், பிச்சுவிளாத்திக்குளம், காட்டுப்புளியங்குளம், பெரிய துலாவல்குளம், சின்னத்துலாவல்குளம் போன்ற பல நீர்ப்பாசனக் குளங்களும், பல இடங்களும் இருந்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை மட்டும் அல்லாமல், நாமறியாத இன்னும் பல குளங்கள் இருந்து அழிக்கப்பட்டிருக்கலாம். மாளிகை அமைந்திருந்த வேரக்கல்லும் ஒரு குளமாகவே இருந்திருக்கிறது.

### கைமாறிய குளங்களும் அழிகுளங்களும்

மேலே காணப்படும் குளங்களில், அலியன்சாய்ந்தகுளம், ஊமையர் புளியங்குளம், துடரிக்குளம், கற்குளம், ஒலுக்குளம், மணல்குளம், வெள்வேற்குளம், பிச்சுவிளாத்திக்குளம், காட்டுப்புளியங்குளம் போன்ற குளங்கள் இன்று எமது கைகளில் இல்லை. குருவிப்புல்லுக்குளம், புல்லறுத்தமோட்டைக்குளம், பரசங்குளம் போன்றன அழிகுளங்களாகி விட்டன.

வன விலங்குகள் நீர் அருந்தி வாழ்ந்த, பொக்கிணிக்கல், பூதுவிளாய்வெளி, ஊடுவெளி, சாளம்பைப்புலவு, கல்மோட்டை, புல்லறுத்தமோட்டை, வீரமோட்டை, நெடுமோட்டை, பயறிமோட்டை, பாலைமோட்டை போன்ற நீர்நிலைகளும், காட்டுப் பிரதேசங்களும் தற்போது வனவிலங்குகளுக்குப் பொருத்தமானதாக இல்லை. அங்கு வாழ்வதற்கு வன விலங்குகளும் போதிய அளவு இல்லை.

நாகதீபத்தில் உள்ள எல்லாக் குளங்களையும் நாகர்களே கட்டியிருந்தனர். மழை காலங்களில் நீர் பாய்ந்தோடும் ஒவ்வொரு சிற்றாறையும் மறித்துக் குளங்களைக் கட்டினார்கள். ஒரு குளம் வான் பாயும் போது, அந்த . வான் தண்ணீர் இன்னோர் குளத்திற்குச் செல்லும் வகையில் மறு குளங்களைக் கட்டியிருந்தனர். குளம் கட்டுவதற்கான ஓரிடத்தையும் நாகர்கள் விட்டு வைக்கவில்லை. ஒரு சிறிய இராசதானியில் இத்தனை குளங்கள் இருக்கும் போது, முழு நாகதீபத்திலும் எத்தனை குளங்கள் இருந்திருக்கும்.

பின்னால் வந்தவர்கள் அபிவிருத்தி என்ற போர்வையில், பல குளங்களை அழித்தார்கள். வேறு பல குளங்களைத் திருத்தி அமைத்துத் தங்களுடைய பெயர்களை வைத்தார்கள். உலர் வலயத்தில் நீரைத் தேக்கி வைத்தால் தான் கிணறுகளிலும் நீர் இருக்கும். அதைச் சிந்திக்காமல், பல குளங்களை அழித்து விட்டு, எமது பிரதேசங்களில் நீர்த்தட்டுப்பாடு என்று கூறிக்கொண்டிருப்பதில் பயனேதுமில்லை.

### ஆயுத உற்பத்திச் சாலை

இந்த இராசதானியின் ஆயுத உற்பத்திச்சாலை, சின்னத்தம்பனையில், சோலையன்வான் என்ற இடத்தில் இருந்திருக்கிறது. அது அங்கு அமைந்திருந்ததற்கான சகல தொல்பொருட் சான்றுகளும் அங்கே காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெற்களஞ்சியம்

நெற் களஞ்சியம், பாவற்குளம் பகுதியில் காணப்படுகின்ற அரசாணி மலையில் இருந்திருக்கிறது. சமீப காலங்களில் கூட, இந்த மலையின் ஒரு பக்கத் துவாரங்களின் மூலம், அளவில் பெரிய நெல்லின் உமிகள் வெளிவருவதாகப் பெரியவர்கள் கூறினார்கள். இதனால். இந்த மலையை உமி மலை என்றும் அழைத்தனர்.

## ஈமச்சின்னங்கள்

பெருங்கல் பண்பாட்டின் அச்சாணியாக உள்ளது ஈமச்சின்னங்களாகும். இறந்தோரை அடக்கம் செய்யும் இடங்களில், ஐந்து அல்லது ஆறடி உயரமும் ஓரடி நீளமும் அகலமும் கொண்ட கற்கள் நடு கற்களாகக் காணப்படும். நாலு அல்லது அதற்கு மேற்பட்ட கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கல்லறைகளில் சில கற்கள் நிலத்தினுள் மறைந்திருக்கும். ஏனையவை நிலத்தின் மேல் தெரியக் கூடிய வகையில் அமைந்திருக்கும்.

இவ்வாறான இரண்டு ஈமச்சின்னங்கள் சின்னத்தம்பனைக் குளத்தின் பள்ளவான் பகுதிக்கு மேற்குப் புறமாக உள்ள சாளம்பைப்புலவில் அமைந்துள்ளன. சின்னத்தம்பனைக் குளத்தின் பிட்டி வான் காணப்படும் கற்றூண்கள் பற்றிய சரியான முடிவுகள் எடுக்கப்படாத நிலையே உள்ளது. அதுவும் ஈமச்சின்னங்களாக இருக்கலாம் என்ற முடிவுக்கு வரலாம்.

பள்ளவான் பகுதியில் உள்ள ஈமச்சின்னங்கள், இராச குடும்பத்தினருக்கும், மற்றையது ஏனைய பிரஜைகளுக்குமானதாக இருந்திருக்கும். அத்துடன், ஒரு கட்டில் அளவினதாக ஒரு கல்மேசையும் இந்த ஈமச்சின்னங்களுக்கு அருகில் காணப்பட்டது. அதுவும், ஒரு ஈமச்சின்னமாகும்.

இவற்றையும் பெரியவர்கள் புதையல் பிட்டி என்றே கூறினார்கள். அவர்கள் கூறிய ஐதீகக் கதையின்படி, முனியானது, ஆயுத உற்பத்திச் சாலை, களஞ்சிய சாலை போன்றவற்றைக் காவல் செய்யவில்லை.

பெரியவர்கள் புதையல் பிட்டிகள் என்று கூறிய, வேரக்கல் மாளிகையையும், இரண்டு ஈமச்சின்ன இடங்களையும், குளக்கட்டில் நின்ற புளிய மரத்தையும் காவல் செய்தது. இப்படியாகப் பார்க்கும் போது, குளக்கட்டில் நிற்கும் புளியமரத்தடியிலும் இன்னும் ஏதும் தொல்லியற் சான்றுகள் இருக்க வாய்ப்பு உண்டு.

## நாகர் குடியிருப்பு

மேலும், கி.மு. 1000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாகர்களுடைய வாழ்விடங்கள், குடியிருப்பு, யார்க்காடு, இடுகாடு, குளம், வயல்வெளி, இடைக்காடு என்பவற்றை உள்ளடக்கிய ஆதித் திராவிடப் பண்பாடுகளை உள்ளடக்கியதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தது. அந்த வகையில் நோக்கும் போது, வேரக்கல் இராசாதானியின் வாழ்விடப் பண்பாடுகளும், கி.மு. 1000 ஆம் ஆண்டு காலத்தையொட்டிய நாகர்களின் பண்பாட்டை அப்படியே அடியொற்றியதாகவே காணப்படுகிறது.

## அடங்காப்பற்று

கிறிஸ்து சகாப்த காலங்களில், நாகதீபமானது, உத்தரதேசம், நாகதீபம் என இரு பிரிவுகளாகக் காணப்பட்டது. நாகதீபம் என்ற பெயர் தற்போதைய யாழ் குடாநாட்டை மட்டும் குறிப்பதாக இருந்தது. அநுராதபுரத்தை மையமாகக் கொண்ட இராச்சியம் இரஜரட்டை எனப்பட்டது. இந்தக் காலத்தில், உத்தர தேசமானது, வடக்கு இராச்சியத்திற்குள்ளும், தெற்கு இராச்சியத்திற்குள்ளும் அடங்காத ஒரு பிரிவாகக் காணப்பட்டது. இதனால், இந்தப் பிரதேசத்தை அடங்காப்பற்று என அழைத்தனர்.

அடங்காப்பற்றுப் பிரதேசமானது, வடக்கே ஆனையிறவுப் பெருங் கடலையும், கிழக்கே முல்லைத்தீவுப் பெருங் கடலையும், தெற்கே அநுராதபுரத்தையும், மேற்கே மன்னாரப் பெருங் கடலையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது. கி.பி. 9 ஆம் நூற்றாண்டு காலத்தில் பாண்டியரும், கிபி. 10 ஆம் நூற்றாண்டில் சோழரும் யாழ்ப்பாண இராச்சியத்தையும் பொலநறுவை இராச்சியத்தையும் கைப்பற்றியிருந்த போதிலும், அடங்காப்பற்றைக் கைப்பற்றியிருக்கவில்லை.

## நாகச் சிற்றரசுகளின் வீழ்ச்சி

கி.மு. 1 ஆம் நூற்றாண்டுக்கும் 8 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், தென் இலங்கை ஆட்சியாளர்கள் நாகதீபத்தின் மீது அடிக்கடி போர் தொடுத்த வண்ணம் இருந்தனர். இதனால், நாகதீபத்தின் நீர்ப்பாசன வளங்கள், இயற்கை வளங்கள், கால்நடைகள் என்பன பெருமளவில் அழிவுக்குட்பட்டன. மக்கள் இடம்பெயர்ந்த வண்ணம் இருந்தனர். அத்துடன், பெருவெள்ளம், மலேரியா, பஞ்சம் என்பன மக்களை வாட்டி வதைத்தன. இடையிடையே ஏற்பட்ட கடும் வரட்சியினாலும் மக்கள் பாதிப்படைந்தனர்.

கி.பி. 10 ஆம், 13 ஆம் நூற்றாண்டுகளில் அடங்காப்பற்றுக்கு வந்த வன்னியர்களின் ஆதிக்கத்தினால், நாகச் சிற்றரசுகள் வலுவிழந்து, வீழ்ச்சி காணத் தொடங்கியது. இந்தக் காலகட்டங்களிலே வேரக்கல் இராசதானியும் வீழ்ச்சி கண்டிருக்கிறது.

## வேரக்கல் இராசதானியின் இன்றைய நிலை

வேரல் என்பது மூங்கிலைக் குறிக்கும். மூங்கில் சோலையால் சூழப்பட்ட கல்மலைகளைக் கொண்ட இடம், வேரல்கல் என்றிருந்து, வேரக்கல் என மருவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளிகைச் சிதைவுகளைக் குளக்கட்டிலே கொண்டிருந்த வேரக்கல் என்ற இந்த இடத்தில், 1972 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு இளைஞர் குடியேற்றம் நிகழ்ந்தது. அப்போது அந்த இடத்தை வேரபந்த (Vera Bantha) எனச் சிங்களத்தில் அழைத்தனர். ஆனால் சிறிது காலத்தில், அந்தக் குடியேற்றம் இல்லாமல் போய்விட்டது. ஆனாலும், வேரபந்த என்ற பெயர் நிலைத்திருந்தது. தற்போது திருத்திக் கட்டப்பட்ட அந்தக் குளத்திற்கு வேரபண்டாக்குளம் என்ற பெயரில் ஒரு பெயர்ப்பலகை காணப்படுகிறது.

தற்போது சென்று பார்த்தால், வேரக்கல் குளம் மட்டும் இருக்கிறது. மாளிகை இருந்த இடம் கிட்டத்தட்ட பத்துப் பதினைந்து அடி ஆழத்தில் நீருள்ள இடமாக இருக்கிறது. நீரின் ஆழம் எவ்வளவு என்று கணக்கெடுக்க முடியவில்லை. குளம் திருத்தப்பட்டிருக்கிறது. கோடை காலம் ஆனபடியால், குளத்தில் நீர் இல்லை. ஆனால், மாளிகைக் கிடங்கில் தேவையான அளவு நீர் இருக்கிறது. ஐதீகக் கதையில் கூறப்பட்ட கடுங் காவலையும் மீறி, அந்த இடம் அகழ்ந்து எடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக, ஆறுகால் சமாதிகள் இருந்த இரண்டு இடங்களும் அடியோடு கிண்டப்பட்டிருக்கிறது. கல்மேசையை அது முன்பு கிடந்த இடத்தில் காணவில்லை. 2005 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட வேரக்கல் மாளிகையின் சிதைவுகள் மற்றும் ஏனைய தொல்பொருள் தடயங்களில் ஒன்றையேனும் தற்போது காண முடியவில்லை. தமிழர்களுடைய பண்பாடுகளை மதிக்காத சமூகத்தினர், அவர்களுடைய ஐதீகங்களையும் மதிப்பதில்லை. இதனால் தான், வேரக்கல் மலையில் இருந்த தொல் பொருட் சான்றுகளுக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

வேறு தொல் பொருட்கள்

இவை மட்டுமன்றி, தற்போதைய வீரபுரம் பகுதியில் சுடுமண் வளையக் கிணறு ஒன்றின் தடயங்கள் காணப்பட்டதாகக் கிராமவாசிகள் கூறினார்கள். ஒரு கிணறு வெட்டப்படும் போது இந்த அடையாளங்கள் காணப்பட்டன. இந்தத் தடயங்கள், பூநகரில் உள்ள கிராஞ்சியிலும், தண்ணிமுறிப்புக்குளப் பகுதியிலும், அக்கராயன்குளத்திற்குத் தென்மேற்குப் பகுதியிலும் காணப்பட்ட சுடுமண் வளையக் கிணறுகளை ஒத்த தடயங்கள் போன்று இருக்கலாம் என நம்பப்படுகிறது.

மேற்கண்ட இடங்களில் காணப்பட்ட சுடுமண் வளையக் கிணறுகள், கி.மு. 8 ஆம் நூற்றாண்டுக்கும் கி.மு. 1ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை என ஊ - 14 காலக் கணிப்புச் செய்யப்பட்டுள்ளது. சின்னத்தம்பனையில் இருந்து, இயங்கன்குளம் செல்லும் பாதையில் உள்ள மேட்டுக்காணிகளில் முன்பு, சின்னத்தம்பனைக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் குடியிருந்தனர். அங்கு புதிய மண் வீட்டுக்குச் சுவர் வைப்பதற்கு மண் வெட்டிய போது, அந்தக் கிடங்கில் சிறிய சுட்ட மண் பொம்மைகள் காணப்பட்டன. இன்னும் பல தொல் பொருட்தடயங்கள் பலருடைய காணிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்திருந்தாலும், தங்களுடைய காணி பறி போய்விடும் எனப் பயந்து, அந்த விடயங்களை வெளியிடாமல் சிலர் இருந்து வருகிறார்கள் போல தெரிகிறது.

### சமூகப் பொறுப்பு

அதிகாரப் பொறுப்பில் இருந்தவர்கள், உரிய காலத்தில், சுற்றயல் கிராமங்களில் வாழ்ந்த இளைஞர்களுக்கு, இந்தக் காணிகளைப் பகிர்ந்தளித்திருந்தால், வேரக்கல் மாளிகையின் எச்சங்கள் மீந்திருக்கும். எமது பாரம்பரியச் சொத்துக்ள் பாதுகாக்கப்பட்டிருக்கும்.

எமது பிரதேசங்களில் பல ஐதீகக் கதைகள் வழங்கி வருகின்றன. அவற்றைக் கூறினால், அவற்றை கேட்பதற்கும், நம்புவதற்கும் தற்போது யாருமில்லை. இந்தக் கதைகளின் பின்னணியில் பல வாழ்க்கைத் தத்துவங்கள், சமூகப் பாதுகாப்புக்கான வழிவகைகள், வளப் பாதுகாப்புக்கான வழிவகைகள், கலாசார பண்பாட்டுப் பாதுகாப்புக்கள், போன்றனவும் இன்னும் பலவும் அடங்கியிருப்பதை உணர முடியும். ஐதீகக் கதைகளில் நம்பிக்கை வைத்த சமூகம், ஆயிரக் கணக்கான வருடங்களாகப் பாதுகாத்து வந்த வேரக்கல் மாளிகையானது, வேற்றுச் சமூக நடவடிக்கைகளினால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். இனி வருங்காலங்களிலாவது, அதிகாரிகளும், சமூகமும் ஒன்றிணைந்து மீதமாக உள்ள எமது பூர்வீகச் சொத்துக்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

### உசாத்துணை நூல்கள்


1. பூலோகசிங்கம்.பொ., வன்னி நாட்டின் வரலாறு (கட்டுரை), மருத நிலா, வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழா மலர் - 1996
2. குணராசா.க., ஈழத்தவர் வரலாறு - 2000
3. பேராசிரியர் கிருஸ்ணராசா.செ., இலங்கை வரலாறு, பாகம் 1 - 1999
4. குணசிங்கம்.செ., கோணேஸ்வரம் - 1973
5. ஜெகநாதன்.ஞா., நாகர் எழு வன்னி - 2013
6. பேராசிரியர் சிற்றம்பலம்.சி.க., கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முந்திய வன்னிநாடும் தொல்லியற் சான்றுகளும் (கட்டுரை), பண்டார வன்னியன் விழா மலர் - 1982
7. சுப்பிரமணியம்.நா., வன்னிப்பிரதேச சமூக ஒழுங்கமைப்பும் நாட்டார் வழக்கியலும் (கட்டுரை), பண்டார வன்னியன் விழா மலர் - 1982
8. முல்லைமணி சுப்பிரமணியம்.வே., புகழ் பூத்த வன்னி மண்ணின் காவலர்கள் (கட்டுரை), பண்டார வன்னியன் விழா மலர் - 1982
9. ஜெகநாதன்.ஞா., வரலாறு கூறும் செட்டிகுளம் (கட்டுரை), அருவி ஆறு, பிரதேச கலாசார பேரவை, வெங்லச்செட்டிகுளம் - 2013
10. ஐயமோகன்.இரா., ஆவணப்பெட்டகம், பிரதேச கலாசார பேரவை, வெங்கலச்செட்டிகுளம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. சற்குருவேணு,
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வெங்கலச் செட்டிக்குளம்

# நவீனத்துமானது கலைவரலாற்றில் ஏற்படுத்திய மாற்றம்

பாரம்பரிய சமூகத்தின் அழிவிலிருந்து அல்லது பழமையின் வழியான, மரபானதுமான விடயங்களில் இருந்து புரட்சிகரமாகவும், புதியமுறையிலும் புதுமையான பல விடயங்கள் அல்லது மாற்றங்கள் உருவானதே நவீனத்துவம். இதுவரை காலமும் மரபான சமூகத்தில் சாஸ்வதம் எண்ணியிருந்த மதம், சமய கோட்பாடு போன்றவற்றை நிராகரித்ததோடு, புரட்சிகரமான மாற்றத்தையும் மேலைத்தேய சமூகத்தில் இந்த நவீனத்துவம் கொண்டு வந்தது. இதனை சில சொற்பிரயோகங்கள் வழியாக நோக்குவது சாலப்பொருந்தும்.

| | | |
|---|---|---|
| நவீனம் | - | Modern |
| நவீன மயமாகும் தன்மை | - | Modernity |
| நவீன மயமாதல் | - | Modernization |
| நவீனத்துவம் | - | Modernisum |

மேற்குறிப்பிட்டது போன்று புரட்சிகரமான புதிய விடயங்களை மரபிற்குள் உட்புகுத்தி புதியதொரு மாற்றத்தை கொண்டுவந்தது. உதாரணம் புராணக்கதைகளை இசை வடிவமாக, ஓவியமாக, நடனமாக, நாடகமாக வடிவமைத்து புது வடிவம் கொடுத்ததோடு புதிய விடயங்களை சமூகப் பாத்திரங்களோடு ஒப்பிட்டுக் காட்டி புதுமை படைப்பது நவீனம் ஆகும்.

நவீன மயமாகும் தன்மை எனும் போது அக்கால அரசியல் மாற்றங்கள், அதனால் மக்களின் வாழ்வு, இன்பம், துன்பம், இழப்பு, கலாசாரம், பண்பாடு போன்றவற்றில் ஏற்பட்ட மாற்றங்களை குறிப்பிடலாம். குறிப்பிட்டு சொல்வதானால் அரசியல் சமூகப் பின்னணியே இதுவாகும்.

நவீன மயமாதல் என்பது பாரம்பரியமான சமூகம் முற்று முழுதாக மாறுதலடைவதாகும். இதனுள் மனித நாகரீக வளர்ச்சி

நடையுடை பாவனை
மனித மொழிப் பயன்பாடு
பழக்க வழக்கங்கள்
மனைவாழ்வு
கலை, பண்பாட்டு மாற்றம்

என்பவற்றினூடே இதனை அறிந்து கொள்ள முடியும். (மோகனதாஸ்.க - நவீனத்துவத்தின் தோற்றத்தை புரிந்து கொள்ளல் tute)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நவீனத்துவம் எனும் போது மேற்கத்தைய கலை இலக்கியங்களில் மாத்திரமல்லாது, மேற்கத்தை பண்பாட்டிலே வேண்டுமென்றே செய்யப்பட்டனவும், தடையற்ற பண்புடையனவுமான மரபுத்தள விடுபாடுகளைக் குறிக்கும்" எனக் கூறுவர். இதனையே அன்று மகாகவி பாரதியார் "சொல் புதிது, சுவை புதிது, பொருள் புதிது என்று பாடினார். மேலும் இந்த நவீனத்துவமானது.

11ம் நூற்றாண்டில் சீனர்களிடையே 800 ஆண்டுகள் செல்வாக்குப் பெற்றிருந்த "கான்ஃபுஷனியம்", மற்றும் காண்டிய தத்துவ அறிஞரின் கோட்பாடான "நவீன கான்புனியம்", சார்லஸ் டார்வின் தேர்வுக் கொள்கையின் அடிப்படையில் உருவான பரிணாமக் கோட்பாடான "நவீன டார்வினியம்" புனித தோமஸ் அக்வினால் தோற்றுவித்த "நவீன தோமானிஸம்" போன்ற கோட்பாடுகளின் அடிப்படையில் அல்லது கோட்பாடுகளை பின்பற்றியதே ஆகும்.

| | |
|---|---|
| நவீன பிளேட்டோனியம் | (கி.பி 3ம் நூற்றாண்டு) |
| நவீன பொதுமைத்துவம் | (19ம் நூற்றாண்டு) |
| நவீன ஃபாசிஸம் | (2ம் உலகப்போருக்குப் பின்) |
| நவீன யதார்த்தம் | (2ம் உலகப்போருக்குப் பின்) |

என்கின்ற இயக்கங்களின் வளர்ச்சியாலும், கிளர்ச்சிகளாலும் புதிய வடிவமாக, புதிய பரிணாமத்தோடு, புதிய கண்டுபிடிப்புக்களோடு உருவானதே இந்த நவீனத்துவம் ஆகும். (பிரிட்டானிக்கா - நவீனத்தும்)

பழமை விட்டகலும் அதே நேரத்தில் கருத்து வெளிப்பாட்டில் புதிய வடிவங்களைத் தேடுதலை குறிப்பது இதுவாகும். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 20ம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை குறிப்பாக முதலாம் உலகப்போரை அடுத்து வந்த ஆண்டுகளில் புதிய கலை உத்திகளை வெள்ளோட்டம் பார்த்த காலகட்டத்தில் நவீனத்தும் செழித்தது. இது செழித்த பின்பு சமூகத்திலும், மனித நாகரீக வளர்ச்சியிலும் பல வகையான மாற்றங்கள் இதனால் உருவானது.

மரபுவழிவந்த கதைகள், விடயங்களில் புதுமை
கலை பண்பாட்டு விழுமியங்களில் மாற்றம்
மனித நடையுடை பாவனை மாற்றம்
சமய மற்றும் மூட நம்பிக்கைகள் உடைவு
மனித வாழ்வில் இலத்திரனியல் வலு உட்சேர்ப்பு
சட்டத்தின் முன் சமத்துவம்
குழு நிலைக்கல்வி விருத்தி

என்றவாறு நவீனத்துவம் மனித வாழ்வில் புதுமையான வடிவங்களை தோற்றுவித்ததோடு, கட்டாயமாக உட்புகுத்தியும் இருக்கிறது. இது தோற்றுவித்த அனைத்து மாறுதல்களையும் நோக்குவதற்கு பரந்த ஒரு ஆய்வே துணையாக அமையும். இருந்தாலும் கலை வரலாற்றில் ஒவ்வொரு விடயப்பரப்பிலும் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை சில கலை வடிவங்களை அடிப்படையாக வைத்து நோக்குவோம்.

இசைக்கலையில் தமிழர் மத்தியில் காணப்படும் கர்நாடக இசை, திரை இசை இரண்டையும் அடிப்படையாக வைத்து நோக்கும் போது கர்நாடக இசையானது ஒரு குலத்தை சார்ந்ததாகவும், ஒரு மொழியை சார்ந்ததாகவும், ஒரு கடவுளைப் பற்றியதாகவும், குருகுலமுறை சார்ந்ததாகவும் பாரம்பரிய வாத்தியங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் கர்நாடக சங்கீதத்தின் பிதாமகன் என்றழைக்கப்படும் தியாகராஜர் உருவாக்கினார். அதன் பின்வந்த பாவநாசம் சிவன், பாலுஸ்வாமி தீட்சிதர், சியாமாசாஸ்திரி போன்ற வாக்கேயக்காரர்கள் தமிழ்மொழியை உட்புகுத்தியும், பல தெய்வங்களை புகழ்ந்து பாடியும், மேலைத்தேய வாத்தியங்களான வயலின், தபேலா போன்றவற்றை பக்கவாத்தியங்களாக பயன்படுத்தியும் புதுமை சேர்த்தனர். இது இசையினுள் நவீனத்துவம் புகுந்ததன் முதல் படி எனலாம். இதனை விட பாரிய நவீனத்துவ மாற்றமாக, கர்நாடக இசை வாத்தியங்கள் விஞ்ஞான தொழிநுட்பத்துடன் கூடிய இலத்திரனியல் கருவிகளாக மாற்றம் பெற்றமையை குறிப்பிடலாம். உதாரணமாக

Electronic thampoora
Electronic Shruthi Box
Electronic Thalo meater
Electronic Veena
Electronic Vajalin
Electronic Fercuation Instrument

என்பவற்றை குறிப்பிடலாம். மேலும் திரையிசையை நோக்கினால் பண்டைய காலங்களில் திரைப்படம் திரையில் விழும் போது அல்லது ஓடும் போது திரைக்குப் பின்னால் இசைக்குழுவினர் இருந்து இசை, ஒலி, பாடல்களை ஒலிபெருக்கி மூலம் நேரடியாக இசைத்து பேசாப் படங்களுக்கு மெருகூட்டினர். அடுத்தபடியாக இசை, வசனம் பதிக்கத்தக்க தொழிநுட்பம் வளர்ந்த பின்பு மூன்று மணி நேர திரைப்படங்களில் 20 -30 பாடல்கள் இடம்பெற்று பாடல்களை ஆக்கிரமிப்பாக படங்கள் இருந்தது. பின்பு சிறுது சிறிதாக மருவி தனிமனிதரை திருப்திப்படுத்த (டுலசஉைள) என்ற தன்னுணர்வு பாடலில் புகுத்தப்பட்டதோடு, பெரும்பாலான பக்திப்பரவச திரைப்படங்கள் வெளிவந்ததால் பாடல்களுக்குள் மரபு வழியாக தேவார, திருவாசக பண்களின் இசைகளும் இடம்பெற்றன. அத்தோடு கர்நாடக சங்கீத சாயல்களும் விஸ்வநாதன், ராமமூர்த்தி என்ற இசையமைப்பாளர்களால் புகுத்தப்பட்டது.

அடுத்தகட்டமாக கிராமிய இசைகளில் ஈடுபட்டிருந்த இளையராஜாவின் இசையறிவு நவீன போக்கையும் அதன் வளர்ச்சியையும் ஆழ அகலமாக பற்றி பல மாற்றங்களை உருவாக்கியது. காதல், வீரம், சோகம், கிராமியம் எனப்பல ரசங்களில் பாடல்களை இசையமைத்தாலும் அவை கர்நாடகம், கிராமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைகளை தழுவி கிராமிய இசை வாத்தியங்களை அடிப்படையாக வைத்தே இசை அமைக்கப்பட்டிருந்தது.

அதன் பிற்காலத்தில் பாடல்களை இசையமைக்கவும் பதிவு செய்யவும் நேரங்களை கடத்தாது பல இலத்திரனியல் வாத்தியக்கருவிகளையும், மேலைத்தேய வாத்தியக் கருவிகளையும் தொழிநுட்ப முறைகளையும் பயன்படுத்தி பாடல்களை இசையமைத்ததோடு திரைப்படங்களுக்கு பின்னணி இசையையும் வழங்கியுள்ளார்.

இதே போன்று A.R. ரகுமான் என்ற இசை மேதை புதிய புதிய தொழிநுட்ப முறைகளை கையாண்டதோடு, மேலைத்தேய இசைவடிவமான "கொலிவூட்" என்ற முறையை திரை இசைக்குள் புகுத்தி இசையமைத்து உலகப்புகழ் பெற்றுள்ளார். இவர் கையாண்டது முழுக்க முழுக்க விஞ்ஞான தொழிநுட்ப முறையிலான இசையமைப்பும், இலத்திரனியல் இசைக்கருவிகளையும் ஆகும். எது எப்படி இருந்தாலும் புராணகாலத்தில் உருவான திருவாசகத்தை புதிய நவீன யுத்திகளையும், இலத்திரனியல் வாத்தியங்களையும் வைத்து இசையமைத்து பழமையை புதுமையாக்கி நவீனத்துவ வளர்ச்சியை உலகிற்கு பறை சாற்றினார். இதனடிப்படையில் இசையில் பல நவீனத்துவ மாற்றங்களை உருவாக்கிய நவீனத்துவக்காரர்கள் என்று இவர்கள் இருவரையும் குறிப்பிட்டாலும் மிகையாகாது.

அடுத்ததாக நடனத்தை நோக்கும் போது பரத முனிவரால் ஆக்கப்பட்ட கலைப்படைப்பே பரதநாட்டியம் என மரபுவாதிகளில் ஒருவர் கூறுகின்றார். பரதநாட்டியம் பாரத நாட்டின் பண்டைய கலைப்படைப்பின் மாதிரி நடனப்பாணியில் ஒருவகை. தமிழ்நாட்டின் வகை மாதிரி. மேலும் குச்சிப்புடி, கதகளி, மணிப்புரி, ஒடிஸ் நாட்டிய வகைகளும் தனித்தனியாக விளங்குகின்றன.

இந்நாட்டியப் பெண்களும் கோவில்களுடனே பிணைக்கப்பட்டு திருவிழாக்களிலேயே பெரும்பாலும் சதிர்க்கச்சேரிகள் நடைபெற்றன. இவ்வாறு கோவில்களோடும், அரச மாளிகைகளோடும் பொட்டுக்கட்டி ஒதுக்கப்பட்ட பெண்களுக்கும், நட்டுவானருக்குமான சதிர் ஆட்டங்களை 1930 களில் உயர் வகுப்பு பெண்கள் பயில ஆரம்பித்தனர். குறிப்பாக பிராமண குல பெண்களே பயிற்சி பெற்று மிளிர்ந்தனர் எனக் கூறலாம்.

சதிர் கச்சேரி, சதிராட்டம் என்ற பெயர்களை விட்டு நவீனத்துவ நாமமாக "பரதநாட்டியம்" என்ற பெயர் பெற்றது. நட்டுவானர்களே அவரவரது பரம்பரை பரம்பரையாக கற்று வந்த பாணிகளை உயர்தர வகுப்பினருக்கும் கற்பித்தனர். பேசும் சினிமாப்படங்கள் வெளிவரத் தொடங்கி, பொழுதுபோக்கு அம்சங்கள் புகுத்தப்பட்டுள்ள வேளை, நடனங்களும் படங்களில் சேர்க்கப்பட்டன. உதாரணமாக "நாம் இருவர்" என்ற ஏ.வி.எம் இன் வெற்றிப்படத்தில் வழுவூர் இராமையாவால் பயிற்றப்பட்ட "பேபி கமலாவின்" நாட்டியம் புகுத்தப்பட்டது. இதனை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்காலப் படமான கமலஹாசனின் "சலங்கை ஒலி" என்ற படத்தில் முழுமையாக பரதநாட்டியம் புகுத்தப்பட்டிருக்கிறது. இவ்வாறு பரதநாட்டிய நடனங்கள், எழிமையாக்கப்பட்ட அபிநய நடனங்கள் என்பனவும் சினிமாவில் புகுத்தப்பட்டது. இவ்வாறு பரத நாட்டியம் விரிவாகி, தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பரவியது. ஈழத் தமிழர்களும், தமிழக தமிழர்களும் எங்கெல்லாம் புலம் பெயர்ந்து இருக்கிறார்களோ அங்கெல்லாம் பரத நாட்டியம் வளர்ந்தது நாட்டியத்தின் நவீனப் போக்கை எடுத்துக்காட்டுகிறது.

சினிமாவில் பிரபல்யம் அடைந்த பரதநாட்டியத்தின் வீழ்ச்சி 1980 களில் ஆரம்பித்தது. ஹோலிவூட் படங்கள் மூலம் பிரபல்யம் அடைந்த குழு நடனங்கள் இந்தியத்திரைகளையும் ஆக்கிரமிக்கத் தொடங்கின. ஜெமினி எஸ்.எஸ்.வாசன் தன் பிரமாண்டமான தயாரிப்பான சந்திரலேக்காவில் முரசங்கள் மேல் நின்று ஏராளமான பெண்களையும், ஆண்களையும் ஆடச் செய்தார். இதற்கிடையில் ஆண்களும் பரதநாட்டியம் கற்றுக்கொள்ளலாம் என்ற நவீன உருவாக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய 90 சதவீதமான தமிழ் திரைப்பாடல்களில் ஒன்று, இரண்டு, மூன்று குழு நடனங்களாவது புகுத்தப்படுகின்றன. ஏ.ஆர்.ரகுமான் இளையராஜா ஆகியோர் இவற்றிற்கேற்ப மட்டுமல்லாது ஆண்களது நடனமும் புகுத்தப்படுவது நவீனத்துவ வளர்ச்சி எனலாம்.

சினிமா உலகில் பலநூற்றுக்கணக்கானவர்களுக்கு உடனடிப்பயிற்சியும், கூலியும் தருவதாக அமைவதும் நவீனப் போக்கைச் சார்ந்ததேயாகும். இந்நடனங்கள் இந்திய மரபுகளுடன் மேல்நாட்டு, ஆபிரிக்க நடனப் பாங்குகளையும் ஆங்காங்கே இணைப்பதாக காணலாம். வலுவான ஓசையுடன் வேகமான அசைவுகளே முதன்மை பெறுகின்றன. படப்பிடிப்பு கருவி மூலம் இந்நடனங்கள் வேகப்படுத்தப்படுகின்றன. இவையெல்லாம் நவீனத்துவம் மேலோங்கி நிற்பதை எடுத்துக்காட்டுகிறது. எத்தகைய நடனக் கலையையும் முற்றாகச் சாராது கதம்பமாக, கவர்ச்சியாக இசையோடு குழு நடனங்களை சினிமாவில் புகுத்துவது நடனக்கலையின் நவீனத்துவம் மேலோங்கி நிற்பதை காணலாம். (*நவீனத்துவமும் தமிழகமும் - செ.கணேசலிங்கம்*)

ஓவியக்கலையில் பார்க்கும் போது முன்னர் அதாவது ஆரம்பகாலங்களில் குகைகளிலும், சுவர்களிலும், பிரபல பத்திரிகைகளிலும் வரையப்பட்ட ஓவியங்கள் மற்றும் பள்ளிக்கூடம் பார்க்காத முதிய பெண்கள், பிள்ளைகளால் விழாக்காலங்களிலும் போடப்படும் கோலங்கள் என்பன மரபு வழியில் அமைந்தவையாகும். இதனடிப்படையில் நவீன தொழிநுட்பங்கள் தற்போது அழகுபடுத்தல், அச்சிலேற்றலில் உதவுகின்றன.

நவீனுத்துவமாக கம்பியூட்டர் கிராபிக்ஸ் தற்போது வந்துவிட்டது. ஓவியங்களை சீர் செய்வது, கம்பியூட்டரில் வரைவது ஆகியவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீனத்துவமானவை. ஓவியத்தூரிகைகள் பிடித்து வர்ணங்களை தேய்த்தெடுத்த ஓவியக் கரங்கள் தற்போது வெற்று விரல்களால் ஓவியந் தீட்டுகின்றன. கம்பியூட்டர் கிராபிக்ஸ் கார்டூண் படங்கள் சினிமாவில் நவீனத்துவக் காட்சிகள் தயாரிக்கத்தக்கதாக தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. சினிமாவில் சிற்சில கற்பனைக் காட்சிகளை, அசாதாரணமான சம்பவங்களை கம்பியூட்டர் கிராபிக்ஸ் மூலம் அமைத்துக் கொள்வர். சினிமா, டி.வி பார்ப்பவர்கள் இந்த நவீனத்துவ முறைப் படங்களைக் காணலாம். முன்னர் திரைகளில் காணமுடியாத காட்சிகள் இவை. கார்டூண் படங்கள் யாவும் கிராபிக்ஸ், அனிமேஷன் முறைகளிலே தயாரிக்கப்படுகின்றன.

மேலும் நவீனமுறை உடைந்த எழுத்துக்களே இல்லாது அச்சு மை அழுந்தாது, தெளிவாக அச்சிடும் முறையை வளர்த்தது. செலவு, சிறிது அதிகமாக இருக்கின்ற போதும் அழகாக தெளிவாக விரைவாக, நூல்களை, விளம்பரங்களை, துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு விடமுடிகின்றது. *(நவீனத்துவமும் தமிழகமும் - எஸ்.கணேசலிங்கம்)*

மேலும் சிற்ப, ஓவிய நவீன வளர்ச்சியில் மனப்பதிவுவாதம், வெளிப்பாட்டு வாதம் என்பன முக்கியம் பெறுகின்றன. புகைப்படக் கருவியின் கண்டுபிடிப்பை தொடர்ந்து 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஓவியம் பற்றி ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் பல கலையுலகில் முன்வைக்கப்பட்டன. இவ் முரண்பாடு மனப்பதிவு வாதத்தின் தோற்றத்துடன் தற்காலிக அனுமதியைப் பெற்றது. 1874 இல் சிற்ப ஓவியக் கண்காட்சி ஒன்று பாரிஸ் நகரில் இடம்பெற்றது. இக்கண்காட்சியில் மோனோ, றினோர், பிசாரோ போன்ற மனப்பதிவு முக்கியஸ்தர்களுடைய ஓவியங்கள் இடம்பெற்றன. கண்காட்சி பற்றிய விமர்சனங்களில் விமர்சகர்களுள் ஒருவரான லூயிஸ் லெறோய் என்பவர் "மனப்பதிவு" என்ற சொல்லை "மோனோயின் உதிக்கும் சூரியன் பற்றிய மனப்பதிவு" என்ற ஓவியத்தலைப்பில் இருந்து எடுத்து விமர்சித்தார். மனப்பதிவு வாதப்போக்கு முதலில் கவித்துறையில் ஏற்பட்டது. பின்னரே, சிற்ப ஓவியக் கலைகளில் ஏற்பட்டது, என்பன சிற்ப ஓவியத்தில் நவீன செல்வாக்கு இருப்பதை எடுத்துக் காட்டுகிறது.

வெளிப்பாட்டுவாதமானது சிற்பியின், ஓவியனின் மனப்பதிவை வலியுறுத்திய மனப்பதிவாதத்திற்கு எதிராக தோன்றியதாகும். வெளிப்பாட்டு வாதம் சிற்ப, ஓவியக்கலைகளில் ஒரு புதிய உருவ அமைதியை குறித்து நிற்கின்றது என்பதில் இருந்தும் ஓவியம் சிற்பம் இரண்டிலும் இந்த மனப்பதிவு, வெளிப்பாட்டு வாதங்கள் புதிய நவீனத்துவ மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.

நாடகத்தில் நவீனத்துவம் கொண்ட மாற்றம் என்பதை பார்த்தல் 19ம் நூற்றாண்டில் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் நாடகம் ஒரு புதிய வடிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கிளம்புகின்றது. இதற்கு காரணம் நவீனமே. கூட்டத்திலிருந்து விலாசமும் விலாசத்திலிருந்து சபாவும் பிறக்கின்றது. தமிழ் நாடகத்துறையில் சபா நாடகங்கள் முதன் முதலில் காட்சிப் பிரிவுகளைக் கொண்டு, நவீன நாடகப் போக்குக்கு கட்டியம் கூறி நிற்பதாக, கலாநிதி துரை மனோகரன், தனது இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சி என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். உரைநடை வளர்ச்சி பெறத் தொடங்கியது இந்நூற்றாண்டிலேயே, இதனால் வசனம் பேசுகின்ற நவீன நாடகம் வளர்ச்சி பெறத் தொடங்கியது. உதாரணமாக கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடகங்களை குறிப்பிடலாம்.

1957ல் கலைக்கழகத்தமிழ் நாடக குழுவில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் செயற்படுகின்றார். இக்காலகட்டத்தில் பாரம்பரிய நாடக மரபுகளை நவீன மயப்படுத்தி பேணும் போக்கு இடம்பெறத் தொடங்கியது. இவ்வாறு படைக்கப்பட்டு பிரசவிக்கப்பட்ட நவீன நாடக வடிவங்களாக

நொண்டி நடனம்
வாலிவதை , கர்ணன் போர்
இராவணேசன் என்பவற்றை குறிப்பிடலாம்.

மேலும் நவீன நாடகத்தின் விளைவால், இலங்கை தமிழ் நாடகம், புதிதாக ஒரு வழிகளில் வளர்ச்சி பெறத் தொடங்குகின்றது. ஒன்று பாரம்பரிய நாடக மரபில் நவீனத்துவத்தை புகுத்தல், மற்றையது யதார்த்த நாடக நெறிக்குள் புதிய பரிசோதனை முயற்சிகளை மேற்கொள்ளல் என்பனவாகும். தமிழ் நாடகத்திலும் நவீன நெறிகளைப் புகுத்தியவர்களுள் "சுஹைர் ஹமீட், நா.சுந்தரலிங்கம், சு.தாசிவியஸ்" முதலானோர் முக்கியமானவர்கள் ஆவர். மேலும் நவீனத்தின் தாக்கத்தை நாம் பேராசிரியர் C.மௌனகுருவின் "சங்காரம்" என்ற நாடகத்தில் காணலாம். மனித சமுதாயத்தின் வரலாற்றை உருவக முறையில் இச் சங்காரம் சித்தரித்துக் காட்டுகிறது. (C.*மௌனகுரு - சங்காரம் நாடகம்)*

இன்னும் "காத்தவராயன் கூத்து" பாரம்பரிய பழைய நாடக வடிவங்களில் ஒன்று, அதனை நவீனத்துக்குள் உட்புகுத்தி கந்தன் கருணை எழுதப்பட்டது. N.K. ரகுநாதனே இதன் ஆசிரியர் ஆவார். நவீன நாடகத்தின் மற்றுமொரு வளர்ச்சியே பாநாடகம் ஆகும். (கவிதை நாடகம்) இதற்கு உதாரணமாக மஹாகவியின் கோடை, புதியதொரு வீடு, கடூழியம், வேதாளம் சொன்ன கதை என்பனவற்றை குறிப்பிடலாம். மற்றும் நவீன நாடகத்தின் வளர்ச்சிப் படிகளில் ஒன்றே வீதி நாடகம் 1982ம் ஆண்டில் தோற்றம் பெற்ற வீதி நாடகங்கள் 1985ல் உச்ச நிலையை அடைந்ததை காணலாம். இதற்கு உதாரணங்களாக திருவிழா, விடுதலைக்காளி மாயமான், கசிப்பு என்பனவையாகும்.

அடுத்து சமூக மாற்றத்திற்கான அரங்கு நவீனத்தில் முக்கியம் பெறுகிறது. இவ்வரங்கின் மூலமாகப் பார்வையாளரையும் நாடகத்தின் பங்காளராக கொண்டு, பிரச்சனைக்கு கலைவடிவம் கொடுத்து தீர்வு காணும் முயற்சியாக காணப்படுகின்றது. ஆசியாவின் உயிர்ப்பை இனங்காட்டும் வகையில் ஆசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளில் மேற்கொள்ளப்படும் கலைவடிவமாக இது விளங்குகின்றது. இதற்கு உதாரணம் சிதம்பரநாதனின் உயிர்த்த மனிதர் கூத்தாகும். மேலும் நவீனத்தின் தாக்கத்தை சிறுவர், கிறீஸ்தவ, சமூக சமய அரசியல் நாடகங்களில் கண்டு கொள்ளலாம். இதுவே நாடகத்தில் நவீனத்துவம் ஏற்படுத்திய மாற்றமாகும். *(துரை மனோகரன் - இலங்கை தமிழ் இலக்கிய வளர்ச்சி)*

தொழில் ரீதியான கலைகளை எடுத்தால் தச்சுத்தொழிலில் ஆரம்பத்தில் மனித வலுவின் மூலமே தளபாடங்கள், செதுக்கல் வேலைகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. பின்பு இயந்திரங்கள், மின்சார வலு உபகரணங்கள் என்பனவற்றை உபயோகித்து தொழிலை விரைவாகவும், அழகாகவும் செய்கின்றார்கள் இதற்கு காரணம் நவீனமே.

மேலும் மீன்பிடித் தொழிலில் பழமைக்காலத்தில் மரத்தால் ஆக்கப்பட்ட வள்ளங்களும், தோணிகளும் பயன்படுத்தப்பட்டன. அதன் பின்பு நவீன வளர்ச்சியால் இறப்பரில் அமைக்கப்பட்ட படகுகள், பாரிய அளவில் உருவான கப்பல்கள் மற்றும் எரிபொருள் சக்தியால் இயங்கக் கூடிய குதிரை வலுக்கொண்ட இயந்திரங்கள் என்பன உட்புகுத்தப்பட்டன. இதனால் இழப்புக்கள் குறைக்கப்பட்ட நேரம் மிகப்படுத்தப்பட்டது என்பதைக் குறிப்பிடலாம்.

மேலும் சமையல் பாத்திரங்கள் அல்லது மட்பாண்டங்களை அடியொற்றி கண்ணாடியால் ஆன போத்தல்கள், பாத்திரங்கள். மாபிள்களால் ஆன பாத்திரங்கள் என்பன இயந்திரத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டது. இது நவீனம் சார்ந்ததேயாகும். இவ்வாறு நவீனம் காலவரலாற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது என்பதை மேற்குறிப்பிட்ட பிரதான கலை வடிவங்களினூடாக ஆராய்ந்தோம். இது போன்றே ஏனைய கலைகளிலும் நவீனம் செல்வாக்கு செலுத்துவதால் மனித வலு குறைக்கப்படுகிறது. எழிமையாக்கம் நடைபெறுகிறது. இலகுவில் விளங்கும் தன்மை ஏற்படுகிறது. பல கட்டமைப்புக்களும் சட்டக்கோவைகளும் உடைத்தெறியப்படுகிறது. குறிப்பாகச் சொன்னால் மனித நாகரீக வளர்ச்சி இலகுபடுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. எனவே இது நவீனத்துவம் கலை வரலாற்றில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியமைக்கு சுருக்கமான எடுத்துக் காட்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வ.ந. யேசுநாதன் (நவம்)
செட்டிக்குளம்

## செட்டிகுளத்தாயே நீ வாழியவே

இந்து சமுத்திரத்தின் மத்தியிலே இருக்கும் எம் இலங்கைத்திருநாட்டின் மணிமகுடமாய் விளங்கும் வவுனியா நன்நகரை வளங்களால் அலங்கரிக்கும் செட்டிகுளத் தாயவளின் எழிலிற்கு ஈடேதும். இல்லையென்றால் அது மிகையாகாது. முல்லையும், மருதமும் மெல்லிய தென்றலில் தலையசைத்து, அள்ளித் தெளிக்கும் வளங்களையெல்லாம் தன்னகத்தே சுமந்து தனித்துப் பெருமிதமாய் நிமிர்ந்து வீறுநடைபோடும் செட்டிகுளத்தாயே நீ வாழியவே!

பார்க்குமிடமெங்கும் பச்சைப் பசேலென பசுஞ்சோலைதனைக் கொண்டமைந்த முல்லை நிலத்தில் புள்ளி மானினமும், துள்ளி விளையாடும் முயலினமும் வளமும் கூடவே மரைகளும் மற்றும் இலங்கைக்கே உரித்தான சருகுமானும் மர அணிலும், காட்டுக்கோழியும், நாகணவாயுடன் காட்டுச் செண்பகம் மற்றும் நரைபுழுணியும் அடவியை அலங்கரிக்கின்றன. வேட்டையாடி விருந்துண்ணும் புலிகளும், கபடக்குணமுள்ள குள்ள நரியாரும் ஓநாயும் பன்றியும் அதன் குட்டிகளும் உண்டு கொழுத்து உலாவர கரடியும் சந்தோஷம் கொண்டாடிட, முள்ளம் பன்றிகளும் முல்லையின் அழகிற்கு அழகூட்டும் காட்சிதான் என்னே. ஊர்ந்து செல்லும் ஆமை இனங்களும் உடும்புடன் பாம்பினங்களும் எம்முல்லை நிலத்தின் முத்தான சொத்துக்களாம்.

காட்டின் மரங்களான பாலை, தில்லை, முதிரை, வீரை, காட்டாமணக்கு, கருங்காலி, யாவறண், சமுண்டல, திருக்கொண்டல், காயா, தம்பனை, மஞ்சண்ணா, செம்மணத்தி, சடவக்கை, கலவரட்டை போன்ற கனத்த மரங்களும், நீரோடைதனை நாடி வளரும் மருதுடன் பன்னிச்சையும் ஔடத மரங்களான, வேம்பு, இலுப்பையுடன், நாவலும், குளிர்நிழல் பரப்பி குடை பிடிக்கும் ஆல், ஆலரசு, புங்கு, புளி, பூவரசும், இத்தியும், இலந்தையும் இசைந்திங்கு வளர்ந்திடுதே.

செடிகளும் சுற்றிப் படர்ந்து கொழுத்த வனத்தின் பழுத்த பழங்களைச் சுவைத்து மகிழும் பச்சைக்கிளிகளுடன் வசந்தககாலக் குயிலாரும், வண் மயிலாரும், மரங்கொத்தியும் மைனாவும் அழகானகூடும் தூக்கணாங்குருவிகளும் இன்னும் எத்தனை பறவையினங்கள் இயற்கைச் சூழலை அழகுமயமாக்குகின்றன. வண்ண மலர்களில் மதுவுண்டு மகிழும் வண்டுகளும், வண்ணத்தியும், தேனீக்களும் எம் இயற்கைத்தாயின் சொத்துக்களே.

வரம்புயர நீருயரும் என்ற ஔவையின் வாக்கிற்கு அணிசேர்க்கும் எம் மருத நிலத்தின் கதிர்களெல்லாம் தலைசாய்த்துக் கரமசைக்கும் காட்சிதான் என்னே "என்ன வகை இல்லை. இந்த திருநாட்டில், ஏன்கையை ஏந்தவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டில், ஒழுங்காய்ப் பாடுபடு வயற்காட்டில். உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில்" என்ற கவிஞரின் கருத்திற் கரம் சேர்த்துழைக்கும். எம் கமக்காரர்களின் உழைப்பிற்கு நிகரென்ன, காடு கரம்பை, மேடு திருத்தி கழினிகளாக்கும். உழவர் மனம் நாடும் பொருளும் இன்பம் நல்கிட தம் வெண்கலச் செட்டிகுளம் வாழியவே.

செட்டிகுளப் பிரதேசத்தின் வடக்கு எல்லையாக குருக்கள் புதுக்குளம், தெற்கு எல்லையாக காட்டு மாங்குளமும், கிழக்கின் எல்லையாக சூடுவெந்தபுலவும், மேற்கெல்லையாக பறையனாளங்குளமுமாக வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வெல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் மிகப்பழமை வாய்ந்த குடியிருப்புக்களாக செட்டிகுளம், பெரிய புளியாலங்குளம், மதகுவைத்தகுளம், நெடுங்கரைச் சேனை, சின்னத்தம்பனை, வகைக்கட்டிய ஒலுக்குளம், முதலியார்குளம், பழைய குடியிருப்பு, முசல்குத்தி, கப்பாச்சி, கொங்கராயன் குளம், கன்னாட்டி, நொச்சிக்குளம், பறையனாளங்குளம், போன்ற குக்கிராமங்கள் காணப்பட்டன. இதைவிட ஆணைவிழுந்தான், சின்ன சிப்பிக்குளம் என்னும் கிராமங்கள் பழைய முஸ்லிம் குடியிருப்புக்களாகவும், இருந்தன.

செட்டிகுளப் பிரதேசத்தின் குடிப்பரம்ல் மிகக் குறைவாக இருந்தமையால் தொழில் வாய்ப்புக்களுக்காக யாழ் தீவகப்பகுதிகளில் இருந்து 1952 ம் ஆண்டு முகத்தான்குளப் பகுதியில் வீடுகள் அமைக்கப்பட்டு 169 குடும்பங்கள் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டன. இக்குடியேற்றத்தில் செட்டிகுளப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு சிலருக்கும் வீடுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர்களின் தொழில் வாய்ப்பிற்காக 5 ஏக்கர் நெற்காணியும், 3 ஏக்கர் மேட்டு நிலமும் அரசினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு வழங்கப்பட்ட 845 ஏக்கர் வயல் நிலங்களுக்கும் நீர்ப்பாசன வசதிக்காக முகத்தான் குளம் என்னும் பெரிய நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டது. இக்குளத்தின் மூலம் நீரைப் பெற்று அன்றைய விவசாயிகள் தமது வாழ்வாதாரத் தொழிலான விவசாயத்தை மேற்கொண்டனர். இவர்களில் சிறு பகுதியினர் மந்தை வளர்ப்பிலும் ஈடுபட்டனர்.

இவ்வாறாக 1961 ம் ஆண்டு பாவற்குளம் குடியேற்றத் திட்டதின் மூலம் யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து கணிசமான அளவு மக்கள் இங்கு குடியேற்றப்பட்டனர். இக்காலகட்டங்களில் மக்கள் விவசாயம், மந்தை வளர்ப்புடன், தேன்சேகரித்தல், வேட்டையாடுதல், தச்சுத் தொழில், கம்மாலைத் தொழில் போன்றவற்றிலும் ஈடுபட்டனர். இப்படியாக மக்கள் பசி பட்டினியின்றி பாலும் தேனும் பொழியும் பவளத்திருவூரில் செழிப்புடன் வாழ்ந்து வந்தனர். காடுகளை அழித்து அங்கு குரக்கன், இறுங்கு, சாமை போன்ற தானியங்களையும் உப உணவுப் பொருட்களையும் தாமே உற்பத்தி செய்து தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தனர்.

காலத்திற்கு காலம் இலங்கையில் இடம்பெற்ற இனப்பிரச்சினைகளும் இடப்பெயர்வும் எம் செட்டிக்குளப் பிரதேசத்தை எட்டிப்பார்க்கத் தவறுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைப் புறக்கிராமம் என்பதால் எம்மக்கள் இடர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் அதிகமாகும். 1976 – 1977 களில் தென்பகுதியில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் தென்பகுதியில் குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் இங்குவந்தமையால் அவர்கள் பெரியகட்டு, கணேசபுரம், முசல்குத்தி, கப்பாச்சி, பத்திநாதர் புரம், நித்தியநகர், வீரமாணிக்கன் குளம் போன்ற இடங்களில் குடியமர்த்தப்பட்டு காணிகளும் வழங்கப்பட்டன.

இவ்வாறாக செட்டிகுளப் பிரதேசம் மனிதவளத்தாலும், இயற்கை வளங்காலும் அலங்கரிக்கப்பட்டு அபிவிருத்தியடைந்து வந்த காலகட்டத்தில் 1984ல் ஏற்பட்ட மற்றுமொரு இனக்கலவரத்தினால் செட்டிகுளப் பகுதியில் வாழ்ந்த மக்கள் பெருந்துன்பங்களையும் இழப்புக்களையும் சந்தித்தனர். இதன் காரணமாக மருதமடுத் தேவாலயத்தில் ஒரு பகுதியினரும், இன்னுமொரு பகுதியினர் இந்தியா நோக்கியும் இடம்பெயர்ந்தனர். உடமைகள் இழந்தோம், உறவுகள் இழந்தோம் இழப்பதற்கு எம்மிடம் எதுவுமில்லை என்ற நிலை உருவானது. மீண்டும் நிலமைசாதகமாக அமைந்த காரணத்தால் அகதிகளாக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினர் 1986இல் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு வந்து குடியமர்ந்தனர். வாழ்வின் வசந்தத்தை நோக்கி வந்த மக்கள் மீண்டும் 1989 - 1990 இல் வன்செயல்களால் பாதிக்கப்பட்டு மீண்டும் மருதமடுத் தேவாலயத்தை நோக்கியும், இந்தியாவை நோக்கியும் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர். பல தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் தமது வாழ்க்கைப் படகை ஓட்டிக் கொண்டிருந்த மக்கள் 1994 தொடக்கம் கொஞ்சம் கொஞ்சமாக செட்டிகுளப்பகுதியை நோக்கி மீண்டும் வரத் தொடங்கினர்.

இவ்வாறு வந்தவர்களை அரசு முதலியார்குளம், வீரபுரம் மெனிக்பாம் போன்ற வீட்டுத்திட்டக் குடியிருப்புக்களில் குடியிருத்தியது. இங்கிருந்து இடம்பெயர்ந்து இந்தியா நோக்கிச் சென்றவர்களில் ஒரு சிறு பகுதியினரே மீண்டும் இங்கு வந்து குடியமர்ந்துள்ளனர். மறுபகுதியினர் இந்திய அகதிமுகாமிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

தற்பொழுது அரசினால் வழங்கப்படும் உதவிகளும், வீடமைப்புக்களும், வேலைவாய்ப்புக்களும் மக்களின் வாழ்க்கை நிலையில் சற்று முன்னேற்றத்தை தந்தாலும், வெளிநாடுகள் நோக்கி நிரந்தமாக இடம்பெயரும் மக்களின் தொகையும் அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. இதை விட மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று உழைத்து தமது பொருளாதாரத்தை முன்னெடுக்கும் ஒரு சாராரும் உள்ளனர். எது எவ்வாறாக இருந்தாலும் செட்டிகுளப் பிரதேசத்தின் உயிர்நாடியாக விளங்கிய விவசாயம் கைவிடப்படுமளவிற்கு காட்டு விலங்குகளினால் சேதம் விளைவிக்கப்படுகின்றது. நெற்காணிகளை விட மேட்டு நிலத்தையே அதிகளவில் கொண்டுள்ள இப்பிரதேசம் உழுந்து, பயறு, கௌபி போன்ற உப உணவுப் பொருட்களின் களஞ்சியமாக விளங்கியது. அப்பொழுது வன விலங்குகளான யானை, பன்றி, குரங்கு போன்றவற்றினால் பாரிய அழிவுகள் ஏற்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இப்பொழுது வேறுபகுதிகளிலிருந்து இங்கு கொண்டு வந்து விடப்படும். யானைகளும், குரங்குகளும் இம்மக்களின் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் முட்டுக்கட்டை போட்டுவிட்டன. பகல் வேளைகளில் வீடுகளிலும் தோட்டங்களிலும் புகுந்து பழமரங்களையும், மரக்கறிப் பயிர்களையும் நாசஞ்செய்யும் குரங்குகளும், இரவு வேளைகளில் குடியிருப்புக்களிலும், வயல் நிலங்களிலும் புகுந்து பாரிய அழிவை ஏற்படுத்தும் யானைகளும் பிறபகுதிகளிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டனர்.

இதை விட செட்டிக்குளப் பிரதேசத்தின் உப உணவுப் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டமைக்கு இன்னுமொரு காரணியாக மாறுபட்ட மழைவீழ்ச்சியும் அமையலாம். காலத்திற்கு காலம் மழைவீழ்ச்சி குறைவடைவதும் பருவகாலம் தவறி மழை பெய்வதும் உழுந்து போன்ற உப உணவுப் பயிர்ச்செய்கை குறைவடைந்தமைக்கு காரணமாக அமையலாம். காடுகளை அழித்து குடியேற்றங்களும், இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டமை. குறிப்பாக 2009இல் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களைத் தற்காலிகமாகக் குடியமர்த்த மெனிக்பாம் பகுதியில் பாரிய பிரதேசம் காடழிக்கப்பட்டது. இதனால் எமது வனவளமும் மழைவீழ்ச்சியும் குறைவடைந்தது.

'ஆறில்லா ஊருக்கு அழகுவாள்' என்றாள் ஔவைப்பாட்டி. ஆம் எமது செட்டிக்குளப் பிரதேசத்தின் செழுமைக்கு மல்வத்துஓயா எனப்படும் அருவியாறும் ஒரு காரணியாகும். பாவற்குளப் பகுதியிலிருந்து வரும் கல்லாறு எனப்படும் ஒரு சிற்றாறு மல்வத்துஓயா எனப்படும். அருவியாற்றுடன் கலப்பதுவும் எம் செட்டிகுளப்பிரதேச எல்லைக்குள்ளே தான். இவ்விரு ஆறுகளையும் அண்டிய பிரதேசங்களில் 1970 – 1990 வரையான காலப்பகுதியில் மக்கள் விவசாய நடவடிக்கைக்காக குடியேறி மிளகாய் மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டனர். 1990 இடப்பெயர்வின் பின் இந்நிலங்கள் மீண்டும் தரிசு நிலங்களாகக் காணப்படுகின்றன. இவ்வருவியாற்றில் அதிகமணல் குவிவதால் மக்கள் மணல் அகழ்வில் ஈடுபட்டு உழைத்து இலாபமீட்டுகின்றனர். இதை விட இப்பகுதியில் உள்ள இயற்கைத் தாவரங்கள் பலகைக்காக அரியப்பட்டு வேறுமாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு வந்தமையானது எமது வளங்களைச் சூறையாடினர் என்று தான் கூறமுடியும். இருப்பினும் இவ்வாறான செயற்பாடு தற்பொழுது கணிசமானளவு குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதை விட வௌவாலை மற்றும் வரகுச்சேனைக்குளம் போன்ற இடங்களில் மிகப் பழைய இராசதானிகள் இருந்தமைக்குச் சான்றுகளாக அழிவடைந்த சிதைந்த கட்டடப் பகுதிகள் சான்று பகிர்கின்றன. ஒட்டு மொத்தத்தில் செட்டிகுளப் பிரதேசம் ஒரு பழைமை வாய்ந்த பிரதேசம் என்பது யாவரும் அறிந்ததே. அதன் பழைமையையும் தொன்மையையும் பாதுகாப்பது எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். வெள்ளம் வருமுன் அணை கட்டுவோம். கள்வன் வருமுன் காவலிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dr. (Mrs).சரண்யா சுதர்சன்**
மருத்துவ பொறுப்பதிகாரி,
கிராமிய சித்த வைத்தியசாலை,
செட்டிக்குளம்

# செட்டிக்குளம் கிராமிய சித்தவைத்தியசாலையின் ஊடான சித்த மருத்துவ சேவை

சித்தமருத்துவத்தின் சிறப்புகளையும் செட்டிக்குளம் கிராமிய சித்த வைத்திய சாலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகளையும் இச் சஞ்சிகை மூலமாக பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சித்த மருத்துவம் வேதங்களுடனும் மனித நாகரிகங்களுடனும் பிண்ணிப் பிணைந்தது. மனிதன் படைக்கப்பட்ட காலம் முதல் மனித வளர்ச்சியுடன் மருத்துவமும் வளர்ச்சி அடைந்தது. 64 கலைகளில் ஒன்றாக கருதப்படும் சித்தமருத்துவம் நோய்களுக்கான தீர்வுகளை மட்டுமல்லாது நோயில்லா வாழ்க்கை நெறியினையும் சிறப்பாக செப்புகின்றது. உணவே மருந்து என்னும் தத்துவம் இன்றைய சமூகம் புரிந்து கொள்ள தவறியதன் விளைவே இன்று பெரும் பிரச்சனையாக, ஆங்கில மருத்துவத்திற்கு பெரும் சவாலாக உள்ள தொற்றா நோய்களுக்கான மிக முக்கிய காரணியாகும். திருவள்ளுவர் திருக்குறளில் மருத்துவம் என்னும் அதிகாரத்தில் குறிப்பிட்டு இருப்பதும் இதுவே ஆகும்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
அருந்தியது அற்றது போற்றி உணின்"

எனும் திருக்குறள் உணவு பழக்க வழக்கத்தின் முக்கியத்துவத்தை விளக்குகின்றது. ஒவ்வொரு சித்த மருத்துவர்களின் நோய் அணுகுமுறையிலும், நோய் தீர்க்கும் படிமுறைகளிலும், உணவும் சமிபாட்டுத் தொகுதியின் தொழிற்பாடும் முக்கிய இடம் வகிக்கின்றது.

பெரும்பாலான மக்கள் மனதில் எழும் சந்தேகம் அனைத்து நோய்களுக்கும் சித்த மருத்துவத்தில் தீர்வு உண்டா? என்பதுதான். இருப்பினும் எமது பெரும்பாலான நோய்களுக்கு காரணம் எமது பழமைகளை மறந்து புதுமைகளை நாடியதன் விளைவு என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. சுருக்கமாகக் கூறுவதாயின் தீராது என சித்தர்களினால் கணிக்கப்பட்ட நோய்கள் தவிர்ந்த அனைத்து நோய்களுக்கும் சித்தமருத்துவம் தீர்வாகிறது.

மேலும் மக்கள் மத்தியில் நிலவும் மிகப்பெரிய தவறான கருத்து, சித்த மருந்துகளின் மூலம் நோய்களை குணப்படுத்த நீண்டகாலம் தேவைப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது, ஆனால் உண்மை அதுவல்ல சித்த பரிகாரங்கள் உடலில் செயல்படும் முறை மிகவும் விசேடமானது. நோயுள்ள இடத்தில் உடனடியாக மாற்றத்தை ஏற்படுத்தி விட்டு நோயற்ற இடத்தில் அதன் தாக்கம் வேறுவிதமாக பிரதிபலிக்க சித்த மருந்துகள் இரசாயனங்கள் அல்ல. சித்த மருந்துகள் ஒவ்வொன்றும் உடலில் ஏற்பட்ட சமநிலை மாற்றத்தை சரி செய்கின்றது விபரமாக கூறுவதாயின் திருவள்ளுவரின் வாக்குப்படி

மிகினும் குறையினும் நோய்செய்யும்
நூலோர் வழிமுதலாய் எண்ணிய மூன்று

அதாவது எமது உடலில் சமநிலையில் இருக்கவேண்டிய வாதம் பித்தம் கபம் என்னும் மூன்று தோஷங்களும் சமநிலை குழம்பும் போது நோய் ஆகின்றது. சமநிலை, எமது மாறுபட்ட உணவு பழக்க வழக்கத்தாலும் மற்றும் வாழ்க்கை முறையினாலும் அல்லது கிருமி தொற்றினாலும் ஏற்படுகின்றது இவற்றை மீண்டும் சமநிலைக்குக் கொண்டு வருவதே சித்த பரிகாரங்களில் நோக்கமாகும். அத்துடன் நோய் தீர்க்கும் காலம் என்பது நோய் வளர்ச்சியடைந்த காலத்தைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது உதாரணமாக குறுகிய காலத்தில் தோன்றும் காய்ச்சல் தடிமன் என்பன மிகக் குறுகிய காலத்திலும் நீண்டகால நோய்கள் சற்று காலதாமதமாகவும் குணப்படுத்த படுகின்றது.

இவ்வாறான நுணுக்கமானதும் சிறப்பு அம்சம் பொருந்தியதுமான ஒரு மருத்துவ சேவை வெண்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் இயங்குவது இப்பகுதி சார் மக்களினது ஒரு வரப்பிரசாதமாகும். எமது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவும் அனைத்து நோய்களுக்குமான யோகா, பஞ்சகர்மா மற்றும் கப்பிங் உட்பட்ட சிறப்பு கிளினிக் (clinic) வசதிகளும் வழங்கப்படுகின்றது.

முதியோர் நோய்கள், பாலர் நோய்கள், மூட்டு வாதம் தண்டு வாதம் போன்ற வாத நோய்கள், நரம்பு நோய்கள், மகளீர் ரோகங்கள், தோல் நோய்கள், சுவாச நோய்கள், குடல் நோய்கள், சிறுநீரக நோய்கள், உயர் குருதி அமுக்கம், அதிக கொழுப்பு நோய், நீரிழிவு நோய் போன்ற நோய்களுக்கான விசேட கிளினிக் வசதிகள் வழங்கப்படுகின்றன.

இவை தவிர்த்து சமூக மருத்துவ உத்தியோகத்தர்களினால் எதிர்காலத்தில் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும் பொருட்டு தொற்றா நோய்கள் தொற்றுநோய்கள் போன்றவற்றிற்கான தடுப்பு முறைகள், முதியோர் ஆரோக்கியம் உளநலம், போசனை, கர்ப்பிணித் தாய்மார்களின் ஆரோக்கியம், சார்பான விழிப்புணர்வு நிகழ்வுகளும், நடமாடும் மருத்துவ முகாம்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கூறியவாறான எமது வைத்தியசாலையில் கிடைக்கும் வளங்களை பயன்படுத்தி இப்பகுதி மக்கள் ஆரோக்கியமான வாழ்வு வாழ குரு அகஸ்தியர் துணை புரிவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரசிங்கம் பிரதீபன்
கலாசார உத்தியோகத்தர்,
"வீரகேசரி நாளேடு 17.05.19"

# நம் நாட்டு புலவர்கள் வளர்த்த நாடகக்கலை

ஒரு காலத்தில் இசைத்தமிழ் செவி வழியாகவும், நாடகத்தமிழ் கண் வழியாகவும் மக்கள் வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படுத்தியது. திருக்கோவில்களில் பண் வளர்ந்தது போன்று நாடகமும் வளர்ந்த வரலாறும் உண்டு. இசை வல்லோர்களாகிய புலவர்கள் கும்மிப்பாடல்கள், கரகப்பாட்டு, காவடிப்பாட்டு, கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளனர். சிலர் நடிக்கவும் செய்தனர். கூத்துக் கொட்டகைகளும், பெரிய விருட்ச நிழல்களும், தெரு, ஆலய வீதி ஓரங்களும் நன்கு பயன்படுத்தப்பட்டன.

ஒலி வாங்கி இல்லாத காலத்திலும் முழு நிலா வேளைகளிலும், அறுவடைக் காலத்திற்குப் பின்பும் தரமான நாடகங்கள் மேடை ஏற்றப்பட்ட வரலாறுகளை, புலவர்கள் சரித்திர நூல்கள் வாயிலாகவும், செவி வழிச் செய்திகளாலும் அறிய முடிகின்றது. எனது பத்து வயதுப் பராயத்தில் விடிய விடிய நாடகம் பார்த்த ஞாபகம் தெரிகிறது. முந்தைய கால கூத்துக்களும் நாடகங்களும் இரவு ஒன்பது மணிக்கு ஆரம்பமாகி விடியற்காலை ஐந்து மணிவரை நடைபெறும். ஒப்பனையுடன் நீராகாரத்துடன் ஓய்வு செய்து பபூன் எனப்படும் கோமாளி மக்கள் தூக்கம் கலைய நகைச்சுவை ததும்ப அங்கசேஷ்டைகளும் விசேட பாடல்களும் துரித கதியில் பாடி மகிழ்விப்பர். நடிப்பில் அவர் என்ன பாத்திரம் ஏற்றாரோ அப்பெயர் புனைபெயராக அவர் வாழும் பொழுதும் வாழ்ந்து முடிந்த பின்பும் தங்கிவிடும்.

விசுவாமித்திரர், தம்பு, மணியம், சந்திரமதி சின்னையா, இயமன் கந்தையா, வேடன் சின்னத்தம்பி, பபூன் செல்லையா, கோமாளிக் கந்தர் ஆகியவை சில வெளியூர்க்காரர் செல்லையாவைத் தேடி வரும் போது பபூன் செல்லையா வீடு எது? என்று கேட்டால் சிறு பையனே வழிகாட்டுவான். அவ்வளவு பிரசித்தம்
கூத்து என்று ஆரம்பித்து விலாசம் என்று தொடர்ந்து நாடகம் என்று நாற்பத்தெட்டாம் ஆண்டு வரை நடைபெற்றாலும் அதன் பின் நீண்ட காலம் அரிச்சந்திர விலாசமும் பூதத்தம்பி விலாசமும் தொடர்ந்தன. பின் இவைகள் நவீன யுக்தியுடன் நாடக வடிவம் பெற்றன. சித்திரை மாதங்களில் பத்தரை மணிக்கு நித்திரை வந்தாலும் புத்தாண்டு மகிழ்ச்சியில் விடிய விடிய விழிமூடாமல் சுவைத்த வரலாறும் உண்டு. கலையரசு சொர்ணலிங்கம் காலத்திற்கு முன்னரே நாடகம் ஊக்குவிக்கப்பட்டது என்பது புலப்படுகின்றது. 18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஈழமணித் திருநாட்டில் பல பாகங்களிலும் தமிழ் வாழ்ந்த இடங்களிலெல்லாம் நாடகத்துக்குப் பஞ்சமே இல்லை. எமது முன்னோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட புராண, இதிகாச வரலாறுகளும், தெய்வ சம்பந்த கதைகளும் மக்கள் மனதில் அறநெறி பரப்பியதெனில் மிகையாகாது. அரிச்சந்திர நாடகம் பார்த்த காந்தியே மகாத்மாவான செய்தி அறிந்ததே. சீர்பெற்ற சமுதாயத்திற்கு நாடகம் உறுதுணையாயிற்று. 1755ஆம் ஆண்டு காலப்பகுதியில் அருணாசலம் சுவாமிநாதர் என்ற பெரும்புலவர் செய்த சேவை அளப்பரியது. மானிப்பாய் ஊர்வசி, நல்ல கல்விமான் முத்தமிழும் உணர்ந்தவர். இயல் வித்தகராக இவர் திகழ்ந்து கோவைப் பிரபந்தங்கள் பாடியதால், கோவைத்துறை சுவாமிநாதர் என்று பெயர் பெற்றார். இராமாயணமும், பாரதமும் மிக நன்கு அறிந்தவர். இவரது இராம நாடகமும் தர்மபுத்திர நாடகமும் மிகவும் புகழ்பெற்றவை. முருக வணக்கமாக சந்நிதி முருகனையே பாடினார். பல இடங்களில் மேடையேற்றப்பட்டன. சூதாட்ட வெற்றியில் துரியோதனன் திரெளபதியை இழுத்து வரும்படி துச்சாதனனை அனுப்புகையில் அவன் பாடி அழைக்கும் பாட்டு ஒன்று.

"ஐவருக்கொருத்தியாய அன்னமே நடந்து வாடி தைவரு தருமன் தோற்ற தையலே நடத்து வாடி! பொய்நல மெய்யதாகப் புணரு மெல்லியலே வாடி! துய்ய அண்ணனைச் சிரித்த தோகையே நடந்து வாடி" உச்சஸ்தாயியில் பாடக் கூடிய வல்லமை அக்காலப் பாடகருக்கு உண்டு. கிட்டப்பாவே 3 கட்டைச் சுருதியில் பாடினாராம். ஒலி வாங்கி இல்லாக் காலத்தில் துச்சாதனாய் நடித்தவர் எப்படிப் பாடியிருப்பார் என்றும் உணரலம். யாழ்ப்பாணக் கிராமங்கள் அனைத்திலும் இந்த நாடகம் மேடை ஏற்றப்பட்டு வரவேற்பைப் பெற்றது.

விபுலானந்த அடிகளே இவரது பாடல்களை மிக விரும்பிப் படித்தாராம். கந்தர்மடம் வெளியில் அனேக தடவைகள் மேடை ஏற்றப்பட்டது. நாடகச் சுவாமிநாதர் என்றே இவரது பெயரும் வழங்கலாயிற்று. அடுத்தவர் ஆராய்ச்சியார் கந்தப்பிள்ளை என்ற பெரியார். ஓரளவு சுவாமிநாதரின் சமகாலத்தவர். கந்தர் என்றும் ஆராய்ச்சி உத்தியோகம் பார்த்ததால் ஆராய்ச்சியார் கந்தப்பிள்ளை என்றும் அழைக்கப்பெற்றார். வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர். சமயஅனுட்டான சீலர் புலவராய் எண்ணத்தக்கவர். பாடல் இயற்றுவதிலும் விற்பன்னர். நல்லை நாவலர் நலமுறு பாவலர் என்று நாம் வணங்கும் நாவலர் பெருமானின் தந்தையாவார். பல பாடல்களுடன் நாடகங்களும் எழுதி மேடையேற்றி வெற்றிகண்டவர்.

சூடாமணி நிகண்டில் சில உவமைப் பாடல்களையும் பாடிச் சேர்த்ததாகச் சொல்வர். பன்மொழி வல்லுனரான இவர் வைத்தியராகவும் இருந்த செய்தியும் உண்டு. அரச உத்தியோகம் பார்த்தவர். இவரது கடைசிப் புத்திரனே ஆறுமுக நாவலராவார். இளம் வயதிலேயே நாடகத் தயாரிப்பு ஆரம்பமானது. இவரது சந்திரகாச நாடகம், இராமவிலாசம், நல்லைநகர்க் குறவஞ்சி, இரத்தினவல்லி நாடகம் போன்றவை பிரபல்யமானவையே. இவர் காலத்தில் ஓரளவு கல்வி அறிவுபெற்ற முதியவர்கள் நாடகங்கள் மூலம் தங்கள் கல்வி அறிவை மேலும் வளர்த்தனர் என்பது அறியப்படுகின்றது. இவ்வகைப் பைந்தமிழ்ப் புலவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் பாடல்கள் மூலம் இயலையும் இசையையும் நாடகத்தையும் வளர்த்தனர். 1842ம் ஆண்டு காலப்பகுதியில் எழுதிக் கொண்டிருக்கும் போதே இறையடி சேர்ந்தார் என்பர். அக்காலத்தில் கனகி புராணம் என்ற கவிதைத் தொகுதியும் பிரபல்யமாயிருந்தது. தாசியைப் பற்றிய வரலாறாக நட்டுவச் சுப்பையனார் என்பவரால் பாடப்பட்டதாகக் கொள்வர். சட்டம்பியார் விசுவநாதர் என்ற பெரியார் தெல்லிப்பளை கட்டுவன் ஊரைச் சேர்ந்தவர். புலமைமிக்கவர், கட்டுவனூர்க் கவிராயர் என்று பாராட்டப் பெற்றவர். இவர் தந்தை காசிநாதரைக் காசிப் புலவர் என்றே போற்றினர். கட்டுவனூரில் ஆலயங்கள் அதிகம் இருந்தன. இவரே யாழ் . கும்மி, கோலாட்டம் வசந்தன் ஆட்டம், நாடகத்தைப் பரப்பியவர் என்றும் கருதப்படுகின்றது. தெல்லிப்பளையிலிருந்து அச்சுவேலிப் பகுதி வரை இவர் புகழ் மிகவும் ஓங்கியிருந்தது. பாடல் வல்லவராயும், மிருதங்கள் வாசிக்கவும், தாள நடைக்கேற்ப "வசந்தன் அடிக்கோலாட்டம்" பிரபல்யமானவையே. இவரால் சுத்துக்கோலாட்டம், உறிபின்னல் கோலாட்டம் என்பவை ஆக்கப்பட்டதாகக் கொள்வர். வேடம் போட்டுப் புராணக் கதைகளை நாடகமாக நடித்த பெருமையும் இவருக்குண்டு.

அருணாசலம் சதாசிவம்பிள்ளை என்பவர் மானிப்பாயைச் சேர்ந்தவர். இவரை ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை என் அழைத்தனர். வட்டுக்கோட்டை செமினரியில் கல்வி கற்றபடியால் பெயர் மாற்றம் பெற்றார். புலவர்கள் பற்றிய பாவலர் சரித்திர தீபகம் எனும் நூலை எழுதிப் புகழ்பெற்றவர். நாடகத்தையும் ஊக்குவித்தவர். சிறந்த எழுத்தாளன். வல்வெட்டி குமாரசாமி முதலியார் என்பவர் இன்னுமொரு புலவர். இசை நுணுக்கம் தெரிந்தவர். பாடல்கள் இயற்றவும் பாடவும் வழிநடத்தவும் தெரிந்தவர். இந்திர குமார நாடகம் எனும் நாடகத்தையும் எழுதியிருந்தார். அருச்சுனன் சுபத்திரை வரலாற்றைக் கொண்டது. இதில் வரும் அவையடக்கப் பாடல் கம்பர் பாணியில் அமைந்ததாகப் பாராட்டுவர். இவர் நையாண்டி நகைச்சுவைப் பாடல்களும் அனேகம் பாடியுள்ளார். திருகோணமலை அகிலேசபிள்ளை என்பவரும் புலமை மிக்கவரே. பக்தி வழி வந்த பரம்பரையில் உதித்தவர். திருக்கோணேசவைபவம், கல்வெட்டு, திருக்கரவைப் புராணம் என்பவை இவர் முயற்சியிலேயே நூலுருப் பெற்றன. பல்வகைப் பாடல்களும் பாடியுள்ளார். சில நாடகங்களும் எழுதியுள்ளார். இவரது கண்டி நாடகம் பிரபல்யமானது. தெல்லிப்பளை பார் குமாரகுலசிங்க முதலியாரும் 1846ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிகவும் பாராட்டுப் பெற்ற புலவர்களில் ஒருவராவார்.

நாடகத்தில் பேராசை கொண்டவர். தனது முப்பதாம் வயதளவில் எழுதி மேடை ஏற்றிய பதிவிரதை விலாசம் எனும் நாடகம் யாழில் உள்ள பல கிராமங்களில் மேடை ஏற்றப்பட்டுப் பலரது பாராட்டையும் பெற்றது. படித்தவர் பாமரர் என அனைவரும் ரசித்த நாடகம் என்பர். இவரது மகளும் ஒரு எழுத்தாளராக விளங்கினார். உடைந்த உள்ளம் என்ற நவீனத்தை எழுதியவர். ஆங்கிலம், தமிழ் இரண்டும் கைவரப் பெற்றவர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் வாழ்ந்த நிலம் ஈழம் என்றும் ஆதாரங்களுடன் எழுதி வைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமகன், அரச உத்தியோகம் வகித்தவர். இவர் இசையிலும் தேர்ச்சி பெற்று இருந்தமையால் பல கீர்த்தனைகளும் பதிவிரதை விலாசத்துக்காக எழுதப்பட்டு, நடிகர்களால் பாடப்பட்டவை. 1909 ஆண்டளவில் சுதேச நாட்டியப் பத்திராதிபர் கல்லடி வேலுப்பிள்ளை அவர்களால் நூலுருப் பெற்றதென்றும் கொள்வர்.

புலவர்கள் வரலாற்றைப் பாவலர் தீபகம், சுன்னாகம் குமாசாமிப் புலவர் எழுதிய புலவர் சரித்திரம் பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்களின் இலக்கிய வழி, பல்கலை புலவர் க.சி.குலரத்தினம் அவர்களின் செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் எனும் நூலிலும், வேறு பல சஞ்சிகைக் கட்டுரைகளிலுமிருந்து அறியமுடிந்தது. இவ்வகையான நாடகங்கள் எழுதப்பட்ட காலத்தையும், புலவர்களையும் எண்ணும் போது மீள நினைப்பது அவசியமாகின்றது. சிறிது காலம் நாடக நிலை இரண்டாவது உலகப் போர்ச் சூழலில் தொய்வு ஏற்பட்டு இருந்தும் இந்திய நாடகக் குழுக்களின் வருகையால் மறுமலர்ச்சி பெற்றது. சுப்பையா பாகவதர், தியாகராஜா பாகவதர் ஆகியோரது பவளக்கொடி, அல்லி அர்ச்சுனா, மனோன்மணி, திலகம் போன்ற நாடகங்கள் ஒப்பனையுடன் யாழ்.நாவலர் வித்தியாலயத்திற்கு முன்னால் உள்ள வெளியில் நீண்ட காலம் நடைபெற்றது. பழைய நாடகங்களையும் புதிய மெருகுடன் இங்கு மேடை ஏற்றிய செய்தியை 80 வயதைக்கடந்த முதியவர்கள் சிலர் சொல்வதையும் கேட்டிருக்கிறேன். கவனக் குறைவால் பிரதிகள் கிடைப்பது அரிதாயிற்று. செவிவழிச் செய்திகளால் பெறப்பட்ட தகவல்கள் ஏராளம். புலவர்களின் நாடகப் பண்பு வியக்க வைக்கின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சி.சிவதீபன்*
*யூனிற் - 04, வாரிக்குட்டியூர்*

## நான்கெழுத்து சொர்க்கம்

வந்தாரை வாழ வைக்கும்
வன்னி மாநிலத்திலே
வாழ வைத்த என்
தாய்க் கிராமத்திற்காய் ..........

வாய்க்கால் கரையோரம்
அமைந்த மாட மாளிகையாய்....
அழகிய ஓட்டு வீடுகளும்
ஓடி ஆடி விளையாடும்
வளம் நிறைந்த வண்டல் மண்ணும் ...

வான் புகழ் கொண்ட
தமிழ் முழங்கும்
கோயில் கீர்த்தனங்கள் ......

தாகம் தணிக்கும் வானுயர்
தென்னை மரங்களும் ...
இளைப்பாற குளிர் நிழல் தரும் அழகிய
வேப்பமரங்களும் ...

கிளைகள் பரப்பி
கொத்துக் கொத்தாய் பழங்கள் தரும்
மாமரங்கள் ....
மரங்களில் கூடுகட்டி குதூகலமாய்
வாழும் பறவைக் கூட்டங்கள் ....

துள்ளிக் குதித்துத் திரியும்
அழகிய ஆட்டுக்குட்டிகளும்...
பயமின்றி பக்குவமாய் தெருவோர
நடைபோடும் அழகிய மாட்டுக் கூட்டங்களும்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுப்பிலே
தண்ணீர்க் குடம் ஏந்தி
அன்னநடை போடும்
மங்கையர்களும்...

மருந்தில்லா மரக்கறியும்...
அம்மியிலே சரக்கரைத்த
நா ஊறும்
மண்சட்டி மீன் குழம்பும் ...

சூரியனை இருள் விழுங்கியது அறியாமல்
கிட்டிப்புல்லும்
பல்லாங்குழியும் ஆடும்
சின்னஞ் சிறிய சித்திரங்களும் ...

ரம்யமான மாலைப்பொழுதும் ...
குடும்பத்தோடு கதை பேசும்
திண்ணை அமர்வுகளும் ...

வாய் ஓயாத பாட்டியின் பழுத்த கதையிலும்...
தாத்தாவின் கலகலப்பான
கேலிப் பேச்சிலும்
சுருளும் உறவுகள் ...

பசுமை நிறைந்த வயல் வெளிகளும் ...
திரும்பும் திசையெல்லாம்
எழில் கொஞ்சும் இயற்கையும் ..

இவையெல்லாம் எங்கள் மண் மணக்கும்
கிராமத்து வாழ்க்கையின்
வண்ணக் கோலங்கள் ....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி. குகவாணி மாரிமுத்து
ஆசிரியை, கணேசபுரம்

# மனிதனின் விஞ்ஞான வளர்ச்சியும் இயற்கையுடனான போட்டியும்

பூமியில் காணப்படும் பல்லாயிரக் கணக்கான உயிர்களில் மனிதன் ஓர் உன்னத உயர்ந்த உயிரியாகவே கணிக்கப்படுகின்றான். உயர் விலங்கு மனிதன் என விஞ்ஞானம் வரையறை செய்த போதிலும் பல்வேறு இயல்புகளில் விலங்கை விட மனிதன் ஒரு படி மேலே காணப்படுகின்றான். அறிவு மட்டத்திலும், படைப்பாற்றல்களிலும் உயர்ந்த மட்டத்தில் காணப்படும் இம்மனிதன் இவ்வுலகில் தோன்றிய போது எளிமையான இயற்கையுடன் ஒன்றி வாழ்க்கை நடத்தினான். படிப்படியாக மனிதன் அறிவிலும், உடலிலும் கூர்ப்படைய படைப்பாற்றல்கள் பல பிறக்கத் தொடங்கின. பல தசாப்தங்கள் கடந்து வரும் போது பசுமைப்புரட்சி, கைத்தொழில் புரட்சி என்பன ஏற்பட்டது. அத்துடன் நின்றுவிடவில்லை விஞ்ஞான வளர்ச்சியில் தற்பொழுது மனிதன் வெற்றியும் கண்டுவிட்டான். விஞ்ஞானத்தை வென்ற மனிதன் அடுத்தப்படியாக போட்டியிட நினைத்தது. இயற்கையுடன் இயற்கை அதற்கு காண்பித்த மறுவிளைவுகளை நாங்கள் விரிவாக நோக்குவோம்.

பூமியில் ஏற்பட்ட அபரிமிதமான சனத்தொகை அதிகரிப்பும் அதனால் ஏற்பட்ட இயற்கை நுகர்வும் சூழலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சனத்தொகை அதிகரிக்க தேவைகள் அதிகரித்தன. தேவைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு விஞ்ஞானத்தின் துரித வளர்ச்சி தேவைப்பட்டது. அதன் காரணமாக ஏற்பட்ட 'விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி' இயற்கையை சீண்டிப்பார்க்க தவறவில்லை. இயற்கை சமநிலையை விஞ்ஞான வளர்ச்சி எவ்வாறு குழப்பமடைய செய்துள்ளது என ஆராய்வோம். இயற்கை நமக்கு இலகுவாகவும் இலவசமாகவும் வழங்கிய நிலம், நீர், வளி, ஒளி என்பவற்றை விஞ்ஞான வளர்ச்சி வெகுவாக பாதித்துள்ளது.

## வளி மாசடைதல்

மனிதன் பறவையை கண்டான் விமானம் படைத்தான். அத்தோடு விடவில்லை நிலவுக்கே சென்று அங்கே தன் கொடியை நட்டான். பல விண்வெளி ஓடங்களை அண்டவெளிக்கு அனுப்பினான். பல செயற்கை கோள்களை உருவாக்கி ஏவினான். இதன் மூலம் வளிமண்டலத்தில் பல கேடுவிளைவிக்கும் நச்சுவாயுக்கள் சேர்க்கையடைந்தன. அத்தோடு நின்றுவிடவில்லை எதிரிகளை அழிக்கவல்ல ஆயுதங்களை தயாரித்தான். இதனால் உலகயுத்தம் ஆரம்பமானது. பல அணு ஆயுதப் பரிசோதனைகள் நடைபெற்றன. உதாரணமாக ஜப்பானில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள 'ஹிரோசிமா', 'நாகசாகி' என்ற இடங்களில் நச்சு வாயுக்கள் பல்லாயிரக்கணக்கான உயிர்களை குடித்த அவலம் யாவரும் அறிந்ததே.

இன்றும் அவ்வாயுக்கள் வளிமண்டலத்தில் சேர்க்கையடைந்ததன் விளைவாக அங்கு ஊனமுற்ற குழந்தைகள் பிரசவிக்கப்படுகின்றன. மனிதனது விஞ்ஞான வளர்ச்சியில் அடுத்தப்படியாக உருவாக்கப்பட்ட நவீன தொழில்நுட்ப சாதனங்களின் விளைவாக புவி பாரிய தாக்கத்தை எதிர்நோக்கியுள்ளது. அதாவது குளிரூட்டிகள் , குளிர்சாதனப்பெட்டிகள் மூலம் வெளியிடப்படும் CFC (Chloro Floro Carbon) என்ற வாயுவின் தாக்கத்தினால் புவியின் பாதுகாப்பு படையாக விளங்கும் ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக சூரியனில் இருந்து தேவையற்ற கேடுவிளைவிக்கின்ற கதிர்கள் புவியை அடைகின்றன. குறிப்பாக புறஊதாக் கதிர்கள் LUV கதிர்கள் புவியை அடைவதால் மனிதர்களுக்கு தோல் புற்றுநோய் போன்ற கொடிய நோய்கள் ஏற்பட்டுள்ளன. மனிதனின் நாகரீக மோகத்தின் விளைவால் ஏற்பட்ட இன்னுமொரு சூழலியற் தாக்கமாக 'பச்சை வீட்டு விளைவை' குறிப்பிடலாம். மனித தேவைகளுக்காக பல இயற்கை காடுகள் அழிக்கப்பட்டதன் விளைவால் காபனீரொட்சைட் $CO_2$ வீதம் அதிகரித்து ஒட்சிசன் $O_2$ வீதம் குறைவடைந்தது. இதன் காரணமாக பூகோளத்தின் வெப்பம் அதிகரித்தது. (Global borning) இதனால் துருவப் பிரதேச பனிக்கட்டிகள் உருகி கடலுடன் சேர்ந்தது. அதன் விளைவாக கடல்மட்டம் அதிகரித்து கடற்பெருக்குகள் ஏற்பட்டது. இந்நிலை தொடர்வதால் '2050' ஆம் ஆண்டளவில் சிறிய தீவுகளை இந்தோனேசியா, மலேசியா, இலங்கை போன்ற நாடுகள் கடலினால் மூழ்கிவிடும் அபாயம் உள்ளதாக எதிர்வு கூறப்படுகிறது.

### நீர்மாசடைதல்

பாரிய கைத்தொழில் புரட்சியின் பின் உருவாக்கப்பட்ட இராட்சத தொழிற்சாலைகளின் மூலம் வெளியேற்றப்படும் கழிவுகள் மூலமும் பசுமைப்புரட்சியின் விளைவால் உருவான நவீன விவசாய தொழில்நுட்பத்தின் கண்டுபிடிப்புகள் அதாவது புதிய புதிய பீடை, களைநாசினிகள், தாவர விளைச்சலைத் தூண்டும் பசளைகள், ஓமோன்கள் என்பன அரிய நீர்வளங்களுடன் சேர்க்கையடைவதால், அங்கே அல்காக்களும் பல்வேறு நீர்த்தாவரங்களும் மிதமிஞ்சி வளர்ச்சியடையும். இவ் அல்காக்கள் நீர் நிலைகளை மூடி வளர்வதால் நீர் வாழ் உயிரினங்கள் சுவாசிக்க தேவையான ஒட்சிசன் $O_2$ குறைவடைகிறது. இந்நிலைமை BOD (Biological Origen demand) என அழைக்கப்படும். இதன் விளைவாக அரிய நீர்வாழ் உயிரினங்கள் அழிவடைவதுடன் அந்நீர் நச்சுத்தன்மையடைவதால் மனிதனுக்கு உபயோகப்படாமல் போகின்றது.

இக்கழிவுப் பொருட்கள் நிலக்கீழ் நீருடன் சேர்வதால் நிலக்கீழ் நீர் மாசடைகிறது. உதாரணமாக அமோனியா $NH_3$ நிலக்கீழ் நீருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கையடையும் போது இதனை அருந்தும் கர்ப்பிணித்தாய் நீலக் குழந்தையை (Blue baby) பிரசவிக்கின்றார்கள். அது மட்டுமல்லாமல் நீர்வட்டம் குழப்பப்படும்.

### நிலம் மாசடைதல்

மனிதரின் முறையற்ற வளப்பாவனையின் விளைவாக நிலம் தரிசாதல், உவராக்கம் சதுப்பு நிலமாதல் போன்ற பாதிப்புக்களை வளமான விவசாய நிலங்கள் எதிர்கொள்ளுகின்றன. தொடர்ச்சியான பயிர்ச் செய்கையால் மண்வளம் குன்றுவதுடன் மண்ணரிப்பும் ஏற்படுகிறது. மண்ணரிப்பின் விளைவால் மண்சரிவு, வெள்ளப்பெருக்கு போன்ற பாரிய அனர்த்தங்களும் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறாக இயற்கை நமக்களித்த வியப்புமிக்க வளங்களை செயற்கை நிறைந்த மனிதன் மாசடையச் செய்துள்ளான். ஆதி மனிதன் இயற்கையை நேசித்தான் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தான். இயற்கையை கடவுளாக நினைத்து வழிபட்டான். இயற்கையுடன் நண்பர்களாக நேசித்து வாழ்ந்த ஆதிமனிதனை இயற்கையும் ஏற்றுக் கொண்டு எழிலான வளமிக்க வாழ்க்கையையும் அளித்தது. அதற்கு நேர்மாறாக இன்று மனிதன் விஞ்ஞானத்தை நேசித்து இயற்கையை நேசிக்கத் தவறினான். இதன் விளைவாக இயற்கை மனிதனுக்கு பகையாக மாறியது. இதனால் இயற்கையுடன் போட்டி போட நினைத்த மனிதன் இறுதியில் தோற்று விட்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. ப. ராஜ்மோகன்
முதலியார் குளம் றோ.க.பாடசாலை
செட்டிக்குளம்.

## அம்மா உடனடியாக

அரபு நாட்டு
அசிங்கங்களைக் கழுவி – நீ
அனுப்பும் ரியாலும், டினாரும்
எமக்கு வேண்டாம்
நீ உடனடியாக
வர வேண்டும்
உன் மடியில் முகம் புதைத்து
உன் செல்ல மகள்
ஆறுதலடைய வேண்டும்
மொட்டாக இருந்த நானிப்பொழுது
மலர்ந்து புத்தம் புது மலராய்...
அம்மா இப்போதெல்லாம்
என் இதயம் - உன்
அரவணைப்புக்காய் அதிகமா
ஏங்குகின்றது ஏன் தெரியுமா?
அக்காவின் கணவரின்
இரகசியத் தொடுகைகள்
அடுத்த வீட்டு கிழட்டு தாத்தாவின்
அர்த்தமுள்ள பார்வைகள்
ஆத்திரப்படுகின்றேன் - ஆனாலும்
அதற்கும் பயப்படுகின்றேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவட்டங்களின் சின்ன
கண் சிமிட்டல்கள்
சிறகுடைக்க நினைக்கும்
மாமாவின் மந்தன்கள்
எதற்குமே அலட்டிக் கொள்ளாத
என் குடிகார அப்பாவோடு
நானும் இளைய சகோதரர்களும் - நீ
வரத் தாமதிக்கும் நாட்கள் எல்லாம்
அக்கினிப் பரீட்சையில் உன் பிள்ளைகள்
கல்விப் பரீட்சையை எழுதப்படிக்க
அக்கினிப் பரீட்சைக்கு தயாராக்குபவரிடமிருந்து
எம்மைக் காக்க உடனடியாக
அம்மா உன் அழகு
ரோஜாவின் இதழ்கள் - தானாகவே
விழமுதல்
பலவந்தமாய் உதிர்க்கப்பட்டு விடலாம்
காம வல்லூறுகளின் பார்வையிலிருந்து
விடுபட முடியவில்லை – ஏனென்றால்
நீ இங்கு வராததால்
உன் பிள்ளை – உங்கள்
பிள்ளைகள்
அக்கினிக்கு 'ஆகுதி ஆகிவிடுவேனா
என்ற பயம் திடீரென
ஆரம்பித்துள்ளதனால்
அம்மா உடனடியாக வந்துவிடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**R. சாஜிதா,**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
மாங்குளம், நேரியகுளம்

## நல் உள்ளம்

வழமை போல "சுபஹ்" தொழுகையை முடித்து விட்டு வந்து மனைவி ரஹீமாவை எழுப்பினான் கபீர். "ரஹீமா எழும்புங்க சுபஹ்" தொழுறயில்லையா? எழும்புங்க, எழும்பி புள்ளைகளையும் எழுப்பி தொழ வைங்க' என்று உரத்த தொனியில் சத்தமிட்டான். ம்..ம். எழும்புறன் நீங்க தொழப்போயி வந்திட்டீங்களா? என்று படுக்கையில் இருந்தவாறே கேட்டாள் ரஹீமா. 'நான் தொழுதிட்டு வந்திட்டன் எழும்பி டீ, பிளேன்டீ என்ன சரி ஊத்துங்களேன். மீனுக்குப் போவனும். நேரத்துக்குப் போனாத்தான் சரி' என்றான் கபீர். உடனே ரஹீமா எழும்பி தொழுகையை முடித்துவிட்டு அடுப்பை மூட்டி தண்ணீர் வைத்து விட்டு பிள்ளைகளையும் எழுப்பினாள். பின்னர் எல்லோருக்கும் தேனீர் ஊற்றிக் கொடுத்து தானும் அருந்தினாள். தேனீர் அருந்திய உடனேயே மீன் பெட்டி கட்டிய தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு தொழிலுக்குப் புறப்பட்டான் கபீர்.

கபீர் ஒரு நடுத்தர குடும்பத்தின் தலைவன். மீன் வியாபாரம் தான் பிரதான தொழில். இரண்டு பெண்பிள்ளைகளும் இரண்டு ஆண் பிள்ளைகளுமுள்ளனர். மூத்தவர்கள் இருவரும் பெண்கள் ஆண்கள் இருவரும் இளையவர்கள். பெரிதாக வசதியென்று சொல்வதற்கில்லை. தினமும் மூன்று வேளையும் சாப்பிடும் அளவுக்கு ஏதோ ஓரளவு நிலையிலுள்ளவன் திருமணம் முடித்த காலத்திலிருந்து மனைவி ரஹீமா வீட்டுத்தோட்டம் செய்வது கடலை, கௌப்பி, சோளம் என்று ஏதாவது செய்கை செய்து சிறு வருமானம் ஈட்டி அவனுக்கு ஒத்தாசையாக இருப்பாள். இதனால் இவர்களின் குடும்ப வண்டி ஓரளவு நிம்மதியாக ஓடிக் கொண்டிருந்தது.

இருந்த போதிலும் பிள்ளைகளின் பாடசாலைச் செலவு, பெருநாள் தினங்கள் என்று வரும் போது செலவுக்கு கஸ்டமாக இருக்க எப்படி இருந்தாலும் பிள்ளைகள் மனது வேதனைப்படும் அளவுக்கு வைக்கமாட்டான். எப்பாடுபட்டாலும் அவர்கள் தேவையை நிறைவு செய்துவிடுவான். இவ்வாறான நிலைமைகளில் அவனுக்கு கடன் கொடுத்து உதவும் ஒரு உற்ற நண்பன் தான் சுலைமான். சுலைமானுக்கு இன்னும் திருமணமாகவில்லை. இருந்த போதிலும் நான்கு பிள்ளைகளின் தந்தையான கபீருடன் ஒரு நட்பு. கொள்கையில் ஒரே மாதிரியானவர்கள். சுலைமானும் மீன் வியாபாரம் தான் செய்கின்றான். மீன் எடுக்கச் செல்லும் இடத்தில் இவர்கள் நட்பு உருவானது. இருவரும் சிறந்த தொழுகையாளிகள். சுலைமான் இஸ்லாத்தில் பற்றும், இஸ்லாமிய நடைமுறை பிறழாது வாழ வேண்டும் என அக்கறையுடன் வாழ்பவன் சமூகத்தில் அக்கறை கொண்டவன். தகப்பன் இல்லாத ஒரு குடும்பத்தின் மூத்த ஆண்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியளவில் மாடுகளும் வைத்திருக்கின்றான். பொறுப்புடன் குடும்பத்தைக் கவனிப்பவன்.

சுலைமானை கபீருக்கு மிகவும் பிடிக்கும். அவனை பிடித்துப் போவதற்கு காரணம் தனது இளமைப்பருவத்தில் தன்னைப் பார்ப்பது போல இருப்பதும், அவனது மார்க்கப் பற்றும் தான். இரண்டு தம்பிமாரும், ஒரு தங்கையும், அவனும் சிறியவர்களாக இருக்கும் போதே தந்தை யானை அடித்து இறந்து போய்விட்டார். அதன் பின் அந்தக் குடும்பத்தை பொறுப்புடன் பார்த்து கரை ஏற்றியவன் கபீர். அது போல சுலைமானும் பொறுப்புடன் இருப்பது அவருக்குப் பிடித்திருந்தது. சுலைமானும் 'கபீர் நாணா' என அழைத்துக் கொண்டு எப்போதும் விடயங்களையும் பகிர்ந்து கொள்வான்.

சிறிது நாளாகவே கபீர் முகத்தில் ஒரு வாட்டம் ஏதோ பிரச்சினையில் அவர் இருப்பது சுலைமானுக்குப் புரிந்து இருந்தும் அவர் சொல்லுவார் தானே, என்று இவன் கேட்கவில்லை எப்போதும் போல மீன் எடுத்து வியாபாரத்திற்கு செல்ல முற்படும் போது கபீர் நாணாவே பேச்சைத் தொடங்கினார்.

'வீட்டில இப்ப ஒரே பிரச்சினை சுலைமான் என்ன செய்யிற எண்டு வெளங்கல' என்றார் கவலையாக 'எனக்கு ஒங்கட முகத்தப் பார்க்க வெளங்கிச்சு, என்ன பிரச்சினை? என்றான் சுலைமான் 'எல்லாம் மகள்ர கலியாணப் பிரச்சின தான், ரஹீமாட நானாட மகனைத்தானே கேட்டு வச்சிருக்கு, கேட்டு ஒருவருசமாகிது கலியாணம் செய்ற இல்லயா? சும்மா இருக்கீங்க என்று ரஹீமா ஒரே புலம்பல் என்றான் கபீர்.

'சரிதானே கபீர் நாணா, குமரு காரியம், தள்ளிப்போடக்கூடாது, இவ்வளவு நாள் கடத்தினதே பிழை தானே என்றான் சுலைமான். 'என்ன சுலைமான் நகநட்டு ஒன்னுமில்ல கலியாணத்த சும்மா செய்ய ஏலுமா உடு பிடவை எடுக்கிற இல்லயா? எல்லாத்துக்கும் எங்க போவன்' என்றவரைப் பார்த்து சிரித்தவனாக 'நீங்க இஸ்லாத்த ஒழுங்கா வெளங்கல நாணா இஸ்லாம் எவ்வளவு எளிமையா திருமணத்த செய்யச்சொல்லியிருக்கு ரசூலுல்லா என்ன அழகா அத செஞ்சும் காட்டிட்டுப் போயிருக்காங்க நம்மட ஆக்கள் அதயெல்லாம் பார்க்க மாட்டேங்கிறாங்க கலியாணன்னா ஆடம்பரமா இருக்கணும்னு தான் நினைக்கிறாங்க என்றவன் தொடர்ந்து 'ஒரு பிரச்சினையும் இல்ல இப்பவே போய் மாப்பிள வீட்டில கதைச்சு டேட்ட குறிங்க, மாப்பிள்ளைக்கு ஒரு சோடி உடுப்பு, பொண்ணுக்கு ஒரு சோடி உடுப்பு வாங்கி, டீ பாட்டியோட கலியாணத்த முடிங்க, நக நட்டுப் போட்டுத்தான் கலியாணம் முடிக்கணும் எண்டு இல்ல நாணா' என்றான். இது சரிவருமா சுலைமான் என்றார் யோசனையுடன், எல்லாம் சரி வரும் போய் கலியாண வேலயப் பாருங்க நாணா' என்று அவரை அனுப்பி வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்களை விற்று முடித்து விட்டு வீடு வந்தவர். 'ரஹீமா பின்னேரம் உங்கட நாணா வீட்டுக்குப் போவனும் ரெடியாவுங்க' என்றார் 'என்ன விசயம்' என்றவளிடம் 'கலியாண விசயம் கதைக்கத்தான்' என்று கூறிவிட்டு பள்ளியை நோக்கி விரைந்தார்.

மாலைநேரம் மனைவியையும் அழைத்துக் கொண்டு மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்றார். 'அஸ்ஸலாமு அலைக்கும்', வாங்க மைனி என்ன சொல்லாமக் கொல்லாம வாரீங்க' என்று வாசல் வரை வந்து அழைத்துச் சென்றாள். 'ரஹீமாவின் நாணாவின் மனைவி சுபைதா 'எங்க மைனி நாணா இவர் ஏதோ கதைக்கனுமாம் அது தான் கூட்டிட்டு வந்திருக்காங்க' 'உள்ளதான் இருக்காங்க வாங்க என்று உள்ளே அழைத்துச் சென்றாள். 'அஸ்ஸலாமு அலைக்கும் வாங்க இருங்க' என்று தங்கையையும், கணவனையும் இருக்க வைத்து தேநீர் கொடுத்து உபசரித்தார். தேநீரை அருந்தியவாறே கபீர் பேச்சைத் தொடங்கினார். 'பிள்ளைகள்ர கலியாண விசயம் தான் பேச வந்தோம்.

'என்னமாரி கலியாணம் கேட்டு வச்சு ஒரு வருசமாய் பெயித்து' என்று கூறி முடிப்பதற்கு முன் 'அது அவனிட்டயும் கேக்கனுமே மச்சான் கேட்டிட்டு சொல்றான்' என்று ரஹீமாவின் நானா கூறவும் ரஹீமாவிற்கும் கணவனுக்கும் ஒரு மாதிரியாகிவிட்டது. அதற்கு மேல் பேச்சை வளர்க்காமல் இருவரும் விடை பெற்றனர்.

வீட்டிற்கு வந்து என்ன 'ரஹீமா உங்கட நாணாட கதை ஒரு மாதிரியா இருக்கு அவங்களாத் தானே சொன்னாங்க நம்மட மகள மருமகளா எடுக்கற எண்டு இப்ப என்ன இப்படி கதைக்கிறாரு' என்றான் கபீர் 'எனக்கும் ஒன்றும் விளங்கல்ல வீட்ட வந்து போனில கதைப்பம் எண்டுதான் நானும் எழும்பி வந்திட்டன் என்றவள், நாணாவின் மனைவிக்கு தொலைபேசியில் அழைப்புச் செய்தான் 'என்ன மைனி நடக்கிது ஏதும் பிரச்சனை எண்டா சொல்லுங்க மறைக்காதீங்க' என்றாள். 'ரஹீமா அத எப்பிடி சொல்ற எண்டு தெரியமாத்தான் ஒங்கட நானாவும் தவிச்சிட்டு இருக்காங்க, இவன் கொழும்புக்கு வேலைக்குப் போனதில இருந்து ஒரு மாதிரியாய் பெயித்தான் எங்கட சொல்லுக் கேக்கிறான் இல்ல, பழக்க வழக்கம் எல்லாம் மாறிட்டு அதால தங்கச்சிட குமர்ர வாழ்க்கையை பாழாக்காம விடுவம் எண்டுதான் நாணா இருக்காங்க

இந்தக் கலியாணம் சரி வராது போல மைனி, அவனுக்கும் கொஞ்சம் விருப்பமில்லை என்று மென்று விழுங்கி சொல்லிமுடித்தாள் ரஹீமாவின் மைனி. என்ன பேசுவதென்றே தெரியாது தொலைபேசி அழைப்பைத் துண்டித்து விட்டு, அழத் தொடங்கினாள் ரஹீமா. 'என்ன ரஹீமா, என்ன? என்று பதறியபடி கேட்ட கபீரிடம் 'ஏமாத்திட்டாங்க நம்மட புள்ளய மருமகளை எடுக்கிற எண்டு ஏமாத்திட்டாங்க, நாங்க ஒன்டுமில்லாதவங்க தானேன்டு நாணா நினைச்சுட்டாரா? என்று புலம்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அழாதீங்க ரஹீமா அல்லாஹ் எங்களைக் கைவிடமாட்டான். ஏதாவது ஒரு வழியால நம்மட பிள்ளைய கரைசேர்ப்பான்' என்று ஆறுதல் சொன்னான். இருந்து அவனின் உள்ளமும் கொதிக்கத்தான் செய்தது. கவலையினால் தொழிலுக்கும் போகாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தான் கபீர். 'வேறு இடம் பார்ப்பது என்றால் பிரச்சினை இல்ல, ஆனால் மஹருக்கு முடிக்க வருவானுகளா? 'நான் எங்க போய் மாப்பிள்ள தேடுவேன்' என்று கபீருக்கு ஒரே யோசனை. வீட்டில் இருந்த சந்தோசம், நிம்மதி காணாமல் போனது போல அவனின் வீடு அமைதியா இருந்தது.

'கபீர் நானா இல்லையா' என்ற சுலைமானின் குரல்கேட்டு 'உள்ளதான் இருக்கன் சுலைமான் வாங்க' என்று சுலைமானை உள்ளே அழைத்தார் கபீர் நானா. 'என்ன சுகமில்லையா? ஆளக் காண இல்ல அது தான் வீட்ட பாப்பமெண்டு வந்தன்' 'உடம்பு நல்லாத்தான் இக்கு..ம் .. மனசு தான்' என்று பெருமூச்சு விட்ட கபீரிடம் 'என்ன பிரச்சின கபீர் நானா 'நல்லகாலம் சுலைமான் நீங்க சொன்னதால தான கலியாண விசயம் கதைக்கப்போனன், அவங்க கலியாணமே நடக்காதுண்டு சொல்லிட்டாங்க, மருமகனுக்கு விருப்பமில்லையாம், நீங்க சொல்லாட்டி நான் இன்னும் என்ட மகள வச்சிட்டு நம்பிட்டு இருந்திருப்பன் வேற எங்கேயாவது மாப்பிள்ள பார்க்கணும் அதுதான்' என்று கண் கலங்கினான் கபீர் சுலைமான் இதுவரையில் திருமணம் பற்றி நினைத்ததில்லை திருமணம் முடித்தால், ஏழைக் குமராகத் தான் அது இருக்கவேண்டும் என நினைத்திருந்தான்.

'இப்படி கபீர் நானா கேட்டு வருவார் என்று அவன் நினைக்கவில்லை. தாயின் சம்மதத்தைக் கேட்டதும் அவனும் சிறு வெட்கத்துடனே 'உம்மாக்கு விருப்பமெண்டா நான் அத மீறுவனா? என்றான். 'அல்ஹம்துலில்லாஹ், சந்தோசம் இது தான் நீங்க சொன்ன அந்த நலவு என சுலைமான்' என்று கேட்டவாறே அவனைக் கட்டித்தழுவி தனது சந்தோசத்தை வெளிப்படுத்தியவனாக விடைபெற்றார் கபீர் மாமா.

| | | |
|---|---|---|
| சுபுஹ்தொழுகை | - | அதிகாலையில் தொழும் தொழுகை |
| அஸ்ஸலாமு அலைக்கும் | - | உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாக வேண்டும் |
| துஆ | - | பிரார்த்தனை |
| மைனி | - | அண்ணனின் மனைவி (பேச்சு வழக்கு) |
| அல்ஹம்துலில்லாஹ் | - | இறைவனைப் புகழ்வதற்காக பயன்படுத்தும் சொல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*S. லக்சிகா*

*பாவற்குளம் படிவம் - 02*

## அன்னை



கை வணங்கும் கடவுளை கூட
யாரும் காணாதிருக்க
நான் கண்டேன் அந்தக்காட்சி
அன்னையே உன் வடிவில்

## நம்பிக்கை

அருகில் இருக்கும்
அரும்பைக் கூட பார்க்காத நீயா
அந்தி வானைப் பார்த்தாய் என்பதை
நம்பச் சொல்கிறாய்

## நட்பு



நன்னிலம் பாராட்ட
நான் வாழ வழிகாட்டினாய்
நல்லதொரு உறவு நீ
நல்லவேளை நீ கிடைத்தாய்
நன்றி உனக்கு சொல்லவில்லை
நல்ல நட்பாக நானிருப்பேன் இறுதிவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம. பிருந்தா
பட்டதாரி பயிலுநர்,
வெங்கலச் செட்டிகுளம்

## உலக மயமாதலில் இந்துக் கலைகளின் வகிபாகம்

உலக மயமாதல் என்பது ஒரு முக்கியமான விடயமாகக் காணப்படுகின்றது. இது சமூகவியல், சமயம், தொழிநுட்பம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு என சகலதுறைகளிலும் தனது செல்வாக்கினை செலுத்தி வருகின்றது. இந்தவகையில் இந்துக்கலைகளும் விதிவிலக்கல்ல. உலகமயமாதலின் கலைகளின் வளர்ச்சி, வீழ்ச்சி என்பனவற்றோடு அவற்றின் தற்கால மாற்றங்களையும் இங்கு காணலாம். இதனடிப்படையில் உலகமயமாதலில் இந்துக்கலைகளின் வகிபாகம் எனும் தலைப்பிலான இக்கட்டுரை அமைகின்றது.

உலக மயமாதல் பல்வேறு பண்பாடுகளை உள்வாங்கி ஒரு உலகப் பண்பாட்டை உருவாக்குவதாகக் கருதப்படுகின்றது. உலகப் பண்பாடு இன்று மேற்கத்தேய ஆதிக்கங்களை எதிரொலிக்கும் நிலையில் தமிழ்மொழி, பண்பாட்டுசூழல், இந்துக்களின் கலை, இலக்கியம், மக்களின் பழக்கவழக்கங்கள், நெறிமுறைகள் மற்றும் வழக்காறுகள் சிதைந்து போக வாய்ப்புள்ளது. அதேவேளை தமது அடிப்படைக்கூறுகளையும், தன்மைகளையும் இழக்காமல் உலகமயமாதல் உந்தும் அல்லது தருவிக்கும் அம்சங்களை ஏற்றுக்கொண்டு மேம்பட முடியும். அதாவது இருப்பதை அழிக்காமல் மேலதிகமான அம்சங்களை உள்வாங்கி புதிய உந்துதல்களையும், நுட்பங்களையும் பிரயோகித்து இந்துக்கலைகளில் புதிய மாற்றங்களை உலகமயமாதல் செயன்முறையானது ஏற்படுத்தி வருவதனை அவதானிக்கலாம்.

இந்துக்கலைகள் என்பது இந்துப்பண்பாட்டில் முக்கியமானதொரு அம்சமாகும். கலைகள் என்றாலே அவை மனதிற்கு அமைதியைத் தரும் ஒன்றாக அமைகின்றது. கலைகள் அறுபத்திநான்கு வகையாகக் காணப்படுகின்ற போதிலும் இந்துக்கலைகள் என நாம் சிலவற்றையே குறிப்பிடுகின்றோம். இக்கலைகள் நுண்கலைகள் எனவும் அழைக்கப்படுகின்றது. அந்தவகையில் நுண்கலைகளாக கட்டடம், சிற்பம், ஓவியம், நடனம், இசை ஆகியன திகழ்கின்றன. இத்தகைய கலைகளில் உலகமயமாதலின் செல்வாக்கினால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், வளர்ச்சி மற்றும் வீழ்ச்சி என்பன பற்றிய விடயங்களை விரிவாக நோக்கும். இந்துக்கலைகள் என சுட்டப்படுகின்ற மேற்குறித்த கலைகள் மிகத் தொன்மையான வரலாற்றையும், சிறப்பையும் கொண்டமைந்துள்ளது. அதனடிப்படையில் நோக்கும் போது புராண, இதிகாச காலத்தில் இருந்து இவை இந்துப்பண்பாட்டோடு இணைந்துள்ளமையை சான்றுகள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மையும் பழமையும் கொண்ட இக்கலைகள் ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சியடைந்து வந்துள்ளமையை அவதானிக்கலாம். காரணம் ஆலயங்கள் இந்துப்பண்பாட்டின் உறைவிடங்களாக திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆலயங்களை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த இக்கலைகள் இன்று பல்வேறுபட்ட பரிணாமங்களில் வளர்ச்சியடைந்து வருகின்றது. இந்நிலைக்கு உலகமயமாதல் செயன்முறை காரணமாக அமைகின்றது.

கலைகளின் வளர்ச்சி போக்குகள் மற்றும் மாற்றங்கள் என்ற வகையில் கட்டிடக்கலையினை நோக்கலாம். கட்டிடக்கலை ஆரம்ப காலங்களில் நீண்டு நிலைக்காத பொருட்களைக் கொண்டு அமைக்கப்பட்டமையை இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன. பிற்பட்ட காலங்களில் கருங்கற்கள் கொண்டு காலத்தால் அழியாத கட்டிடங்களை அமைத்தனர். உதாரணமாக இலங்கையில் பொன்னம்பலவாணிச்சரத்தினைக் குறிப்பிடலாம். அவை இன்றும் நிலைபெற்றுள்ளமையை அவதானிக்க முடியும். கட்டிடக்கலையில் உச்சம் என நாயக்கர் கால கட்டிடங்களை குறிப்பிடுவர். இது இக்கலையின் வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றது.

இருப்பினும் தற்காலத்தில் இதன் வளர்ச்சியானது வியக்கத்தக்க வகையில் அமைகின்றது. அதனடிப்படையில் ஆலயங்கள் இன்று மிக அழகாக தோற்றமளிக்கின்றன. வானளாவிய கோபுரங்களும், சிற்பத்தூண்களும், ஆலயத்தின் வெளிப்புறத் தோற்றங்களும் தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி மிக நுணுக்கமான முறையில் அனைவரையும் கவரும் வகையில் வடிவமைக்கப்பட்டு வருகின்றது. உதாரணமாக நல்லூர் அலங்காரக் கந்தன் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பொற்கோபுர அமைப்பினைக் குறிப்பிடலாம். இவை உலகமயமாதலின் காரணமாக ஏற்பட்ட வளர்ச்சி நிலையை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. இருப்பினும் இவ் கட்டிடக்கலை தனது தொன்மைத்தன்மையை இழக்காமல் புதுமைகளை உள்வாங்கி அடைந்து வருகின்றமையைக் குறிப்பிடலாம். அந்த வகையில் கட்டிடக்கலையின் வளர்ச்சி நிலை மிகச் சிறப்பாக உள்ளமையை அறியலாம்.

சிற்பக்கலை என்பதும் கட்டிடக்கலையோடு இணைந்து வளர்ந்த ஒரு கலையாகும். கட்டிடக்கலையை மேலும் மெருகூட்டும் அம்சமாக சிற்பக்கலை காணப்படுகின்றது. மிக நுணுக்கமான அம்சங்கள் நிறைந்த இக்கலை ஆரம்பகாலம் தொட்டு இன்று வரை சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றது. கோபுர சிற்பங்களாக இருப்பினும் விக்கிரகங்களாக இருப்பினும் அவற்றின் வேலைப்பாடுகள் மிக நுட்பமானதாகக் காணப்படுகின்றது. ஆரம்பக் காலங்களில் கோபுர சிற்பங்கள் மற்றும் விக்கிரகங்கள் என்பன கருங்கல் வேலைப்பாடுகள் கொண்டதாகவே அதிகம் காணப்படும். ஆனால் இன்று பஞ்ச உலோகங்களிலும் விக்கிரகங்கள் செதுக்கப்படுகின்றன. அதிலும் வெண்கல சிற்பங்கள் சிறப்புப் பெறுகின்றன. கருவறையில் உள்ள மூல விக்கிரகங்கள் தவிர்ந்த ஏனைய விக்கிரகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்ச உலோகங்களால் ஆனவையாகவே காணப்படுகின்றன. இருப்பினும் அவற்றின் அளவுகள், அமைப்புக்கள் என்பனவற்றில் மாற்றங்கள் இன்றி சிற்பசாஸ்திர நூல்களின் அளவுகளின் அடிப்படையிலேயே அமைவதோடு தொழில்நுட்ப கருவிகளைப் பயன்படுத்தி சிற்பவேலைப்பாடுகள் செய்யப்படுகின்றமை உலகமயமாதலின் செல்வாக்கினையே எடுத்துக்காட்டுகின்றது.

அடுத்து நடனம், இசை ஆகிய இரு கலைகளையும் பார்க்கின்ற போது நடனமும் இசையும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டதாக அமைகின்றது. நடனத்திற்கு இசை ஒரு முக்கியமான அம்சமாகும். புராணக்கதைகளிலே நந்தி மத்தளம் இசைக்க சிவபெருமான் நடனமாடியதாக குறிப்பிடப்படுகின்றது. நடனம் என்றாலே அது பரதத்தைதான் குறித்து நிற்கின்றது. ஆனால் இன்று நடனம் என்ற வகையில் பலவகையான நடனம் இடம்பெறுகின்றது. அதாவது மேற்கத்தைய நடனம், கதகளி, குச்சுபிடி போன்றன காணப்படுகின்ற போதிலும் பரத நாட்டியத்திற்கான இடம் அழிக்கப்படவில்லை என்று கூறலாம். காரணம் இன்றும் ஆலயங்களில் பரதநாட்டிய அரங்கேற்றங்கள் மிகக்குறைவான நிலையிலையே இடம்பெறுகின்றன. மேற்குலக நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் தற்போது தமது பிள்ளைகளுக்கு பரதநாட்டியத்தினை கற்றுக்கொடுக்க முன்வந்துள்ளமை பழமையை பேணுவதற்கான முன்னெடுப்பாகக் காணப்படுகின்ற அதேவேளை உலகமயமாதலின் பரிணாம வளர்ச்சியாகவே பார்க்கப்படுகின்றது. அதுபோன்று இசைக்கலையும் கர்நாடக சங்கீதத்தை மட்டுமே இசை என அடையாளப் படுத்தப்பட்டது. ஆனால் இன்று கிராமிய இசை, மேலைத்தேய இசை, திரைப்பட பாடல்கள் என பலவகையான இசை மரபுகள் காணப்படுவதோடு பாரம்பரிய இசை வாத்தியங்களுக்கு மேலதிகமாக புதிய புதிய இசைக்கருவிகள், ஒலி வேகத்தில் வித்தியாசம், பாடல் வரிகளின் விளக்கம் முதலானவையுடன் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் திரைப்படப் பாடல்களின் செல்வாக்கு அதிகரித்துச் செல்கின்றமை உலகமயமாதலினால் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாகவே கருதப்படுகின்றது.

நுண்கலைகளில் ஒன்றான ஓவியக்கலை பற்றி பார்க்கின்ற போது ஆரம்ப காலங்களில் புராண இதிகாச கதைகளை ஆலயங்களில் ஓவியமாக வரைந்து வைத்திருந்தனர். பின்னர் குகை ஓவியங்கள், சுவர் ஓவியங்கள் என ஓவியங்கள் வளர்ச்சி பெற்றது. பிற்காலத்தில் இவை ஆலய சுவர்களில் மட்டுமே வரையப்பட்டன. இவ் ஓவியங்கள் ஆரம்ப காலங்களில் நிலைத்து நிற்காத ஓவியங்களாகக் காணப்பட்டன. ஏனெனில் வர்ணப்பூச்சுக்கள் மூலம் இவை வரையப்பட்டமையாகும். அது மட்டுமன்றி இன்று இயற்கை காட்சிகள், கருத்துக்கள் பொதிந்த ஓவியங்கள் என்பன சுவர்களில் வரையப்பட்டு வருகின்றது. மேலும் புகைப்படங்களை ஓவியங்களாக வரைதல், உருவங்களை வரைதல் என பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைகளில் இவ் ஓவியக்கலை இன்று வளர்ச்சியடைந்து வருவதோடு மிக நுணுக்கமான விடயங்களையும் உள்வாங்கி வளர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாடகக் கலையும் இக்கலைகளுள் ஒன்றாக பார்க்க முடியும். நாடகக் கலை என்ற வகைப்பாட்டினுள் கூத்தும் மிக முக்கியமானதொரு அம்சமாகும். ஆரம்ப காலங்களில் ஆலயங்களில் கூத்து கலைநிகழ்வாக இடம்பெற்றது. காத்தவராயன் கூத்து, வசந்தன் கூத்து, காமன் கூத்து என கூத்து வகைகள் இடம்பெற்றது. இன்றைய காலகட்டத்தில் கூத்துக்கள் ஆலயங்களில் இடம்பெறுவது அரிதான ஒன்றாக காணப்படுகின்றது. அதே போன்று நாடகங்களும் இன்று அரிதாகி போய்விட்டது என்றே கூறலாம். ஆனாலும் பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் என்பனவற்றில் இக்கலைகளை பயிற்றுவித்து வருகின்றனர். அதாவது பல்கலைக்கழகங்களில் நாடகமும் அரங்கியலும் எனும் தனிப்பிரிவின் மூலமாக நாடகக்கலை வளர்க்கப்பட்டு வருகின்றமை இன்றும் பண்பாட்டின் உயிரோட்டமாகக் கருதப்படுகின்றது. இதன் காரணமாக நாடகக் கலை பல பரிணாமங்களோடு வளர்ச்சியடையக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

நிறைவாக இந்துக்கலைகள் இன்று பல பரிணாமங்களைக் கொண்டு திகழ்கின்றமையை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய பரிணாமங்களை அடைந்தாலும், நவீனத்துவம் உட்புகுந்தாலும் தமது பழமையையும், பண்பாட்டையும் பேணி வருகின்றமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். உலகமயமாதலில் இந்துக்கலைகளின் புதிய நுட்பங்கள் சார்ந்தும், மேற்க்கத்தேய கலாச்சாரத்தின் தழுவல்களையும் கொண்டு பல புதிய கலைவடிவங்களை உருவாக்கிய போதிலும் பழமைத்தன்மை நிலை நிறுத்தப்பட்டுள்ளமையும், இந்துக்கலைகளின் அடிப்படைகளை மையமாகக் கொண்டு கலைகள் உருவாக்கப்பட்டுள்ளமையும் உணரமுடியும். உலகமயமாதலினால் இந்துக்கலைகள் பல மாற்றங்களின் மூலமாக வளர்ச்சியடைந்தாலும் சில தொன்மையான மரபுகளில் மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளமை கண்கூடு.

உசாத்துணை நூல்கள்

1. தட்சிணாமூத்தி.அ.1994, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப்பதிப்பகம், சென்னை
2. மௌனகுரு.சி.2005, தமிழர் வரலாறும் பண்பாடும், குமரன் புத்தக இல்லம்
3. சிவத்தம்பி.கா.1989.தமிழ்ப் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்புக்களும் நவீனவாக்கமும்
4. வேலுப்பிள்ளை.ஆ.1985, தமிழர் சமய வரலாறு, பாரி புத்தகப்பண்ணை சென்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. சங்கீர்த்தன்
(கூடலூர் கீதன்)

## உண்மை உரைக்கலாமா

உண்மை உரைக்கலாமா உயரிய மனிதரே
தன்மை அற்ற வன்மை தூண்டும் கவியென்று
தவிர்த்து விடுவீரோ.....
மண்ணை ஆண்டு முதல் விண்ணை தாண்டிப்
பாய்ந்த எந்தன் பாட்டனயே
அரக்கன் என்றுரைத்தாய் கரங்கள் பல கொண்ட
கயவன் அவன் என்று
எனக்கே கற்றுரைத்தாய் ...
கலைகள் பல அறிந்த வித்தகன் அவனை
தலைகள் பலகொண்ட அசுரன் என்றுரைக்க
நானும் ரசித்தேனே – ச்சே
உண்மை அறியாத பொய்யனாய் வாழ மனம்
கைகள் நடுங்கிறதே.. கண்கள் ததும்பிறதே
வள்ளுவர் ஆண்டென்று வந்த வரலாறு
துண்டென அறுந்து ஆண்டின் முதல்நாளாய்
சித்திரை உனதென்றாய்..
நித்திரை கலந்திடென்று கத்தியே இறந்த
கவிஞன் ஒலி உன் காதில் கேக்கலயோ?...
மாற்றி மாற்றி உன்னையே நீ மாற்றி
சேற்றை தலைதனிலே
தூற்றிப் போடுகின்றாய்..
உனைப் பற்றி நீ அறிய ஒரு கணம் முயன்றிடு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தை.சு.சாஜித் (JP)
அபிவிருத்தி உத்தியோகத்தர்
செட்டிக்குளம்

## இஸ்லாத்தின் பார்வையில் இலஞ்சமும் அதன் சாபக்கேடும்

இஸ்லாம் மனித வாழ்வைக் கருத்திற் கொண்டு தேவையான உரிமைகளையும், சுதந்திரங்களையும், நீதி நேர்மையோடு வழங்கும். அதே நேரம் அவைகளை பிரயோகிப்பதற்கான ஒழுங்குவிதிகள், கட்டுப்பாடுகள், வரையறைகள் என்பவற்றையும் அது விதிக்கத் தவறவில்லை. இஸ்லாம் வழங்கும் அத்தகைய சுதந்திரங்களுள் ஒன்று தான் பொருளியற் சுதந்திரம். இஸ்லாமிய பொருளியற் கோட்பாட்டில் ஹலால் (அனுமதிக்கப்பட்டவை) ஹராம் (தடுக்கப்பட்டவை) பேணப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி, மனிதர்கள் அநீதியிழைக்கப்படாத வண்ணம் நல்வழியில் பொருளீட்டி உண்ணும்படியும் அது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. 'விசுவாசிகளே! உங்களுக்கு நாம் அளித்தவற்றிலிருந்து தூய்மையானவற்றையே உண்ணுங்கள் (அல்குர்ஆன் 2:172) மேலும் தூதர்களே! நீங்கள் நல்லவற்றிலிருந்து உண்ணுங்கள், நல்ல காரியங்களை செய்யுங்கள். நிச்சயமாக நான், நீங்கள் செய்பவைகளை நன்கறிபவன் (அல்குர்ஆன் 23:51) மேலும் இறைவன் பொருளீட்டும் முறையில் கூறும் போது 'விசுவாசங் கொண்டோரே! உங்களிடையே இரு சாராரின் சம்மதததத்தின் பேரில் நடைபெறும் வர்த்தக மூலமாகவன்றி உங்களுடைய பொருட்களை தவறான முறையில் நீங்கள் உண்ணாதீர்கள். (அல்குர் ஆன் 4:29)

இது பற்றி முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். 'இலஞ்சம் கொடுப்பவன் எடுப்பவன் மீது அல்லாஹ்வுடைய சாபம் உண்டாகின்றது (நூல். இப்னு மாஜா) மேலும் இலஞ்சத்திற்காக இடைத்தரகர் வேலை பார்ப்பவனையும் நபி (ஸல்லல்லாஹு) அலைஹு வஸல்லாம் அவர்கள் சபித்தார்கள் (நூல் அபூதாவுத்)

நாம் உண்ணும் உணவு, பருகும் பானம், உடுத்தும் உடை, உறங்கும் உறையுள், சம்பாதிக்கும் சம்பாத்தியம், வியாபாரம், கொடுக்கல் வாங்கல்கள் போன்ற அனைத்து விடயங்களும் மார்க்கம் அங்கீகரிக்கும் தூய்மையான வழியில் பெறப்பட்டவைகளாகவே இருக்க வேண்டும் என இஸ்லாம் ஒரு முஸ்லிடம் எதிர்பார்க்கின்றது. மாறாக வட்டி, களவு, கலப்படம், ஏமாற்று, மோசடி, ஹராமான பொருட்களை வியாபாரம் செய்தல் போன்ற எதுவுமே எமது பொருளீட்டு பொருளாதாரத்தில் புகுந்து விடக்கூடாது என்பதனையே மேற்படி வசனங்கள் எடுத்துரைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று சமகாலத்தில் பல விடயங்களில் ஊடுருவி தனிமனித மற்றும் சமூக மட்டத்தில் பல்வேறு மோசமான தாக்கங்களையும் சீர்கேடுகளையும் ஏற்படுத்தியிருக்கும் இந்த இலஞ்சமும் இஸ்லாம் முற்றாக தடுக்கும் தவறான பொருளீட்டல் வகையைச் சார்ந்ததாகும்.

ஆட்சி முதல் அடுப்பங்கரை வரை படித்தவன் முதல் பாமரன் வரை, பட்டணம் முதல் பட்டி தொட்டி வரை எல்லா விடயங்களிலும் இன்று இந்த இலஞ்ச துர்வாடை வீசிக்கொண்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். அதிகாரம், செல்வாக்கு என்பவற்றை தனக்குள் வைத்துக் ொகண்டு ஆட்சிக் கட்டிலில் உல்லாசமாக வீற்றிருக்கும் அரசியல்வாதிகளும், அவர்களின் கீழ் செயல்படும் மேல்மட்ட கீழ்மட்ட அதிகாரிகளும் அரச, தனியார் துறைகளில் பணி புரியும் சாதாரண ஊழியர்களும் இந்த இலஞ்சம் எனும் சாபக்கேட்டில் சர்வ சாதாரணமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பது நேரடியாகவும் ஊடகங்கள் மூலமாகவும் நாம் காணும் நிதர்சனங்களாகும்.

இவ்வாறு சமூகத்தின் சகல மட்டங்களிலும் பரவியிருக்கும் இச்சமூகக் கொடுமையை ஒழிக்கும் பணியில் பல்வேறு முயற்சிகளும் இன்று இடம்பெற்று வருகின்றன. அரசியல் வாதிகள், அதிகாரிகள், பல்சார் துறைகளில் ஈடுபடுகின்றவர்கள் இலஞ்சம் ஊழல்களை விசாரித்து, பொது மக்களுக்கு நல்லதோர் விடிவைக் கொடுக்கும் வண்ணம் 'இலஞ்ச ஊழல் விசாரணை மற்றும் ஆணைக்குழு' என்று அரசாங்கம் கவனம் செலுத்தி வருவது வரவேற்கத்தக்கதாகும்.

இஸ்லாமும் இது விடயத்தில் அதிக கவனம் செலுத்துகின்றது தனி மனித சமூக வாழ்வில் அது ஊடுருவி இறையருள், தன்மானம், சுய கௌரவம் போன்றவற்றை இழக்கச் செய்யாமல் இருப்பதற்காக வேண்டி பல்வேறு எச்சரிக்கைகள் இருப்பதன் மூலம் அதை ஒழிக்கும் பணியில் அதீத ஈடுபாடு காட்டி வருகின்றது.

இலஞ்ச ஒழிப்புப் பணிக்கு உறுதுணையாக அமையும் ஹதீஸ் சாபம் என்பது பொல்லாதது. அதிலும் அல்லாஹ் ரசூலுடைய சாபம் என்பது மிகப் பாரதூரமானதாகும். அல்லாஹ்வையும், மறுமை நாளையும் விசுவாசங் கொண்டிருக்கும் ஒரு முஃமின் (விசுவாசி) எப்போதும் அவனது அருளையும் கருணையையுமே எதிர்பார்த்திருப்பான். 'அல்லாஹ்வுடைய சாபம்' என்பது அவனது அருள் கிடைக்காமல் போய் மாற்றீடாக அவன் கோபத்தையே பெற்றுத்தரும் செயலாகும். இப்படி ஒரு நிலை ஏற்பட்டு இழிவடைவதை எந்த முஃமினும் ஏற்றுக் கொள்ளவேமாட்டான்.

மேலும் இறைவன் தனது திருமறையில் கூறுகின்றான் 'இன்னும் உங்களுடைய உங்களில் ஒருவர் (மற்றொருவருடைய) பொருளைத் தவறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் சாப்பிட வேண்டாம். மேலும், நீங்கள் அறிந்து கொண்ட பிற மனிதர்களிலிருந்து எந்தப் பகுதியையும் அநியாயமாகச் சாப்பிடுவதற்காக அதிகாரிகளிடம் (இலஞ்சம் கொடுத்து) அதனைக் கொண்டு போகாதீர்கள் (அல்குர்ஆன் 2:188)

ஆட்சியாளர்கள் அதிகாரிகள், அரச ஊழியர்கள் போன்ற எவருக்கும் இலஞ்சம் கொடுத்து காரிய மாற்றக்கூடாது எனவும் இஸ்லாம் நேரடியாக எச்சரித்து இலஞ்ச ஒழிப்புப் பணியில் ஈடுபடுகின்றது. இன்று அலுவலகங்கள், திணைக்களங்கள், பொலிஸ் நிலையங்கள் என அரச மற்றும் தனியார் துறைகளின் சகல விடயங்களிலும் இந்த இலஞ்சக் கொடுமை பல்கிப் பெருகி காணப்படுகின்றது.

இதனால் நாட்டின் ஸ்திரத்தன்மைக்குப் மக்களின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாகவும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பாலியல் கொடுமை, சிறுவர் துஸ்பிரயோகம், சிறுவர் வியாபாரம் போன்ற சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபட்டு வரும் பாதாள கோஸ்டிகளுக்கு இலஞ்சம் மூலம் அதிகாரிகள் அனுமதி கொடுத்து ஊக்குவிக்கின்றனர்.

வீதி மற்றும் போக்குவரத்து போன்ற அரசாங்க ஒழுங்கு விதிகளை மீறி நடப்போருக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பணிக்கப்பட்டுள்ள அதிகாரங்களே வெறும் பத்து, நூறு, ஐநூறு ரூபாய்களை இலஞ்சமாகப் பெற்று நாட்டின் சட்டதிட்டங்கள் ஒழுங்கு முறைகளை சீர்குலைத்துக் கொண்டிருப்பது மிகைப்படுத்தப்பட்டதல்ல. சர்வசாதாரண விடயமாகக் காணப்படுகின்றது.

அரசாங்கத்தால், ஏழை எளியவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை முத்திரைகளில் சிக்கல் ஏற்பட்டுவிட்டால் அவற்றைத் தீர்த்து வைக்கப் பணிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் பொய்கூறி ஏழை மக்களிடம் இலஞ்சம் கேட்கின்றனர்.

இந்த இலங்கைத் திருநாட்டில் யுத்தத்தினால் அல்லல்படும் ஏழைமக்கள் தேடிய சொத்துக்கள், காணி பூமிகள், நிம்மதியாகக் குடியிருந்த வீடுகள் அனைத்தையும் காட்டும். துரத்தியடிக்கப்பட்டு நிர்க்கதியான வாழ்க்கை மேற்கொள்ளும் அப்பாவி ஏழை மக்களின் வாழ்க்கையை மேற்கொள்ளும் இடம்பெயர்ந்தவர்களுக்கென வழங்கப்படும் உலர் உணவு நிவாரணங்களில் கூட தில்லுமுல்லுகள், சுய பிரச்சினைகளுக்காக வேண்டுமென்றே சிலருக்கான நிவாரணங்கள் இடைநிறுத்தம், கேட்டால் நாளை தருகின்றேன். பிறகு தருகின்றேன். இவ்வளவு தாருங்கள் என அதற்காக பணிக்கப்பட்டுள்ள அதிகாரி தைரியமாக இலஞ்சம் கேட்கின்றான். படித்தவன் பதவிக்கு செல்வதாக இருந்தாலும் முற்பணம் கொடுத்து தான் பதவியை பெற்றுக் கொள்கின்றான். 'இலஞ்சம் அறிஞனை மடையனாக்கி நீதிபதியின் கண்களைக் இருடாக்கி விடும்' என இஸ்லாமிய அறிஞர் கஃபி (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலஞ்சத்தின் பாரதூரம் பற்றி அறிந்தோ அறியாமையோ ஈமானிய பலவீனம் ஏற்படுத்தி தாக்கத்தின் விளைவாக இலஞ்சம் கொடுப்பவர்களும் அதை வாங்குபவர்களும் அதற்காக இடைத்தரகர்களாக இருப்பவர்களும் நம் முஸ்லிம்களும் அதிகம் இருப்பது தான் வேதனையான விடயம். அத்தகையவர்கள் அல்லாவினதும் அவனது தூதரினதும் சாபத்தைப் பயந்து வாழப் பழக வேண்டும்.

இன்று இலஞ்சம் பெருகியமைக்கான காரணங்கள் மனிதர்கள் தான் ஏற்றுக் கொண்டுள்ள மதத்தின் மீதும், கடவுளின் மீதும் நம்பிக்கை இன்மையும், மறுமை வாழ்வு பற்றிய மார்க்க தெளிவின்மையும் ஈமானிய பலவீனமும், இறையச்சமும் இல்லாமையாகும். இதன் பாரதூரம் பற்றிய விழிப்பின்மையும், தனது காரியங்களை அவசரமாக முடிக்க வேண்டும் என்ற எண்ணமும் இலஞ்சம் எடுப்பவர்களை விட கொடுப்பவர்கள் தான் அதிகமாக இருக்கின்றனர்.

இலஞ்சத்தின் மூலம் இன்று தனிமனித சமுதாய ரீதியான பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. உணவு பற்றி கூறுகையில் ஹராத்தில் மூலம் வளர்ந்த உடம்பு சுவர்க்கம் செல்லாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் . தப்ராணி, லைஹகீ) அப்படி என்றார் அதற்கு நுகமே சுருதியான இடம் ஆகும்.

நாளை மறுமையில் இறைவன் கேட்கும் கேள்விகளில் இரண்டு கேள்வி இது தான். அதில் ஒன்று தான் அவன் எவ்வாறு சொத்துக்களைச் சேர்த்தான்? எவ்வாறு செலவழித்தான்? இவைகளுக்கு பதிலளிக்காத வரை அவன் இருபாதங்களும் அந்த இடத்தை விட்டு நகராது. (நூல்.தீர்மீதி)

அத்துடன் இறைவனின் அருள் நீங்கி, இலஞ்சம் பெறுவதனால் இறைவனிடம் கேட்கப்படும் பிரார்த்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படாது, சன்மானம், சுயகௌரவம் இழக்கப்படும் வெட்க உணர்வு இல்லாமல் கோரும் சமூகத்தில் அநீதியும், குழப்பமும் தாண்டவமாக ஆட்சியாளர்கள், அதிகாரிகள் பற்றிய கசப்பான எண்ணம் யார் இவன்? எவ்வளவு படித்து செல்வாக்கில் இருந்தாலென்ன? இலஞ்சம் பெற்று வாழ்பவன் தானே! என மக்கள் அவன் மீது தப்பான எண்ணத்தையும் மோசமாக பேசித் திரிவதையும் தடுக்கமுடியாது.

எனவே அல்லாஹ்வையும் அவனது தூதரினதும் சாபத்தைப் பெற்றுத் தந்து, சுவன வாழ்வுக்கு தடையாக அமையும் இக்கொடிய இலஞ்ச விடயத்தில் அதிக எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் இருந்து கவனத்தை பெற்றுக் கொள்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A.M.M.அஸ்லம்,**
பெரிய புளியாலங்குளம்

## பிரார்த்தனைகளுடன்

எழுதுகோள்கள் பேசுவதில் ஏதுலாபம்?
என்னகத்தே வினாவுவது – சமுதாய
பழுது தீர்பதில் பங்களிப்பு – சிறிதாயினும்
பயனுண்டு எழுத்தான் - எண்ணுவேன்

எழுதுங்கள் அருவியில் - அது
அழித்திடாது பாயும் நீர் அல்ல – சமுதாய
பழைய புதிய விடயங்கள்
பொழுது போக்கா – புதுயுகம் மாற்ற

ஆக்கங்கள் ஏற்கும் அனைத்து
இதழ்களுள் எம் ஊர் சிறப்பு
ஆயிரம் கோடி அழியாத
இழந்து போன செய்திகள்

வெளிச்சமும் விளம்பரமும் இல்லை – வாசித்து
வெளியே கதைக்காமல் அத்தனையும்
ஒளி தீபமாய் அருவியில் பட்டும்!
உண்மையோடு உழைத்திட வாரீர்

நாளையும் ஒருவன் பிறக்கலாம் - எம்
அருவியாதல் எழுத்ததனை
எடுத்துச் செல்வான் - மூலை
முடுக்கெல்லாம் முன்னேற வழி

அருவி ஆயிரம் பேருக்கு ஆறுதல்
அதில் ஆண்டவனும் வாழ்கிறான்
அதனால் தான் அவ்வாறு
எம் தேசத்தை ஊடறுத்துச் செல்கிறது
அதனால்
நம் தேசத்தில் மனிதங்கள் உருவாக
பிரார்த்தனைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாபாரன் தியாகராசா
பட்டதாரி பயிலுனர்,
பிரதேச செயலகம்,
வெங்கலச்செட்டிக்குளம்.

# மனித மேம்பாட்டிற்கு அவசியமான சுயதொழில் முயற்சி ஒன்றினை ஆரம்பிப்பதற்கான தேவைகளும் அதனை ஆரம்பிப்பதற்கான தொழில்நுட்ப வழி முறைகளும்

துரித வேகத்தில் அதிகரித்துக் கொண்டு செல்லும் வாழ்க்கைச் செலவும் அதனை ஈடு செய்யக்கூடிய அளவிற்கான தனிநபர் அல்லது குடும்ப வருமானமும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக அல்லது எதிர்க்கணிய தொடர்பினை கொண்டிருப்பதே இன்று பல்வேறு சமூகம் சார்ந்த பிரச்சினைகளை சிறிய மற்றும் நடுத்தர வருமான வகுப்பினர்களிடையே ஏற்படுத்தி வருகின்றன. குடும்ப வருமானத்திற்கு ஏற்றவாறு வாழ்க்கைச் செலவுகளை நிர்ணயித்துக்கொண்டு அதன்படியே குடும்ப வாழ்வினை திட்டமிட்டு அன்றாட வாழ்க்கைச் செலவினை ஈடு செய்யக்கூடிய அளவிற்கு ஓர் சுயதொழில் முயற்சி ஒன்றில் ஈடுபட வேண்டிய இன்றியமையாத தேவை இன்று சிறிய மற்றும் நடுத்தர வருமான வகுப்பினர்கள் இடையே காணப்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் குடும்பத்தலைவரோ, குடும்பத்தலைவியோ அல்லது குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் இணைந்தோ மேலதிக வருமானம் ஒன்றினை ஈட்டித்தரவல்ல சுயதொழில் முயற்சி ஒன்றிலே முழு அளவிலோ அல்லது பகுதிநேர அளவிலோ ஈடுபட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

எனவே தமது சாதாரண வருமானத்திற்கு அப்பால்பட்டு மேலதிக வருமானம் ஒன்றினை ஈட்டித்தர வல்ல சுயதொழில் முயற்சி ஒன்றினை எவ்வாறு தெரிவு செய்து கொள்வது? அதற்கான ஆரம்ப முதலீட்டு செலவுக்கான மூலங்கள் எவை? அவற்றின் மூலம் தமது சுய நுகர்வுத் தேவைகளின் ஓர் பகுதி பூர்த்தி செய்யப்படுமா? சுயதேவைகள் பூர்த்தியாக்கப்பட்ட பின்னரான உற்பத்திகள் அல்லது வெளியீடுகள் அனைத்தும் சந்தைப்படுத்தப்பட முடியுமா? போன்ற பல்வேறுபட்ட வினாக்களுக்கு விடை காண்பதன் மூலமாகவே வெற்றிகரமான ஓர் சுயதொழில்துறை ஒன்றினை தெரிவு செய்து நடைமுறைப்படுத்த முடியும்.

சிறிய அளவிலான சுயதொழில் முயற்சி ஒன்றினை தெரிவு செய்து கொள்ளும் போது அத்தொழில் முயற்சி மூலம் தமது சுயநுகர்வு தேவைகளின் ஓர்பகுதி நிறைவு செய்து கொள்ளப்படுமா என்ற அடிப்படை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் ஏனெனில் தமது வாழ்க்கைச் செலவின் ஓர் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புதிய தொழில் முயற்சி மூலம் குறைக்கப்பட கூடியதாக இருக்க வேண்டும். உதாரணமாக, சாதாரணமாக ஓர் 05 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றின் மரக்கறி கொள்வனவிற்கான மாதாந்த செலவீனம் ரூபா 6500 எனின் இதனை குறைப்பதற்கு சேதன வீட்டுத்தோட்ட தொழில் முயற்சி ஒன்றினை மேற்கொள்வதன் இச்செலவு பூர்த்தியாக்கப்பட வேண்டும் அல்லது மீதப்படுத்தப்பட வேண்டும். சுய நுகர்வுத் தேவைகளுக்கு பின்னரான மேலதிக உற்பத்திகள் அல்லது வெளியீடுகள் அனைத்தும் சந்தைப்படுத்துவதன் மூலம் மேலதிக வருமானத்தினையும் பெற்றுக்கொள்ளமுடியும். எனவே இங்கு தமது சுயதேவைக்கான செலவுகள் ஈடு செய்யப்படுவதோடு மேலதிக வருமானம் ஒன்றினையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேற்குறிப்பிட்ட உதாரணத்தினை அடிப்படையாகக் கொண்டு ஓர் சிறிய மற்றும் நடுத்தர வருமான வகுப்பினர்களது சுயநுகர்வுத் தேவை என்ன? அதனை சுயதொழில் முயற்சியாக மேற்கொள்ளக்கூடிய அளவிற்கு இடவசதி நீர்வசதி ஏனைய உள்ளீடுகளின் கிடைப்பனவு போன்றவற்றின் அடிப்படையிலேயே சுயதொழில் முயற்சி ஒன்று தெரிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மேலும் இது போன்ற சுயநுகர்வுத் தேவையின் அடிப்படையில் எவ்வாறான தொழில் முயற்சி ஒன்றினை ஆரம்பித்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதும் அதன் மூலம் எவ்வாறு மேலதிக வருமான அதிகரிப்பினை ஏற்படுத்திக் கொள்ளமுடியும் என்றும் ஏற்கனவே சிறியளவிலான சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடும் முயற்சியாளர்கள் எவ்வாறு தமது தொழில் முயற்சியை அபிவிருத்தி செய்யமுடியும் என்றும்முன்கூட்டியே எண் கணித ரீதியாக கணிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

முயற்சியாளர் ஒருவர் எவ்வாறான சுயதொழில் முயற்சிகளை வீட்டிலேயே கிடைக்கும் பௌதீக மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்வது? அதன் மூலம் உரிய வருமானத்தினை ஈட்டிக்கொள்ள முடியுமா? இதற்கான ஆரம்ப தொழில் ஆலோசனைகளை எவ்வாறு சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் இருந்து பெற்றுக்கொள்வது? போன்ற பல்வேறுபட்ட வினாக்களுக்கு விடை தேடும் முயற்சிகளில் பல்வேறு சுயதொழில் முயற்சிகள் தோல்வி கண்டமையே இன்று சுயசார்பு தொழில் முயற்சிகள் தோல்வி கண்டமைக்கான காரணங்களில் ஒன்றாக அமைந்துள்ளது என்றே கூறலாம்.

சுயதொழில் முயற்சி ஒன்றினை ஆரம்பித்து அதனை சிறப்பாக நடைமுறைப்படுத்தி அதன் மூலம் மேலதிக வருமானம் ஒன்றினை பெற்று அதற்கேற்ப வாழ்க்கைச் செலவினை நிர்ணயித்துக் கொண்டு செல்லுதல் என்னும் தொடர்ச்சியான பொறிமுறையின் கீழ் அதிக இலாபம் உழைத்தல் எனும் முயற்சியாளர் ஒருவரின் மனோபாவத்திற்கு அப்பால் உடல், உள ரீதியான ஆரோக்கியம் மிக்கதொரு தொழில் முயற்சி ஒன்றினை தெரிவு செய்து நடைமுறைப்படுத்துவதே இக்காலத்தில் சிறந்த ஓர் தெரிவாக அமைந்திருக்கும் என்பதே எல்லோராலும் வரவேற்கப்படக்கூடியதொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய காலகட்டத்திலே தமது செலவுப் பட்டியலில் உணவுச்செலவுக்கான விகிதாசாரத்திலும் பார்க்க பன்மடங்கு அதிகரித்த மருத்துவச் செலவுக்கான பட்டியலே காணப்படுகின்றது. இதற்கான காரணங்களில் ஒன்றாக நாம் இன்று பல்வேறு இரசாயன கலப்படம் நிறைந்த உணவு வகைகளையும், இரசாயன உரப்பாவனைகள் நிறைந்த மரக்கறி வகைகளையும் தொடர்ச்சியான நுகர்விற்கு அடிமைப்பட்டிருத்தல் என்பதே பல்வேறு சமூக ஆர்வாளர்களும், மேலைத்தேச வைத்திய நிபுணர்களும் தொடர்ந்து சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையிலேயே இந்தியாவின் தமிழ்நாட்டை தாயகமாக கொண்டவரும், இயற்கை வழி வேளான் துறையின் தந்தை எனவும் போற்றப்படுகின்ற திரு.நம்மாள்வர் அவர்கள் 'இயற்கை வழி வேளான் துறைசார்ந்த தொழில் முயற்சிகளே மனித குலத்தின் உடல் உள நல ஆரோக்கியத்திற்கு சிறந்த தீர்வு' என்பதனை பல்வேறு காலகட்டங்களில் எமக்கு சுட்டிக்காட்டியமை இங்கு குறிப்பிடத்தக்க ஓர் விடயமாகும்.

மேலும் எமது இக்கட்டுரையின் பிரதான நோக்கமும் இயற்கை வழி விவசாயம் சார்ந்ததாகவும், செலவில்லாத விவசாய வழிமுறைகளில் அமைந்த தொழில் முயற்சிகளை தெரிவு செய்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே ஆகும்.

இதன் ஓர் ஆரம்ப கட்டமாகவே முயற்சியாளர் ஒருவர் வீட்டிலேயே எவ்வாறு இயற்கைவழியில் அமைந்த மரக்கறிகள், கிழங்கு வகைகள் போன்றவற்றை செய்கை பண்ணுவதோடு அதனுடன் இணைந்த அதிக இலாபம் தரவல்ல நாட்டுக்கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, பசு மாடு வளர்ப்பு, தேனி வளர்ப்பு, முயல் வளர்ப்பு மற்று தாரா வளர்ப்பு தொடர்பான விவசாயம் சார்ந்த இணைதொழில் முயற்சிகளுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளையும் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடமிருந்து பெற்று அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

தற்காலத்திலே உணவிற்காகப் பயன்படுத்தப்படும் மரக்கறிகள், முட்டை என்பன எமது அன்றாட வாழ்விற்கு மிகவும் முக்கியமான ஒன்றாக காணப்படுவதோடு அத்தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நாம் கணிசமான அளவு செலவுகளையும் நாளாந்தம் மேற்கொள்ளவேண்டி உள்ளது.

உலக ஊட்டச்சத்து வல்லுனர்களின் பரிந்துரைப்படி ஓர் வயது வந்த நபர் ஒருவரின் சீரான திட்ட உணவிற்காக ஓர் நாளைக்கு 85 கிராம் பழங்களையும், 300 கிராம் மரக்கறிகளையும் உணவாக சேர்த்துக் கொள்ளவேண்டும். ஆனால் மரக்கறிகள், பழங்கள் , முட்டை போன்ற ஆரோக்கியம் நிறைந்த உணவுகளின் விலைத்தளம்பல்கள், பற்றாக்குறையான கிடைப்பனவுகள், இரசாயணம் கலந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளீட்டுப் பாவனைகள் போன்ற பல்வேறு காரணங்களினால் ஓர் நபர் ஓர் நாளைக்கு மிகக் குறைந்த அளவிலான பழங்கள், மரக்கறிகள் என்பவற்றையே உணவில் சேர்த்துக்கொள்கின்றனர். மேற்கொண்ட கருத்துக்களை மனதில் கொண்டு ஆரோக்கியமான ஓர் உணவுப் பழக்க வழக்கங்களுக்கு உள்வாங்கப்படுவதற்கும் தமது அன்றாட வாழ்விற்கு தேவையான மரக்கறிகள், பழங்கள் மற்றும் முட்டைகளை உற்பத்தி செய்வதோடு மேலதிகமான உற்பத்திகளை சந்தைப்படுத்துவதன் ஊடாக சிறிய அளவிலான வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே எமக்கு தேவையான மரக்கறிகள் மற்றும் கோழிமுட்டைகள் என்பவற்றை இலகுவாக பெற்றுக்கொள்ளும் நோக்குடன் சிறியளவிலான மரக்கிறத் தோட்டம் ஒன்றினையும் நாட்டுக்கோழி வளர்ப்பினையும் இணைத்து ஆரம்பிப்பது என திட்டமிட்டுக் கொண்டு அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது? நடைமுறைப்படுத்த தேவையான வளங்கள் எவை? தேவையான ஆரம்ப செலவுகள் எவை? நடைமுறைச் செலவுகள் எவை? போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி விரிவாகவும் தெளிவாகவும் ஆராய வேண்டும்.

மரக்கறிகளை வீட்டிலே பயிரிடுவது என்ற திட்டத்தின் கீழ் முதலிலே எந்த வகையான மரக்கறிகளை எவ்வளவு அளவில் பயிரிட வேண்டும் என்பதை தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இங்கு நாம் 05 வகையான செடிவகை மரக்கறிகளையும் 03 வகையான கொடி வகை மரக்கறிகளையும் 2 வகை கீரை வகைமரக்கறிகளையும் பயிரிடுவது எனவும் அன்றாடம் இவ்வகையான மரக்கறிகளுக்கு நீரப்பாசனம் செய்யும் போது அதில் கரைந்து செல்லக்கூடியவாறு கோழிக் கழிவுகள் வெளியேறும் வகையில் சிறிய கூடு ஒன்றினை அமைத்து சுமார் 10 நாட்டுக்கோழிகளையும் வளர்ப்பது என திட்டமிட்டுக் கொள்வோம்.

அடுத்தடுத்தாக இவ்விரண்டு திட்டங்களையும் எவ்வாறு அமைத்தல் என்பது பற்றி பார்ப்போம் முதலில் மரக்கறித் தோட்டம் ஒன்றினை அமைப்பதற்கான இடவசதிகள் பற்றி கவனத்தில் கொள்ள வேண்டும். தெரிவு செய்யப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு கத்தரி, வெண்டி, தக்காளி, கறிமிளகாகய் மற்றும் பச்சை மிளகாய் போன்ற 05 வகையான செடிவகை மரக்கறிகளில் ஒவ்வொன்றும் தலா 10 கன்றுகள் என்ற அடிப்படையிலும் பாகல், புடோல் மற்றும் பயிற்றை போன்ற 03 வகையான கொடிவகை மரக்கறிகளில் ஒவ்வொன்றும் தலா 20 கன்றுகள் என்ற அடிப்படையிலும் 10 நிலையங்களிலும் முளைக்கீரை, வல்லாரை மற்றும் பொண்ணாங்கன்னி போன்ற கீரைவகைகளில் ஏதாவது இரண்டினையும் பயிரிடுவதற்கு ஆகக்கூடுதலாக சுமார் 375 சதுர அடி (25 அடி நீளம் ஓ 15 அடி அகலம்) போதுமானதாகும். வீட்டிலே கிடைக்கும் இடவசதிகளுக்கு ஏற்றவாறு நாம் மரக்கறிகளை தெரிவு செய்து மேலதிகமாகவோ அல்லது இவற்றை விட எண்ணிக்கையில் குறைவாகவோ பயிரிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யப்பட்ட இடத்தினை மண்வெட்டியால் நன்கு புரட்டி அதனை பண்படுத்தி பின் பாத்திகள் அமைத்துக்கொள்ள வேண்டும். 20 கிலோ கிராம் நன்கு மக்கிய / உலர்ந்த மாட்டுச்சாணம் அல்லது ஆட்டுச்சாணத்தினை அடி உரமாக பயன்படுத்தி மரக்கறிகளை பயிரிடுவதற்கு தயார்படுத்திக்கொள்ள வேண்டும். மிகக் குறைந்த இடத்திலே பயிர்ச்செய்கையை மேற்கொள்வதால் எளிதான முறையில் நோய் பூச்சித்தாக்கம் மற்றும் களைகளின் தாக்கத்தில் இருந்தும் இரசாயண பூச்சிக்கொல்லி, களை நாசினி மருந்துப் பாவனைகளில் இருந்தும் விடுபட்டுக் கொள்ளலாம். மேலும் நோய் மற்றும் பூச்சிகள் தாக்கிய பகுதிகளை இலகுவில் அகற்றினால் போதுமானதாகும். இதனால் நாம் மரக்கறிகளில் நச்சு இரசாயணங்கள் படிவதை தவிர்த்துக் கொள்ள முடியும்.

நீர் வசதிகள்

மேலும் குளியலறைக் கழிவு நீர், சமையல் அறைக்கழிவு நீர் போன்றவற்றை இயற்கையான முறையிலே சுத்திகரிப்பு செய்து அதனை மீளவும் மரக்கறிப்பயிர்களுக்கு பயன்படுத்தலாம். இயற்கை முறையிலான கழிவுநீர் மறு சுழற்சியானது கழிவு நீர்த்தேக்கம் நுளம்பு உற்பத்தி மற்றும் பெருக்கம் போன்றவற்றில் இருந்து பாதுகாப்பினை வழங்கும் மேலும் மேலதிகமாக தேவைப்படும் நீர் சிறிய நீர்க்குழாய் அல்லது வாய்க்கால் வழி நீர்ப்பாசனம் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மரக்கறிகளை பயிரிடுதல்

வீட்டில் கிடைக்கும் இடவசதி நீர் கிடைப்பனவு போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு மரக்கறிவகைகளை எக்காலத்திலும் பயிரிட முடியும் ஆனால் ஏப்ரல், மே மாதங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் இந்த இரண்டு மாதங்களிலும் பயிர்ச்செய்கையினை புதிதாக ஆரம்பிப்பதை தவிர்ப்பது நல்லது. கத்தரி, தக்காளி, மிளகாய், கறிமிளகாய் போன்ற மரக்கறிப்பயிர்களை நாற்றுமுறை மூலம் நடுகை செய்யமுடியும். நாற்று முறைமூலம் நடுகை செய்யமுடியாதவர்கள் இதன் கன்றுகளை விவசாயப்பண்ணைகள் மூலம் பெற்று மீள் நடவு செய்து கொள்ளமுடியும். மேலும் மேற்படி மரக்கறி கன்றுகளை குழித்தட்டு முறையில் ஓர் குழிக்கு இரண்டு விதைவீதம் விதைக்கப்பட்டு நாற்றின் வயது 25-35 நாட்கள் ஆன பின்னர் அதனை தயார்படுத்திய நிலத்தில் நடுகை செய்யலாம் அல்லது பயிர்வளர்ப்பு பைகள் தயார்செய்யப்பட்டு அதிலே நடுகை செய்து கொள்ளலாம்.

பயிற்றை, பாகல், வெண், புடோல் போன்ற மரக்கறிகளை நேரடிவிதைப்பு முறையிலே விதைக்கப்படவேண்டும். விதையின் அளவை விட 2.3 மடங்கு ஆழத்தில் விதையினை இட்டு பின்னர் மண்ணால் மூடிவிட வேண்டும். கீரை வகைகளின் விதைகள் அளவில் மிகச் சிறியதாக இருப்பதால் ஒரு மேசைக்கரண்டி விதையுடன் 2:3 மடங்கு மணல் அல்லது நுண்ணுயிர் உரம் கலந்து பரவலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசப்பட வேண்டும். பின்னர் அதனை செய்தித் தாள் கொண்டு மூடி நீர் தெளிக்கவேண்டும். விதைகள் நன்கு முளைத்தவுடன் செய்தித்தாளினை அகற்றிவிடவேண்டும்.

### பசளை இடல்

மேற்குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக பயிர்ச்செய்கையினை ஆரம்பித்த பின்னர் பயிர்களுக்கான இயற்கை பசளைகளை இட்டு அதனை நன்கு பராமரித்தல் ஓர் முக்கிய செயற்பாடாக வரையப்படுகின்றது. வீட்டிலே நாளாந்தம் ஏற்படும் மரக்கறிகழிவுகள், தேயிலைக்கழிவுகள், முட்டைக்கோது, இலைகுழை கழிவுகள் போன்றவற்றை சேகரித்து அதனை நன்கு மக்கவைத்து சேதனப்பசளையாக மாற்றி பின் அதனை பயிர்களுக்கு வழங்கமுடியும். இதைவிட மாட்டுச்சாணம், ஆட்டுச்சாணம் கிடைக்கப்பெறின் அதனையும் எடுத்துக்கொள்வது மிகச்சிறந்ததாகும். மேலும் மரக்கறி பயிர் செய்கையுடன் இணைந்ததாக ஆரம்பிக்கப்படவுள்ள நாட்டுக்கோழி வளர்ப்பின் ஊடாக கிடைக்கப்பெறும் கழிவுகளையும் நாம் இப்பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும். இங்கு இரசாயன பசளை வாங்கி பிரயோகிப்பது தவிரக்கப்படவேண்டும்.

### களைகள் மற்றும் பூச்சித்தாக்கம்

சிறிய அளவிலே மேற்கொள்ளப்பட்ட இருக்கின்ற மரக்கறி பயிர்ச்செய்கை திட்டத்திலே பெரியளவிலான களைகளின் தாக்கம் பூச்சிகளின் தாக்கம் என்பன இருப்பதில்லை. அவ்வாறான தாக்கங்கள் இருப்பின் இயற்கையான முறையில் அமைந்த களைநாசினி, கிருமிநாசினிகளை உள்ளிக்கரைசல், சவர்க்காரக்கரைசல், வேப்பம் புண்ணாக்கு, மீன் எண்ணை கரைசல், 5 இலைக்கூட்டுக்கரைசல், போன்றவற்றில் ஏதாவது ஒன்றினை தயாரித்து தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும். இங்கு எதுவித இரசாயணம் கலந்த கிருமி நாசினிகளோ களைநாசினிகளோ பயன்படுத்த வேண்டியதில்லை.மேலும் களைகளை கட்டுப்படுத்தும் நோக்குடனும் மண்ணின் ஈரலிப்பினை பேணும் வகையிலும் மூடாக்கு இடும் முறைகளை பயன்படுத்திக் கொள்ளமுடியும். அத்தோடு கொடிவகை மரக்கறிகளினை இயற்கையான முறையில் தடிகள், கயிறு என்பவற்றை பயன்படுத்தி பயிர் செய்யப்படும் பகுதியை சுற்றி உயிர் வேலிபோல் அமைந்து பாதுகாப்பது சிறந்த ஓர் பயிர்ச்செய்கை முறையாகும். இதனால் உள்ளிருக்கும் செடிவகை மரக்கறிகள் பாதுகாக்கப்பட்ட ஓர் வேலிக்குள் அமைந்திருக்கும்.

### அறுவடை

திட்டமிட்ட பயிர்ச்செய்கையினை ஆரம்பித்த ஒரு மாத காலத்தின் பின்னர் நாளாந்த நுகர்விற்காக பயன்படுத்தக்கூடிய அளவிற்கு முளைக்கீரை, பொண்ணாங்கன்னி போன்ற கீரைவகைகளும் 2 ½ மாதம் தொடக்கம் 3மாத காலத்தின் பின்னர் ஏனைய மரக்கறிவகைகளும் அறுவடையாகப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு தொடர்ச்சியாக அறுவடைகளை பெற்றுக்கொள்ளவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனின் சுழற்சிமுறையிலான பயிரிடல் திட்டம் ஒன்றினைப் பின்பற்றி அதற்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு சிறிய அளவில் இருந்து சற்று பெரிதாக பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள முயற்சிசெய்ய வேண்டும். இதன் மூலம் எமது அன்றாட உணவிற்கான மரக்கறிகளின் தேவை பூர்த்தியாக்கப்படுவதை உணரக்கூடியவாறு இருப்பதோடு மேலதிக உற்பத்திகளை சந்தைப்படுத்தி மேலதிக வருமானத்தையும் பெற்றுக்கொள்ளமுடியும். இதன் ஊடாக மரக்கறிகளின் திடீர் விலையேற்றங்களினால் ஏற்படும் செலவுகளை குறைப்பதோடு அதிகளவான விற்பனை வருமானத்தையும் முயற்சியாளன் ஒருவர் பெற்றுக்கொள்ளமுடியும்.

மரக்கறிகளைப் பயிரிடுதல் என்ற மேற்படி திட்டத்தின் ஊடாக எவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் அறுவடைகளைப் பெற்று அதன் மூலம் வருமானத்தினை பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனை ஆராய்ந்து பார்த்ததோடு இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் உற்பத்திச்செலவுகள் எவை? கிடைக்கப்பெறும் அறுவடைகளின் அளவு என்ன? அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் வருமானம் எவ்வளவு என்பதனை பற்றி விரிவாகப் பார்ப்போம்.

**தெரிவு செய்யப்பட்ட இத் திட்டத்தின் மாதிரி உரு பின்வருமாறு காணப்படும்.**




முதலில் தெரிவு செய்யப்பட்ட மரக்கறி பயிர்ச்செய்கை திட்டத்தின் மொத்த செலவு எவ்வாறு அமையும் என்பதை நாம் முன்கூட்டியே தீர்மானித்து அதற்கேற்ப இத்திட்டத்தினையும் நடைமுறைப்படுத்த வேண்டும். முதலில் மரக்கறி செய்கை மேற்கொள்வதற்கான மொத்தச்செலவுகளை நாம் முன்கூட்டியே திட்டமிட்டுக்கொள்வோம். கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின் மூலம் வெளிக்காட்டப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தின் பெயர் : மரக்கறிச்செய்கை
திட்டத்தின் செலவீனம்

| இல | விபரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| 01 | நிலையான செலவுகள் | | |
| | 1) மண்வெட்டி | 1500.00 | |
| | 2) பூவாளி | 750.00 | |
| | 3) ஏனைய சிறு உபகரணங்கள் | 1500.00 | 3750.00 |
| 02 | நடைமுறைச்செலவு / உற்பத்திச் செலவு | | |
| | 1) விதை மற்றும் நாற்றுக்கள் | 500.00 | |
| | 2) இயற்கைப்பசளை | 1050.00 | |
| | 3) இயற்கை கிருமி நாசினி தயாரித்தல் | 500.00 | |
| | 4) ஏனைய செலவுகள் | 700.00 | 2750.00 |
| | திட்டத்தின் மொத்த செலவுகள் | | 6500.00 |

எதிர்பார்க்கப்படும் வருமானம் (6 மாதகாலத்திற்கு)

| இல | உற்பத்திகள் விபரம் | தொகை | விலை | வருமதி |
|---|---|---|---|---|
| 01 | கத்தரிக்காய் (10 கன்றுகள் x 3kg வீதம்) | 30 | 60 | 1800.00 |
| 02 | வெண்டிக்காய் (10 கன்றுகள் x 4kg வீதம்) | 40 | 50 | 2000.00 |
| 03 | தக்காளி (10 கன்றுகள் x 4kg வீதம்) | 40 | 40 | 1600.00 |
| 04 | கறி மிளகாய் (10 கன்றுகள் x 2kg வீதம்) | 20 | 50 | 1000.00 |
| 05 | பச்சைமிளகாய் (10 கன்றுகள் x 2kg வீதம்) | 20 | 40 | 800.00 |
| 06 | பாகற்காய் (10 கன்றுகள் x 3kg வீதம்) | 30 | 70 | 2100.00 |
| 07 | புடோல் (10 கன்றுகள் x 2kg வீதம்) | 20 | 60 | 1200.00 |
| 08 | புயிற்றங்காய் (10 கன்றுகள் x 2kg வீதம்) | 20 | 80 | 1600.00 |
| 09 | கீரைவகை | | | 3000.00 |
| | மொத்தம் | | | 15100.00 |

மேற்படி செயல்திட்டத்தின்படி எதிர்பார்க்கப்படும் மொத்த உற்பத்திகள், விற்பனை வருமானங்கள், உற்பத்திச் செலவுகள் என்பன சுட்டிக்காட்டப்படுகிறது. இங்கு மொத்த உற்பத்தி தொகையானது கன்றுகளின் எண்ணிக்கையினை அவற்றில் இருந்து எதிர்பார்க்கப்படும் அறுவடைகளை பெருக்குவதன் மூலமும் மொத்த வருமானம் என்பது உற்பத்தி தொகைகளை சாதாரண சந்தை விலையால் பெருக்குவதன் மூலமும் கணக்கிடப்பட்டுள்ளது. சந்தைவிலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப வருமான அதிகரிப்பும் ஏற்படும்.

எனவே மேற்படி மரக்கறி பயிர்ச்செய்கை திட்டத்தின் படி சுமார் மூன்று மாத காலத்திற்கு வருமானம் ரூபா.15100.00 ஆகவும் அதற்கான உற்பத்திச் செலவுகள் (நிலையான செலவு தவிர்ந்த) ரூபா.2750.00 ஆக காணப்படுகின்றது. எனவே இச்செயல் திட்டத்தின் மூலம் ரூபா.12350.00 இனை இலாபமாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதோடு தொடர்ச்சியாக மாதம் ஒன்றிற்கு 4000.00 இனை இலாபமாக பெற்றுத்தருகின்றது அல்லது இதன் மூலம் நாம் கொள்வனவு செய்யும் மரக்கறி தேவைகளுக்கான செலவு ரூபா.4000.00 வரை மீதப்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.ஜென்சிகா
அபிவிருத்தி உத்தியோகத்தர்
கிறிஸ்தவகுளம்

## அடையாளப்படுத்திக்கொள்

பெண்ணே!
உன்னை அடையாளப்படுத்திக் கொள்ள
முயற்சி செய்
எவ்வாறெனின்
சாறி, சாதாரணமாக உடுத்தி – கவிதையாய்
காதலாய் கற்பனையாய்
கருணையாள் மட்டுமன்று – ஒரு
மனிதனாய் எல்லாவற்றுக்கும் மேலாய்
ஒரு நல்ல மனுஷியாய்
மரங்கள், செடிகள், கொடிகள்
ஜீவராசிகள் எல்லாமே
தம்மை அப்படியப்படியே
அடையாளம் காட்டிக் கொள்ளும் போது
நீ மட்டும் இயந்திரத் தனமான ஜீவிதத்தில்
முடியை வெட்டி ஜீன்ஸ் போட்டு
லிப்டிக் அடித்து, அரைப் பைத்தியமென்று
யாரும் கதைக்கத் திரிந்து
பெண்ணை கேவலப்படுத்தாதே
திருமணமானவதென்றால்
மூன்று முடிச்சுக்கு கட்டுப்பட்டு
சுயத்துக்கும் சுதந்திரத்திற்கும்
பொன்விலங்கு பூட்டி
நானும் நீயும் சமனென உணர்ந்து
சந்தோசமாக வாழ்ந்து வரும் போது
வெண்மேகமாய் நனா மயிர்கள் தோன்றும்
அத்தனை காலத்திற்குப் பின்
காரியாலயத்திலிருந்து வந்து
பத்திரிகை படிக்கும் கணவனுக்கு
காப்பி கொடுத்து
தேவைகளை நிறைவேற்றி
குழந்தைகள் பெற்று
உற்றார் உறவினர் கவனித்து
மாமா மாமியைக் கவனித்து
வாசல் படி தாண்டாது
உத்தமி என்ற பெயரோடு
உன்னை அடையாளப்படுத்திக் கொள்ள
முயற்சி செய்ததனால் தானென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. சிவகெளரி சயந்தன்,
மேலதிக மாவட்டப் பதிவாளர்,
வெங்கலசெட்டிக்குளம்.

## ஏதிலி ராஜாக்கள்

தம்பையாவிற்கு ஒரே அசதியாக இருந்தது. மதியம், சாப்பிட்டு விட்டு பலாமரத்தடியில் இருந்த வாங்கில் சரிந்து படுத்திருந்தவரது மனசு ஒரு நிலையில் இல்லாது தவித்துக் கொண்டிருந்தது. கண்ணை மூடிக்கொண்டிருந்தாலும் நித்திரை வரவில்லை. வழமையாக இந்த நேரத்தில் ஒரு குட்டித்தூக்கம் போடுபவர். இன்று அது முடியாமல் யோசனையில் ஆழந்து விட்டார்.

எழுபது வயதினை நெருங்கிக் கொண்டிருக்கும் அவர் இதுவரை தான் வாழ்ந்த வாழ்க்கை அசை போட்டுக் கொண்டிருந்தார். வீடு, வளவு, தோட்டம், வயல், வரப்பு என ஊரின் ஒரு சிறந்த விவசாயியாக நல்ல மனிதராக நாலு பேருக்கு உதவும் குணத்தோடு ராஜநடை போட்டவரது வாழ்வின் இறுதிக்காலம் இப்படி வெறுமையும் விரக்தியுமாக இருக்கும் என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை எவ்வளவு யோசித்தாலும் தவறு எங்கே என்பது புரியவில்லை.

நாட்டில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக விவசாயத்தை கைவிட்டு இடம்பெயர்ந்து செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, அடுத்தவரை நம்பி வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போதும் அவர் பெரிதளவில் கலங்கிவிடவில்லை நாட்டு நிலவரம் சரியாகிய பின் நாம் பழைய நிலைக்கு திரும்பி விடலாம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது ஆனால் இப்படி மீள முடியாத படி குழப்பங்களும் சிக்கல்களும் ஏற்படும் என அவர் நினைத்திருக்கவில்லை.

ஒரு வழியாக நாட்டுப்பிரச்சனையெல்லாம் ஓய்ந்து வாழ்க்கை பழைய நிலமைக்கு கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டிருக்கிறது எப்பாடுபட்டாவது காணி பூமியை திருத்தி விவசாயத்தை ஆரம்பிப்போம் என நினைத்தால் இரண்டு மூன்று வருடங்களாக மழை இல்லாது பூமி வரண்டு போய் கிடக்கு கிணறு குளங்களிலேயும் தண்ணியில்ல.

ஏதோ அரசாங்கத்தால கிடைக்கிற நிவாரணங்கள வைச்சுத்தான் பல குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரச்சனையால் வெளிநாடு போனவங்கள், பிரச்சனையில காணாமல் போனவங்கள், இறந்து போனவங்கள் போக ஊரில மிச்சம் இருந்த இளசுகளும் வேலை தேடி நகர்ப்புறம் நோக்கி போயிற்றாங்கள். இப்ப ஊரில மிஞ்சியிருக்கிறது வயசு போன கிழங்கட்டைகளும், பொம்பிளையளும், சின்னஞ் செய்யுறதென்டால் எப்படி முடியும்? என யோசித்தவர் கடந்த வருடம் மகன் வெளிநாட்டிலிருந்து விடுமுறையில் வந்திருந்த போது இதைப்பற்றி அவனுடன் கதைத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனுக்கு மீண்டும் விவசாயம் செய்வதில் பெரிதளவில் விருப்பமில்லை இப்போதுள்ள சூழ்நிலையில் விவாசயத்தை முன்னெடுப்பது பொருத்தமில்லை எனவும் அதற்குப் பதிலாக எமது தோட்டக்காணியில் பண்ணை ஒன்றினை அமைத்து ஊரில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்க கூடியதாக இருக்கும் எனவும் அதற்கு தேவையான பணத்தினை தானே ஏற்பாடு செய்வதாகவும் கூறியிருந்தான்.

அவனது மனைவி பிள்ளைகள் வெளிநாட்டு வாழ்க்கைக்கு பழக்கப்பட்டு விட்டதால் அவர்களால் இங்கு சமாளிக்கமுடியாது. தான் மட்டும் விடுமுறை காலங்களில் வந்து பண்ணை வேலைகளை பார்க்க முடியும் என்று கூறியிருந்தான் ஒருவாறு தனது ஊருக்கு ஒரு விடிவுகாலம் வந்து விடும் ஊரில் உள்ள சனங்களுக்கு தான் உயிரோட இருக்கும் போதே ஒரு வழியமைத்துக் கொடுத்து விட முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது. ஆனால் இப்போது அவரது மனதில் ஏற்பட்ட கவலைக்கு பிரதான காரணம் அவரது சின்ன மகனது உடல்நிலைதான் நாட்டு பிரச்சனையில் தன் மகனது வாழ்வு பாதிக்கப்பட்டு விடக்கூடாது என நினைத்து தன்னுடைய முழு சேமிப்பையும் செலவளித்து ஒரு மாதிரி மகனை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு இனி அவன் நன்றாக இருப்பான் என்ற நம்பிக்கையில் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தவருக்கு நேற்றிரவு வந்த தொலைபேசி அழைப்பு அவரது நெஞ்சில் பேரிடியாக வந்து இறங்கியது.

மகனுக்கு நெஞ்சுவலி என்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அவனுக்கு மாரடைப்பு வந்திருப்பதாகவும் அதற்கான மருத்துவம் பார்க்கப்பட்டு கொண்டிருப்பதாகவும் மருமகள் தொலைபேசியில் தெரிவித்திருந்தார். 70 வயதாகியும் தனக்கு வராத வருத்தம் எல்லாம் 40 வயதிற்குள்ளே தனது மகனிற்கு வந்திருப்பதை நினைத்து அவரது மனம் வேதனைப்பட்டது. நன்றாக வேரோடி செழித்து வளர்ந்த மரத்தினை வேரோடு பிடுங்கி வேறிடத்தில் நட்டால் அது புதிய இடத்தில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள அதிகளவில் போராட வேண்டியிருக்கும் அப்படித்தான் மனிதர்களும், ஒரு நாட்டின் தட்பவெப்பங்களுக்கேற்ப வாழப்பழகியவர்கள் அந்நாட்டிற்குரிய உணவுகளை உண்டு வளர்ந்தவர்கள் வெளிநாட்டிற்குச் சென்று வாழத்தொடங்கும் போது பல சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

ஒரு சில நாட்களில் மனதளவில் அவர்கள் அந்த சூழ்நிலைக்கு பழக்கப்பட்டு விட்டாலும் உடலளவில் அவர்களால் ஈடுகொடுக்க முடியாமல் போய்விடுகிறது. அதனால் தான் அவர்களுக்கு நாம் இதுவரையில் கேள்விப்பட்டிராத நோய்கள் எல்லாம் வந்து சேர்ந்து விடுகிறது ஆனால் இதைப்பற்றி அவர்கள் சிந்திப்பதே இல்லை. வாழ்க்கைப் போராட்டத்தில் தாம் வெற்றி பெற வேண்டும் என நினைத்து ஓடிக் கொண்டிருப்பவர்கள் தாம் வாழ்நாள் குறைந்து கொண்டிருப்பதைப் பற்றி நினைத்துப் பார்ப்பதே இல்லை. நமது அடுத்த சந்ததியினர் ஆரோக்கியமாக நீண்ட காலம் வாழ வேண்டுமாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தமது பழைய வாழ்க்கை முறைக்கு மாற வேண்டியது அவசியம். ஆனால் இதைப்பற்றி சொன்னால் யார் காது கொடுத்து கேட்கிறார்கள்? அவரும் மகனிடம் எத்தனையோ தடவை கேட்டுப்பார்த்து விட்டார். இப்போது பிரச்சினை எல்லாம் முடிந்து விட்டது தானே? இங்க வந்து எங்களோடு இரன் தம்பி என்று ... ஆனால் நாகரீக வாழ்க்கைக்கு பழக்கப்பட்டவர்களுக்கு ஊருக்கு வரப்பிடிக்கவில்லை. அவராலும் என்ன செய்யமுடியும் ஏதோ அவர்களது விருப்பம் என்று பேசாமல் இருந்து விட்டார்.

ஆனால் இப்ப பிரச்சினை வந்து தனது வீட்டுப் படலையை தட்டும் போது மனுசன் ஆடிப் போயிற்றார். மனம் முழுவதும் மகனின் உடல்நிலை பற்றிய எண்ணம் தான். எப்படியாவது அவன் உடல் தேறி வந்திட்டால் போதும். வேறு ஒன்றும் வேண்டம் என அவரது உள்ளம் விடாது பிரார்த்தனை செய்து கொண்டிருந்தது. ஒவ்வொரு தடவை தொலைபேசி மணி அடிக்கும் போதும் அவருக்கு படபடப்பாகவே இருந்தது. அவரால் நிம்மதியாக ஒரு இடத்தில் இருக்கக் கூட முடியவில்லை. அவரது மனம் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தது. ஒரு வழியாக இரவு நித்திரைக்கு போகுமுன் மருமகளிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. மகனது உடல் நிலை தேறி விட்டதாகவும், அவன் இப்போது நன்றாக இருப்பதாகவும் மருமகள் கூறிய வார்த்தைகள் அவரது இதயத்திற்கு மீண்டும் உயிர் கொடுத்தது. நிம்மதிப் பெருமூச்சு விட்ட அவர் மறுநாள் மகன் தொலைபேசியில் கதைத்தபோது அழுதே விட்டார். கெட்டதிலும் ஒரு நல்லது இருப்பது போல் மகனது உடல் நலக்குறைவு அவரது வாழ்க்கையையே புரட்டிப்போட்டு விட்டது.

அவரது மகனது தற்போதைய உடல்நிலை காரணமாக அங்கு அவனால் தொடர்ந்து வேலை செய்யமுடியாது எனவும் அவனது தாய்நாட்டிற்கு அவன் திரும்பிச் செல்ல வேண்டும் எனவும் அந்த சூழ்நிலை தான் அவனது உடல் நிலை மீண்டும் நன்றாக வருவதற்கு ஏற்றது என மருத்துவர்கள் கூறியதால் தான் ஊருக்கு வர இருப்பதாக மகன் கூறியதிலிருந்து தம்பையாப்பாவிற்கு கால் தரையில் படேல்ல. மீண்டும் இளமை திரும்பிய தோரணையில் காட்டுக்கத்தியும் மண்வெட்டியும் எடுத்துக்கொண்டு தோட்ட காணியை துப்புரவாக்க புறப்பட்ட அவரது நடையில் ராஜ கம்பீரம் தெரிந்தது. தனது நிலத்தில் பயிர் செய்து உலகுக்கு உணவளிக்கும் ஒவ்வொரு விவசாயியும் ஒரு ராஜாதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிதாஸ் (RDS தலைவர்)
கங்கன் குளம்

## இழந்தது எது? இருப்பது எது?

முற்றத்து நிலவு முழுமையாய்
இருந்தும் - அது
எட்டாத தூரமாய் தெரிவது ஏன்??

போர் நின்றுவிட்டது
போராட்டம் பொய்த்துவிட்டது
வானம் வெளித்துவிட்டது — ஆனால்
எங்கள் வாழ்க்கை எங்கே??



என்றோ ஒரு நாள் எனக்காயும்
விடியல் தெரியும் என்று
ஏங்கி நின்றிருக்கும் நாட்கள்
எங்கே??

பூக்காமல் போன பூந்தோட்டம்
காய்க்காமல் கருகிப்போன மாந்தோட்டம்
இலக்கிழந்து போன இளைஞர் கூட்டம்
வழக்கிழந்து போன பண்பாட்டு வட்டம்

அன்பாய் பேசி அண்ணன் தம்பி
அனேகமாய் ஆடிபாடி
விழாக்கள் செய்து வினோதமாய்
வாழ்ந்த வாழ்க்கையை — ஏன் மறந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைஷ்ணவி, ராகவன்
தட்டான்குளம்

## இன்றைய கலாச்சாரம்

அதிகாலை நேரம் அப்பாவின் அலம்பல்
புறு புறுக்குது மனுசன்
எல்லாமே நாசமாய்ப் போச்சு ...
இப்பவே இப்படியெண்டால் என்ற பிள்ளைகள் பெரிசாகேக்க ...
நவ நாகரிகமாம். ஆடையும் சரி நடபாவனையும் சரி
மட்டுமரியாத தெரியாம மந்தமாகிட்டுதுகள் இளசுகள்
கோவில் திருவிழாவில் கலைநிகழ்வாம்
தமிழ் கலாச்சாரக் கூத்தெல்லாம் ஓடி ஒழிஞ்சு
நேற்று ஒருத்தன் குத்துப்பாட்டுக்கு குதூகலமாய் ஆடுறான்
எங்கட காலத்தில இப்படியா?

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை
ஏன் இந்த மனுசன் இப்படிப்புலம்புது
நாற்பது வயதானாலே நாய்க்குணம் என்பர்
அப்படித்தான் ஆகிட்டுப்போல என்ற அப்பாவுக்கும்...
வெள்ளன பள்ளிக்கூடம் போகவேணும் என்றால்
முதல் பஸ்ஸைப் பிடிக்கவேண்டும்
அவசரமாக வீதிக்குச் சென்றேன்
நேரம் போகிறது பஸ் வரவில்லை
பாடசாலை ஆரம்பித்து விடுமே என்ற பதற்றம் எனக்குள்
பாதையை உற்று நோக்கியபடியே உறைந்து போயிருந்தேன்
பற பற என்ற உறுமலுடன் சிவப்பு நிறத்தில்
தேர் அசைவது போல பஸ்வந்து கொண்டிருந்தது
அப்பாடா வந்து விட்டது பஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெதியா ஏறுங்கோ கெதியா ஏறுங்கோ
கத்தினாள் கண்டக்டர் அண்ணா
பாவம் அவருக்கும் அவசரம்போல
நானும் பஸ்ஸில் ஏற எத்தனிக்கும் போது – என்னை
முந்திச் சென்று மிதிபலகையில் காலவைத்தர் சர் அண்ணன்
ஒருகையில் ஸ்மார்ட் போனும் மறுகையில் டவுசரைப் பிடித்தபடி
அடுத்தபடியில் கால்வைக்கமுடியாமல் இடறிவிழுந்துவிட்டார்
பாவம் மனுசன்
அவர் கொடுத்த அளவை விட டெய்லர்
இடுப்பளவை கூட்டிவிட்டார் போல
அகலமான இடைப்பட்டி கட்டியும்
டவுசர் இடுப்பில் நிற்குதில்லை ஐயோ! பாவம்
நான் பரிதாபத்துடன் அவரைப் பார்த்து விட்டு
ஏறினேன் பஸ்ஸில்
கால்வைக்கவும் இடம் இல்லை
கஷ்டப்பட்டு நின்றுகொண்டேன்
எனக்கு முன்னால் இருக்கையில் ஓர்மனிதன்
அவர் அதிசயப்பிறவியோ?...
தலையில் சுற்றியுள்ள முடியெல்லாம் வறாண்டப்பட்டுள்ளது
நெற்றிக்கு மேலிருந்து உச்சிமண்டை வரைக்கும்
திரிநூல் போல சுருண்ட தலைமுடியின்
பாதிப்பக்கம் செம்பட்டை மீதிப்பக்கம் குங்குமக்கலர்
நெற்றியிலிருந்து மூக்கு நுனிவரை
சுருண்டு தொங்கவிடப்பட்ட முடி நீலநிறம்
பஞ்சவர்ணக்கிளிகளைப் படங்களில் பார்த்துள்ளேன்
பஞ்சவர்ணத்தலையினை நேரில் பார்த்ததும் வியர்ந்து போனேன்
கடவுளின் படைப்பில் அதிசயங்கள் தான் எத்தனை?
பஸ் நின்று விட்டது அவசரமாக இறங்கியோரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் ஒருத்தி

எனக்கு முன்னால் ஓர் அக்கா! அவசரமாக நடக்க நினைத்து
தடுக்கி விழுந்து விட்டா...
கறுப்புநிற குட்டைப்பாவடை
வீட்டில கஷ்டம் போல தங்கையின் பாவாடையை
அவசரத்துக்குகட்டி விட்டாவோ
முட்டிக்காலுக்கு மேல நிக்குது
தங்கச்சி என்று ஓர் அழைப்பு திரும்பிப்பார்த்தேன்
போன் கீழ விழுந்துட்டுது எடுத்துத்தா அம்மா
நான் போனைப் பார்த்ததும் குழம்பிப் போய்விட்டேன்
அந்த அக்கா போன் வாங்கின காசுக்குப் பத்து
சுடிதார் வாங்கியிருக்கலாமே
குனியவும் முடியாமல் நடக்கவும் முடியாமல் பாவம்
தலையணை உறைபோல ஏன் குட்டைப்பாவடை கட்டவேணும்
சிந்தனைகள் என்னைச் சூழ்ந்து கொள்ள
நான் பாடசாலை நோக்கிச் சென்றேன்
பிறேயர் முடிந்து அதிபர் உரையாற்றினார்
நாம் கலாச்சாரத்ததை நாமே பாதுகாப்போம்...
மேலைத்தேய கலாச்சாரம் நமக்கு வேண்டாம் ...
இப்போது உறைத்து விட்டது எனக்கு
என்ற அப்பாவின் அலம்பலும்
எமது அதிபரின் புலம்பலும் ஒன்று தான்
நமது பாரம்பரியங்களை நாமே பாதுகாக்க வேணும் என்று
நல்லது கெட்டதை நமக்கு நாசூக்காகச் சொல்லுதுகள் ...

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீரசிங்கம் பிரதீபன்**
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், வவுனியா.

## வன்னி வயற் பண்பாட்டில் குருவிப் பள்ளு

வயலும் வயல்சார் பண்பாட்டோடும் பின்னிப் பிணைந்தது வன்னிச் சமூகம், காடு வெட்டுதலும் துப்பரவு செய்தலும், நெல் விதைத்து அந்நெல் அறுவடைக்கு ஆயத்தமாகும் வரை கண்ணும் கருத்துமாகப் பாதுகாப்பதுமான இடம்மிகுந்த வாழ்வினை சந்தித்து வாழ்ந்து வந்தோர் இவர்கள். இரவும், பகலும் வயலோடு தமது வாழ்வைக் கழித்த மக்கள் வயல் நிலப்பகுதிகளில் அறுவடை முடியும் வரை தற்காலிகமாக குடில் அமைத்து வாழ்ந்தனர். யானை, பன்றி, குரங்கு குருவிகள் எனப் பல்வேறு வனவிலங்குகளிடம் இருந்து தம் நெல்வயல்களைக் காப்பாறுவதற்குப் போராடிய மக்கள் இவர்கள்.

இவர்கள் போராட்டங்களுக்கு எல்லாம் இலக்கிய வடிவங்களையும் தரத் தவறவில்லை. வயலில் நெல்காத்துவரும் காலங்களில் எல்லோரும் ஒன்றாக கூடி நின்றே காவற் கடமைகளில் ஈடுபடுவர். அது மட்டுமன்றி வயலிலே வேலை செய்கின்ற போது கூட அவருடையது, இவருடையது என்ற பாகுபாடின்றி எல்லோரும் ஒன்றுபட்டுச் செயற்பட்டனர். கூட்டு முயற்சியும் ஒற்றுமைப்பாடும் இவர்களின் இயல்பான குணங்கள் ஆகியிருந்தன. தம் வயலை அறுவடை வரை காத்து நின்ற மக்கள் அக்காலங்களில் கூடி மகிழ்ந்து ஆடிப்பாடித் தங்கள் களைப்பைப் போக்கிக் கொண்டனர். அக்காலங்களில் அவர்களின் வாயில் இருந்து வெளிப்பட்ட பாடலும், ஆடலும், கூத்தும் இக்காலம் இலக்கிய வடிவைப் பெற்றுப் பரிநாமித்துள்ளன. தாம் வயலை உருவக்கிய விதம்பற்றிக் கூறும் போது

"வணத்தை அறுத்து நெருப்புக் கொழுத்தி
மடுத்தின் தடிகள் பொறுக்கியே
வளைத்து வேலி நிரைத்துக் கறுத்த
வளர் நெல் விதைகள் தூவியே"

என்று கூறித் தமது கஷ்டங்களை விளங்கவைக்கின்றனர்.

இலக்கியங்களில் தாம் கானும் காட்டு விலங்குகளை கதை பாத்திரம்கப் படைத்து அப்பாத்திரங்களின்னூடாக யதார்த்த நிலையை உணர்த்துவது இவர்களின் இயல்பு எனலாம். நகைச்சுவையும், ஓசைச் சிறப்பும் இவர் இலக்கியங்களில் விஞ்சிக்கிடக்கின்றன. சிந்து மெடடடிலே ஆடிப்பாடிக் குதூகலிக்கும் வகையில் அமைந்த இவ்விலக்கியங்கள் சிரிப்போடு சிந்திக்க வைப்பவை என்பது கண் கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளு, சிந்து போன்ற இலக்கிய வடிவங்கள் இவர்களால் இலக்கிய உலகிற்கு வழங்கப்பட்டவை எனலாம் 96 வகை பிரபந்தல்களில் பள்ளுப் பிரபந்தமும் ஒன்று. ஈழத்தில் முதல் எழுந்த பள்ளுப்பிரபந்தமாகக் கொள்ளப்படும் " கதிரையப்பர் பள்ளு" வன்னிப்பிரதேசத்தில் இருந்தே வெளிக்கிளம்பியதாக ஆய்வாளர் கருதுவர். இதைவிட பன்ஜிப்பள்ளு, சாலிப்பள்ளு, குருவிப்பள்ளு போன்ற இலக்கியங்களும் வன்னிப் பிரதேசத்தை மையமாகக் கொண்டே வெளிவந்துள்ளன.

குருவிப்பள்ளு இலக்கியம் குருவிகளைக் கதை மாந்தராகக் கொண்டு படைக்கப்பட்டதாகும். வயலிலே நெற்கதிர்களைத் தேடிவரும் ஒரு குருவிக் குடும்பத்தின் கதை கூறும் வகையில் இவ்விலக்கியம் அமைந்துள்ளது. குருவிகளின் உலகமே தனி மிகவும் சுதந்திரமாக வாழும் குருவிகள் பற்றிக் கூறும் போது

'வானில் மேகம் சிறந்து கதிரவன்
வந்து தோன்றிடும் வேளை அறிந்து
வானமாகி உயர்ந்த மரம் தனில்
வண்ணமாகிய கூட்டிலிருந்து
தான தான தனந்தன தா வென்று
சங்கீதம் பாடித் தாளமிசைத்து

என குருவிகளின் சுதந்திர நிலையை அழகாக விளக்குகின்றது. குருவிப்பள்ளு அதிகாலையிலேயே எழுந்து ஒலி எழுப்பி கதிரவன் வரவை அறிவித்து உலகை விழிக்கச் செய்து சந்தோசமாக ஆடிப் பாடி ஒலி எழுப்பி வாழும் குருவிகளின் இயல்பு அழகுறப் பேசப்படுகின்றது.

அடுத்து இக்குருவிப்பள்ளு பல்வேறுபட்ட விடயங்களை தொடர்ந்து சொல்கின்றது. வயலிலே நெற்கதிர்களை தேடிவரும் குருவிகள் எவை என்பது பற்றியும், இக்குருவிகள் நெல்கொறிக்க வரும் போது மனிதரால் அவற்றுக்கு ஏற்படும் துயரங்கள் பற்றியும், குருவிகளின் பஞ்சநிலை பற்றியும், இக்குருவிகள் குஞ்சுகளின் மேற்கொண்ட பாசம் பற்றியும், அவற்றின் ஒழுக்க மேம்பாடு பற்றியும், வரட்சி வந்த போது அக்குருவிகள் இறைவனிடம் மனிதருக்காக மழைவேண்டும் விதமும் குருவிகளை கதை மாந்தராகக் கொண்டு அங்கத சுவையுடன் விளக்கப்பட்டுள்ளமை இவ்விலக்கியத்தை ஆக்கிய புலவனின் மதிநுட்பத்துக்கு சான்றாகும். குருவிகள் தமது வாழ்வியல் தன்மை கூறும் வகையில் அமைந்த இக்குருவிப்பள்ளு மானிடருக்குப் பல சிந்தனைகளையும் விதைத்துச் செல்வதில் வியப்பேதுமில்லை. காட்டிலே வாழ்ந்து வயல் நிலங்களை நெல்தேடி வரும் குருவிகளைக் கூறுகையில்

'காலொவு திணையன் குருவி
கதித்த தூக்கணையன், கிளிக்கூட்டம்
சேருமாமயில் பட்சி சிறந்து' என்றும்
.....................................
ஆகடியன் திணையன் புறாவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்குலம், கொக்கு செங்கால குருவி என்ற ஒரு பட்டியலையே தருகின்றது. அதாவது திணையன் குருவி, தூக்கணாங்குருவி, கிளிக்கூட்டம், மயில், ஆகடியன் , பறா, கொங்குலம், கொக்கு, செங்காற்குருவி போன்ற பறவைகள் வயலிலே நெல் உண்ண வருவதாக கூறப்படுகின்றது. இவற்றை கூறுவதின் வாயிலாக இந்தப் பறவைகளிடம் இருந்து தம் விளைவைக் காக்க வேண்டிய பொறுப்புடையோராக இந்நிலத்து விவசாயிகள் காணப்படுகின்றனர். மானிடர் தமது விளைவைக் காத்து நிற்கும் வேளை பல பாதுகாப்புக்களைச் செய்ய வேண்டிய தேவைப்பாடு ஏற்படுகின்றது. அதனால் குருவிகள் பல துயரங்களை எதிர்கொள்கின்றன. இதனை

.... வல்ல மானிடர் கல்லால் எறிந்தால்
மனத் தெம்போடு பறக்கவும் மாட்டோம்
பத்தை மேல் பருந் தொன்று துளைத்து
பரந்து வந்து விசைந்து பிடிக்கும்
சுத்தமான மரத்தில் கண்ணி,
தொடுப்பான் பாவி அகப்பட்டுக் கொள்வீர் எனவும்,
சுண்டு வில்லினில் உண்டை வைத்து
சுட்டிப் பாகவே பொட்டென எய்வான்
துண்டந் துண்டமாய் அம்பினா லெய்து
சுட்டுத் தின்பனே பச்சடியாக

எனவும் மனிதரால் தாம்படுகின்ற இன்னல்களையும் குருவிகள் கூறிக்காட்டுகின்றன. கல்லால் எறிதல், பருந்து தம்மை பிடித்துச் செல்லுதல், சுண்டுவில் (கெற்றப்பொல்) அடித்துக் கொல்லுதல், அம்பெய்து கொல்தல், கண்ணி வைத்துப் பிடித்தல் ஆகிய பல ஆபத்துக்கள் மத்தியில் தாம் இரை தேட வேண்டிய துயரத்தினை அழகுறக் குருவிகள் கூறியிருக்கின்றன. இவ் ஆபத்துக்கள் எல்லாம் நேரும் என்பதற்காக தம் குஞ்சுகளை கூட்டிலே விட்டு விட்டு அவற்றுக்கும் இரை கொண்டு செல்ல வேண்டிய தேவைப்பாட்டையும் உணர்ந்துகின்றனவாம் குருவிகள். குருவிகள் தம்வாழ்வில் எப்போதும் ஒரேமாதிரியான உணவு கிடைக்காததனால் பல கலத் தூரம் அலைந்து உணவு தேடவேண்டிய தேவைக்குத் தள்ளப்படுகின்றன. சிலவேளைகளில் பசியுடன் கூட இருக்கவேண்டி வரலாம் இந்நிலையை

'இந்த மாதம் முடிந்தால் உமக்கினி
எங்கும் கிட்டாது செங்கதிர் நெல்லு
குஞ்சுப் பட்சி பசித்துத் தவிக்குது
கொத்திவாரும் அறுக்கினில் நெல்லை'

என்று தம் துயர நிலையை வெளிப்படுத்துகின்றன. குருவிகள் தம் குஞ்சுகளின் மேற்கொண்ட பாச உணர்வினை பல இடங்களில் குருவிப்பள்ளு உணர்த்தி நிற்கின்றது. தாய்க் குருவி தாம் இரை தேடப்போகும் வேளையிலே குஞ்சுகளையும் கூட்டிச் செல்ல ஆசைப்பட்டு தன் கணவனிடம் இதுபற்றிக் கேட்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செல்வமாகிய குஞ்சசை விட்டு நாம் சிறந்த சென்நெல் அழுத்திடலாமோ என்பதாக அதன் வினா அமைகின்றது. இவ்விடத்திலே தந்தைக் குருவி, சிறுகுஞ்சுகள் தம்மைப்போல பறந்து தப்பிப் பிளைக்காது மனிதரிடம் அக்கப்பட்டு விடும், அதாவது

'செல்வமாகிய குஞ்சும் இழந்து
சிறக்கும் கூடும், வெறுத்திலாமோ
கொல்வர் மானிடர் சண்டாளர் நாணில்
குணமல்ல எந்தன் கோதையே கேளும்'

என விரயமாக விடை கூறுகின்றது. இவ்விடத்தில் தம் குஞ்சுகளே தமக்குச் செல்வம் என்று ஆண்பறவை கூறிக்காட்டுவது குருவிகளுக்கு மட்டுமல்ல மனிதர்களுக்குமான அறிவுரையும் ஆகின்றது. எமது குழந்தைகளை துயரத்தில் இருந்து காத்து அவர்கள் நல்வாழ்விற்கு வழிகாட்ட வேண்டிய தேவை பெற்றோருக்கே உண்டு என்பதை ஆசிரியர் குருவிகள் மேல் இட்டுக் கூறிக் காட்டுகின்றார்.

'சில்லென்றே தான் இரைந்து பறந்து
சிறகு மோந்து பறக்கிறோம் நாங்கள்
பச்சைப் பாலன் குருவி குழந்தை
பறக்குமோ வீணில் இறக்குமோ?

என எதிர்வினாவின் மூலம் விடை கூறுகின்றது ஆண்குருவி. குருவிப்பள்ளு பாடிய ஆசிரியர் சாதாரண பாமரமகனாக இருந்தாலும், அவரது மதிகாலம் அறிந்து போற்றுவதற்கு உரியது. இப்பள்ளினூடு பல ஒழுக்கக் கருத்துக்களை நிலை நிறுத்தியிருக்கின்றார். ஆண் குருவிக்கும், பெண் குருவிக்குமிடையே சில இடங்களில் கருத்து முரண்பாடுகளைப் படைத்து அவற்றினூடு சமூக ஒழுக்கமுறைகளை வலியுறுத்துவது சாதாரண உத்தியல்ல. பெண்குருவி குஞ்சுகளையும் கூட்டிச் சென்று இரை தேடலாம் எனக் கூற ஆண்குருவிக்கு கோபம் வந்து விடுகின்றது.

'கெட்டி கெட்டி உன் பெண் புத்தியோடி
கெடுக்கவோ நீ குடி தலைப்பட்டாய்
ஆமடி உனக் கீன மிரக்கம்

அறிவுமில்லை... என்று கடிந்து பெண்குருவியை சாடுகிறது. இது கேட்ட பெண்குருவி, ஆண்குருவிக்குத் தன்மேல் அன்பு குறைந்துவிட்டதோ என ஐயப்படுகின்றது. அதற்குக் காரணத்தையும் கற்பிக்கின்றது. தன்னை விட அழகான பெண்களை வயலிலே கண்டு விட்டதனால் ஆண்குருவி அவர்களின் அழகிலே மயங்கித் தன்னைத் திட்டுவதாக அது எண்ணுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பழுத்த நெல்லும் பழுப்பென்றறியாது
பாவை மாரை நீர் பார்த்திருந்தீர்'

என தனது அங்கலாய்ப்பை வெளிப்படுத்துகிறது. இதனை அறிந்த ஆண்குருவி பெண்குருவியின் சந்தேகத்தால் மனம் நொந்து

'பாரில் உன்னைப் புணர்ந்த சடலம்
பரத்தை மாரோடு சேருமோ போடி

என அன்பின் உச்சநிலையையும், தமது ஒழுக்கநிலையையும் பேசுகின்றது. இவ்விடத்தில் புலவர் ஆண்குருவியாக நின்று பேசுவது தெரிகின்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற தாயக மந்திரத்தை பேணிப்பாதுகாக்க வேண்டியது மனிதரது கடமை என்கின்ற உண்மைத் தத்துவம் ஐந்தறிவுடைய குருவியைக் கொண்டு கூறிக்காட்டப்படுகின்றது.

தன்னலம் பாராது பிறர்நலம் பேணும் பண்பு குருவிகளுக்குக் கூட உண்டென்பதனை குருவிப் பண்ணின் இறுதிப்பகுதி வெளிப்படுத்துவதாக அமைகின்றது. நெற்பயிர்களுக்கு நோய் ஏற்பட்டு வரட்சியுற்ற காலத்திலே கடவுளிடம் பல வேண்டுதல்களை இக்குருவிகள் முன்வைக்கின்றன.

'கொக்குடன் கரடி நோய் கூட நெருங்க
விக்கினேஸ்வரனுக்குப் புக்கைக்கு நேந்தோம்
வானத்தில் மழை இல்லாமல் வாடும் பயிர் கண்டு
வானவர்கோன் இந்திரர்க்கு பூசை முடித்தோம்

என்று கூறுவதால் மானிடரின் நெல்வயல்களிலே விளைச்சல் பெருக வேண்டும், அவர்கள் பாடுபட்டமைக்குரிய பலனை அனுபவிக்க வேண்டும், எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டும் என்கின்ற பொதுநலப்போக்கு குருவிகளின் ஊடாக வெளிப்படுத்திக் காட்டப்படுகின்றது.

சாதாரண பாமரமக்களால் தரப்பட்ட இவ்வகை இலக்கியங்கள் சமூக சீர் திருத்த சிந்தனைகளோடும், ஓடைநயத்துடனும், நகைச்சுவைத்தன்மையுடனும் தோன்றி பல செய்திகளை விதைத்துச் சென்றமை இவ்விலக்கியம் இன்றும் நிலை பெறக்காரணமாகிற்று எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதாகரன் - மாலதி
தட்டான் குளம்

## இன்று தேடுகின்றேன்

கை கூப்பி தலை குனிந்து
இன்முகம் காட்டி இன் சொல்லாலே
வாருங்கள் என்று வரவேற்றிடும்
வஞ்சகம் அற்ற கலாச்சாரம் எங்கே?

சமையலறையில் ஒன்றுகூடி
சப்பாணி கட்டி சாந்தமாக
சகோதரங்கள் ஒன்று கூடி
சாப்பிட்ட சந்தோசக் கலாச்சாரம் எங்கே?

பெரியோரைக் கண்டால் பேரன்போடு
சாதி மத பேதமின்றி
பெரிமித்த அன்போடு பேணிய
பேதைமையற்ற கலாச்சாரம் - எங்கே?

மங்கையவள் மணமுடிக்க முன்பு
மணமகன் முகம் பார்த்திடாது
மாண்புள்ள மணமகளாய் வாழ்ந்த
மாண்புமிக்க கலாச்சாரம் - எங்கே?



தலைவாரிப் பூச்சூடி
தனயவன் கைபிடித்து
தன்னம்பிக்கை கொண்டவராய்
தலை நிமிர்ந்து நடந்த கலாச்சாரம் எங்கே?
கணுக்கால் தெரியாத சேலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சி தந்திடும் வேட்டி சால்வையும்
அழகை மெருகூட்டிடும் அற்புதமாய்
ஆகா! இவ்வாறான கலாச்சாரம் எங்கே?
ஆலய மணியோசையில் மெய் மயங்கி
ஆண்டவனோடு தன்னை இணைத்து
அழியாத இன்ப அருளைப் பெற்றிடும்
அற்புதமான அந்தக் கலாச்சாரம் - எங்கே?



ஏர்பிடித்து களனி உழும் காளையருக்கு
என்ன செய்வேன் என மனமுருகி
கஞ்சிப் பானை தலைசுமந்து
களைப்பாற்ற வந்த கலாச்சாரம் எங்கே?

பொன்வானம் அண்ணார்ந்து பார்த்து
பூமிக்கு மழை பொழியும் நாளை
இந்நாள் உரியதென குறித்து
உழுது பயிரிட்ட கலாச்சாரம் எங்கே?

உற்றார் உறவினர் ஒன்றுகூடி
சுற்றம் சூழல் சேர்ந்து நின்று
மனையில் செய்து கழித்து
மனம் மகிழ்ந்த கலாச்சாரம் - எங்கே?

தேடுகின்றோம் அந்தக் கலாச்சாரம் தன்னை
தேங்கிக் கிடந்த நல்ல கலாச்சாரத்தை
தேடித் தேடி களைத்துவிட்டோம்
இன்று தேடுகின்றோம் கலாச்சாரம் - எங்கே?

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. செ. பிரதீபா,
அபிவிருத்தி உத்தியோகத்தர்
(வெளிநாட்டு வேலைவாய்ப்பு)
வெங்கலச்செட்டிக்குளம்.

# மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் பணிப்பெண்களின் பயணம் பற்றிய மேலோட்டம்

வாழ்வாதரங்கள் வலுவற்றுப் போன குடும்பங்களில் வாழவழி தேடும் பெண்களை மிக எளிதாக கவர்வது மத்திய கிழக்குத் தேச வேலைவாய்ப்புக்கள். கணவர் விட்டுச் சென்ற பெண்களையும், கூலி வேலை செய்யும் பெண்களையும் சரி வறுமையில் வாடும் பெண்களையும் ஆசைவார்த்தைகள் காட்டி இவர்களை இப்போது வதைக்கும் குறி வைக்கின்றனர். இப்பெண்களுக்கு ஆசை வார்த்தைகள் காட்டி ஆதாயங்களைத் தேடும் ஆண் முகவர்கள், அவர்களை மிஞ்சிய பெண் முகவர்கள் போன்றோர் இவர்களால் ஆதாயம் தேட முயல்கின்றனர்.

கடந்த கால யுத்த காலத்தில் அகதி முகாம்களில் பாதிக்கப்பட்ட பெண்களை நம் நாட்டு இடைத் தரகர்கள், முகவர்கள் போன்றோரால் ஏமாற்றப்பட்டு கடவுச்சீட்டு பெற கொழும்பிற்கு கூட்டிச் சென்று வேலை வாய்ப்பு முகவர்களிடம் கையளித்து சென்று விடுவர். செட்டிக்குளத்தைச் சேர்ந்த மக்களைப் பொறுத்தவரை ஒரு வருடத்திற்கு 100க்கு மேற்பட்ட பெண்கள் பிரதேச செயலக சிபாரிசுடன் அனுமதி பெற்று வெளிநாடு செல்கின்றனர். இவர்களை விட அனுமதி பெறாமல் களவான கடவுச்சீட்டுடன் வெளிநாடு செல்பவர்களும் உள்ளனர்.

மேலும் அனுமதியுடன் செல்பவர்களில் இருந்தும் மிகக் குறைந்த அளவினரே தாம் செல்வதற்கான நோக்கத்தை நிறைவேற்றுகின்றனர். இவர்களில் பலர் துன்புறுத்தப்பட்டு, சம்பளம் கிடைக்கப்பெறாமல், ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட வேலை கொடுக்கப்படாமல் ஏமாற்றப்பட்டு திரும்பவும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு தூதரகத்தில் விடப்பட்டு பின்னர் எதுவும் இல்லாமல் இலங்கை வந்து சேர்கின்றனர். வெளிநாட்டிற்கு செல்லும் பெண்களில் 25% ஆனவர்களே தமது குடும்பத்தின் தமது குடும்பத்தின் பொருளாதார நிலைமைகளை முன்னேற்றி கடன்களை மீள் செலுத்தி தமது குடும்பத்தை முன்னேற்றி வருகின்றனர். எனவே வெளிநாடு செல்லும் பெண்கள் பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்வதன் மூலம் தங்களையும் தங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ள பெண்கள் தொழிலுக்காக வெளிநாட்டிற்கு செல்ல தங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படாமலிருக்கு அவர்கள் பல்வேறுபட்ட அசௌகரியங்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கல்களுக்கும் மற்றும் பல்வேறு சவால்களுக்கும் முகங்கொடுக்க நேரிடுவதால் இது பற்றி அவதானத்துடன் இருத்தல் வேண்டும். வெளிநாட்டிற்கு சென்ற பின்னரும் பிள்ளைகளை பொறுப்பெடுத்த உறவினருடன் சிறந்த உறவைப் பேண வேண்டும். வெளிநாட்டில் தொழில்புரியும் போது இயன்றவரை சிக்கல்களை தவிர்த்து வழங்கப்பட்ட அனைத்து அறிவுரைகளையும் கடைப்பிடிப்பதன் மூலம் பாதுகாப்பான வெளிநாட்டு பயணத்தை மேற்கெள்வதன் மூலம் சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும்.

வெளிநாடு செல்வதற்கு முன்னதான சுய ஆயத்தம் அல்லது சுயமதிப்பீடு செய்வதன் மூலம் அனைத்து சட்டவிதிமுறை ஒழுங்குகளையும் / நடைமுறைகளையும் பின்பற்றிய பின்னர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் பயணத்திற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளலாம். இச்சந்தர்ப்பத்தில் பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

பிரதேசத்திலுள்ள பின்வரும் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் அவர்களுக்கு அறிவிப்பதன் மூலமாக வெளிநாடு செல்பவர் அவர்களது நலனோம்புகை பற்றி கவனம் செலுத்தமுடியும்.

- பிரதேச செயலகத்திலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்
- கிராம சேவையாளர்
- குடும்ப சுகாதார உத்தியோகத்தர்
- சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. குமாரதேவன்
நித்தியநகர்

## மாறிப்போன சமூகம் மங்கிப்போன கலாச்சாரம்

இனத்தின் மொழியின் உடையின்
அடையாளங்கள்
வாழ்கிற வாழ்க்கைமுறை பண்பாடு
நிகழ்காலத்தில் மாறிப்போன சம்பவங்களால்
மங்கிப் போனது கலாச்சாரம்

வேட்டியை பெட்டிக்குள் பூட்டிவைத்து
அதைக் கட்டிச் செல்ல வெட்கப்படுகிறது
வீரத்தமிழன் கலாச்சாரம்

வளங்கள் கிடைக்காத போது
தடைகள் விதிக்கப்பட்ட போது
வளமாக வாழ்ந்து காட்டிய தமிழன்
மதுபானக் கடையில் சேமிப்பு செய்து
மானம் இழந்து கடன் வாங்கி
மறைந்து ஒழிந்து வாழ்வது மதி இழந்த சமூகமாக
மாறிப்போனது கலாச்சாரம்

செல்போன் சொல்கிற அறிவுரை மட்டும்
செவிமெடுத்தால் போதுமென்று
அல்லும் பகலும் அழைத்திடும் சமூகத்தில்
சிந்தித்து செயற்பட நேரமில்லை
சின்னதாய் முடிவுகள் எடுப்பதில்லை

ஏர்பிடித்த கைகளுக்கு விதவிதமாய்
இயந்திரம் கிடைத்தபோதும்
பார் தனில் விவசாயம் படிப்பதோடு மாத்திரம்
நின்றுவிட்டால்
யார் நமக்கு சோறு தந்து ஆதரவழிப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் நிலைகள் வற்றிப்போக நீயும் நானும்
காரணமாகினோம்
வேரோடு விருட்சத்தை வெட்டி அழிப்பதினால்
மன்னர் கட்டிய குளங்கள் அனைத்தும்
மண் நிரம்பி போனதால்

பொன்னான நீர் எல்லாம் கடலில் போய்
சேர்ந்தது. என்னடா மானிடா
இத்தனை வறுமையும் உன் சோம்பேறி தனத்தாலே

கரிகாளன் கட்டிக்காத்த கலாச்சார வாழ்க்கைமுறை
கன்னிப் பெண்ணின் கற்புக்கு பாதுகாப்பு தந்தது – குள்ள
நரி ஆட்சியிலே – குட்டிச் சிறுமியின்
கற்பினை கூட விட்டுவைக்கவில்லை

சில்லறைக்கு பேராசைக் கொண்டு
சிக்கித் தவிக்கும் சமூகம் - சின்ன சின்ன
தேவைகளை பூர்த்தி செய்ய
தேசம் விட்டு தேசம் சென்று
பிறக்கும் குழந்தைக்குக் கூட – மேலைநாட்டு
கலாச்சாரத்தை மெல்ல மெல்ல புகுத்தும் போது
பண்பாடு கலாச்சாரம் காசுக்கும் பணத்திற்கும்
அடிமை தானே

போகிற பாதையெல்லாம் போதை வெள்ளம்
சூழ்ந்த பின்னே - மூழ்கித் தவிக்கும்
சமூகத்தில் முயற்சித்து பலன் என்ன
முன்னோரின் கலாச்சார பண்பாட்டினை பற்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா. கார்கோடன்
பட்டதாரிப் பயிலுனர் 2019
சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு

# சமூக மூலதனமும் சிறுவணிக அபிவிருத்தியும்

## 1. சிறுவணிகம் ஓர் அறிமுகம்

சிறுவணிகம் பழைய பண்பாட்டு முறையூடாக வளர்ந்து இன்றைய பொருளாதாரத்தில் ஒரு திடமான சாதனையுடன் திகழ்கின்றது. பொருளாதாரத்தில் கணிசமானதொரு அளவில் வேலைவாய்ப்பினை வழங்குகின்ற ஒரு துறையாகவும், புதிய பொருட்கள் சேவைகளைக் கண்டு பிடிப்பதிலும், புதிய தொழில்களை உருவாக்குவதிலும் பாரியளவானதொரு பங்களிப்பினைச் செய்து வருகின்றது.

இவ்வணிகத்தை வரையறுப்பதென்பது மிக சிக்கலானதொரு விடயமாகும். இருந்த போதிலும் வணிகத்தின் மொத்தச் சொத்துக்கள், உரிமையாளரின் மூலதனம், வருடாந்த விற்பனை வருமானங்கள், ஊழியர்களின் எண்ணிக்கை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு பல வரைவிலக்கணங்கள் காலத்துக்குக் காலம் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் அமெரிக்க சிறுவணிக நிறுவனத்தின் கருத்துக்கினங்க 'சிறுவணிகம் என்பது அதனது தொழில் முதன்மை வகிக்காத வருடாந்த விற்பனையாக 10 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், 1000 தொழிலாளர்களுக்குக் குறைந்த தொழிலாளர்களைக் கொண்டிருக்கின்றதுமான வணிகத்தினையே குறிக்கின்றது' என வரையறுக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் எல்லா வரைவிலக்கணங்களும் ஏதோ அடிப்படையில் தகுதிகளைக் கொண்டிருக்கின்ற போதிலும், பொதுவாக '500 நபர்களுக்குக் குறைந்த ஊழியர்களைக் கொண்டிருக்கின்றதும், இன்னொரு வணிகத்தின் பகுதியாக அமையாததும், சுதந்திரமான முகாமையினையும் உரிமையாண்மையினையும் கொண்டிருக்கின்றதுமான வணிகம்' எனவும் வரையறுக்கப்படுகின்றது.

நடைமுறையில் நிறுவனங்கள் 500 ஊழியர்களுக்கு குறைவானவர்களைக் கொண்டிருந்தாலும் உயர்தொழிநுட்ப உற்பத்திக்கோட்டுடன் கூடிய விதத்தில் 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமான விற்பனைகளை உருவாக்குகின்றதைக் காணலாம். மாறாக அதிகளவான தொழிலாளரைக் கொண்டிருக்கின்ற நிறுவனங்கள் சிலவேளைகளில் குறைந்தளவான விற்பனை வருமானத்தினைக் கொண்டும் காணப்படலாம். பொதுவாக சிறுவணிகம் அவற்றினது தொழிலில் முதனிலை வகிப்பது அரிதாகவேயுள்ளது. அத்தோடு அவை உள்ளூர் அல்லது பிராந்திய சந்தைகளில் ஒரு சிறு சந்தைத்துண்டத்தில் மாத்திரம் தங்கியிருப்பதையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவணிகமானது பல வகைகளையுடையது அந்தவகையில் பின்வருவனவற்றை நாம் அடையாளம் காணலாம்.

- குடும்ப முயற்சிகள்
- தனிப்பட்ட சேவை நிறுவனங்கள்
- அங்கிகார வணிகம் என்பன அவையாகும்

## 1.1 குடும்ப முயற்சிகள்

குடும்ப முயற்சிகள் உள்ளூரிலேயே உரிமையாக்கப்பட்டு நடவடிக்கை யிடப்படுகின்றன. இது வழமையில் தனியுடமை எனக் கருதப்படுகின்றது. தனியுடமையாளர்கள் குடும்ப வருமானத்துடன் அல்லது குடும்ப அங்கத்தவரது உறுதுணையோடு அவர்களது வியாபாரத்தை ஆரம்பிக்கலாம். இவ்வாறான நிறுவனங்கள் சேவையினை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதோடு உரிமையாளரின் திறன்களிலேயே தங்கியுள்ளது. குடும்ப உரிமையாண்மையை உடைய வியாபாரிகளின் வகைகள் பல தரப்பட்டவைகளாகும். சில்லறைக்கடைகள், ஒப்பந்தவியாபாரங்கள், சிறிய உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் உணவு விடுதிகள் போன்றன அவற்றில் சிலவாகும்.

## 1.2 தனிப்பட்ட சேவை நிறுவனங்கள்

பிரதான ஊழியர்கள் அல்லது அதனது ஸ்தாபகர்களின் தனித்துவமான பிரதானமாகத் தங்கியிருக்கின்றன. இவ்வாறான நிறுவனங்களின் சேவைகள் வழமையாக உள்ளூர் வாடிக்கையாளருடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது.

## 1.3 அங்கீகார வணிகம்

இது தற்போது பொருளாதாரத்தில் பரந்த அடிப்படையில் பரவியிருக்கின்றதொரு வணிகமாகும். நிறுவப்பட்ட வணிகம் ஒன்றுடன் இணைந்த பாதுகாப்பான உள்ளூர் சந்தையொன்றை பிரதானமாகத் தேடுகின்ற சிறிய வியாபார நடவடிக்கைகளை அங்கீகார சேவை வழங்குவதற்காக ஒரு அங்கீகார ஒப்பந்தத்தினை நபர் கொள்வனவு செய்கின்றார். அங்கீகார வணிகம் ஒப்பந்தத்தினால் உருவாக்கப்படுகிறது. தனிப்பட்டவரொருவர் குறிப்பிட்ட உதவிகளை பெறுகின்றார். வழமையில் விற்பனையில் ஒரு விகிதாசாரத்தில் ஒரு அங்கீகார வணிகக் கட்டணத்தினை பரிமாற்றிக் கொள்வதனூடாக நன்மையடைகின்றனர். பொருட்களை அங்கீகார வணிகத்துக்காக பெறுபவர் ஒரு பொதுவான வியாபாரப் பெயரில் அவற்றை விற்பனை செய்வார். அங்கீகார வணிகத்தின் ஊடாக பொருட்களை விற்பனை செய்வோர் நிதி உதவிகள், பயிற்சி உத்தரவாதமளிக்கப்பட்ட வழங்கல்கள், பாதுகாக்கப்பட்ட சந்தை மற்றும் தொழிநுட்ப உதவிகளையும் பெறுகின்றனர்.

இந்த வகையில் வணிக நடவடிக்கைகளில் மட்டுமல்லாது எந்தவொரு மனித அபிவிருத்தியிலும் சமூக மூலதனமானது கணிசமானதொரு பங்களிப்பைச் செய்கின்றது என்பது சமூகவியலாளர்கள் பலரதும் கருத்தாகும். அந்த வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவியாபார அல்லது சிறுவணிக முயற்சியாண்மையினுடைய செயற்பாடுகளிலும் சமூக மூலதனத்தின் பங்கு இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகிறது. இதனை பொருளியல் அறிஞர்களான (Fafchamps and Minten 1999) என்பவர்கள் மேற்கொண்ட ஆய்வின் போது சமூக மூலதனம் தொடர்பான நடைமுறைப்படுத்தல் மற்றும் விளைவுகளை வேளாண்மைசார் துறைகளில் ஆற்றுகைப்படுத்தல் முதலான விடயப் பரப்புக்களை மடகஸ்கார் (Madagascar) இல் நிறைவேற்றினர். இதன் விளைவாக அவர்கள் கண்டறிந்தது யாதெனில் சமூக மூலதனமானது எவ்விதமான சிரமமின்றி வியாபார அமைப்புக்களை நிருவகிப்பதற்கான இயலுமையை கொண்டிருக்கிறது என்பதாகும். மேலும் அவை தொடர்ச்சிப் படிமுறையில் சிக்கலின்றி முன்னெடுத்துச் செல்லப்படுவதையும் கண்டறிந்தனர்.

(Philliposon et al.2006) போன்றோரால் மேற்கொள்ளப்பட்ட மற்றுமோர் ஆய்வில் நுண்பாக அல்லது சிற்றின வர்த்தகத்தினுடைய உள்ளார்ந்த தொடர்புகள் மற்றும் கூட்டமைப்பு என்பவற்றுடன் தொடர்புபட்ட நடத்தையினை ஆராய்ந்தனர். இதனடிப்படையில் வெளிவாரித் தரகர்களால் உள்ளார்ந்த வியாபார விடயங்களை ஊக்குவிக்க முடியும் என்பதும் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டது. மேலும் அவர்களது ஆய்வில் வேளாண்மைத்துறையில் அனுகூலங்களை எவ்வாறு பெறுவது என்பது குறித்தும் சமூக மூலதனம் மற்றும் அவைசார் விநியோகம் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பது குறித்தும் நோக்கப்படுகிறது.

அந்தவகையில் ஒரு வணிக நடவடிக்கையை எடுத்துக்கொண்டால் அது பலதரப்பட்டவர்களுக்கிடையிலான தொடர்புகளைக் கொண்டதாக அமையும். அதாது வளங்களைத் திரட்டிக் கொள்ளுதல், ஆளணியினரை உருவாக்கல், உற்பத்தி சந்தைப்படுத்தல்களை மேற்கொள்ளல் போன்ற பல நடவடிக்கைகளுக்கும் இம் மூலதனமானது மிக முக்கியமான பங்களிப்பினைச் செய்கின்றது. அவை ஒவ்வொன்றிலும் சமூக மூலதனம் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனைப் பின்வருமாறு நோக்குவோம்.

2. 1 **வளங்களைத் திரட்டிக்கொள்ளுதல்**

சிறுவணிக முயற்சியாண்மைச் செயற்பாட்டில் முயற்சியாண்மைக்குத் தேவையான வளங்களைத் திரட்டிக் கொள்வதென்பது இன்றியமையாத ஓர் விடயமாகும். உற்பத்தியினை மேற்கொள்வதற்கும் இதனைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்கும் போதியளவான வளங்கள் இருக்கவேண்டியது அவசியமாகும். சிறுவணிகத்திற்குத் தேவையான வளங்களைத் திரட்டிக் கொள்வதில் சமூக மூலதனமானது பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது. அந்தவகையில் வளங்களைத் திரட்டிக்கொள்வதில் செல்வாக்குச் செலுத்தும் உட்தொடர்பு மூலதனங்களாக குடும்ப உறவுகள், நண்பர்களுடனான தொடர்பு, சமூகத்தொடர்பு, நம்பிக்கைத் தன்மை போன்றவற்றின் மூலமாக வியாபாரத்திற்குத் தேவையான எண்ணங்கள், ஆலோசனைகள், மூலப்பொருட்கள், தகவல்கள், உதவிகள், கடன், வியாபாரத்தை அமைப்பதற்கான இடம் போன்ற பல வளங்கள் கிடைக்கப்படுகின்றதையும், வெளித்தொடர்பு மூலதனங்கள் என்ற வகையில் வெளிநிலைத் தொடர்புகளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரத்தொடர்புகள், நிதி நிறுவனங்களுடனான தொடர்புகள், அரசியல்வாதிகளுடனான தொடர்புகள் போன்ற பல தொடர்புகள் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற உதவிகள் என்பனவும் அமைகின்றன.

## 2.2 ஆளணியை உருவாக்குதல்

சிறுவணிக நடைமுறையானது சிறந்த முறையில் மேற்கொள்ளப்படுவதற்கு மனிதவளம் மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இந்த மனிதவளத்தை திரட்டிக்கொள்வதில் சமூக மூலதனமானது மிகவும் பயனுடையதாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் உட்தொடர்பு மூலதனங்களான நண்பர்களுடனான தொடர்பு, சமூகவலைப்பின்னலில் உள்ள தொடர்பு, ஏனைய சமூகத்தினருடனான தொடர்பு போன்றவற்றின் வாயிலாக வணிகத்திற்குத் தேவையான வேலைப்படையினரை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். வணிகத்தை மேற்கொள்கின்ற நபரின் மீதும், அவரின் நிறுவனத்தின் மீதும் சமூகம் வைத்திருக்கின்ற நம்பிக்கையானது இந்த ஆளணியினரை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அதே போன்று வெளித்தொடர்பு சமூக மூலதனமான ஏனைய சமூகத்தினருடனான தொடர்புகள், குழுக்களுக்கிடையிலான தொடர்புகள், போட்டி நிறுவனங்களுடனான தொடர்புகள் போன்றவற்றின் மூலமாகவும் அவ்வாறான தொடர்புகளைப் பேணுபவர்கள் குறிப்பிட்ட முயற்சியாளர் மீது கொண்டுள்ள நம்பிக்கை மூலமாகவும் இலகுவாக ஆளனியினரைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருக்கும் அத்தோடு உயர்கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்பக்கல்லூரிகள், பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றினூடான தொடர்பானது நிபுணத்துவம் வாய்ந்தவர்களையும், அறிவுத் தொழிலாளர்களையும் வணிக நடவடிக்கைக்குச் சேர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பினை உருவாக்கும்.

## 2.3 உற்பத்தியை மேற்கொள்ளுதல்

சிறுவணிக நடைமுறையில் உற்பத்தியை மேற்கொள்வதென்பது முக்கியமானதோர் செயற்பாடாகும். அதாவது உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களின் தரம், கிரயம், வடிவம், அளவு என்பன உற்பத்திப் பொருளின் விற்பனை மட்டத்தைத் தீர்மானிக்கின்றன. இதன் மூலமே நுகர்வோர் திருப்தி, நிறுவன ஊழியர் சம்பளம், அவர்களது திருப்தி, நிறுவனத்திற்கான இலாபம், நிறுவனம் எதிர்காலத்தில் சூழலில் நிலைத்து நிற்பது போன்ற விடயங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. இவ்வாறான விடயங்களை வினைத்திறனான முறையில் மேற்கொள்வதில் சமூக மூலதனமானது இயன்றளவு பங்களிப்பைச் செய்கின்றது. இதனைப் பின்வரும் அறிஞர்களின் கூற்றுக்களிலிருந்து தெளிவாக விளங்கிக்கொள்ளலாம்.

அந்த வகையில் (Maskell, 2000) எனும் அறிஞர் 'புத்தாக்கத்திறமை அதிகரிப்பதற்கு சமூகமூலதனம் மிக முக்கியமான ஒரு காரணியாக விளங்குகின்றது' என்றும் நிறுவனங்களின் உள்வாரியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியறிவு, விருத்திக்கு மட்டுமல்லாது அறிவு மாற்றீடுகளுக்கும் இந்த உற்பத்தி தொடர்பான தொடர்புகள் உதவுவதாகவும் குறிப்பிடுகின்றார்.

மற்றும் (Rauchis 2001) என்பவர் உற்பத்தி நடைமுறையில் சமூக மூலதனமானது பல வழிகளில் பங்களிப்புச் செய்வதாகக் குறிப்பிடுகின்றார். இது தொழிலாளர் ஆற்றல் (Laborforce) விநியோகஸ்தர்கள், வாடிக்கையாளர்கள், நிறுவனச் சூழல் போன்ற காரணிகளில் தங்கியுள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.

அந்தவகையில் ஒரு நிறுவனத்தின் உற்பத்திக்கு முதலீடாக அந்நிறுவனத்தின் உள்தொடர்பு, வெளித்தொடர்பு மூலதனங்கள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

உற்பத்தியோடு தொடர்புடைய வகையில் பலதரப்பட்ட உள்தொடர்பு சமூகமூலதனங்கள் காணப்படுகின்றான். இந்த உள்தொடர்பு மூலதனங்களே ஒரு நிறுவனத்தின் ஒருமைப்பாட்டிற்கும் வெற்றிகரமான உற்பத்திச் செயற்பாட்டுக்கும், நிறுவன அபிவிருத்திக்கும் துணையாகவுள்ளது. அந்த வகையில் (ர்யளெ றநளவடரனெ 2003) என்பவர் உற்பத்தியோடு தொடர்புடைய சமூக மூலதனங்களாக முகாமைக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான தொடர்பும் உறவும், வியாபார மற்றும் முகாமைத்துவ நிருவாகம், (management and business adminitation), உண்மையான பங்காளிகளின் குறிக்கோள், இலக்கு, நோக்கம், தொழிலாளர்களுக்கிடையிலான தொடர்பும் உறவும் போன்றவற்றைக் குறிப்பிடுகின்றார். மேலும் (Fruin.1992) என்பவர் தொழிலாளர்களுக்கிடையிலான தொடர்பு அல்லது உறவு என்பது எந்தவொரு நிறுவனத்திலும் முக்கியமான ஓர் அம்சமாகக் கருதப்படுகின்றது எனவும் இதனாலேயே உலக அளவில் பொருளாதாரத்திலும் மற்றும் முகாமைத் தந்திரோபாயங்களை வகுப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் முன்னேற்றம் அடைந்து காணப்படுகின்ற அமெரிக்கா, ஜப்பான், கொரியா போன்ற நாடுகளிலும் தொழிலாளர் உறவுகளைப் பேணுவதற்கான பலவகையான பயிற்சிகளும், நடைமுறைகளும் பின்பற்றப்படுகின்றன எனவும் கூட்டிக்காட்டுகின்றனர்.

அத்தோடு பொருளாதார வளர்ச்சியில் தொழிலாளர்களுக் கிடையிலான தொடர்புகள் ஏன் வினைத்திறனான முறையில் பேணப்பட வேண்டும் என்பதனைப் பார்ப்போமாயின் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் ஒரே வகையான பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கு உட்பட்டவர்களாக இருக்கமாட்டார்கள் அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் குடும்ப மற்றும் சமூக நிலமைகளுக்கேற்ப வித்தியாச வித்தியாசமான பண்பாட்டுப் பாரம்பரியங்களை, பழக்க வழக்கங்களை, விழுமியங்களை, நடைமுறைகளை உடையவர்களாகக் காணப்படுவார்கள் இவ்வாறான நிலமையில் நிறுவனசக்தி, பண்பாடு, நிறுவனத்தின் காரணகாரியத் தொடர்புகள், என்பவற்றுக்கு அமைவாக ஊழியர்கள் அனைவரும் ஒன்றியிருக்கக்கூடிய தன்மையை, முரண்பாடின்றி சேர்ந்திருக்கக்கூடிய தன்மையை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திசைவாக நடக்கக்கூடிய தன்மையை ஏற்படுத்துவதற்காக இந்த ஊழியர்களுக்கிடையிலான தொடர்பைச் சிறந்த முறையில் பேண வேண்டியது அவசியமாகவுள்ளது எனவும் குறிப்பிடுகின்றார். இதனாலேயே சமூக மூலதனமானது ஒரு நிறுவனத்தில் உள்வாரியாக மிகமுக்கியமான, மிகத்தேவையான

கட்டுப்படுத்தும் கருவியாகக் காணப்படுகின்றது. மேலும் இந்த உள்தொடர்பு மூலதனங்களுக்கு நிறுவன ஊழியர்களின் மனப்பாங்கு விதிமுறைகள் ழெசயளஇ நம்பிக்கைகள், நிறுவனத் தற்பாரியம், காலநிலை, கம்பனிச்சட்டத்தொகுப்பு, உற்பத்தியவிருத்தி, போதுமான முரண்பாடுகள், நிறுவன மற்றும் ஊழியர்களின் உறுதித்தன்மை போன்றவற்றையும் குறிப்பிடமுடியும் எனக் கூறுகின்றார்.

உற்பத்தியோடு தொடர்புடைய வகையில் வெளித்தொடர்பு மூலதனங்களும் பாரியளவு பங்களிப்புச் செய்கின்றன. அதாவது நிறுவனத்திற்கும் நிரம்பலாளர்களுக்கும் இடையிலான பாரம்பரித் தொடர்புகள், நிறுவனத்திற்கும் ஏனைய நிறுவனங்களுக்குமிடையிலான உற்பத்தி உறவுத்தன்மைகள், அது தொடர்பான அறிவுவளர்ச்சி, நிரம்பலாளர் வாடிக்கையாளர்களுக்கிடையிலான தொடர்புகள், பங்குதாரர்களுடனான தொடர்பு, சமூகத்துடனான தொடர்பு, உற்பத்தியில் முன்னனுபவமுள்ள தொழிலாளர்களுடனான தொடர்புகள், அரசியல்வாதிகளுடனான தொடர்புகள், ஏனைய நண்பர்களுடனான தொடர்புகள் போன்றவற்றின் மூலமான பழக்கம், நம்பிக்கை என்பனவும், வியாபாரத்தரகர்கள் மூலம் பெற்றுக்கொள்கின்ற ஏனைய நிறுவனங்களின் வியாபார நிலமை, மூலப்பொருள், சந்தைவாய்ப்பு, நுகர்வோர் விருப்பு போன்ற தகவல்களும் உற்பத்தியினை மேற்கொள்வதற்கும் ஏனைய அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடம், உற்பத்திக்குத் தேவையான நிதி மற்றும் இயந்திர உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் துணையாக இருக்கும்.

## 2.4 சந்தை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளுதல்

வணிக நடவடிக்கையில் சந்தைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதென்பது மிக முக்கியமானதோர் விடயமாகும். சிறந்த சந்தைவாய்ப்புக் கிடைக்கின்ற பட்சத்திலேயே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் விற்பனை செய்யப்படுவதற்கும் சந்தையில் வாடிக்கையாளர், நுகர்வோரின் தொடர்புகளைப் பெற்றுக்கொள்ளவும் அவர்களது விருப்பு வெறுப்புக்களை அறிந்து அவர்களது தேவையை நிறைவேற்றுதற்கு ஏற்றவகையில் பொருளின் தரத்தில், அளவில், நிறத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் முடியும். இதன் அடிப்படையில் சமூக மூலதனமானது வணிகத்திற்குத் தேவையான சந்தை வாய்ப்பைத் தேடிக் கொள்வதில் கணிசமான பங்களிப்பைச் செய்கின்றது. அந்த வகையில் உட்தொடர்பு சமூகமூலதனங்கள் உள்ளூர் விற்பனையினை மேற்கொள்வதற்கும், உள்ளூரிலுள்ள சில்லறை விற்பனையாளர்களைக் கவர்வதற்கும் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது. அதாவது நண்பர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர்கள், சமூகக் குழுக்கள், சங்கங்கள் போன்றவற்றுடனான நல்ல தொடர்பின் மூலம் உற்பத்திப் பொருளானது தரமானது, நியாயமான விலையில் கிடைக்கின்றது. திருப்தியைத் தரக்கூடியது போன்ற தகவல்களை இலகுவாகப் பரப்பமுடியும். இதன் மூலம் உள்ளூர் நுகர்வோர் உற்பத்திப் பொருளை நுகர்வதற்கும், உள்ளூரிலுள்ள சில்லறை விற்பனை வியாபாரிகள் பொருட்களைக் கொள்வனவு செய்து ஏனைய இடங்களுக்குக் கொண்டு விற்பனை செய்வதற்கும் முன்வருவர்.

அதே போன்று சந்தைப்படுத்தலோடு தொடர்புடைய வகையில் வெளித்தொடர்புச் சமூக மூலதனங்களும் பெரிதும் பயனுடையதாகவே அமைகின்றது. அந்த வகையில் உற்பத்திப் பொருளை விற்பனை செய்வதற்கான விற்பனை விநியோகஸ்தர்கள், சில்லறைக் கடைச் சொந்தக்காரர்கள் போன்றோரைக் கவர்ந்து கொள்வதற்கும் தமக்குத் தேவையான இலக்குச் சந்தை ஒன்றை நிர்ணயித்துக்கொள்வதற்கும், அதனைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் இந்த வெளிநிலைத் தொடர்புகளான தரகர்களின் தொடர்பு, மொத்த விற்பனையாளர்களின் தொடர்பு, ஏற்றுமதி செய்வதற்கான வாகனங்களை வாடகைக்கு விடுபவர்களுடனான தொடர்புகள், சந்தையில் நிலைபேறடைவதற்கான அரசியல் தொடர்புகள் போன்ற பல தொடர்புகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆகவே தான் சந்தைப்படுத்தல் மட்டத்தில் இத்தகைய தொடர்புகள் அடிப்படைத் தேவைகளாகக் கருதப்படுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா. ராகவன்
தட்டான் குளம்

## காப்பாற்றமாட்டாயோ பரமசிவா

அன்றும் எமக்கு
ஊர் இருந்தது உறவிருந்தது
உணர்விருந்தது உற்சாகம் இருந்தது
சுற்றம் இருந்தது சுகம் இருந்தது
உனக்கென ஓர் கோவில் இருந்தது
அதில் நீ கொலுவிருந்தது
உனக்கு அத்தனையும் தெரியும் தானே பரமசிவா
எமை ஆதரித்துக் காத்தவனே பரமசிவா

அணலை தீவில் இருந்த அம்மம்மாவுக்கும்
மாமாங்கத்து மாமனாருக்கும்
நலமறிய மடல் அனுப்புவதும்
பதிலை எதிர்பார்த்து பதைபதைத்து ஏங்கியதும்
உன் ஞானக் கண்களுக்கு நன்றாய்த் தெரிந்தது தான் பரமசிவா
நமை நலமுடனே காப்பவனே பரமசிவா

கூறைச்சேலை மங்கையரும்
பட்டுவேட்டி ஆடவரும்
தாவணிப் புடவையுடன் தலைநிமிராக் கன்னியரும்
நான்கு முழ வேட்டி கட்டி நடைபயின்ற காளையரும்
மஞ்சனத்தேரில் வரும் உன் மனையாளின் வடம்பிடிக்க
ஏங்கிய தத்துனையும் என்ன சுகம் பரமசிவா
நமக்கு உன் துணை எப்பொழுதும் பரமசிவா

கிட்டிப்புல் ஆடியதும் கிளித்தட்டு மறித்ததுவும்
கீச்சுமாச்சுத் தாம்பாளம் விளையாடேக்க
என்ற கீதா மச்சாளின்ற மண்டையில குட்டி விட்டு
ஓடி ஒளிச்சதுக்கு என்ற அப்புச்சி
பெண் பிள்ளையோட என்ன கைசேட்ட உனக்கென்று
ஓங்கி அடித்த அடி எனக்கு இன்னும் நினைவிருக்கு பரமசிவா
எனை நிம்மதியாய் வாழவைக்கும் பரமசிவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் எமக்கு
ஊர் இருக்கின்றது உறவிருக்கின்றது
உணர்விருக்கின்றது உற்சாகம் தொலைந்துவிட்டது
சுற்றம் இருக்கின்றது சுகங்கள் மறைந்து விட்டது
உன் கோவிலும் இருக்கின்றது
அதில் நீ கொலுவிருக்கின்றாயா பரமசிவா
எனை குறைபட்டுக் கொள்ளாதே பரமசிவா

இப்ப
வாழ்க்கைச்சுமை கூடிட்டுதாம்
வருமானம் போதேல்லயாம்
சிக்கனம் பிடிச்சாத்தான் சிறப்பாய் வாடிலாமாம்
ஆடையிலும் சிக்கனமாம் அரைகுறைதான் புதுவரவாம்
அதனால இப்ப உனக்கு பஞ்சாங்க நமஸ்காரம் போட்டுக்
கும்பி முடியுதில்லை பரமசிவா
நீ பார்த்துக் கொண்டிருப்பாயோ பரமசிவா

பாரம்பரியங்களையெல்லாம்
பாழடைஞ்சு போகச்செய்த
சிங்காரச் சிமார்ட்போனால்
என்ன சித்திரவதை கண்டாயோ
ஆறறிவுக்காரனெல்லாம் ஓரறிவைத் தொலைத்துவிட்டு
தனிமையில் சிரிப்பதற்கும் தனிமையில் அழுவதற்கும்
என்ன பைத்தியக்காரர்களை பரமசிவா
பரிதாபம் தாழவில்லை பரமசிவா

உள்ளாடை தெரிவதற்காய் உடையங்காரங்களாம்
வழுகிவிழும் நீளக்காற்சட்டையும் நீண்ட தலைமுடியும்
கடுக்கன் போயொழிஞ்சு கண்ட கண்ட வளையமெல்லாம்
காதில மட்டுமில்ல மூக்கிலயும் தொங்குவதால்
ஆணா பெண்ணா என அடையாளம் தெரியவில்லை பரமசிவா
எனக்கு ஆதங்கம் தாழுதில்லை பரமசிவா

எல்லாமே சீரழிஞ்சு எதிர்காலம் பாழடைஞ்சு
எம்முப்பாட்டன் காத்து வந்த
முத்தமிழும் சீரழிஞ்சு
வேற்று நாட்டவரின் வேண்டாத கலாச்சாரம்
எம் நாட்டில் பெருகுதைய்யா பரமசிவா
நமை நல்லபடி காப்பாற்று பரமசிவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. கிலோடிஸ்மேரி ரசிக்குமார்
பிரமணாலங்குளம்

## உனக்காக ஏங்கி ஓர் உள்ளம் தனிமையிலே

பிள்ளை வரம் வேண்டுமென்று – மண் சோறு உண்டேன் நான்
காதலித்தவனே மனையாளாய் வர வேண்டுமென்று
வாடி நின்றாய் - நீ
அவளோ தேர்ந்தெடுத்தாள் - எனக்கு மனிதகாட்சி சாலையை

உன்னை பிள்ளை பெற்றபோது உலகமே மறந்து போனது எனக்கு
உன் தாய் வீட்டில் இருந்தால் மதியாது சமூகம் என்றாள்
இருண்டது உலகம் என் கண்ணில்
நீயோ விட்டுச் சென்றாய் அநாதையாய் முதியோர் இல்லத்திலே

உயிரையே உயிரணுவாகவும் குருதியை பாலாகவும் கொடுத்து
உயிராய் வளர்த்த என்னை
தோலில் கண்ட சுருக்கம் அகண்டு அருவருத்தாய் - அது
அனுபவத்தின் ரேகைகள் என்பதை மறந்து போனாய்

விஞ்ஞானம் வளர்ச்சியானது
கல்வியிலும் புரட்சியானது
பெற்ற பிள்ளை பாசத்தில் வீழ்ச்சியானது
முதியோர் இல்லம் வளர்ச்சியானது

சுவாசக் காற்றைத் தாங்கிப் பிடித்து
வாழ்கிறது என் நெஞ்சம்
பெற்ற பிள்ளை உன் முகம் பார்த்து விட்டு
விடை பெற்று விடும் மட்டும்....

அக அழகைக் காட்டும் முகவலைகள்
அலை மோதும் மனங்களில் தெளிவாகலாம்
ஆசையின் அளவதில் ஆற்றல் சேரின்
ஆனந்தம் அகம் தனில் ஆறாய் ஓடும்

ஆளை ஆள் தாங்கும் பண்புகளாய்
ஆதரவும் அன்பும் விருட்சமாகட்டும்
'அருவி ஆறு' எனும் வெளியீட்டுக்கு
உவந்தெழுதினேன் கவிதைத் துளிகளை
ஆறு பெருக்கெடுக்க ஆண்டவனை வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. சங்கீர்த்தன்
(கூடலூர் கீதன்)

## இயற்கையும் இனமும் உன்னாலே கருகுது

தன்னையே தானளிக்கும் தரமற்ற
விலங்கானாய்
எத்தனை உயிர்களுக்கு உலகாய் விளங்கி நிற்கும்
மரங்களை மசிக்கின்றாய் ..
தன்மானம் மிக்க விண்வானம் தொட்ட எண்ணடங்கா
செயல்புரிந்த பாட்டனவன் பேரனா நீ
இனமானம் காக்க பிணமான வீரரின் வழிவந்த
சோதரனா நீ ...
இயற்கையை அழித்து செயற்கையை சமைத்து
இறந்து போகையில் கருக்க விறகுதனை
களிமண்ணிலா செய்திருக்காய்..
மரத்திலும் குருவி இல்லை மதிகெட்ட மனிதனே
இங்கு மகிழ்ந்து வாழ உனக்கும் நேரமில்லை..
இரசாயனம் வீசியதால் பூக்களிலும்
வண்டில்லை..
தாம் கறுப்பு நிறமென்று வெண் களிதனை அப்பி
மாந்தர் இயற்கை தனை வெறுத்து
இரசாயன பாதை தனை நாகரீகம் என்கின்றார்..
உலகை மாற்றவல்ல திறன் கொண்ட நீ இன்று
வறட்சி எனக் கொடுக்கும் உளுத்த
உணவுக்காய் உரப்பையோடு
ஏனடா?..
உணருடனே...
உணருடனே..
உணராவிடின் மரணுடனே..
காரிருள் மூழ்கினாலும்
கலப்பை கை தவறாதே ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி. மு. பிரியதர்சினி
அபிவிருத்தி உத்தியோகத்தர்
(உளவளத்துறை)
மாவட்ட செயலகம்,
வவுனியா.

## கையடக்கத் தொலைபேசியின் உளசமூக தாக்கங்கள்

ஊடகம் என்பது (Medium / Media) வெகுஜனத் தொடர்பாடலில் பயன்படும் சாதனங்களுக்கான இன்றைய மொழி பெயர்ப்பு ஆகும். சாதனம் என்பது ஒரு செய்தியை ஒரு பாதை வழியாகச் செலுத்தத் தகுதியுள்ள சமிக்கையாக மாற்றும் பௌதீக தொழில்நுட்ப செயல்முறையாகும்.

வெகுஜன தொடர்புசாதனங்கள் என்பது மக்கள் திரள் நிலையிடையே தகவலை வழங்கும் பயன்பாட்டில் உள்ள அனைத்து சாதனங்களையும் குறிக்கும். அவை அனைத்துமே அவற்றை எப்படி கையாள வேண்டும், அறிந்து கொள்ள வேண்டும் என்பதனையும் சொல்கின்றன. வெகுஜன தொடர்பு சாதனங்கள் மக்களுக்கான நிகழ்வுகளையும், அவற்றின் பண்பாட்டு அம்சங்களையும், நடை, உடை பாவனைகளையும் தெரிந்தெடுத்துத் தருகின்றன.

வெகுஜன தொடர்பு சாதனங்கள் எவற்றை தேர்ந்தெடுக்கின்றன? எவற்றை விட்டு விடுகின்றன? என்பதன் மூலம் எவை முக்கியமானவை? எவை முக்கியமற்றவை என்பதனை மக்களுக்குத் தெரிவிக்கின்றன. இதன் வலுவான சக்தியானது நிகழ்வுகளை மக்கள் பார்க்கும் விதத்தை மட்டுமல்ல நிகழ்வுகளைக் கூட மாற்றி விடுகின்றன. பலருக்கு தொடர்பு சாதனங்கள் அங்கீகரிக்கும் விடயங்கள் தான் நிஜம் போல் தோன்றுகின்றன. தொடர்பு சாதனங்கள் ஒதுக்கி விடுபவைகளை இவர்களும் கவனத்தில் கொள்வதில்லை. இதனால் இவை எம்மீது செல்வாக்குச் செலுத்துவதோடு அதுவே எமது கலாசாரமாக மாறி வருகின்றது.

மின்னஞ்சல், பேஸ்புக், ஸ்கைப் ஆகிய தொலைத்தொடர்பு வசதிகளை இன்று கைத்தொலைபேசிகளில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இவை மக்களுக்கு பல வகைகளில் உதவியாக இருக்கின்றன. இருந்தும் இதைப்போன்ற தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி பல சமூக விரோதிகள் தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ளும் போக்கும் அதிகரித்துக் கொண்டே போகின்றது. இந்த சமூக விரோதிகளால் குடும்ப பெண்கள் மாத்திரமன்றி இளம் சமுதாயமும் பெரும் பாதிப்புக்குள்ளாவதையும் நாளாந்த பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளிலிருந்து அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

கைத்தொலைபேசிகள் மக்கள் வாழ்வில் ஒரு அங்கமாக மாறிவிட்டதைப் போன்று அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் மாற்றி வருகின்ற ஓர் இயந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பமாகும். கடந்த 20 வருடங்களில் கைத்தொலைபேசி பாரிய வளர்ச்சி அடைந்து வருவதனை எம்மால் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இன்று எம்மிலிருந்து கைத்தொலைபேசியை பிரிக்க முடியாதபடி துணையாக மாறிவிட்டது என்றே கூறலாம். அதிலும் குறிப்பாக Smart Phone ஒப்பீட்டளவில் ஏனைய கைத்தொலைபேசிகளை விட புதிய, நவீனகரமான வடிவங்களில் உருவாக்கப்பட்டுள்ளமை மக்களை ஈர்த்துச் செல்வதற்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

வெகு விரைவாக மற்ற எல்லா ஊடகங்களிலும் காணப்படுகின்ற பல்வேறு அம்சங்களை இக்கைத்தொலைபேசிகள் தன்னகத்தே கொண்டுள்ளமையினால் இதன் பாவனை வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது. இதில் செய்திகளை பரிமாறும் சேவை, வீடியோ, விளையாட்டுக்கள், நகைச்சுவை, Facebook, Viber, Whatsapp, MMS மற்றும் TV நிகழ்ச்சிகள், Internet விளம்பரம் செய்தல் போன்ற பல சேவைகளைப் பெற்றுக்கொள்ளமுடிகின்றது.

ஆசியா கண்டத்தைப் பொறுத்தவரை சீனா, இந்தியா போன்ற நாடுகள் கையடக்கத்தொலைபேசி பாவனையில் முறையே முதலாம், இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது எமது நாடான இலங்கை இந்த வரிசையில் 31வது இடத்தில் காணப்படுகின்றது. (2018 December) இலங்கை நாட்டைப் பொறுத்தவரையில் கைத்தொலைபேசிகள் சந்தையில் விலை குறைவாக பெற்றுக்கொள்ளும் ஒரு பொருளாகவும், கடந்த கால யுத்தத்தின் பின்பு நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களும், கைத்தொலைபேசி தொடர்பாக மக்கள் மத்தியில் ஏற்பட்ட கேள்வி காரணமாகவும் தொழில்நுட்ப வளர்ச்சி, ஒவ்வொரு தர மக்களுக்கும் அவர்களின் வசதிக்கேற்ப கொள்வனவு செய்யும் வகையில் பல்வேறு வகையான கையடக்கத் தொலைபேசிகளின் அறிமுகமும் மேலைத்தேய நாடுகளில் கையடக்கத் தொலைபேசி தொடர்பாக ஏற்பட்ட மோகம் காரணமாகவும், ஒருவரின் அந்தஸ்தை வெளிப்படுத்தும் ஓர் கருவியாகவும், வணிகத்துறைக்கு பெருமளவில் கைகொடுத்து வரும் ஒரு சாதனமாக இருந்தமை காரணமாகவும், மற்றும் கைத்தொலைபேசி தொடர்பான அதிகரித்த விளம்பரம் காரணமாகவும் எமது நாட்டில் கையடக்கத்தொலைபேசியின் பயன்பாடு அதிகரித்த வண்ணம் உள்ளது.

அதிலும் குறிப்பாக நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் யுத்தத்தின் பின்னரான வளர்ச்சி காரணமாக இதனை கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்தகால உள்நாட்டு பிரச்சனைகளினால் மூழ்கிப் போயிருந்த மக்களுக்கு அவர்களின் அடிப்படை தேவைகளைக் கூட பூர்த்தி செய்யமுடியாத நிலை காணப்பட்டது. போர் முடிவுற்ற பின்னர் மக்களின் அடக்கி வைக்கப்பட்ட ஆசைகள், விருப்பங்கள் என்பனவற்றை சரியான முறையில் வெளிப்படுத்த முடியாமல், யுத்தத்தின் பிடியில் அகப்பட்டிருந்தனர். இவை இப்பொழுது யுத்தம் முடிவுற்ற பின்னர் வடக்கில் ஏற்பட்ட துரிதமான வளர்ச்சி, பொருளாதார மாற்றங்கள் என்பன கையடக்கத்தொலைபேசியின் கேள்வியை அதிகரித்துள்ளது. ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தில் 5பேர் எனின், அவர்கள் 5 பேரும் கையடக்கத்தொலைபேசியை பயன்படுத்துமளவிற்கு அவர்களின் தேவைகள் அதிகரித்துள்ளதை அறிய முடிகின்றது.

அண்மையில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏழை மக்களிடமும் சிறு வணிக தொழில் மேற்கொள்பவர்களிடமும், விவசாயிகளிடத்திலும் கையடக்கத் தொலைபேசியானது அத்தியாவசியமான கருவியாக மாறிவிட்டது என்கின்ற விபரத்தை அறிய முடிகின்றது.

எப்படியாயினும் இன்றைய காலகட்டத்தில் கைத்தொலைபேசி அனைவருக்கும் தேவையான ஒன்றாகி விட்டது. அதிலும் இளம் தலைமுறையினரை இந்த கையடக்கத்தொலைபேசிகளின் மோகம் வெகுவாகப் பாதித்துள்ளது. இப்போதுள்ள இளைஞர்கள் தினமும் பாதி நேரத்தை செல்போனிலேயே கழிக்கின்றனர். எந்த நேரமும் குறுஞ்செய்திகள் (SMS) படங்கள், வீடியோக்கள், ரெக்கோர்டிங், தகவல்களை MMS என்ற முறையில் அனுப்புகின்றார்கள்.

படம் பிடிக்கவும், பிறகு பயமுறுத்தவும் பயன்படும் MMS கள் பல பெண்களின் வாழ்க்கையைப் பாடாய்ப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இன்னொரு புறத்தில் MMS, ஆபாசக்காட்சிகள் இளைஞர்களை செக்ஸ் போதை அடிமைகளாக மாற்றி கொண்டிருக்கின்றன. ஆனால் பாதிப்பு என்னவோ பெண்களுக்குத் தான் அதிகமாக இருக்கின்றது. இவ்வாறு காணப்படுகின்ற கையடக்கத் தொலை பேசியினால் ஏற்படுகின்ற உடல்ரீதியான தாக்கங்களை பின்வருமாறு நோக்குவோம்.

1. **நோய் எதிர்ப்புச் சக்தியில் பாதிப்பை அதிகரித்து விடுகின்றது**

ஒரு நாளில் கையடக்கத் தொலைபேசிகளை பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதன் காரணமாக கைகளில் பக்ரீறியாக்கள் தொற்றிக் கொள்ளும் அபாயம் ஏற்படுகிறது. ஒரு நாள் பயன்பாட்டிற்கு பிறகு கையடக்கத் தொலைபேசி பல்வேறு இடங்களிற்கு இடம் மாற்றப்படுவதனால் அதில் தூசிகள் , எண்ணெய் பதார்த்தங்கள், கழிவறைக்குச் சென்று விட்டு அதனை தொடுவதனால் தொற்றும் பக்ரீறியாக்கள், எச்சங்கள் போன்றவை இலகுவாக எமது நோய் எதிர்ப்பு சக்தியை பாதிப்புக்குள்ளாக்குகின்றது. (London school of hygine & Tropical Medicine) என்று Queen mary என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 390 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கைகள் என்பன பக்ரீரியாவின் அளவை கணிப்பிடுவதற்கு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டன. ஆய்வின் முடிவாக 92 தொலைபேசிகளிலும், 82 கைகளிலும், 16 கையடக்கத்தொலைபேசி மற்றும் கரங்களிலும் பக்ரீரியாக்கள் கண்டறியப்பட்டன. எனவே எளிதாக ஒருவரிடமிருந்து மற்றொரு நபருக்கு பக்ரீரியாக்கள் தொற்றுவதற்கான மூலமாக தொலைபேசிகள் காணப்படுவதனை அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நாட்பட்ட வலியை அதிகரிக்கும் ஆபத்தை ஏற்படுத்துகின்றது

கையடக்க தொலைபேசி மூலமாக குறுந்தகவல், மின்னஞ்சல் என்பவற்றை அனுப்பும் போதும் விரைவாக குறுந்தகவலுக்கு பதிலளிக்கும் போதும் உங்கள் கைகளில் உள்ள மூட்டுக்களைப் பாதிப்படையச் செய்வதோடு கைமூட்டுக்களில் வலி மற்றும் வீக்கத்தை ஏற்படுத்துகின்றது. நீங்கள் கையடக்கத் தொலைபேசியை உங்கள் கழுத்துக்கும், தோள்மூட்டுக்கிடையிலும் வைத்து உரையாடும் போது இவை நீண்ட காலமாக தொடர்கின்ற போது அது கழுத்து மற்றும் தோள்மூட்டு, முதுகிலும் நாட்பட்ட வலியை ஏற்படுத்துகின்றது என்று Health central.com கூறுகின்றது

3. கண்பார்வையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது

கையடக்கத் தொலைபேசியானது எதிர்காலத்தில் உங்கள் கண்களில் பார்வை குறைந்து போகும் ஆபத்தை ஏற்படுத்தி விடுகின்றது. கையடக்கத் தொலைபேசியிலுள்ள திரைகள் (screens) கணனி திரையை விட சிறிதாக இருப்பதனால் தகவல்களை வாசிக்கும் போது கண்களை சிரமப்படுத்த வேண்டி ஏற்படுகின்றது. இதனால் கண்பார்வை பிச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. 70% க்கும் மேலான அமெரிக்கர்களின் கண் திரிபடைந்துள்ளதாக The vision council குறிப்பிடுகின்றது. அத்துடன் கண் புற்றுநோய் ஏற்படுவதாகவும் தகவல் வெளியாகின்றன

4. தூக்கத்தை குழப்பி, தூக்கமின்மையை ஏற்படுத்துகின்றது

உலகம் முழுவதிலும் அதிகம் பேர் பயன்படுத்தும் கைப்பேசிகளில் ஒன்றாக இருக்கும் ஐபோன்களை படுக்கையில் பயன்படுத்தக்கூடாது என்கின்ற செய்தி வேகமாகப் பரவி வருகின்றது. Android அல்லது I Phone ஐ படுக்கையில் பயன்படுத்தும் போது அவைகளில் இருக்கும் பொட்டான் நேரடியாக கண்களில் படும்போது அவை எமது மூளையை விழிப்புடன் இருக்கச் செய்கின்றது. எமக்கு தூக்கம் வரும் போது I Phone ல் வீடியோ பார்க்கும் போது தூக்கம் கலைந்து விடும். உறங்கும் போது உடலில் இருக்கும் ஆக்டிங் நியூரோன்கள் ஓய்வு எடுக்கும். அந்த நேரத்தில் மூளையில் இருக்கும் கவலைகளும் நீங்கும். மற்றவர்களைப் போன்று சரியான தூக்கம் இல்லை என்றால் மூளைக்கு ஓய்வே கிடையாது. இதனால் உடலில் சோர்வு ஏற்படும். சரியான தூக்கம் இல்லாத பட்சத்தில் எந்த விடயத்திலும் கவனம் செலுத்தமுடியாது. மேலும் ஞாபக சக்தியும் பாதிக்கப்படும். எதிலும் முறையாக கவனம் செலுத்த முடியாத நிலையில் பிரச்சனைகளை எதிர்கொள்வதில் சிரமம் ஏற்படுகின்றது. தூக்கம் சரியாக இல்லை என்றால் ஜீவத்துவம் பாதிக்கப்படுவதோடு உடல் எடை அதிகரிக்கவும் வாய்ப்புக்கள் அதிகம். இந்த பிரச்சனைகளை எதிர்கொள்ள தூங்க செல்லும் முன் ஒரு மணிநேரத்திற்கு கைபேசி ஸ்கிரீனைப் பார்க்காமல் இருக்க வேண்டும். கைப்பேசி அலாரம் வைப்பதை விட தனியாக அலாரம் வைத்த கடிகாரத்தைப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மூளையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது

கையடக்க தொலைபேசி குறிப்பாக மூளையை பாதிப்பதுடன், மயக்கம், மூளையில் இரத்த ஓட்டம் தடைப்படுதல் என்பவற்றை ஏற்படுத்துகின்றது. அத்துடன் அதிலுள்ள கதிர்வீச்சுக்கள் மூளை புற்றுநோயை ஏற்படுத்துவதாகவும், அத்துடன் தொடர்தலைவலி, உடல் சோர்வு, தோல் வியாதிகள் என்பன ஏற்பட காரணமாகவும் அமைகின்றது. மின்காந்த அலைகள் மூளையைப் பாதிப்பதுடன் Alzheimers disease ம் தூண்டுகின்றது. படுக்கையில் பாவிப்பதனால் கற்றல், ஞாபகம் என்பவற்றைப் பாதிப்பதோடு temporal lobe ல் brain tumor என்ற பாதிப்புக்கு காரணமாகின்றது. ஒரு நாளில் மூன்று தடவைக்கு மேல் கையடக்கத் தொலைபேசியைப் பாவிப்பர்களுக்கு இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும் சாத்தியம் இருக்கின்றன.

6. விந்தணுக்களை பாதிக்கின்றது

ஆண்கள் தங்களது காற்சட்டைப் பையில் கைப்பேசிகளை வைத்திருப்பதனால் அவர்களின் விந்தணுக்களின் எண்ணிக்கை மற்றும் வீரியம் குறைவதாக ஆய்வுகள் கூறுகின்றன. அதாவது கைப்பேசிகளிலிருந்து உருவாகும் சூடும், மின்காந்த அலைகளும், கதிரியக்கமும் சேர்ந்து மனிதர்களின் விந்தணு உற்பத்தியையும், உற்பத்தியாகும் விந்தணுக்களின் செயற்படும் தன்மையையும், ஆரோக்கியத்தையும் பாதிப்பதாக கூறப்படுகின்றது.

7. காதுகளில் கேட்டல் தொடர்பான பிரச்சனை ஏற்படுகின்றது

கையடக்கத் தொலைபேசிகளிலிருந்து வெளிவருகின்ற கதிரியக்கமானது, செவிப்பறையை தாக்குவதனால், காதுகளில் பாதிப்பு ஏற்படுவதுடன் கேட்டல் குறைபாடும் ஏற்படுகின்றது. செவிப்பறை தாக்கப்பட்டு இறந்து போனவர்கள் பற்றிய தகவல்கள் விஞ்ஞானிகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

8. இதயம் சம்பந்தமான பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றது

கையடக்கத் தொலைபேசிகளில் ஏற்படும் (Vibration) அதிர்வானது இதயத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், இரத்த அழுத்தம் போன்ற இதயம் தொடர்பான நோய்களிற்கும் இது வித்திடுகின்றது.

9. வாய்களில் பிரச்சனையை ஏற்படுத்துகின்றது

மக்கள் ஒரு நாளைக்கு 50% கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்துகின்றனர். இதன் காரணமாக வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு இருக்கின்றது என அண்மைய ஆய்வுகள் கூறுகின்றன.

10. நோய்கள் / **Disease**

கையடக்கத் தொலைபேசி பாவனைக்கும் Atzheimer's disease மற்றும் Cancer கும் இடையில் தொடர்பு இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால் இந்த விடயம் இன்னும் சர்ச்சைக்குரியதாகவே இருக்கின்றது. இது தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்கள் உறுதியானதாக இல்லை. எனவே மேலும் இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். எனவே எது எவ்வாறு இருப்பினும் கையடக்கத்தொலைபேசிகளிலிருந்து வெளிவருகின்ற மின்காந்த அலைகள், மற்றும் அதிர்வெண்கள் போன்றவை உடலியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் உடல் நோய்களையும் ஏற்படுத்துகின்றது என்பதனை நாம் தெளிவாக கண்டு கொள்ள முடிகின்றது.

11. **வீதி விபத்துக்களைப் ஏற்படுத்துவதனால் உடல் பாதிப்புக்கள் ஏற்பட காரணமாகின்றது**

வாகனங்களை செலுத்துவோரும், பாதசாரிகளும் போக்குவரத்தின் போது கையடக்கத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதன் காரணமாக வீதி விபத்துக்கள் ஏற்பட்டு உடல் ஊனமுற்று போவதற்கான வாய்ப்புக்கள் அண்மைக்காலங்களில் அதிகரித்த வண்ணம் உள்ளது. இவற்றிற்கு கையடக்கத் தொலைபேசிகளை எவ்வாறான சந்தர்ப்பங்களில் பயன்படுத்த வேண்டும் என்கின்ற எச்சரிக்கை உணர்வு இல்லாமையே காரணமாகும்.

இவ்வாறு கையடக்கத் தொலைபேசி பாவனையினால் மேற்கூறப்பட்ட உடலியல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்பதனை அறிய முடிகின்றது. அநேக உளவியலாளர்களின் கருத்துப்படி உளவியல் ரீதியான பிரச்சினைகளே உடல் ரீதியான பிரச்சினைகள் மற்றும் உடலியல் நோய்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது என்று கூறுகின்றார்கள். உள ரீதியான ஆரோக்கியமின்மையே இதற்கு காரணமாகும். அதாவது கையடக்கத் தொலைபேசியை அளவுக்கதிகமாக பாவிப்பதனால் தூக்கமின்மை, எரிச்சல், கோபம், பதட்டம் போன்றவை ஏற்படுகின்றன. இவையே நித்திரை குழப்பம், இரத்த அழுத்தம் மூளையில் ஏற்படும் பிரச்சினைகள், நாட்பட்ட வலி மற்றும் வயிற்றுப்புண் போன்ற உடலியல் ரீதியான விளைவுகளிற்கு காரணமாகின்றன. எனவே அளவுக்கதிகமாக கையடக்கத் தொலைபேசி பாவனை உளவியல் ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன் இவையே உடல்ரீதியான நோய்களிற்கும் வித்திடுகின்றன என்பதனை தெளிவாக கண்டுகொள்ள முடிகின்றது. அதனைப்போல கையடக்கத் தொலைபேசி பாவனை காரணமாக ஏற்படுகின்ற உளரீதியான தாக்கங்களாவன,

1. **மன அழுத்த அளவை அதிகரிக்கின்றது.**

தொலைபேசியைப் பயன்படுத்துகின்ற போது உயர்வான அதிர்வெண் காரணமாக நமது மன அழுத்த நிலைமைகள் மீது எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகின்றது. Vibrating, Alerts, Reminder, Ringing போன்றவை மன அழுத்த மட்டங்களை மாற்றுவதில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. இளைஞர்களின் கையடக்கத் தொலைபேசி பாவனைக்கும் உளவியல் காரணிகள் மற்றும் மனநல ஆரோக்கியம் என்பவற்றுக்குமிடையில் நேரடியான தொடர்பைக் கண்டறிவதற்காக Gothenburg பல்கலைக்கழகம் ஓர் ஆய்வை நடத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் 20 – 24 வயது வரையான இளைஞர் யுவதிகள் பங்குபற்றினர். இவர்களை ஒரு வருடமாக அவதானித்து வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. இதன் அடிப்படையில் உயர் கையடக்கத்தொலைபேசி பாவனையானது பெண்களில் மன அழுத்தம் மற்றும் நித்திரையில் இடையூறு விளைவிப்பதாயும், ஆண்களில் நித்திரைக் குழப்பமும், மனச்சோர்விற்கான அறிகுறியையும் ஏற்படுத்துகின்றது என்பதை அறிய முடிகின்றது. எனவே, இதனை தொகுத்து நோக்கும் போது, கையடக்கதொலைபேசியானது கட்டிளமைப் பருவத்தினரிடையே உள ஆரோக்கியத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதனை அறியமுடிகின்றது.

2. மனவெழுச்சிகளில் எதிர்மறையான பாதிப்பை ஏற்படுத்துகின்றது

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் முகத்துக்கு முகம் பேசுவதனை விடவும், கையடக்கத் தொலைபேசி மூலம் பேசுவதனூடாக எதிர்மறையான உணர்வுகளை உருவாக்கிக் கொள்கின்றனர். இது தொடர்பாக இரண்டு ஆய்வுகள் Essex பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இவற்றின் முடிவின் படி கையடக்கத் தொலைபேசியானது ஆளிடை தொடர்பாடலில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் எதிர்மறையான மன உணர்வுகளையும் ஏற்படுத்துகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

3. மனநலம் பாதிக்கின்றது

கையடக்கத்தொலைபேசிகளில் காணப்படும் முகநூலைப் பயன்படுத்துவோருக்கு மனநலம் பாதிக்கும் அபாயம் உள்ளதாக, கனடாவைச் சேர்ந்த சுகாதார நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் இந்த அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது. இது தொடர்பாக அந்நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் 25% மாணவர்கள் நாளொன்றுக்கு 2 மணி நேரத்திற்கும் அதிகமாக முகநூல், டுவிட்டர் உள்ளிட்ட பல்வேறு சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவது தெரிய வந்துள்ளது. இதில் 80% மானோர் ஆழ்மனக்கிடக்கையின் வடிகாலாக இவற்றைப் பயன்படுத்துவதாகவும், 90% மானோர் சுய விளம்பரதாரிகளாகவும், 30% மானோர் தன்னின மோகிகளாகவும், 70% மானோர் தாம் சந்தோசத்துடன் இருப்பதாக பிறருக்கு காட்ட முயல்கின்றவர்களாகவும் குறிப்பிடப்படுகின்றது. தமது இருப்பை நிலைநாட்ட அதிகமானவர்கள் சமூக வலைத்தளங்களை நாடுகின்றனர். சிலருக்கு இதனால் மனத்திருப்தி ஏற்பட்டாலும் அது ஓர் வகை மனப்பிரம்மை தான். தங்களின் தீராத மனக்குறைகளை தீர்ப்பதற்காக இரண்டு மணிநேரத்திற்கு அதிகமாக சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தினால் நாளடைவில் அதுவே மனநோயாக மாறக்கூடிய அபாயம் இருப்பதாக அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது. எனவே முகநூல், டுவிட்டர் போன்றவற்றை இலகுவாக பயன்படுத்திக் கொள்வதற்கு வசதியாக கையடக்கத் தொலைபேசி ஓர் தூண்டுகோலாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கையடக்கத் தொலைபேசியினால் Selfie disease என்கின்ற மனநோய் மக்களை தாக்கி வருகின்றது

இன்று அநேகமான ஆண்களும், பெண்களும் கையடக்கத் தொலைபேசிகளிலுள்ள கேமரா மூலம் அடிக்கடி தங்களை புகைப்படம் எடுத்துக் கொள்வதுடன் இத்தகைய படங்களை முகநூலில் போட்டுவிட்டு அதற்கு எத்தனை like விழுகின்றது என்பதிலேயே தமது கவனத்தை செலுத்தி வருகின்றனர். இது ஓர் மனநோயாக மாறிவருகின்றது. எனவே DSM V ல் இந்நோய் சேர்க்கப்பட்டுள்ளது என்று அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

5. உளவியல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்படுகின்றது

கல்லூரி மாணவர்கள் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துவதனால் ஏற்படும் உளவியல் அல்லது மனநலம் தொடர்பான பாதிப்புக்கள் குறித்த ஆய்வொன்றில் ஆண், பெண் இருபாலாரிலும் 17 – 23 வயது வரையானவர்கள் எழுந்த மாதிரியாக தெரிவு செய்யப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர். இந்த ஆய்வின் முடிவின் படி 51.47% மாணோருக்கு தலைவலியும், 50.79% மாணோருக்கு எரிச்சல் மற்றும் கோபமும், பொதுவான மன அறிகுறிகளான மனதை ஒரு முகப்படுத்த முடியாமை, கற்றல் செயற்பாடுகளில் கவனமற்ற தன்மை, பதற்றம் மற்றும் Insomnia என்கின்ற தூக்க குழப்பமும் ஏனைய அறிகுறிகளும் காணப்பட்டது. அடிக்கடி கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துகின்ற இளையவர்கள் இது தொடர்பாக கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்று ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன.

இவ்வாறு கையடக்கத் தொலைபேசியின் அதிகரித்த பாவனை உளரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறே கையடக்கத் தொலைபேசி பாவனை சமூக ரீதியான தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றது.

*1. நேரம் மற்றும் பணத்தை வீண் விரயம் செய்கிறது*

மக்கள் தமது ஓய்வு நேரங்களில் மட்டுமன்றி, ஏனைய நேரங்களிலும் கையடக்கத் தொலைபேசியில் தமது நேரத்தை செலவழிப்பதுடன், தமது பணத்தையும் வீண் விரயம் செய்கின்றனர்.

*2. மாணவர்கள் மீது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது.*

இப்பொழுதெல்லாம் சிறுவர்கள், மாணவர்கள் ஓய்வு நேரங்களில் மைதானத்தில் விளையாடுவதனைக் காட்டிலும், கையடக்கத் தொலைபேசியிலுள்ள Games, Vidoes பார்ப்பதில் நேரத்தை செலவிடுகின்றனர். இதனால் இவர்களின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுகின்றது. அத்துடன் அதிகமான நேரங்களில் இசை கேட்பது, இணையத்தளம், முகநூல் என்பவற்றில் காலத்தை வீணிலே செலவழிக்கின்றனர். இதனால் கற்றல் செயற்பாடுகளில் பின் தங்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*3. இளைஞர்கள் மீது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது*

பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நடவடிக்கை குறித்து அக்கறையின்றி காணப்படுவதனால் ஆண் மற்றும் பெண்கள் தவறான பாதைக்கு செல்கின்றனர். இளைஞர்கள் கையடக்கத்தொலைபேசி மூலம் தவறான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இது வழிசமைத்துக் கொடுக்கின்றது. இளைஞர்களை தவறாக வழிப்படுத்துகின்றது. அதாவது கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப்படங்கள், காட்சிகள் என்பவற்றைப் பார்ப்பதன் மூலம் பாலுறவு மீதான உண்மைக்குப் புறம்பான, யதார்த்த பூர்வமற்ற கண்ணோட்டத்தையும் புரிதல்களையும் ஏற்படுத்தி விடுகின்றது. இதனால் இளைய தலைமுறையினரை கையடக்கத் தொலைபேசியானது ஆபத்தான பாதைக்கு இட்டுச் செல்வதுடன் அவர்களைத் தவறாகவும் வழிப்படுத்துகின்றது

*4. குற்றவியல் நோக்கங்களிற்கான தொடர்புக் கருவியாகப் பயன்படுகின்றது*

குற்றவியல் நோக்கங்களிற்கான ஓர் முக்கிய சாதனமாக கையடக்கத் தொலைபேசி அண்மைக்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பயங்கரவாதம், குற்றவியல் போன்ற நடவடிக்கைகளுக்காக ஏனைய சாதனங்களை விட இது விரைவான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளமுடியும் என்பதனால் இவ்வாறான நடவடிக்கைகளுக்காக இது அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது எமது இளைய தலைமுறை அழிவுப் பாதைக்கு செல்வதற்கு காரணமாகின்றது.

*5. மக்களின் ஆரோக்கிய நிலைமைகளில் கையடக்கத் தொலைபேசி அதிக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது*

கையடக்கத் தொலைபேசிகளிலிருந்து வெளியாகும் கதிரியக்கங்கள் மக்களின் உடலில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. கையடக்கத் தொலைபேசிகளில் நுண்ணுயிர்கள், பக்ரீறியாக்கள், தூசுக்கள் படிவதனால் மக்களின் சுகாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்று அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

*6. எமது சுற்றுச் சூழலில் கையடக்கத் தொலைபேசி எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.*

கையடக்கத் தொலைபேசி பறவைகள், பாலூட்டிகள் மற்றும் செல்லப்பிராணி, விலங்குகள் உட்பட எமது சுற்றுசூழலில் ஆபத்தை ஏற்படுத்தும் வண்ணம் பயன்படுத்தப்பட்டு வருவதனால் எமது சூழல் பாதிப்படைகின்றது.

*7. கையடக்கத் தொலைபேசி சமூக வர்க்கத்தை வரையறுக்கின்றது.*

இன்றைய கால கட்டத்தில் வசதி படைத்த மக்கள் தமது தோற்றம், தொடர்பாடல் திறன் மற்றும் Car models என்பவற்றை ஏனைய மக்களிடமிருந்து வேறுபட்ட வகையில் வெளிப்படுத்துவதற்கே முனைகின்றனர். இதில் முக்கியமாக கையடக்கத் தொலைபேசியானது சமூக வர்க்கத்தில் வேறுபாட்டை காண்பிப்பதற்கான ஒரு சாதனமாகவே பயன்படுகின்றது. உதாரணமாக நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு I Phone வாங்குவதனை உங்கள் நண்பர் பார்த்தால் அதனை விட உயர்வான விலையில் I Phone வாங்குவதற்கு அவர் முயற்சிப்பார். இது சமூகத்தில் பெருமையை சேர்த்துக் கொள்வதற்கான ஓர் செயற்பாடாகும். இதனால் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதற்கு கையடக்கத் தொலைபேசியும் ஒரு காரணமாக அமைகின்றது

*8. கையடக்கத் தொலைபேசியில் காணப்படுகின்ற பயன்பாடுகள் மக்கள் எந்நேரமும் ஓய்வில்லாமல் இருப்பதற்கு காரணமாகின்றது*

மக்கள் எந்நேரமும் வேலையாக (busy) இருப்பது கெட்ட விடயமல்ல. ஆனால் இவை எமது உற்பத்தித்திறன், நெகிழ்வு திறன் என்பவற்றை பாதிப்பதாக அமையும் போது எமது தொழில் பாதிப்படைகின்றது. Smart Phone ல் காணப்படுகின்ற தேவையற்ற பயன்பாடுகள் காரணமாக குடும்பம், நண்பர்கள், சமூகத்துடன் கொண்டுள்ள தொடர்பை விடுத்து இதில் அதிக நேரத்தை செலவிடுகின்றனர். நீங்கள் ஜப்பான், கொரியா போன்ற நாடுகளில் பேரூந்தில் பயணம் செய்யும் போது அங்குள்ள பயணிகளில் 80% மானோர் தங்கள் Smart Phone இல் ஏதோ ஒன்றை செய்து கொண்டே இருப்பார்கள். நீங்கள் அவர்களுடன் பேசுவதற்கு தயாராக இருப்பினும் அவர்கள் ஆர்வம் காட்டமாட்டார்கள். இதனால் சமூக இடைவினை வலுவிலக்கின்றது.

*9. பழைய உறவுகளை முறித்து புதிய உறவுகளை உருவாக்குவதற்கு கையடக்கத் தொலைபேசி காரணமாகின்றது.*

கையடக்கத் தொலைபேசியானது பழைய உறவுகளை முறித்து இலகுவாக புதிய உறவுகளை உருவாக்குகின்றது. ஒன்றோ அல்லது இரண்டு அழைப்புக்களில் சில புதிய Girl friend ஐ ஏற்படுத்திக் கொள்ள முடியும். மேற்கத்தைய மற்றும் ஆசிய நாடுகளைப் பொறுத்தவரை அநேகமான இளம் குடும்பங்கள் விவாகரத்து மூலம் பிரிந்து விடுகின்றனர். இதற்கு காரணம் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தி புதிய உறவுகளை வளர்த்துக் கொள்வதனால் திருமண தம்பதிகளுக்குள் பல்வேறுபட்ட உறவுச் சிக்கல்கள் ஏற்படுவதேயாகும். இதனால் அநேகமான மக்கள் திருமண உறவை உதாசீனப்படுத்துவதுடன் திருமணமாகமலேயே சேர்ந்து வாழும் தன்மையும் அதிகரித்து வருகின்றது. இதனால் சமூக ஒழுக்க விழுமியங்கள் மறுக்கப்பட்டு வருவதுடன் கலாசார சீரழிவும் ஏற்படுகின்றது. அத்துடன் கணவன், மனைவி தவிர்ந்த உணர்வு ரீதியான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும், ஒன்றுக்கு மேற்பட்ட தொடர்புகளை உருவாக்கிக் கொள்வதற்கும் கையடக்கத் தொலைபேசி காரணமாக அமைவதினால் குடும்ப உறவுகளுக்கிடையே குழப்பங்கள் ஏற்பட இவை வழிசமைக்கின்றன.

*10. கையடக்கத் தொலைபேசி வணிக ரீதியாக மக்களை ஈர்த்துள்ளது*

நீங்கள் ஒரு புதிய உறவை உங்கள் வாழ்க்கையில் ஆரம்பிக்கின்ற போது அந்த நேரத்தில் எமது முதலாளி, வணிக பங்காளி ஒருவர் முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக உங்களை அழைக்கும் போது நீங்கள் உங்கள் மனைவியிடம் அது தொடர்பான விவரத்தை விளங்கப்படுத்தியிருப்பினும் கூட உங்கள் உறவுகளில் ஓர் விரிசலை ஏற்படுத்துகின்றது. மக்கள் எந்நேரமும் தமது தொழில் மற்றும் வணிக ரீதியான செயற்பாட்டிற்கே அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கும் போது அவர்களின் குடும்ப வாழ்வில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

*11. சமூக நிகழ்வுகளை ஊக்குவிப்பதை குறைக்கின்றது.*

இன்றைய சமுதாயத்தைப் பொறுத்தவரை சமூக நிகழ்வுகள் என்பது மிகவும் குறைவாகவே நிகழ்கின்றது. தொலைபேசி தொடர்புகளின் வளர்ச்சியின் காரணமாக மக்கள் தமது தேவைகளை இதனூடாகவே நிறைவேற்றிக் கொள்கின்றனர். முகநூல், டுவிட்டர், ஸ்கைப் போன்றவை மூலம் வீட்டிலிருந்த படியே நாள் முழுவதும் நண்பர்கள் உறவினர்களுடன் தமது நேரத்தைச் செலவிடுவதனால், சமூக நிகழ்விற்கு அவர்கள் அங்கீகாரம் கொடுப்பதனை குறைத்து வருகின்றனர். இதனால் மக்கள் சமூகமயமற்றவர்களாகவும், மக்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளும் திறன் குறைந்தவர்களாகவும் மாறி வருகின்றனர். இவை சமூக வளர்ச்சிக்கு நல்லதல்ல.

*12. சமூகத்திலுள்ள பெண்களின் வாழ்க்கையை சீரழிக்கின்றது*

பெற்றோர்களின் கண்காணிப்பைத் தாண்டி, நகரங்களில் தங்கிப் படிக்கும், வேலை பார்க்கும் பெண்கள் தான் அதிகமாக MMS வலையில் விழுகின்றார்கள். கட்டுப்பாடற்ற சுதந்திரம் அவர்களை கட்டவிழ்த்து விடுகின்றது. தனிமையும், நகரச்சூழலும் யாருடனாவது நட்பு கொள்ளத்தூண்டுகின்றது. பெண்களின் பலவீனத்தை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளும் இளைஞர்கள் தங்கள் வலையில் அவர்களை எளிதில் வீழ்த்தி விடுகின்றார்கள். கண்ட கண்ட புகைப்படங்கள், இரட்டை அர்த்த SMS ஐ அனுப்பி வைப்பார்கள். இதிலெல்லாம் தவறு இல்லை. இது சாதாரண விடயம் என்று மூளைச்சலவை செய்வார்கள். அவர்களை நம்பியோ அல்லது பதிலுக்குப் பதிலாகவோ பெண்களும் அதே பாணியில் ஏதாவது MMS செய்து விட்டால் போதும் அந்த சிறுதுரும்பை வைத்துக் கொண்டு 'பிளாக்மெயில்' செய்தே தங்கள் காரியத்தை சாதித்து விடுவார்கள்.

பணம் தேவைப்பட்டால் பணம் பறிப்பார்கள். ஊர் சுற்ற, உல்லாசம் அனுபவிக்க என்று தாங்கள் இழுத்த இழுப்பிற்கு எல்லாம் அந்த பெண்களை வளைத்துப் பயன்படுத்திக் கொள்வார்கள். இந்த சிக்கலில் மாட்டிக் கொள்ளும் பெண்கள் அவமானத்திற்குப் பயந்து மீளமுடியாமல் தவிப்பார்கள். தவறான முடிவுகளும் எடுத்து விடுவார்கள். பெண்களின் ஆபாசம் கலந்த பேச்சு பெரும்பாலும் ஆண்களால் பதிவு செய்யப்படுகின்றது. எனவே, இத்தகைய பேச்சுக்களை பெண்கள் தவிர்க்க வேண்டும். இல்லையெனில் பாதிப்பு ஆண்களுக்கு இல்லை பெண்களுக்கே இதனால் தங்களின் எதிர்கால வாழ்வையே கேள்விக்குறியாக்கி விடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *13. இளவயது கர்ப்பத்திற்குக் காரணமாகின்றது*

இன்றைய கால இளைஞர்கள் தமது ஓய்வு நேரங்களை எவ்வாறு செலவழிப்பது என்று தெரியாமல் பிரயோசனமற்ற முறையில் தமது பொன்னான நேரங்களை வீணடிக்கின்றார்கள். இதில் கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்தி, இவர்கள் செய்யும் அட்டகாசத்திற்கு அளவே இல்லாமல் போய்விட்டது. ஏதேனும் இலக்கங்களை டயல் செய்து அழைப்பை ஏற்படுத்தும் போது யாரும் ஒரு பெண்ணின் குரல் கேட்டால் போதும், தொடர்ந்து அழைப்பை ஏற்படுத்தும் போது ஒரு கட்டத்தில் அந்த பெண்ணும் அவன் கூப்பிடும் இடத்திற்கு செல்வாள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆண்களின் வலையில் விழும் பெண்கள் தமது வாழ்வை சீரழித்துக் கொள்கின்றனர். இதனால் தேவையற்ற கர்ப்பம், கருகலைப்பு என்பவற்றிற்குள் உள்ளாவதினால் சமூகத்தின் அவச் சொல்லிற்கு ஆளாகின்றனர். கர்ப்பமுற்றதால் வீட்டில் புறக்கணிக்கப்படல், பெற்றோர், சகோதரர்களினால் தண்டிக்கப்படல் போன்றவற்றினால் மனக்குழப்பம், விரக்தி, வெறுப்பு போன்ற உளரீதியான பாதிப்புக்களும் கர்ப்பத்தை கலைப்பதற்கு எடுக்கும் முயற்சிகளினால் உடல் ரீதியான தாக்கத்திற்குள்ளாவதோடு சில சமயம் அவளது உயிருக்கே ஆபத்து ஏற்படும் நிலை வந்துவிடுகின்றது. இதனால் எதிர்காலத்தில் அவளது வாழ்க்கை கேள்விக்குறியாவதோடு வாழ்க்கை தொடர்பாக கொண்டுள்ள எதிர்பார்ப்பும் அர்த்தமற்றதாகவே போய்விடும்.

எனவே கையடக்கத் தொலைபேசி பாவனையானது உடல், உள, சமூக ரீதியான தாக்கங்களிற்கு வித்திடுகின்றன என்பதனை மேற்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மூலம் அறிய முடிகின்றது.

ஆக தொகுத்து நோக்கும்போது கையடக்கத் தொலைபேசியானது மக்களின் உடனடித் தேவைகளை பூர்த்தி செய்து வைப்பதில் முக்கிய பங்கு வகித்தாலும் அதன் அளவுக்கதிகமான பாவனை உடல் உள சமூக ரீதியாக பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பது நாம் யாவரும் அறிந்த உண்மையே. எம்மில் அநேகமானோருக்கு இந்த விடயம் குறித்து அலட்சிய போக்கு காரணமாக தங்களுக்கு தாங்களே பல உபாதைகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். குறிப்பாக இளம் பெண்கள் இது தொடர்பான விழிப்புணர்வுடன் நடந்துகொள்வது அவர்களுக்கு நன்மை பயக்கும். எனவே இளைய தலைமுறையினர் இந்த விடயம் குறித்து எச்சரிக்கையுடன் செயற்படுவதன் மூலம் எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**S. வனப்பிரியவாசினி**
தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோத்தர்
பிரதேச செயலகம், செட்டிகுளம்.

# இலங்கை தகவல் அறியும் உரிமைச் சட்டம்

தகவல் அறியும் உரிமையானது மக்களுக்கான அடிப்படை உரிமையாக பல்வேறு நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை மக்களுக்கு அரசிலிருந்து கிடைக்கப்பெற்ற வரப்பிரசாதங்களுள் தகவல் அறிவதற்கான உரிமைச்சட்டமும் ஒன்றாகும். குடியரசாட்சி ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் அரசின் உரித்துரிமையானது மக்களுக்கே சொந்தமானது எனும் எண்ணக்கரு வளர்ச்சியடைந்து வந்தது. அரசு, அரச நிறுவனங்கள் பொதுமக்களின் வரிப்பணத்தில் இருந்தே பராமரிக்கப்பட்டு வருகின்றது. எனவே பொதுமக்களின் நிதியில் இருந்து அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைககள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை பொதுமக்களிற்கு இருக்கின்றது. ஆகையால் தகவல் அறியும் உரிமையானது, வரி பணத்திற்கு என்ன நடக்கின்றது? அது எவ்வாறு செலவிடப்படுகின்றது? பிரதிபலன்கள் என்ன? போன்ற இன்னபிற விடயங்களை அறிவதற்கு நாட்டின் குடியுரிமை பெற்ற பிரஜைக்கு வாய்ப்பினை அளிக்கின்றது. இதனால் ஊழலற்ற ஸ்திரமான அரசாங்கம் அமைவதற்கான சாத்தியக்கூறுகள் அமைகின்றது.

## தகவல் அறியும் உரிமை சட்டத்தின் வரலாறு

இத்தகைய தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் அவசியமானது 1994ம் ஆண்டிலேயே உணரப்பட்ட போதிலும் அதனை நடைமுறைக்கு கொண்டுவரும் செயற்பாடானது 2016 இலேயே சாத்தியப்பட்டது. இச்சட்டத்தின் வரலாற்றின் பக்கங்களை மேலோட்டமாக பார்வையிடுவோம்.

1994 ஊடக சுதந்திரம் மற்றும் பேச்சு சுதந்திரம் தொடர்பில் தாக்கம் செலுத்தும் சட்டங்களை மறுசீரமைப்பதற்கான ஆலோசனைகளை வழங்குமுகமாக ஊடக, சுற்றுலாத்துறை அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஆலோசனை குழுவின் தலைவர் சட்டத்தரணி R.K.W. குணசேகர உட்பட்ட குழு தகவலறியும் உரிமைக்கான சட்டமொன்றிற்கான சிபார்சுகளை முன்வைத்தனர்.

1996இல் தகவலறியும் சுதந்திர சட்டமூல வரைபினை இலங்கை சட்ட ஆணைக்குழு சமர்ப்பித்தது. இருப்பினும் அன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாக மேற்கொண்டு அது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

2002ம் மற்றும் 2003ம் ஆண்டில் பத்திரிகை ஆசிரியர் பேரவை, சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆகியன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்துடன் இணைந்து தகவலுக்கான உரிமை பற்றிய சட்ட வரைபு ஒன்றினை சமர்ப்பித்தது. அன்றைய காலகட்டத்தின் பிரதம அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க அவர்களால் சட்டமூலமானது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு 2004இல் அங்கீகாரம் பெற்றது. இருப்பினும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னராகவே பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையால் சட்டவரைபு தொடர்பான அரசாங்கத்தின் கவனம் திசை திருப்பப்பட்டது.

2006ம் ஆண்டில் சட்ட ஆணைக்குழுவினால், 2009ம் ஆண்டு மிலிந்த மொரகொட அவர்களாலும் மீண்டும் அக்காலகட்டத்திற்குரிய சில மாற்றங்களுடனான சட்டவரைபு மூலங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் அரசியல் சூழ்நிலைகளால் அதனை முன்னெடுத்து செல்ல முடியவில்லை.
2010ம் ஆண்டில் எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியகட்சியின் பாராளுமன்ற உறுப்பினராகிய திரு.கரு. ஜெயசூரிய அவர்கள் தகவல் அறியும் சட்ட மூல வரைபினை தனிநபர் பிரேரணையாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இருப்பினும் அரசாங்க கட்சி இவ்வாறானதோர் சட்டமூலம் ஒன்றினை சமர்ப்பிக்கவுள்ளதாக வலியுறுத்தியதன் பெயரில் கரு. ஜெயசூரிய அவர்கள் பிரேரணையை வாபஸ் பெற்றார்.

அரசாங்க கட்சி எவ்வித நடவடிக்கையும் எடுக்காததின் பெயரில் கரு. ஜெயசூரிய மீண்டும் 2011ம் ஆண்டு பாராளுமன்றத்தில் சட்டமூலமொன்றை முன்வைத்தார்.இருப்பினும் அச்சட்ட மூலமானது பாராளுமன்ற வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டது.

2015 இல் நடைபெற்ற தேர்தலையொட்டி எதிர்க்கட்சியின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன அவர்களது "மாற்றத்திற்காக ஒன்றுபடுவோம். மைத்திரி ஆட்சியில் 100 நாட்களுள் புதியதோர் நாடு" என்ற 100 நாள் வேலைத்திட்டத்தில் தகவலறியும் சட்டம் இயற்றலை முதன்மையாக குறிப்பிட்டிருந்தார் இதன்பின்னணியில் பாராளுமன்ற மறுசீரமைப்பு ,வெகுசன ஊடக அமைச்சு, நீதி அமைச்சு மற்றும் பொது நிருவாக அமைச்சு ஆகியவற்றிடம் சட்டமூலம் தயாரிக்கும் பொறுப்பானது ஒப்படைக்கப்பட்டது. ஊடகவியலாளர்கள் ,சட்டத்துறையில் தேர்ச்சி பெற்றவர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச உத்தியோகத்தவர்கள் உடைய கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்பட்டு வெகுசன ஊடக அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் வெகுசன ஊடக, சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் குழு ஒன்றின்மூலம் சட்டவரைவானது தயாரிக்கப்பட்டது.
2015ம் ஆண்டு 19வது திருத்தச்சட்டத்தின் அரசியலமைப்பு உறுப்புரை 14 (அ) ல் தகவலறியும் உரிமையானது பிரஜைகளுக்கான அடிப்படை உரிமைகளில் ஒன்றாக சேர்க்கப்பட்டது. திருத்தச்சட்டத்தினால் அளிக்கப்பட்ட உறுப்புரை 14(அ) இன் இந்த உரிமையானது அமுலாக்கப்படக்கூடியதேயாகும். இருப்பினும் தகவல் அறியும் உரிமைச்சட்டம் இல்லாத நிலையில் தகவலறியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை தொடர்பான அரசியலமைப்பானது பல் புடுங்கிய பாம்பாகவே இருந்தது. உரிமைகளை உறுதியாக பெறுவதற்கு சட்டம் அவசியமாகின்றது எனவே 2016ல் தகவல் அறியும் உரிமைச்சட்டம் இயற்றப்பட்டு சபாநாயகர் ஒப்பமிட்டதின் பெயரில் அது சட்டமாக்கப்பட்டது. இச்சட்டமானது 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவல் அறியும் உரிமை சட்டமாக நடைமுறைக்கு வந்தது இச்சட்டத்தின் பிரகாரம் பிரிவு 2 இன் படி தகவல் அறியும் சட்டத்தினை அமுல் படுத்தும் பொறுப்பு வெகுசன ஊடக அமைச்சிற்குரியதாகும் பிரிவு 3 இன் படி இலங்கை குடியுரிமை பெற்ற பிரஜை ஒவ்வொருவரும் ஒரு பகிரங்க அதிகாரசபையின் (அரச நிறுவனம்) உடைமையில், கட்டுப்பாட்டில் அல்லது கட்டுக்காப்பில் இருக்கின்ற தகவலை பெறுவதற்கான உரிமையினை கொண்டிருக்க வேண்டும்.

**எத்தகைய தகவலை பெற்றுக் கொள்ள முடியும்.**

தகவல் என்பது பதிவேடுகள், ஆவணங்கள், குறிப்புக்கள், மின்னஞ்சல்கள், அபிப்பிராயங்கள், அறிவுரைகள், பத்திரிகை வெளியீடுகள், சுற்றுநிருபங்கள், கட்டளைகள், சம்பவத்திரட்டுக்கள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், மாதிரிகள், உறுப்பட்டவங்கள், கடிதங்கள், குறிப்பறிக்கை, விறவுச்சட்டவாக்கம், புத்தகம், திட்டவரைபு, வரைவு, வரைபடம், பட அல்லது வரைபட வேலை, புகைப்படம், திரைப்படம், குறும்படம், ஒலிப்பதிவு, ஒளிநாடா,இயந்திரம் மூலம் வாசிக்கக் கூடிய பதிவுகள், கணினி பதிவுகள் மற்றும் வேறு ஆவணப் பொருட்கள், பௌதீக படிவங்கள், அல்லது படிவத்திலான ஏதேனும் பொருள் மற்றும் அதன் ஏதேனும் பிரதி என்பவற்றை உள்ளடக்கின்றது.

இத்தகைய தகவல்களில் மக்களின் பொதுநலனை பாதிக்க கூடிய தகவல் என தகவல் வழங்கும் அதிகாரியினால் அல்லது அரசினால் தீர்மானிக்கப்பட்ட, அரசின் பாதுகாப்பு மற்றும் நலனை பாதிக்க கூடிய தகவல்கள், அரச கொள்கைகளின் இரகசிய தன்மையை கேள்விக்குள்ளாக்கும் தகவல்கள், ஏதேனும் தனிநபரை பாதிக்க செய்யும் தகவல் மற்றும் நாடுகளுக்கு இடையிலான உறவுமுறையில் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய தகவல்கள், நீதித்துறையினை பாதிக்க கூடிய தகவல்கள் போன்றவற்றை தவிர்த்து ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் குறிப்பிட்ட நபர் ஒருவர் மட்டும் பெற்றுக்கொள்ளும் விசேட நன்மைகளுக்கான காரணங்கள், தொழில் வாய்ப்பு வழங்கப்படுவதற்கான அடிப்படைகள், நேர்முகப் பரீட்சைகளின் புள்ளிகள், பாடசாலை அனுமதி மறுப்புக்கான காரணங்கள், அலுவலர்களின் உள்ளக செயற்பாடுகள் போன்ற ஏனைய விடயங்களையும் அறிய முடியும்.

தகவல் அறியும் சட்டத்தினை பிரயோகிக் கூடிய சில சந்தர்ப்பங்களை உதாரணமாக நோக்குவோம்.

- பிரஜை ஒருவரின் வாகனம் ஒன்று பாதை சீரின்மை காரணமாக விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பத்தில், அவரது நகரத்தில் உள்ள பாதையை செப்பனிட ஒதுக்கப்பட்ட பணத்திற்கு என்ன நடந்தது. என்பது தொடர்பான கேள்வி எழுப்பும் உரிமை உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிரஜை ஒருவர் தமது குழந்தைக்கு அரசாங்க பாடசாலைக்கு விண்ணப்பித்த போதிலும் அனுமதி மறுக்கப்படுமிடத்து ஏன் அரசாங்க பாடசாலைக்கு அனுமதி வழங்கவில்லை என்ற கேள்வியை எழுப்ப முடியும்.
- பிரதேசம் ஒன்றின் பாலம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக கடந்த வருட வரவு செலவுத்திட்டத்தில் பண ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாத விடத்து அது தொடர்பாக பிரதேச சபையில் கேள்வி எழுப்பும் உரிமை பிரஜை ஒருவருக்கு உள்ளது.

**தகவல் பெறுநரின் விண்ணப்பம் மறுக்கப்படுமிடத்து செய்யக்கூடியவை.**

தகவல் பெறுநர், தகவல் பெறுவதற்காக விண்ணப்பித்ததன் பின்பு தகவல் வழங்கும் உத்தியோகத்தர் தகவல் முடியும் என்பதனை உறுதி செய்து, அதனை தகவல் பெறுநருக்கு அறிவிக்கும் போது அதற்கான கட்டணத்தையும் குறிப்பிடுவார். உரிய கட்டணத்தை செலுத்தி தகவல் பெறுநர் தகவலினை பெற்றுக்கொள்ள முடியும்.

தகவல் பெறுநரின் விண்ணப்பம் மறுக்கப்படுமிடத்து தகவல் வழங்கும் அதிகாரி அதற்கான காரணத்தையும், மேன்முறையீடு செய்வதற்கான கால அவகாசம் மற்றும் யாருக்கு எதிராக மேன்முறையீடு செய்ய வேண்டும் என்பது தொடர்பான விவரங்களும் அறிவிக்கப்படவேண்டும்.

தகவல் பெறுநருக்கு வழங்கப்பட்ட தகவலானது திருப்தியற்றதாக இருக்குமிடத்து அல்லது தகவலானது இரகசியத்தன்மை காரணமாகவோ, மேலதிக கட்டணத்திற்காகவோ அல்லது வேறு ஏதும் பொருத்தமானது காரணத்துக்காகவோ மறுக்கப்படுகின்றவிடத்து தகவல் பெறுநர் அதனை எதிர்த்து தகவல் தகவல் மறுக்கப்பட்ட தினத்தில் இருந்து 14 வேலை நாட்களுக்குகள் மேன்முறையீட்டை செய்ய முடியும். தகவல் பெறுநர் மேன்முறையீடு செய்து குறித்த காலகட்டத்திற்குள் தகவல் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் தகவலுக்கான ஆணைக்குழுவிடம் முறையிட முடியும். தகவலுக்கான ஆணைக்குழுவும் திருப்திகரமாக இயங்கவில்லை என கருதினால் குறித்த நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் நீதிமன்றத்தின் உதவியை நாடி தீர்வொன்றை பெறமுடியும். மேலும் wwRTI.gov.lk எனும் வலைத்தளத்தில் தகவல் அறியும் சட்டம் தொடர்பான தகவல்களையும், படிவங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். இவையே தகவல் அறிவதற்கான உரிமைச்சட்டம் தொடர்பான அடிப்படைத் தகவல்களாக உள்ளது. எனவே இலங்கை குடியுரிமை பெற்ற எந்த ஒரு பிரஜையினாலும் பொது அதிகார சபையின் தகவல்களை அறிந்து கொள்ள கூடிய இத்தகவல் அறியும் சட்டத்தினை முறையான வகையிலும், வினைத்திறனுடனும் பயன்படுத்தி ஊழல் அற்ற ஜனநாயக நல்லாட்சி ஒன்று உருவாவதற்கான எம்மாலான பங்களிப்பினை வழங்கி நாட்டின் அபிவிருத்திக்கு வழி செய்வோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. பி. சஜித்தா,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வெங்கலச்செட்டிக்குளம்

## மனிதம் எங்கே?

மனிதா – உந்தன்
மனிதம் எங்கே?
மறைந்து விட்டதா – அல்லது
மரத்து விட்டதா..?

மண்ணில் மலர்ந்த
மாணிக்கங்கள் போல் - உன்
மனதில் உதிர்ந்த
உன்னதமான எண்ணங்கள் - எங்கே
உதிர்ந்து கொண்டது.

உனக்குள் இருக்கும்
உந்தன்
உணர்வுக்கு – நீ
மதிப்பளிப்பாயானால்
உண்மை மனிதங்கள்
உனக்குள் மலரும்

மனித மனிதத்தை
மறைத்து வாழ்கின்ற
மனிதா – நீ
மானத்தினை மறைப்பது போல்
மனிதத்தையும் மறைத்து விடாதே

மனதில் இருக்கும்
மிச்ச மனிதத்தையாவது
மலரவிடு – அதனால்
மற்றைய
மனிதர்களாவது – உந்தன்
மௌன மனிதத்தால்
மகிழ்ச்சி பெறட்டும்



மாற்றம்
மனங்கள் மாறவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்ரி குணராஜா,
பிரதேச செயலகம்
செட்டிகுளம்

## முதலியார்குளம் பழைய கிராமம் பற்றிய குறுந்தகவல்

வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவின் முத்தென திகழும் முதலியார்குளம், இப்பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 20 கிராம அலுவலர் பிரிவுகளில் ஒரு பிரிவாக திகழ்கின்றது. இக் கிராம அலுவலர் பிரிவில் 04 கிராமங்கள் உள்ளடக்கப்படுகின்றன. செட்டிகுளம் பிரிவின் ஆரம்பமான 1. கப்பாச்சி 2. முதலியார் குளம் 3. கரம்பைமடு 4.முதலியார் குளம் வீட்டுத்திட்டம் என்பனவாகும். இக்கிராமத்தில் இரு சமாந்தரக் கோடுகளாக 3 கிலோமீட்டர் அளவான மன்னார் - மதவாச்சி ஊடான கொழும்பு புகையிரத பாதையும் A14 பிரதான வீதியும் அமைந்துள்ளது.

வெங்கலச் செட்டிகுளம் என்ற பெயர் 3ம் நூற்றாண்டிலேயே ஏற்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. இது வையாபாடலில் ஒரு வரலாற்று நிகழ்வாகவே கருதப்படுகின்றது. அக்காலப்பகுதியில் நாக மன்னர் ஆட்சியின் கீழ் வன்னிநாடு பல சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. இதனை அடங்காப்பற்று என்றும் அழைத்து வந்தனர். வன்னி நாடு 7 பற்றுக்களாக பிரிக்கப்பட்டு இருந்தது. அதில் செட்டிகுளமும் ஒரு பற்றாகவே திகழ்ந்தது. பின்னர் வன்னிமாவட்டம் 40 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இருந்தபோது செட்டிகுளமானது சின்னச்செட்டிக்குளம் கிழக்கு, சின்னச்செட்டிக்குளம் மேற்கு, நடுச்செட்டிக்குளம் என பிரிக்கப்பட்டிருந்தது. சின்னச் செட்டிக்குளம் கிழக்கில் 1817ல் குடிசன மதிப்பு கணக்கெடுப்பின் போது கப்பாச்சி, வாகை கட்டிய ஒழுக்குளம், சின்னத்தம்பனை, மதவுவைத்தகுளம், பெரிய நொச்சிக்குளம் என்பன கிராமங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் முதலியார்குளம் கிராமம் இடம்பெறவில்லை. இதன் காரணம் இக்கிராமம் அக்காலப்பகுதியில் வாகை கட்டிய ஒழுக்குளம் கிராமத்தோடு இணைக்கப்பட்டிருந்தமையாகும்.

1790ம் ஆண்டின் பிற்பகுதியில் (1700 – 1800 இடைப்பட்ட காலத்தில்) தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் எனும் இடத்திலிருந்து இரு மைத்துனர்கள் மாதோட்டப்பகுதியில் வந்திறங்கி அங்கிருந்து முதலியார்குளம் கிராமத்திற்கு வந்தனர். இவர்கள் பெரிய ஆசாரி, சின்ன ஆசாரி என்போராவார். இக்குடும்பத்தவர் கத்தோலிக்கத்தை தழுவியதால் இவர்களது உறவுகளால் ஒரங்கட்டப்பட்டு விட்டனர். முதலியார்குளம் வந்த இவர்கள் பழைய ஆலயப்பகுதியில் குடியிருந்ததாக முன்னோர்கள் தெரிவித்தனர். இவர்களது குலத்தொழிலுக்கு இங்கு வாய்ப்புக்கள் கிடைக்காத காரணத்தால் சேனைப்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வந்தனர். இவர்கள் காலத்தில் நான்கு வழியினர் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறலாயிற்று. அவர்கள் சூசைப்பிள்ளை பேரன் வழியினரும் சுவக்கின் பேரன் வழியினரும் மரிசால் பிள்ளை பேரன் வழியினரும் தோற்றம் பெற்றனர்.

யோசேப்புவின் தந்தை மாதோட்டம் வழி இவர் சாளம்பைக்குளம் பகுதியிலும் வாழ்ந்து வந்தனர். பிற்காலத்தில் இந்த நான்கு உறவினருடன் யோசேப்பு மரியநாயகம் வழியினரும் வந்து இணைந்து கொண்டனர். முதலியார்குளம் பழைய குடியிருப்பில் தங்களது காவல் தெய்வமாக புனித அந்தோனியாரை மரத்தினால் செதுக்கி சிலை அமைத்து குரக்கன் வைக்கோலினால் வேயப்பட்ட குடிசை வைத்து வழிபட்டு வந்தமை வாய் வழிக் கதையாக உள்ளது.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் முதலியார் என்பது தற்போதைய பிரதேய செயலாளருக்கு உள்ள அதிகாரத்தை ஒத்த அதிகாரம் உடையவர்களாக திகழ்ந்தனர்.ஒரு முதலியாருக்கு கீழ் 9 உடையார்கள் அமர்த்தப்பட்டு ஆட்சி நடத்தப்பட்டு வந்தது. அவ்வாறு சின்னச் செட்டிகுளம் கிழக்குப் பகுதிக்கு பெஞ்சமின் எனும் முதலியார் வந்ததாகவும் அவர் ஒரு கத்தோலிக்கராக இருந்ததாலும் முதலியார்குளத்தில் வாழ்ந்த குடும்பங்களின் இறைபக்தியும் அவர்களது நடத்தை, ஒழுக்க பண்புகளால் கவரப்பட்டு அவர்களது நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்கான குளத்தை புணரமைத்துக் கொடுத்தார். இதனால் முதலியார்குளம் என இக்கிராமம் அழைக்கப்படலாயிற்று. முதலியாரது ஆட்சி மையமும் முதலியார்குளத்திலேயே அமையலாயிற்று. எனவே இக்குளம் 1800 – 1810ம் இடைப்பட்ட ஆண்டுக் காலப்பகுதியினுள் உருவாக்கம் பெற்றிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

1814ம் ஆண்டுக் காலத்தில் இருந்த கோப்பனார் முதலியார் பிரித்தானியர்களுக்கு தென்னிலங்கை மன்னர்களுடைய நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை வழங்குகிறார் என்ற காரணத்தினால் கண்டி அரசன் குமாரசிங்க வன்னியன் கோப்பனார் முதலியாரை கைது செய்ய இருப்பதை அறிந்து அவர் கப்பாச்சி கிராமத்தில் தஞ்சம் அடைந்தார் எனவும் வரலாறு உண்டு.

முதலியார்களின் ஆட்சி மையம் இங்கு இருந்த காரணத்தின் நிமித்தம் செட்டிகுளம் கிராமோதய சபை (பிரதேச சபை) கட்டிடம், கிராமக்கோடு, சவக்காம்பறா போன்ற கட்டிடங்களும் இக்கிராமத்தில் அமைந்திருந்தன. அத்துடன் இக்கிராமத்தினர்களில் கிராமோதய சபைத் தலைவர் (தவிசாளர்) சூசைப்பிள்ளை பொன்னை என்பவர் விதானையாகவும், தவிசாளராகவும் பதவி வகித்துள்ளார். அவரைத் தொடர்ந்து அவரது சகோதரன் சூசைப்பிள்ளை பிலிப்பையர் என்பவர் தவிசாளராகவும் விதானையாராகவும் சேவை புரிந்துள்ளனர்.

பின்னர் 1815ம் ஆண்டுக் காலப்பகுதியில் இவர்களோடு இணைந்து பிற இடங்களில் இருந்தும் இரு குடும்பங்கள் இணைந்து 12 குடும்பங்கள் இக்கிராமத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறியிருந்தது. இதில் கண்ணுப்பிள்ளை என்பவரது ஒரு குடும்பம் மாத்திரமே இந்துக் குடும்பமாக இருந்தது. இக்குடும்பங்கள் யாவும் ஆலயத்தை சுற்றியே தமது குடியிருப்புக்களை அமைத்திருந்தனர். இவர்களுக்குள் எந்தவொரு குற்றச்செயல்களும் இடம்பெற்றதாக அறியமுடியவில்லை. அத்துடன் ஒரு தற்கொலை, கொள்ளை, கொலை போன்ற குற்றங்கள் எதுவும் நடைபெற்றதாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மிக அமைதியான கிராமம் எனப் பெயர் பெற்ற இவர்கள் தமது சொந்த முயற்சியால் 6 சிறிய குளங்களையும் உருவாக்கி விவசாயத்தில் மேலோங்கி பொருளாதார முன்னேற்றம் அடைந்து வாழ்ந்தார்கள். இங்கு வாழ்ந்த வழியினர் தமது குடும்பங்களுக்கென ஒவ்வொரு குளங்களை அமைத்திருந்தனர். அந்தவகையில் சந்தார் சூசைப்பிள்ளை குடும்பத்தினர் புளிச்சல் குளத்தையும், தம்பிமுத்து குளத்தை சூசைப்பிள்ளை தம்பிமுத்துவும், சூசைப்பிள்ளை பொன்னையா நாவற்குளத்தையும், சுவக்கீன் வழியினர் மடுத்தியர் குளத்தையும், சிவக்கொழுந்து குடும்பத்தினர் புளியங்குளத்தையும், யோசேப்பு குடும்பத்தினர் சாளம்பைக்குளத்தையும் உருவாக்கினர். இவர்கள் காலத்தில் குளங்களை கட்டிய விதம் மிக எளிமையானது. அதாவது மழைக்காலங்களில் பள்ளப் பக்கமாக ஒடி வரும் தண்ணீரை மறித்து தண்ணீர் தேங்கி நிற்கும் இடத்தில் வேளாண்மையும் மற்றையப் பகுதியில் சேனைப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்வர். பிற்பாடு மேலும் குளக்கட்டுகளை விஸ்தரித்து காணிகளையும் விஸ்தரித்துக் கொள்வர். இவர்களால் உருவாக்கப்பட்ட குளங்களில் சில முகத்தான்குளம் பெரிய நீர்ப்பாசனத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது பெரிய நீர்ப்பாசன குளத்திட்டத்தின் கீழ் தம்பிமுத்துக்குளம், மடுத்தியர்குளம், சிவக்கொழுந்துக்குளம் ஆகியன உள்ளடக்கப்பட்டுவிட்டது. குளத்துடன் சேர்த்து இன்னும் பல ஏக்கர் வேளாண்மைக் காணிகளும் வெண்தாற்றுத் தரை வயல் காணிகளும் அரசுக்கு கையளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இங்கு வாழ்ந்தவர்கள் தமக்கு கிடைக்கும் காட்டிறைச்சி, குளத்து மீன், பழவகைகள், தேன், தயிர், பால் என்பவற்றை அயலவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்து ஒற்றுமையின் சின்னமாகவும் ஒழுக்க சீலர்களாகவும் திகழ்ந்தார்கள். இக்கால கட்டத்தில் வவுனியா பங்குத் தந்தையாக இருந்த ஒஸ்மன் அடிகாளரதும் ஆலய மூப்பராக இருந்த சூசைப்பிள்ளை என்பவரதும் முயற்சியினால் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. அப்பாடசாலை 20X15 அளவான மண் சுவற்றினால் 1889ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதுவே செட்டிக்குளம் பகுதியின் தாய்ப்பாடசாலையாகவும், முதல் பாடசாலையாகவும் திகழ்ந்தது. இதில் 85% கத்தோலிக்கரும், 10% இந்துக்களும், 5% முஸ்லிம்களும் கல்வி கற்றனர். அயல் கிராமங்களான கப்பாச்சி, கொங்காரயன்குளம், செட்டிகுளம், முசல்குத்திக்குளம், இலுப்பைக்குளம், அடப்பன்குளம், வாகை கட்டிய ஒழுக்குளம், கரம்பைமடு, சின்னச்சிப்பிக்குளம் போன்ற கிராமங்களில் உள்ள சிறார்களும் கல்வி கற்று வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வளாகத்திலே கல்விக் கூடமும், தமக்கென பொது மண்டபமும் வாசிகசாலையும் அமைத்து ஒரு வானொலிப் பெட்டியும் பெற்றுக்கொண்டனர். இவர்களது விளையாட்டு மைதானமும் ஆலய முன்றல்தான். இவ்வாறு இவர்கள் கல்வியில் கொண்ட அக்கறையினால் தமது பிள்ளைகளை அனுராதபுரம் போன்ற வெளியிடங்களுக்கு அனுப்பி கல்வியில் நாட்டம் காட்டினர். 1936ம் ஆண்டு பாடசாலை சீமெந்துக் கட்டிடமாக றோ.க.த.க பாடசாலையாக மாறியது. ஆசிரியர் தங்கும் விடுதியும் ஆலய வளாகத்திலேயே அமைந்தது. ஆலயமும் 1954இல் ஓட்டுக்கூரையாக மாற்றம் பெற்றது.

இடப்பெயர்வின் போது இக்கிராமத்தில் 70 குடும்பங்கள் மட்டுமே இருந்தது. அத்துடன் 1990இற்கு முன்பு முதலியார்குளம் கிராம அலுவலர் பிரிவு 3 கிராமங்களைக் கொண்டிருந்தது. 1994இல் 275 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு முதலியார்குளம் வீட்டுத்திட்டம் என்ற புதிய குடியேற்றத்திட்ட கிராமமும் உருவாகிவிட்டது. எவ்வாறாயினும் இவ்விரு பகுதியிலும் பழைய குடியினரின் கை மேலோங்கி நிற்பது கண்கூடு.

இவர்களில் சிலர் வெளி மாவட்டங்களில் உள்ள இந்து பெண்களை மணமுடித்து அவர்களையும் கத்தோலிக்கராக்கி கரம் பிடித்து வந்த வழியினரே அதிகம் உள்ளனர். இன்றும் இந்தப் பங்கின் பலர் அதையே கடைப்பிடிப்பது கண்கூடாக உள்ளது. எவ்வாறாயினும் இன்றைய நிலையில் பறைசாற்றும் அளவிற்கு சாதிக்க முடியாவிட்டாலும் குறைசாற்ற இடமின்றி செட்டிகுளம் பங்கின் மிக விசாலமான பெரிய கோவிலை கட்டிவிட்ட பெருமை வழித்தோன்றல்களையே வந்து சேரும்.

உசாத்துணை நூல்கள்

1. அருவியாறு
2. செட்டிகுளம் கொத்தணி மலர்
3. செவி வழி தகவல் வழங்கியோர்
1. திருமதி.செபஸ்ரியான் விக்டோரியா அவர்கள் வயது 92 முதலியார்குளம்
2. திருமதி.வில்வராசா கித்தேரியம்மா அவர்கள் வயது 94 முதலியார்குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினியன்
ப.எ.அன்ரன்

## வாழ்ந்து பார்
## வாழ்க்கை இனிக்கும்

நிகழ்காலத்தை
நிராகரித்து
இறந்த காலத்தில்
நின்றுவிடாதே!
கடந்த கால கசப்பான
அனுபவங்களை
அசை போடாதே!
சுமைகள் இறங்காது
சோகங்கள் தீராது!
நேற்றைய மனிதர்களாய்
இராதே
அனுதாபமிக்க மனநோயாளி
ஆகிவிடுவாய்
வாலிபத்தின் வசந்தம் தொலைத்து
நிகழ்கால நிஜங்களை
பறிகொடுத்து நாளையென்பதை
நினைக்கும் நாளைய
மனிதனாகாதே
இன்றை நாளின்
மனிதனாய் இரு
வாழ்வு நொடியல்ல
நொடியிலும் வாழ்ந்துபார்
கவலைகளின் முற்றுகை
நீங்கும்
எத்தனை கோடி இன்பம்
வைத்தாய் இறைவா என
ரசனையுடன் வாழ்ந்து பார்
வானம் கூட வசப்படும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவி உமா சுதசர்மா
கொக்குவில்,
யாழ்ப்பாணம்

## புத்தளம் பிரதேசமும் குப்பைத் திட்டமும்

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக மக்கள் மற்றும் சிவில் சமூகத்தின் போராட்ட களமாக மாறியுள்ளது. புத்தளம் பிரதேசம் வெகுசன ஊடகங்களிலும் அரசியல் களத்திலும் பேசும் பொருளாக மாறியுள்ள குப்பைப் பிரச்சனை பற்றிய ஒரு தேடலே இந்தக் கட்டுரை.

நாலாபுறங்களிலும் சமுத்திர நீரோட்டத்தினால் சூழப்பட்ட மையப் பகுதிகளில் காணப்படும் தீவு என்பதற்காக மட்டுமல்ல, சர்வதேச நாடுகளின் கேந்திர நிலையமாக இலங்கையின் அமைவிடம் இருப்பதாலும் இந்நாட்டுக்குள் காணப்படுகின்ற சூழலியல் செறிவுத்தன்மையான உயிர்ப்பல்வகைமை இனங்களை கொண்ட பகுதிகள் உலகப் பாரம்பரியங்களாகக் காணப்படுவதனாலும் செல்வம் மிகு பல்லுரு அமைப்புக்களைக் கொண்ட கடற்கரைகள் அமையப் பெற்றிருப்பதாலுமே இலங்கை "இந்து சமுத்திரத்தின் முத்து" என வர்ணிக்கப்படுமளவுக்கு சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ள ஆசிய நாடாகத் திகழ்கிறது.

பல்லுரு அமைப்புக் கொண்ட கடற்கரையோரங்கள் பொருளாதார ரீதியிலும், சூழலியல் ரீதியிலும் அளப்பரியவை இயற்கைத் துறைமுகங்களினுடைய செல்வாக்கு, அதற்கேற்றாற் போல் கடல்வளரிகள், கடற்கரையோரத் தாவரங்கள் புத்தளத்தில் பெருமளவு காணப்படுகின்றன. இந்த கடற்கரையோரத் தாவரங்கள் மீனவர்களின் பொருளாதார நடவடிக்கைக்கு இன்றியமையாதவை. குறிப்பாக இறால் மற்றும் நண்டு உற்பத்திக்கு கடற்கரையோரத் தாவரங்கள் மிகவும் இன்றியமையாதன. இந்தப் பகுதிகளிலே தான் அவை இனவிருத்தியை ஏற்படுத்தும். இவ்வாறான தாவர அழிவுகள் இறால் உற்பத்தியில் பாரிய தாக்கத்தைச் செலுத்தும். குறிப்பாக இலங்கையின் வடமேற்குப் பகுதிகளில் அமைந்துள்ள புத்தளம் மாவட்டம் இயற்கை வளங்களின் சாம்ராஜ்யம் புத்தளம் பிரதேசத்தின் அமைவிடத்துடன் இயைந்து நிலவும் காலநிலையும், இயற்கை வளங்களும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பை நல்கும் கேந்திர மையமாக புத்தளத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன.

"புத்தளம்" என்ற பெயர் "உப்புத்தளம்" என்ற வார்த்தையிலிருந்து மருவியதாக அறியப்படுகிறது. அதனை உண்மைப்படுத்தும் விதமாக நாட்டின் மொத்த உப்பு உற்பத்தியில் 2/3 பங்கு புத்தளத்தில் உற்பத்தியாகிறது. மூன்று தசாப்த உள்நாட்டு யுத்த்ததின் போது நாட்டின் உப்புத் தேவையின் பங்கிற்கும் அதிகமான கேள்வியை புத்தளம் நிறைவு செய்தது. இந்த உப்பு உணவிற்காகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழிலும், பசளையாகவும் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. உப்பு உற்பத்திக்கு உகந்த சூழல் காரணிகளாக பொருத்தமான உவர்த்தன்மையைக் கொண்ட புத்தளம் கடனீரேரி, இலங்கையின் மிக நீண்ட கடனீரேரியாவதோடு, யாழ்ப்பாணம் கடனீரேரிக்கு அடுத்து, பரப்பில் இரண்டாவது கடனீரேரி என்பதும் குறிப்பிடத்தக்கது. மற்றக் காரணியான வேகமாக காற்று வீசக்கூடிய பிரதேசமாகக் காணப்படுவதால் புதுப்பிக்கத்தக்க சக்தி வளமான காற்றின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய காற்றாடி மின் பிறப்பாக்கிகள் புத்தளம் கடனீரேரியின் இரு புறங்களிலும் நிறுவப்பட்டு, நாட்டின் மின்சக்தி தேவையைப் பூர்த்தி செய்வதில் பங்களிப்பு செய்கிறது.

"புத்தளம்" மாவட்டத்தை ஊடறுத்துப் பாயும் கலா ஓயா, மீ ஓயா, பத்துலு ஓயா, தெதுறு ஓயா போன்ற ஆறுகள் காணப்படுகின்றன. புத்தளத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல் மற்றும் கால்நடைகளை போஷிக்கின்றன. இலங்கையின் இரண்டாவது தேசியப் பூங்காவான வில்பத்து தேசியப் பூங்காவின் ஒரு பகுதி புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப் பூங்காவில் பல அரியவகை விலங்குகளும், தாவரங்களும், மூலிகைகளும் காணப்படுவது அப்பூங்காவிற்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுத்தந்துள்ளது. இதன் காரணமாக சுற்றுலாத்துறை விருத்தியுற்று, அந்நிய செலாவணியையும் நாட்டிற்குப் பெற்றுத்தருகின்றது. அத்துடன் சுற்றுலாக் கவர்ச்சி கொண்ட ஓர் தேசமாக கற்பிட்டி முருகைக்கற் பாறைகள், டொல்பீன்கள், திமிங்கிலங்கள் காணப்படுகின்றன. பருவகால மாற்றங்கள் காரணமாக இலங்கைக்கு வந்து சேரும் நாடுகாண் பறவைகளின் தங்குமிடமாக வில்பத்து ஈரநிலமும், ஆணைவிழுந்தான் ஈரநிலமும் காணப்படுவது சிறப்பம்சமாகும். (ரம்சார் சமவாயம் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட ஈரநிலங்கள்) மேலும் தென்னை முக்கோண வலயத்தின் முக்கியமான மாவட்டம் புத்தளம் ஆகும். மரக்கறிகள், மரமுந்திரிகை, கொய்யா, மா, வாழை போன்ற பழவகைகள் புத்தள மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண சுண்ணக்கல், மயோசின், கலாப்படிவு, புத்தளத்தின் அறுவக்காடு பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை நீளுகின்றது. இப்படிவுகளை அகழ்ந்தெடுத்து, சீமெந்து உற்பத்தி செய்யும் முதலாவது கைத்தொழில் நடவடிக்கை, சீமேந்துக் கூட்டுத் தாபனத்தினால் 1960 களில் புத்தளம் கல்லடி பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது இலங்கையில் காணப்படும் ஒரேயொரு சீமெந்து தொழிற்சாலை ஆகும். உலகில் சுண்ணக்கல் அகழும் பிரதேசத்திலிருந்து சுமார் 35 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள தொழிற்சாலையும் ஆகும். இந்த தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், சீமெந்து உற்பத்தியின் விளைவாக வெளியேற்றப்பட்ட தூசுத் துணிக்கைகளால் தொழிற்சாலையை அண்டிய பிரதேசமும், தென்னந்தோப்புகளும், மாசுபடுத்தப்பட்டிருந்த வரலாறு, மற்றும் புத்தளம் மக்கள் சுவாசம் தொடர்பான இளைப்பு, நிமோனியா, காசநோய் போன்ற சுகாதாரக் கேடுகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாகியுள்ளனர். என்பது வைத்தியசாலைகளில் பதிவு செய்யப்பட்ட உண்மைத் தகவல். இவ்வாறு தொடர்ந்து மூன்று தசாப்த காலங்களுக்கும் மேலாக தூசு துணிக்கை வெளியேற்றி விட்டு, பின்னர் அவற்றை வடிகட்டும் தொழில்நுட்பத்தை உள்வாங்கிக் கொண்டது மக்கள் மனதை ஆசுவாசப்படுத்தவேயன்றி வேறில்லை. கண்கெட்ட பின் சூரிய உதயோதயத்தை தேடும் நிலையில் அன்றைய மக்கள் காணப்பட்டனர்.

மக்கள் எதிர்பார்ப்பிலும், அரசியல் தலையீட்டாலும் திருக்கோணமலை, ஹம்பாந்தோட்டை, நீர்கொழும்பு, கம்பஹா போன்ற இடங்களில் இருந்து தட்டிக்கழிக்கப்பட்டு, இறுதியில் நுரைச்சோலையில் அனல்மின் உற்பத்தி நிலையம்அமைக்கப்பட்டது. புவி வெப்பமடைதலுக்கான மூல காரணியான காபனீரொட்சைட் மற்றும் சுவாச நோய்கள், புற்றுநோயைத் தோற்றுவிக்கும் பறக்கும் எரிசாம்பலையும் வெளியேற்றும் செய்யும் இவ்வாறான அனல்மின் உற்பத்தி நிலையங்களை மூடி இவற்றுக்கு மாற்றீடாக மீள்புதுப்பிக்கக் கூடிய வளங்களை கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் வளரந்துவிட்ட நிலையிலும் நுரைச்சோலையில் அனல்மின் உற்பத்தி நிலையத்தை நிறுவியதானது, அரசினால் புத்தளத்திற்கும், இந்த நாட்டிற்கும் இழைக்கப்பட்ட வரலாற்று அநியாயம்.

மேலும் புத்தளம் கல்லடிப் பிரதேசத்தில் நிறுவப்பட்ட சீமெந்து தொழிற்சாலைக்கு தேவையான மூலப் பொருளை (சுண்ணக்கல்) புத்தளம் அறுவக்காடு பகுதியின் படிவுகளில் இருந்து டைனமைட்டு எனப்படும். வெடிப்பொருட்கள் பாவிக்கப்பட்டு, உடைத்தெடுக்கப்பட்டு ரயில் மூலம் தொழிற்சாலைக்கு கொண்டு வரப்படுகின்றன. இவ்வாறு பாவிக்கப்பட்டு, உடைத்தெடுக்கப்பட்டு ரயில் மூலம் தொழிற்சாலைக்கு கொண்டு வரப்படுகின்றன. இவ்வாறு சுண்ணக்கல் உடைக்கப்பட்டதன் பின்னர் உருவாக்கிய பாரிய குழிகள் அறுவக்காடு பிரதேசத்தில் காணப்படுகின்றன.

கொழும்பு மாநகரத்தில் ஒரு நாளில் சேகரிக்கப்படும் சுமார் 1200 தொன் திண்மக் கழிவை இரண்டு கட்டங்களாக பத்து வருடங்களுக்கு சுகாதார நிலப்பரப்பு நிலவுகை முறை (Sanitary Landfill) மூலம் முகாமைத்துவம் செய்வதற்கான செயற்றிட்டம் 2014ம் ஆண்டில் முன்மொழியப்பட்டது. தேசிய சுற்றாடல் சட்ட மூலத்தின் பரிந்துரை செய்யப்பட்டமைக்கு அமைவாக, 100 தொன்களுக்கு மேற்பட்ட திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்யும் போதும் முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு தெரிவு செய்யப்பட்ட குழி, வில்பத்து தேசிய பூங்காவின் தாங்கல் வலயத்திற்குள் காணப்பட்டமையினாலும், சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை (ETA Report) தயாரிக்கப்பட்டது. இவ்வறிக்கையின் படி, இத்திட்டம் குறிப்பிட்ட அக்குழியில் மேற்கொள்ளப்படுமாயின் வனவிலங்குகளுக்கும், உயிர்ப்பல்வகைமைக்கும் பாதிப்பு ஏற்படும் என்று நிராகரிக்கப்பட்டது.

பின்னர், அதே பகுதியில் வில்பத்து தேசிய பூங்காவிற்கு வெளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரக்குடிய மீன்பிடிக் கிராமத்திற்கு 150*m* தொலைவில் புத்தளம் கடனீரேரியில் இருந்து 200*m* தூரத்தில் அமைந்த சுண்ணக்கல் அகழிவின் பின் மீள் நிரப்பப்பட்டு மீள் காடாக்கம் செய்யப்பட்டு, சுமார் 15 வருடங்களான 64 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டு, மீண்டும் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு பொதுமக்களுக்கும், அவர்களது வாழ்வாதாரத்திற்கும் ஏற்படப்போகும் பாதிப்புக்கள் மறைக்கப்பட்டு, அப்புதிய திட்டத்திற்கான அனுமதி 2017 இல் பெறப்பட்டுள்ளது. மீள்காடாக்கம் செய்யப்பட்ட மரங்கள் வெட்டப்பட்டு நிரப்பப்பட்ட குழிகள் தோண்டப்பட்டு இச்செயற்றிட்டம் நிறைவேற்றப்படுகின்றது.

உலக வங்கியின் சுகாதார நிலநிரப்பலுக்கான வழிகாட்டல் கையேட்டின்படி, இத்திட்டங்கள் எதிர்க்காற்று வீசக்கூடிய 250m இற்குள் குடிமனைகள் காணப்படக்கூடிய, சுண்ணக் கல் படிவுகள் காணப்படக்கூடிய, நிலத்தின் தொடரான அதிர்வுகள் காணப்படக்கூடிய பிரதேசங்களில் மேற்கொள்ள கூடாது. அந்த வகையில் இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள இடம் சுகாதார நில நிரம்பலுக்கு பொருத்தம் அற்ற (இடம்) பிரதேசம். மேலும் இச்செயற்றிட்டத்தை நிறுவுவதற்காக பொறுப்பேற்றுள்ள நிறுவனம், இத்துறையில் முன்னனுபவங்களைப் பெற்றிராத உலக வங்கியினால் தடை செய்யப்பட்ட சீன நிறுவனமாகும். இதனால் இச் செயற்றிட்டத்திற்கு என 115 மில்லியன் டொலர்களை நிதியுதவியாக வழங்குவதிலிருந்தே உலகவங்கி நிதியுதவியை வழங்க முடியாதென தெரிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதேசம் தென்மேல் பருவக்காற்று அதிகமாகக் கிடைக்கும் பிரதேசம். அதேபோல் வருடம் முழுவதும் காற்றைப் பெறும் பிரதேசம். இப்பிரதேசத்தில் குப்பையிலிருந்து வெளியேறும் துர்நாற்றம் எதிர்க்காற்றில் எடுத்துச் செல்லப்படும். இதனால் வில்பத்து தேசியப்பூங்காவில் குறிப்பாக யானை மற்றும் ஏனைய விலங்குகள் தமக்கான உணவைத் தேடி அவ்விடத்தை நாடுவதால், விலங்குகள் பயணிக்கும் பாதையில் அமைந்துள்ள கங்கேவாடிய, பூக்குளம், பழைய எலுவன்குளம், புதிய எலுவன்குளம் போன்ற கிராமங்களில் பொருள் சேதம், உயிர்ச்சேதம், உடைமைச்சேதம் என்பன ஏற்படுவதோடு மனிதர், மற்றும் விலங்குகளிடையேயான வாழிடத்திற்கான முரண்பாடு அதிகரிக்கும். பின்னர் யானைகளின் வாழிடப் பிரதேசமாக எதிர்காலத்தில் மாறுவதற்கான சாத்தியப்பாடுகளும் உண்டு.

சுண்ணக்கல் படிவுகள் காணப்படும் தரைத்தோற்றத்திற்கு அமைய அப்பிரதேசம் நிலக்கீழ் நீரைத் தேக்கி வைக்கும் பிரதேசமாகவும் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் தொடர்ந்து டைனமைட் வெடிபொருட்கள் பயன்படுத்தப்படுவதால், இப்பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள அதிர்வுகளின் காரணமாக வீட்டுச் சுவர்களில் வெடிப்புக்களும் ஏற்பட்டுள்ளன. அதே போல், நிலநிரம்பலுக்காக குழிகளினுள் போடப்படும் சுமார் 3 அடி தடிப்பான படையின் மேல் 40m உயரத்திற்கு ஏற்படுத்தப்படும் குப்பை மலையின் அதிர்வுகளால் வெடிப்பு ஏற்படலாம். திண்மக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிவுகளிலிருந்து உருவாகும் பார உலோகங்களைக் கொண்ட நச்சுத்திரவம், நிலக்கீழ் நீரை அடையும்.

இதன்விளைவாக நிலக்கீழ் நீரை நம்பியிருக்கும் குடிநீர், விவசாய மற்றும் கடனீரேரியை சென்றடையும் நிலக்கீழ் நீரினால் மீன்வளம், உப்பு உற்பத்தி, இறால் வளர்ப்பு என்பன அழிவடையும். இச்செயற்றிட்ட முன்மொழிவாளர்கள் குறிப்பிடும் பரிகரிப்பு முறையானது உயிரியல் ரீதியான பரிகரிப்பு முறையே அன்றி இரசாயன ரீதியான பரிகரிப்பு முறையன்று எனவே பார உலோகங்களான இரசம், ஈயம், ஆசானிக், கட்மியம், போன்றவற்றின் பாரதூரமான விளைவுகளைப் பற்றிய புரிதல் என்பதை குறிப்பிடப்பட வில்லை. மேலும் 1968 முதல் 1977 வரை ஐக்கிய அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட சுகாதார நிரப்பலால் ஏற்பட்ட பாதிப்பை நிவர்த்திக்க, 1991 இலிருந்து இன்று வரை சுத்தப்படுத்தல் நிகழ்வு இடம் பெற்றுக் கொண்டிருப்பது இச்செயற்றிட்டம் பிழைத்துப் போகும் என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரமாகும்.

மேலும் உள்நாட்டுக் குப்பை மட்டுமல்லாது சிங்கப்பூர் நாட்டினதும், மருத்துவக்கழிவுகளையும் புத்தளத்தில் கொட்டுவதற்ககான உடன்படிக்கையும் அரசாங்கத்தால் கைச்சாத்திடப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். மற்றும் இந்த குப்பைத் திட்டம் புத்தளத்தை மட்டுமல்ல மன்னாரைக்கூட பாதிக்கக்கூடிய உலகில் அமேசன் காட்டுப்பகுதியில் மரத்தை வெட்டினால் இலண்டனில் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். ஆனால் சொந்த நாட்டில், சொந்த மண்ணுக்குரிய மக்கள் நாம் வாழும் பிரதேசத்திற்கு கேடான இந்தத் திட்டத்தை எதிர்த்து அறவழிப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஆதரவளிக்க அல்லது இந்தத் திட்டத்தை கைவிட யாராவது நடவடிக்கை எடுக்கின்றார்களா? என்பது கேள்விக்குறிக்கான விடயம்.

திண்மக் கழிவுகளுக்கான சரியான ஒருங்கிணைந்த முகாமைத்துவம் தேவை. நாட்டில் தற்போதைய நிலையில் பார்த்தால், குப்பையை சேகரிப்பதற்கு போதுமான வாகன வசதிகள் இல்லாதிருப்பதை காணலாம். வேறுபடுத்திய தரம்பிரித்த குப்பைகளையே வெவ்வேறான வண்டிகளில் ஏற்றி செல்ல முடியாமல், ஒன்றாக கொட்டி எடுத்துக் கொண்டே செல்கின்றன. இப்படியான சீரான வாகன வசதிகள் இல்லாமல் துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்க, குப்பை சேகரிப்பவனுக்கே ஒழுங்கான பாதுகாப்புக் கவசங்கள் இல்லாமலிருக்க, மேலும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுகளை வெளிநாட்டிலும் இருந்தும் பெற்றுக்கொண்டு நாட்டை முன்னேற்றப் போகிறார்கள். இப்படி இருந்தால் நாட்டின் குப்பைப் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. பிரயதர்சினி
செட்டிகுளம்.

## அழிந்து வரும் கலாசாரத்தை பாதுகாப்போம்.

கலைகள் பல பொங்கி வளர்ந்த மண்ணிலே
கலாசாரம் எங்கே?
நடைமுறை இல்லாத பண்பாடும்
இதனால்நடை பாதையிலே நம் கலாசாரம்
தமிழர் பண்பாடே தழைத்தோங்கிய பண்பாடு
என பாடினோர் பல கவிஞர்கள்
தற்போது தமிழரிடையே பண்பாடு எங்கே
பழக்க வழக்கங்கள் எங்கே?
தினம் தினம் மது போதையிலே மாய்ந்து கிடந்து
கலாசாரத்தை பாழாக்கும் மானிடா - சற்று சிந்தி!
உன்னால் ஊற்றெடுத்த கலாசாரம்
தற்போது உன்னாலே அழிந்து வருகின்றதே
கண்களை மூடி அறியாமை எனும் இருளிலே
மூழ்கி கிடக்கும் மானிடா
ஒழுக்கம் உள்ள இடத்திலே கலாசாரம் மேலோங்கும்
என்பதற்கு "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"
என்ற வள்ளுவர் வாக்கே சான்று
பண்டைய கால மானிடர்கள் பண்பாட்டை பற்றி அறிந்தார்கள்
கலாசாரத்தை பற்றி அறிந்திருந்தார்கள்
இதனாலேயே இவர்கள் இவர்களால் கலாசாரத்தை பாதுகாக்க முடிந்தது
கட்டி யெழுப்ப முடிந்தது.
ஆகையால் தற்கால சமுதாயம் சற்று
சிந்திக்க வேண்டும்.
அழிந்து வரும் கலாசாரத்தை பாதுகாக்க வேண்டும்.
ஒவ்வொருவரும் உறுதி கொள்ள வேண்டும்.
தற்போதைய கலாசாரம் சீர்கெடுவது எம்மால் மட்டுமே
அதனால் அழிந்து போன கலாசாரத்தை
கட்டியெழுப்ப ஒன்றிணைவோம்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்கவி சி. தமயந்தி
எழுத்தாளர்

# வன்னியில் முத்துமாரி

வன்னியை ஆண்ட மன்னர்களும் மக்களும் விவசாயத்தையும், வேட்டையையுமே தொழிலாகக் கொண்டிருந்தனர். பெரும்பாலும் காட்டிலும் கானலிலும் அலைந்து திரிபவர்களாதலால் தமக்கு நோய் நொடி அண்டாமலும், காடுகளில் வழிகாட்டியாகவும் முத்துமாரியம்மனையும் இன்னும் சிறு தெய்வங்களையுமே நம்பியிருந்தனர்.

இவர்களுடைய வழிபாட்டில் முத்துமாரி ஐயனார், வைரவர், நரசிங்கர், பிள்ளையார், காளி, வீரபத்திரர் போன்ற தெய்வங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. குறிப்பாக இவை ஆரிய சமஸ்கிருத மந்திரங்களுக்கு உட்படாதவை யாகவேயிருந்தன.

பண்டாரவன்னியன் காலத்தில் காடுகளில் யானைகளை மறித்துக்கட்டி அவற்றை விற்பதிலும் வேலைகளுக்கு பயிற்றுவிப்பதிலுமே பெரும்பாலும் மக்கள் ஈடுபட்டனர். வன்னியில் மறிக்கப்படும் யானைகளை கட்டி வைக்கவும் அவை உரிய இடங்களுக்கு கொண்டு செல்லும் வரை பாதுகாக்கவும் பெரியமடுக்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இவை, பெரிய குளங்ககளைக் கொண்டதாகவும் அருகிலேயே ஒரு முத்துமாரியம்மன் கோவிலைக் கொண்டதாகவும் பிரபலமான ஊர்களை இணைக்கக்கூடியதாகவும், அமைக்கப்பட்டிருந்தன.

அக்காலத்தே மக்கள் தம் பெரு நில மன்னர்களுக்கு நிறையாக தேன் மெழுகு, யானை போன்றவற்றையே திறையாகச் செலுத்தி வந்தனர். போர்த்துக்கேயர் தமது காலத்தில் சிற்றரசாக நியமிக்கப்பட்ட மன்னர்களிடம் குறித்த அளவு யானைத்தந்தங்களையும், தேன்மெழுகையும், தானியங்களையுமே கப்பமாக கோரியிருந்தார்கள். இவற்றை வழங்க கைலாய வன்னியன் மறுத்துவிட்டே போர் மூண்டதாக வரலாறு உள்ளது.

வவுனியா மன்னார் வீதியில் கன்னாட்டியை அடுத்து அதன் தெற்கில் ஒரு பெரிய மடு உள்ளது.

கொஞ்சம் முன்னதாக மருதமடு மடுமாதா கோவிலும், அதன்பின்னே தட்சணாமருதமடு, பாலம்பிட்டி, பெரியமடு, என்ற கிராமங்கள் அமைந்துள்ளன. இங்கேயும் மடுமாதா தேவாலயம் இருக்குமிடம் முன்பு மாரியம்மன் கோவிலாகவே இருந்ததாக என் பூட்டி சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன். போர்த்துக்கேயர் காலத்தில்தான் இந்த மாரியம்மா மேரியம்மாவாக மாறியதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போத்துக்கேயதுரை மாரியை அப்புறப்படுத்திவிட்டு மேரியை வைத்துவிட்டு படுக்கைக்குப் போவானாம். காலையில் எழுந்து பார்த்தால் விபூதிப்பூச்சுடன் மாரியம்மா இருப்பாளாம். இதன் காரணமாக இரு மதத்தவரும் அங்கே வழிபடச்செல்வது வழமையாகியதாம். என ஒரு ஐதீகக் கதையே புழக்கத்தில இருக்கிறது.

இப்பால் யாழ்ப்பாணவீதியில் திரும்பினால் பனிக்கர்நீராவி என்றொரு கிராமம் உண்டு. பனிக்கர்கள் வாழ்ந்த இடம். பணிக்கர் எனப்படுவோர் யானைகட்டி சீவியம் செய்வோராம். இன்னும் இவர்கள் இக்கிராமத்திற்கு உள்ளே ஒரு இரண்டுகல் தொலைவில் பெரியமடுக்கிராமம் பெருங்குளத்துடனும் முத்துமாரியம்மன் கோவிலுடனும் உள்ளது. இங்கிருந்து தெற்கே பாலமோட்டை, வடக்கே மன்னாகுளம், மேற்கே குஞ்சுக்களம் அம்மன்கோவில் கடந்து மூன்று முறிப்பும், கிழக்கே யாழ்ப்பாண வீதியையும் அடையக்கூடியவைகாக உள்ளது.

மேற்கே பாலமோட்டைக்கருகே மாதர் பணிக்க மகிழங்குளம் என ஒரு கிராமம் உண்டு. அக்காலத்தில் பெண்களும் யானை கட்டி மறிக்கும் வல்லமையுடன் இருந்தார்கள் என்பதற்கு சான்றாக வேலாத்தை, அரியாத்தை வேலுநாச்சியார் போன்றோரின் கதைகள் உள்ளன. இங்கே ஒரு கிராமம் கிழவன்குளம் என வழக்கிலுள்ளது. கிழவிகுளம் மாங்குளத்தைக் கடந்து பனிக்கன் குளத்தையடுத்துள்ளது. இந்தக்கிராமங்களில் சிறு தெய்வ வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும். ஊரவரே பூசாரியாக இருப்பார். பறை மேளம் முழங்க திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறும்.

புளியங்குளத்திலிருந்து நெடுங்கேணி செல்லும் வழியில் நைனாமடுவினூடாக தெற்கிலும் கனகராயன்குளம் கிழக்கேயுள்ள கரப்புக்குத்தி வீதியின் உள்ளே ஒரு பெரியமடு உள்ளது. இதுவும் நெடுங்கேணியை குளவிசுட்டான் வழியாகவும் கனகராயன் ஆற்றுவழியே ஒட்டுசுட்டான் வீதியை அடைய வல்லது என்பதுடன் இங்கும் அம்மன்கோவில் உள்ளது. அடுத்ததாக காட்டின்நடுவே கற்கிடந்த அம்மன் கோவிலையும் பெருங்குளத்தையும் கூடவே கனகராயன் ஆற்றுப்பகுதியையும் கொண்டது. கனகராயன் குளத்திலிருந்து கரிப்பட்டமுறிப்பையடையும் வீதி. அவ்விடத்தைக் குறுக்கே கடந்து அம்பகாமத்துள் இறங்கி இரணைமடு நோக்கி செல்லும் குதிரைப் பாதையாகும். கரி என்றால் யானை, யானை பொறியில் மாட்டிய இடம் கரிப்பட்ட முறிப்பு.

மன்னர்காலத்தில் எல்லாம் குதிரைப்பாதைகளே. என்பதோடு வழிப்போக்கர்களுக்கான இளைப்பாறும் இடங்களாக இந்து கோவில்களும், கிணறுகளும் இருந்திருக்கின்றன. கற்கிடங்கு அம்மன் கோவில் வழியாக சென்றால் யாரும் அந்தக்கோவில் கிணற்றில் நீர் பருகாமல் கைகால் அலம்பாமல் செல்வதில்லை. நில மட்டத்திலிருந்து சுமார் ஐந்தடி உயரத்தில் மேட்டில் அமைக்கப்பட்டிருக்கும் நாலடி விட்டமேயுள்ள கிணற்றில் படிகளில் ஏறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரைப்பார்த்தால் வியப்பு. காரணம் சாதாரண நில மட்டத்தில் அருகே நீரிருக்கும். மேலும் அன்னதானச் சத்திரங்களும் இந்துக் கோவில்களில் இருந்தமைக்கு அழிவடைந்து போயிருக்கும் பழைய அன்னதானச் சத்திரங்களின் இடிபாடுகள் சான்றாகின்றன.

மன்னகுளத்தையடுத்து இருண்ட வனத்தின் நடுவே கற்குளம் அம்மன்கோயில் அமைந்துள்ளது. பெரும் பாறைகளை அரணாகக் கொண்டு ஒரு சிறிய கோவிலில் அம்மன் அருள் பாலிக்கிறாள். இங்கு பூசகர் வேளாவேளைக்கு வந்து பூசை செய்கிறார் என்பதே பெருவியப்பு. இக்காட்டில் தனியே அவருடைய குடும்பம் வாழ்ந்தது. மன்னா குளத்திலிருந்து பாலைப்பாணி ஆறு கடந்து சென்று வவுனிக்குளம் அடையும் காட்டுவழியில் இந்தக்கோவில் உள்ளது. இதைப்பார்ப்பதற்காக நிலாந்தனுடைய குழுவினர் காடுகளுக்குள் அலைந்தும் கோயிலை அடைய முடியவில்லை எனற வருத்தத்தோடு சென்றதாக தனது வன்னி மான்மியம் என்ற நூலில் குறிப்பிடுகிறார். யுத்தத்தின் பின் கோவில் வளர்ச்சியடைந்துள்ளது.

இந்தக் கோவில்களில் வருடாந்த அறுவடைக்குப்பின்னரான விழாக்கள் நடைபெறுகின்றன. கிராமவாசிகள் முழுமையாக இந்த விழாக்களில் கலந்து கொள்கின்றனர். அவர்கள் வீடுகளில் சமைப்பதில்லை. திருவிழா முடியும்வரை கூட்டாஞ் சோறுதான் எல்லோருக்கும் கோவிலடியில் ஒன்றாக சமைத்து உண்கிறார்கள்.

ஊருக்கு விளக்கு வைத்து பூசகர் விழாவை ஆரம்பிக்குமுன் அந்த வட்டாரத்திற்கு வெளியே உள்ள அம்மன் கோவில்களுக்கு வாள் சிலம்பு, காப்பு வேப்பிலை சங்கு, சல்லரி சகிதமாக தெண்டலுக்கு செல்வார். ஒவ்வொரு கோவிலிலும் இவர்களுக்கு உணவழித்து பொருள் கொடுத்து வழியனுப்புவதுடன் விழாவுக்கும் வருவார்கள். ஆயிரத்தெட்டு பழம், பாக்கு, வெற்றிலை, ஆயிரத்தெட்டு மோதகம் அதேயளவு வடை, கடலை, அவல் என பூசை பொருட்கள் சமைப்பதுடன் அன்னதானமும் தனியாக நடக்கும். பொங்கலுக்கு முதல்நாள் மடைப்பண்டம் எடுத்தல் ஊரவர்கள் தத்தம் வீடுகளிலிருந்து வாழைக்குலை, பலாப்பழம், மாம்பழம், இளநீர், கரும்பு, தேன், நெய், பச்சரிசி, பால் என தேவையான அன்னத்தையும் ஓரிடத்தில் குவித்து வைத்து அவற்றை மேளதாளத்துடன் கோவிலடிக்கு கொண்டு செல்வர். இப்பொருட்கள் கட்டாடியால் வாசலில் விரிக்கப்படும் வெள்ளைத்துணியில் பரப்பி வழுந்துப் பானையும் சேர்த்து மேலொரு வெள்ளை துணியால் மூடிவிடுவர்.

பூசகருக்கு கலையாடுமளவுக்கு பறை மேளங்கள் ஆக்ரோசமாக முழங்கும் சில ஊரவர்களும் தன்வசமிழந்து கலையாடுவர். குறித்த நேரத்தில் வழுந்துப்பானைக்குள் பால்விட்டு பூசகர் அடுப்பேற்றுவார். பெங்கல் படையல் எல்லாம் முடிந்தபின் வழிவெட்டிவிடுதலுடன் விழா நிறைவு பெறும் இவ்வாறு வழிவெட்டும் இடத்தில் பெண்கள் குழந்தைகளை நிற்க விடமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்காண வந்திருந்த துணைத் தெய்வங்களான அம்மனின் படைவீரர்களே இப்படி வழியனுப்பப்படுகிறவர்களாகும். இதில் காடன், மாடன் வராகி, பேச்சி சண்டிபோன்ற உக்கிரமான தெய்வங்களாகையால் இந்த ஏற்பாடு இனி காட்டுக்குவெளியே அருள் பாலிக்கும் அம்மன்கோவில்களில், வைரவபுளியங்குளம் அம்மன், கிடாசூரி இரட்டைக்கோவில், கோவில் சமளங்குளம் அம்மன் கோவில் பாலியம்மன், வாவெட்டி மலை, கொல்விளாங்குளம், வண்ணான் சின்னக்குளம் (இப்போது அரசர்பதி) வன்னிவிளாங்குளம், நாம்பன்குளம் அம்மன் கோவில்களும் பிரசித்தி பெற்ற மன்னர் காலத்துக்குக் கோவில்கள் என காணக்கிடைப்பவற்றுள் சிலவாகும். மன்னர்காலத்தவையான சிவன்கோவில்கள் பற்றிப் பின்னர் பார்ப்போம். கண்ணகியம்மன் கோவில்கள் இவற்றுள் அடங்கினாலும் கண்ணகி மனிதப்பிறவியாகையால் தனிப்பட அவளுக்கு மந்திரங்கள் இல்லை. பிராமணர்கள் பொதுவாக அம்மனுக்குரிய மந்திரங்களையே ஓதுகின்றனர்.

வன்னியின் பாரம்பரியங்கள் அழிந்துவிடாமல்... இன்னும் கூட தமிழ் மரபுப்படி, பேணப்படுகிற கோவில்கள் குறைந்து வருவது வேதனைக்குரிய விடயங்களே. சிறு தெய்வ வழிபாடுகளில் ஆரிய ஆதிக்கம் மேவி வருகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரா.மயூசனா
வ/செட்டிகுளம் மகா வித்தியாலயம்
தரம் - 06

# பொங்கலோ பொங்கல்

தைமகள் வந்தாளென்று
தையாள் மகிழ்ந்து நின்றாள்
மைவிரி மாதர் வண்ண
மாக்கோலம் போட்டு வைத்தார்

உழவரின் பெருநாளின்று
உழைப்போரும் மனம் மகிழ்ந்தார்
உழவுக்கு உதவி செய்த
உயர் "காளை" க்கும் பெருநாள் நன்றாம்

பெண்மைக்கு "தாலி" கிடைக்கும்
பேரின்ப பொங்கலிதில்
வன்மையும் நோயும் போரும் போக
வரவேற்போம் தை பொங்கலினை

ஏகனின் அருளை கொண்டு
எல்லாமே கிடைக்கட்டுமிங்கு
ஆகமங்கள் அனைத்தும் சொன்ன
அருள் பொழியட்டும் நன்கு

தாய்மையின் உணர்வை பேணும்
ஆண்மைகள் பிறக்க இனியும்
மேன்மையாய் வந்த பொங்கலே
மெய்மை வாழ்த்துக்கள் உனக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நி. ஹரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
வெங்கல செட்டிகுளம்.

# போதையற்ற ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புவோம்.

மனித சமுதாயம் இன்று இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி பதித்து வெற்றி நடைபோட்டு வருகின்றது என்றால் மிகையாகாது. ஆயினும் இந்த வெற்றி நடைக்கு தடங்கலாக போதைப்பொருள் பாவனை தலைதூகக்கி நிற்கின்றது என்றாலும் அதுவும் மிகையாகாது. எனவே மனித சமுதாயத்திற்கு அச்சுறுத்தலாக உள்ள போதைப்பொருள் என்றால் என்ன? அதன் வகைப்பாடுகள் எவை? அது எவ்வாறு மனித சமுதாயத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது? அதனை அழித்தொழிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவை? என்பன தொடர்பாக இக் கட்டுரை சுருங்க விளக்குகின்றது.

அந்த வகையில் முதலில் போதைப்பொருள் என்றால் என்ன? எனப் பார்ப்போம். சாதாரணமாக இருக்கும் தனிமனிதனின் சுய நினைவை இழக்கச் செய்து அவனை ஒரு அசாதாரணமான நிலைக்கு இட்டுச் செல்வதற்கு பயன்படுத்தப்படும் ஒரு தாக்கு வன்மையுள்ள பொருளே போதைப் பொருள் ஆகும். அடுத்து இதன் வகைப்பாடுகள் பற்றி நோக்கினால் இதனை பொதுவாக இரு வகைக்குள் அடக்கலாம். ஒன்று மென் போதைப்பொருள், மற்றையது வன் போதைப்பொருள் மென் போதைப் பொருளுக்கு உதாரணமாக தேனீர், கோப்பி, பாக்கு, புகையிலை, மென்பானம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். வன் போதைப் பொருளுக்கு உதாரணமாக மதுசாரம், சிகரட், கஞ்சா, கசிப்பு, மாவா, அபின், ஹெரோயின், கொக்கோயின் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இரண்டாவதாக குறிப்பிட்டலை மனிதனை கூடுதலான அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் போதைப்பொருள் பாவனையே இக் கட்டுரை ஆராய்கின்றது.

அடுத்ததாக போதைப்பொருள் பாவனை எவ்வாறு மனித சமுதாயத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது எனப் பார்ப்போம். இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளிலேயே போதைப் பொருள் பாவனையை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. என்று அண்மையில் உலக சுகாதார நிறுவனம் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது. இந்நாட்டு மக்கள் வாழ்வாதார சவாலுக்கு முகம் கொடுப்பதாலும் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் கட்டாயத்தில் உள்ளதாலும் மன அழுத்தத்தை தவிர்க்க போதைப்பொருளை ஒரு மார்க்கமாக எண்ணுகிறார்கள் என்று அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சமுதாயம் ஒரு ஆரோக்கியமானதாக இருக்க வேண்டுமெனின் சுய நினைவு, தமக்கே உரித்தான பண்பாடு, நோயற்ற வாழ்வு, நீடித்த மகிழ்வான ஆயுள் போன்றவற்றை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். ஆனால் இவற்றை மழுங்கடித்து ஒரு ஆரோக்கியமற்ற மனித சமுதாயத்தை போதைப்பொருள் வர்த்தகம் உருவாக்கியுள்ளது. மேலும் போதைப்பொருள் பாவனைக்கு உள்ளானவர்கள் தாமே பல உயிர் கொல்லும் மோசமான நோய்களை விலைக்கு வாங்குவதோடு போதைப்பொருள் பாவனையில் சிலர் வீதி விபத்துக்குள்ளாகி அங்கவீனர்களாகி சிலர் மரணப்படுக்கைக்கும் ஆழ்த்தப்படுகின்றனர். ஆனால் குறிப்பிட்ட நபர் மட்டுமல்ல அவர் சார்ந்த குடும்பமும் பாரியதாக்கங்களை எதிர் கொள்கின்றது. அத்தோடு திருட்டுச் சம்பவங்கள், கலாசார சீரழிவுகள், பாலியல் துஷ்பிரயோகங்கள், மற்றும் மனித படுகொலைகள் மேலோங்கி காணப்படுவதற்கும் இந்த போதைப்பொருள் பாவனையால் ஏற்படுகின்ற தனிநபர் பிரச்சினை ஒரு குடும்ப பிரச்சினையாகி அது சமூகப்பிரச்சினையாகி பின்னர் அது நாட்டுப்பிரச்சினையாக இறுதியில் ஒட்டுமொத்த நாட்டின் இறைமைக்கும் தீங்கு பயக்கும் முக்கிய காரணியாக போதைப்பொருள் காணப்படுகின்றது.

முடிவாக போதைப்பொருள் பாவனையை எவ்வாறு இல்லாதொழிக்கலாம் என்பதனை நோக்குவோம். அந்த வகையில் மக்களுக்கு போதைப்பொருள் பாவனையினால் ஏற்படக்கூடிய தீமைகளை கருத்தரங்குகள், வீதி நாடகங்கள், சுவரொட்டிகள், குறும்படங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக கூறி விழிப்புணர்வடைய வைத்தல். அத்தோடு பொலிசாருக்கு தகவல்களை வழங்கி பொருத்தமான நடவடிக்கை எடுக்க வைத்தல். மற்றும் மதுவரித் திணைக்கள அவசர தொலைபேசி இலக்கமான 1984க்கு அழைப்பினை ஏற்படுத்தி போதைப்பொருள்சார் பிரச்சினையை தெரியப்படுத்தல். போதைப் பொருட்களை நாடுவதற்குரிய காரணங்களை அறிந்து அதிலிருந்து மீள்வதற்கு பொருத்தமான வழிவகைகளை (கலை, விளையாட்டு, சுற்றுலாவின் பால் ஆர்வம், உளவள ஆலோசனை) மேற்கொள்ளல்.

மேலும் போதை நோய்க்கு அடிமையாகி மீள முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்து திருந்திவாழ வழி செய்தல், போதைப்பொருள் பாவனையாளர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கி வைத்தல், மற்றும் அலுவலகங்களில் கடமை நேரத்தில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடும் அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு வேலையிலிருந்து இடைநிறுத்தல். மேற்கூறிய வகைகளின் மூலம் போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிக்க முடியாத சந்தர்ப்பத்தில் போதைப்பொருள் உற்பத்தியினை முற்றாக தடைசெய்வதோடு போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களை இனம் கண்டு வேறு நபர்கள் போதைப்பொருள் சம்பந்தமான உற்பத்தியிலோ வர்த்தகத்திலோ ஈடுபடாதவாறு பயத்தினை ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்கு கடூளிய சிறைத் தண்டனை, மரண தண்டனை, வாளால் கழுத்தை வெட்டி கொல்லுதல், துப்பாக்கியால் சுட்டுக் கொல்லுதல் போன்ற உயரிய தண்டனைகள் வழங்குவதன் மூலம் போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. கஜேந்திரன்
கிராம அலுவலர்,
பாவற்குளம் படிவம்-02.

## "தொட்டுணராப் பண்பாட்டு அழிவும் பொருளாதார பாதிப்பும் வீரபுரம் கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு"

வீரபுரம் கிராமமானது 1950ம் ஆண்டளவில் இடம்பெற்றுள்ள குழப்பத்தின் காரணமாக மலையகப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களை மீள்குடியமர்த்தி பத்திராதபுரம் என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு மகிழ்ச்சியுடன் வாழ்ந்த மக்கள் மீண்டும் 1990 ஆம் ஆண்டளவில் இடம் பெற்ற இன வன்முறை காரணமாக முழுமையாக இடம் பெயர்ந்து இந்தியா சென்று 1993ம் ஆண்டளவில் அதிமேதகு முன்னால் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் வீடமைப்புக் கொள்கைக்கு அமைய புதிய வீரபுரம் கிராமம் உருவானது. இக்கிராமத்திற்கு நாட்டின் பல்வேறு பகுதிகளையும் பூர்வீககமாக கொண்ட தமிழ் மக்கள் குடியேறினார்கள். தற்போதைய வீரபுரம் கிராமம் உருவானது.

இக்கிராமத்தில் குடியேறிய மக்கள் பல்வேறு பிரதேசங்களில் இருந்து குடியேறியதால் பல்வேறுபட்ட கலாசார பண்பாட்டு பின்புலம் கொண்டிருந்தார்கள். இவர்களின் பண்பாட்டு கலாசாரம் வழிபாட்டு சடங்கை மையமாக கொண்டே இருந்தது. இதன் காரணமாக பல்வேறு ஆலயங்கள் தோற்றம் பெற்றன. அவையாவன முத்துமரி அம்மன் ஆலயம், அரசடி பிள்ளையார் ஆலயம், காளி அம்மன் ஆலயம், முனியப்பர் ஆலயம், மாடசாமி ஆலயம் என்பன அமைக்கப்பட்டன.

இவ்வாலயங்களில் நடைபெற்ற பூசை நடவடிக்கைகள் இவ்வாலயத்தை அமைத்தவர்களாலே இடம் பெற்றது. இவர்களின் பூசை முறையானது பரம்பரை பரம்பரையாக மேற்கொண்டு வந்த வித்தியாசம் பண்பாடு என்பன மேலோடின. இப்பூசையை மேற்கொண்டோருக்கு உதாரணமாக நிருமாண்டி தேவர் அரசடி பிள்ளையார் ஆலயம், திரு பச்சைமுத்து முனியப்பர் ஆலயம், திரு முத்துசாமி முத்துமாரி அம்மன் ஆலயம் போன்றவற்றை உதாரணமாக கொள்ளமுடியும்.

மேற்படி கலாசாரம் ஆனது 2000 ஆம் ஆண்டளவில் மாற்றம் அடைய தொடங்குகின்றது. அதாவது ஆலயங்கள் ஆகமமுறைக்கு மாற்றப்படும் கலாசார முறையானது கிராம மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் காரணமாக மக்கள் பல்வேறு பண்பாட்டு உரிமைகளை இழந்தார்கள். குறிப்பாக முத்துமாரி அம்மன் ஆலயம், அரசடி விநாயகர் ஆலயம், காளி அம்மன் ஆலயம் என்பன இவ்வாறான செயற்பாட்டுக்குட்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறை சென்று நாம் விரும்பியவற்றை வேண்டி உணர்ச்சி மேலீட்டால் பறைதாளத்திற்கு மெய்மறந்தாடிய மக்கள் பலியிட்டு கிராமமாய் ஒன்று கூடி மகிழ்ந்திருந்த தருணங்கள் மறைக்கப்பட்டன, மறுக்கப்பட்டன. இதை மறந்து குருக்கள் பூசை, பல மண்டபங்கள் தாண்டி நின்று எட்டிப்பார்த்து வழிபட வேண்டிய நிலை இதெல்லாம் விதியென விடப்படினும் பொருளாதாரம் என்று பார்க்கில் 80% வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களை கொண்ட வீரபுரம் தற்போது நான்கு ஆலய கும்பாபிஷேக உற்சவத்தின் போது பெரும் தள்ளாட்டத்தை எதிர் கொள்கிறது. குறிப்பாக குருக்கள் கொடுப்பனவு 30000 ஆயிரத்தை தாண்டுகிறது. மக்கள் ஒத்துழைப்பு இன்றி ஆலய நிர்வாகம் அல்லோலகல்லோலப்பட்டு ஒருவாறு சமாளித்து வருகின்றனர்.

வழமையாக தம்வீட்டில் காணப்படும் வயலில் விளைந்த நெல்லைக்குற்றி அரிசியாக்கி சாதம் செய்து வீட்டில் வளர்த்த கோழி, ஆட்டினைக் கொண்டு பலியிட்டு தேசிக்காய் வெட்டி உருவேறி ஆடியபோது நம் நாட்டு உற்பத்தி தன்னிறைவு கிராமத்திற்கும் அப்படியே இருந்தது.

தற்போது இந்திய பட்டு வாசனைத்திரவியம் இறக்குமதி செய்த பொருள் விலை அதிகம் நட்டுவ மேளம் வேறு இருப்பதை இருப்பது போல் வளர்ச்சி அடையவிட்டால் பண்பாட்டு மாற்றம் பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்தாது. உதாரணமாக வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம், உடப்பு நீரோபதை ஆலயம், கல்லடி முத்துமாரி அம்மன் ஆலயம் என்பவை இன்னமும் ஆகமம் சாராது வளர்ந்ததை எடுத்துக் காட்டும்.

குறிப்பு : ஆகமம் சாராது என்பது முறைசாராத என்ற பொருள் கொள்ளலாம் ஆனாலும் மேற்சொன்ன ஆலயங்கள் சமஸ்கிருதம் தவிர்த்தல் நமது முறைகளை கொண்டிருக்கிறது. ஆகவே ஆகமம் சாராதது என்பதை விட தமிழ் மரபினது என்பது பொருத்தமான மொழிவழக்காகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி. குகவாணி மாரிமுத்து
(ஆசிரியை)
கணேசபுரம்.

# மனித மாற்றம் எப்படி

மனிதன் ஒரு மிருகம். அவன் சமுக, கலாசார, மத, விழுமியங்கள் மற்றும் நாகரிக மாற்றத்தினாலும் தனக்கென ஒரு கட்டுப்பாட்டை விதித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றான். உணர்ச்சிகள் உருவாகுவதில்லை. மனிதனை வாழவைப்பதும், விழவைப்பதும் அவனது சிந்தனைகளே! எண்ணங்கள், நம்பிக்கைகள், உணர்ச்சிகள் என்பனவே செயல்களாகின்றன. உதாரணமாக என்னைக் கண்டால் யாருக்குமே பிடிக்கவில்லை. எப்போது பார்த்தாலும் என்மீது எரிந்து விழுகின்றனர். அப்படி என்னிடம் என்ன குறைகண்டார்கள். நம்மை ஏன் இவர்கள் ஒதுக்குகின்றனர்? இப்படி பெண்களுக்கு மனம் அலைபாய்கின்றது. இதற்கென்ன காரணம்? வெளிக்காரணங்களை தேடி அலையவேண்டாம். உங்களுக்குள்ளேயே காரணங்கள் கொட்டிக்கிடக்கின்றன. அவற்றை சரி செய்து கொண்டார் போதும் வாழ்க்கை சீராக அமையும்.

### சமூக உறவை சீராய் வைத்திருங்கள்

உங்கள் உறவினர்கள், நண்பர்கள், அண்டை வீட்டில் உள்ளவர்கள், உங்களுடன் வேலைபார்ப்பவர்கள், நீங்கள் அடிக்கடி சந்திப்பவர்கள், உங்கள் மீது அக்கறை செலுத்துபவர்களிடம் நீங்கள் நல்ல முறையில்பழக வேண்டும். அவர்களிற்கு வேண்டிய உதவிகளை செய்ய வேண்டும். அவர்களால் பின்பற்ற முடியாததை செய்யச் சொல்லி ஊக்கப்படுத்தல் வேண்டும்.

### பிச்சினையை கண்டு மலைக்க வேண்டாம்.

பிரச்சினைக்குரிய விடயங்களை தீர்க்க முடியாத பிரச்சினைகள் என்று நினைத்து மலைத்துப் போகாதீர்கள். எந்தப் பிரச்சினை உருவாகும் போதும் அதற்குரிய தீர்வுடன் தான் அது உருவாகிறது. பிரச்சினையை நீங்கள் அணுகும் முறையில் தான் அதன் தீர்வுகள் அமையும். எனவே பிரச்சினைக்குரிய காரியங்களை ஆராய்ந்துவிட்டால் பிரச்சினைகளை தீர்ப்பது சுலபம்.

### மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்.

மாற்றங்கள் அனைத்தும் வாழ்க்கையின் ஓர் அங்கம் என்பதனை உணருங்ககள் நீங்கள் இருப்பது நீங்கள் நினைப்பது போல் மற்றவர்கள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. தனிப்பட்ட சோகம் வந்தாலும் அதை நீங்கள் தனியாகத்தான் சந்திக்க வேண்டும். வேறு யாரும் உங்களுக்காக அவர்களை மாற்றிக்கொள்ள மாட்டார்கள். உங்களுக்கு மட்டும் முக்கியத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க வேண்டும் என்று எண்ண வேண்டாம். அதே போல் மாற்றமே மனிதனின் தத்துவம் இன்று இருப்பவர்கள் நாளை இதே போல் இருக்க மாட்டார்கள் அம்மாற்றத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்.

**குறிக்கோளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்**

உண்மையான நடைமுறைக்கு சாத்தியப்படும் குறிக்கோள்களை நிறைவேற்ற முயலுங்கள். இதுவே உங்கள் முழு வெற்றிக்கு அடிகோலும் வாழ்க்கையை ருசிகரமாக இரசித்துக் கொண்டு சந்தோசமாக வாழுங்கள்.

**காரியத்தில் முழு மூச்சாய் இறங்குங்கள்**

மிக மோசமான சூழ்நிலையில் துணிச்சலாக முடிவு எடுத்து எல்லோரையும் காப்பாற்றுங்கள். நீங்கள் செய்யும் தவறுகளிலிருந்தே பாடம் படிக்க முயலுங்கள்.

**உங்களை நீங்கள் முழுமையாக புரிந்து கொள்ளுங்கள்.**

சுய அறிவு இருப்பதால்தான் சுயபரிசோதனை செய்ய முடியும். பல இழப்புக்களையும், அனுபவங்களையும் பெற்ற பிறகுதான் இந்த சுய பரிசோதனை சாத்தியமாகும். அவை அனைத்துமே வாழ்க்கையின் பாடங்கள் முயற்சி செய்து பாருங்கள்.

இறைவன் எமக்கு கொடுத்த மிகப்பெரிய வரம் நம்முடைய மனதுக்கு எல்லையே கிடையாது என்பதுதான். எனவே உங்கள் எண்ணங்கள் நல்லவையாகவும், விரிவானதாகவும் இருக்கட்டும். அவை நடைமுறைக்கு ஏற்றவாறு யதார்த்தமாகவும் இருக்கட்டும். அதன் பின்னர் உங்கள் வாழ்க்கையின் இலக்கை இலகுவாக அடைந்து விடுவீர்கள். உங்கள் எண்ணங்கள் உங்கள் வாழ்க்கையை பிரகாசிக்கட்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**S.** வனப்பிரியவாசினி
தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோத்தர்
பிரதேச செயலகம், செட்டிகுளம்.

# மனித வாழ்க்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஆதிக்கம்.

ஆரம்ப காலங்களில் உலகம் என்பது ஒரு பரந்து விரிந்த ஒன்றாக இருந்து வந்தது. ஆனால் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் அபரீத வளர்ச்சியினால் இன்று உலகம் எமது உள்ளங்கைகளில் அடங்குகின்றது. தொழில்நுட்ப வளர்ச்சியானது தகவல் பரிமாற்றத்தில் ஏற்படும் காலதாமதம் மற்றும் ஏனைய வீண்சிரமங்கள் தவிர்க்கின்றது. தொழில்நுட்ப வளர்ச்சியானது மக்கள் மத்தியில் அவர்களது வாழ்க்கைத்தரம் மற்றும் வாழ்க்கை முறையினை பலவகையில் மாற்றி அமைத்துள்ளது. இன்று உலகத்தின் சுழற்சியானது தொழில்நுட்பத்தின் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது.

மனிதன் தோன்றிய காலத்திலேயே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தோற்றம் பெற்றது. நாகரீகம் வளர்ச்சியடையாத காலத்தில் ஒளி, தீ, சைகை என்பவையே மனிதனின் ஆரம்ப கட்ட தகவல் பரிமாற்ற தொழில்நுட்பமாக காணப்பட்டது. இதையடுத்து கல்வெட்டு, ஓலைச்சுவடி, செப்பேடுகள் மூலமாக இயல், இசை, நாடகங்கள் வாயிலாகவும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது அச்சடித்த எழுத்துக்களாகவும், புத்தகங்களாகவும் படிமுறை வளர்ச்சியடைந்து, விஞ்ஞான வளர்ச்சியின் அடிப்படையில் தபால், தந்தி, தொலைபேசி என்று தகவல் தொடர்பு சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு தகவல்களை உடனுக்குடன் மக்களிடம் கொண்டு சேர்த்தது. இதன் மூலம் தகவல் தொடர்பு துறையில் ஓர் புதிய யுகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. என்று கூறினால் மிகையாகாது.

இன்றைய நவீன தொழில்நுட்ப காலகட்டத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்றால் என்ன என்ற வினா எழும் போது அதற்கு விடையாக வெவ்வேறுவகையான தொழில் நுட்பங்களை பயன்படுத்தி தகவல்களை மின்னணுத்தொடர்பு மூலம் பிறருக்கு அனுப்புதல், சேமித்தல், புதிதாக உருவாக்குதல், வெளிப்படுத்தல், பரிமாறிக்கொள்ளல் என்று விஞ்ஞான ரீதியான விளக்கத்தினை தரமுடிந்த போதிலும் சாதாரணமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்ற சொற்பதமான ஓரளவு கணினிகளையும், கணினி வலையமைப்புகளையுமே குறிக்கின்றது. இதில் தகவலைப் பரப்ப பயன்படுத்தும் தொழில் நுட்பங்களாகிய தொலைக்காட்சி, வானொலி, நினைவகங்கள், செயற்கைகோள்கள் இன்னும் பிற சாதனங்களை தன்னுள் உள்ளடக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய காலகட்டத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது அனைத்து துறைகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக கல்வித்துறை, மின்னரசாங்கம், கைத்தொழில், வியாபாரம், பொழுதுபோக்கு, போக்குவரத்து, விவசாயம், சுகாதாரம், வங்கித்துறை, பொறியியல், தொடர்பாடல், பாதுகாப்புத்துறை என்று பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். இவற்றுள் சில முக்கிய துறைகளில் எமது இலங்கை நாட்டில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்களிப்பினை நோக்குவோம்.

**கல்வித்துறை**

தொழில்நுட்பத்தினை காலில் சக்கரம் கட்டி சுழலும் இந்நவீன யுகத்தில் மாணவர்களுக்கு கல்வியினை புகட்டுவதற்கு புதிய தொழில்நுட்பங்களை உபயோகிப்பது அவசியமாகின்றது. 21ம் நூற்றாண்டில் கல்வித்துறை மாற்றத்தில், தகவல் தொடர்பு பேருதவி புரிந்துள்ளதாக உலகளாவிய ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. தொழில்நுட்பத்தை முறையாக செயல்படுத்துவோமேயானால் வாழ்நாள் முழுக்க பயன்படும் கல்வி அறிவு மற்றும் திறமையை மாணவர்கள் எளிதாக பெற இயலும். குறிப்பாக கணினி மற்றும் வலையமைப்பு முற்றாக பயன்படுத்தப்பட்டால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருவரும் பயன்பெறும் வாய்ப்பு உள்ளது. இவ் புதிய முறை பாடம் கற்பித்தலில் ஆசிரியர்கள் மாணவர்களை மையப்படுத்தி கற்பிக்க வழிவகுக்கின்றது. தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம் பல புதிய முறைகளில் தகவலை பயன்படுத்த மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. மனப்பாடம் செய்து படிப்பதைக் காட்டிலும் வாழ்க்கையில் சந்ததிக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்ளுதல், கற்றலை எளிமையாக்குதல், கற்போரின் வாழ்க்கை சூழ்நிலைக்கு ஏற்ப கல்வி அமைத்தல் என்பன அவசியமாகின்றன. மாணவர்களுக்கு ஏட்டுக்கல்வியினை மட்டும் புகட்டாது தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி புதிய யுத்திகளை கையாண்டு கற்பிக்கும் போது அவர்களுள் கற்பதற்கான ஆர்வம் பெருமளவு தூண்டப்படுகின்றது. காலாகாலமாக கையாளப்படும் முறைமையைக் காட்டிலும் புதிய ஒரு முறையினை உட்செலுத்தும் போது மாணவர்களுள் இயல்பாகவே ஓர் தூண்டல் இடம் பெறும். இலங்கையில் பாடசாலை இணையம் (www.edulanka.lk) அறிவகம் (www.nenasala.lk) போன்ற வசதிகள் காணப்படுகின்றன. மேலும் ஆசிரியர்களுக்கு கற்பிக்க உதவும் வழிகாட்டி கற்றல் முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு wwww.nie.lk வழிகாட்டுகிறது. எல்லோரும் உயர்கல்வியை பெற்றுக்கொள்வதற்கான செயற்திட்டங்களை பெற்றுக்கொடுக்கின்றது. அது மட்டுமல்லாது www.enupub.lk இன் ஊடான பாட நூல்களை தரவிறக்கம் செய்யக்கூடியதாகவும் உள்ளது. மேலும் பல கல்வி தொடர்பான வலைத்தளங்கள் இயங்கி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மின்னரசாங்கம்**

ஒரு அரசாங்கம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை தனது நாட்டிற்குள் இருக்கும் கம்பெனிகள், அரசசார்பான அமைப்புக்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் வேறு நாட்டு அரசாங்கங்களிற்கு இடையிலான தொடர்பாடலை பேணுவதினை மின்னரசாங்கம் என்று வரையறுக்க முடியும். இலங்கையானது மின்னரசாங்கத்தில் தகவல் தொடர்பாடலை மேற்கொள்ள பின்வரும் இணையதளங்களை பயன்படுத்துகின்றன.

01. இலங்கை அரசாங்கத்தின் வலைப்பக்கம் (www.gov.lk)
02. அரசாங்க தகவல் மையம் (www.gic.gov.lk)
03. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் மையம் (ICTA)
04. தகவல் அறியும் உரிமை வலைப்பக்கம் (www.rti.gov.lk)

**மின்னரசாங்கத்தின் தொடர்பானது பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றது.**

(i) அரசாங்கத்திற்கும் மக்களுக்குமிடையிலான தொடர்பு
(ii) அரசாங்கத்திற்கும் அரசாங்கத்திற்குமிடையிலான தொடர்பு
(iii) அரசாங்கத்திற்கும் வணிகத்திற்குமான தொடர்பு
(iv) அரசாங்கத்திற்கும் தொழிலாளர்களுக்குமான தொடர்பு

இதுமட்டுமல்லாது இணையசேவை, மின்னஞ்சல் சேவைகளினூடாக வருடத்தின் 365 நாட்களிலும் விரைவாகவும் இலகுவாகவும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. அத்துடன் அரசுடன் தொடர்புபட்டு எடுக்கப்படும் நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மையாகவுள்ளது. இதனால் ஊழல் அற்ற சமுதாயம் உருவாகின்றது. கடந்தகால தகவல்களை இலகுவாக மீள்பார்வையிட கூடியதாகவுமுள்ளது. அதுமட்டுமல்லாது கடதாசியற்ற சுற்றாடலும் உருவாகின்றது. ட்விட்டர், பேஸ்புக், புளொக் போன்ற சமூகவலைத்தளங்கள் பொது நிறுவனங்களுடன் தொடர்புடைய பொதுவான விடயங்களை பகிர்ந்து கொள்வதற்கு இலகுவாக பயன்படுத்த முடியும்.

**மருத்துவத்துறை**

மருத்துவத்துறை பொறுத்தவரையில் தொழில்நுட்பத்தின் பங்களிப்பு அளப்பெரியது ஆகும். www.nhsl.health.gov.lk என்ற இணையத்தளத்தில் அரச வைத்திய சேவைகள் பற்றிய தகவல்களை பெறக்கூடியதாக உள்ளது. மேலும் மருத்துவ பரிசோதனைகளின் போது இன்று தகவல் தொழில்நுட்பத்தின் பங்களிப்பு எண்ணில் அடங்காதது. காந்தப்பிரிவு விம்பக பொதி (MAR), மின் இதயவரை பொதி (ECG), மின் மூளையை வரையியற் பொதி (EEG), கணினிப்படுத்திய உடலின் அச்சுப்படை X - 1 கதிர் பொதி(CAT) போன்றவற்றை உதாரணமாக குறிப்பிட முடியும். அத்துடன் தொலைமருத்துவத்தில் வீட்டில் இருந்து சிகிச்சை தொடர்பான ஆலோசனைகளை பெறல், அறிவுறுத்தல்களை பெறல், தொலை அறுவை சிகிச்சை, தொலைபயிற்சி, தொலை சிகிச்சை பராமரிப்பு என்பவற்றை குறிப்பிடமுடியும். E - Channeling வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வனைத்து சேவைகளும் அரசாங்க வைத்தியசாலைகளில் இல்லாதவிடத்தும் தனியார் வைத்தியசாலைகளில் பெறக்கூடியதாக உள்ளது.

விவசாயம்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது தனது வேரினை விவசாயத்துறையிலும் படரவிட்டுள்ளமை மறக்கவில்லை. ஏர் பிடித்து உழுத காலம் போய் இன்று விவசாயிகள் இயந்திரத்தில் உழும் காலம் வந்துவிட்டது. வானியல் அளவீட்டு இயந்திரங்கள் தன்னியக்க வண்டு கட்டுப்பாடு இயந்திரம், நிலத்தின் நிலையை அளவிடும் இயந்திரம், சொட்டு முறை நீரவழங்கல், தன்னியக்க களை அகற்றும் இயந்திரம், ரோபோ தொழில்நுட்பத்தின் மூலம் பயிரிடுதல், அறுவடை செய்தல் போன்ற தொழில்நுட்பங்கள் உலகளாவிய ரீதியில் பயன்பாட்டில் உள்ள போதும் இலங்கையில் ஓர் குறிப்பிட்ட அளவே இத் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

வியாபாரம்

வியாபாரத்தைப் பொறுத்தவரையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் சேவையானது நாடுகடந்த சேவை என்றே குறிப்பிடவேண்டியுள்ளது. இன்றைய காலட்டத்தில் E - Commerce, Online shopping போன்ற வார்த்தைகள் மக்களிடையே சாதாரணமான சொற்பிரயோகமாகிவிட்டது. நாடுகடந்த உற்பத்தி பொருட்களையும் எமது நாட்டில் கிடைக்கப்பெறாத பொருட்களையும் பெறக்கூடியதாக உள்ளது. தொழிற்சாலைகளில் மனிதவளங்களின் தேவையினை குறைத்து கடினமான வேலைகளை இயந்திரங்களின் உதவியுடன் வினைத்திறனுடன் செய்யக்கூடியதாகவுள்ளது.

போக்குவரத்து துறை

இத்துறையிலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தனது கால் தடங்களை பதித்துள்ளது. உதாரணமாக C.C.TV கட்டுப்பாடு, மின் சமிக்ஞைகள், அடையாள குறியீடுகள், விமான போக்குவரத்து கட்டுப்பாடு, இலத்திரனியல் புகையிரதம் போன்றவற்றை குறிப்பிட முடியும். அத்துடன் பேருந்து, இரயில், விமான போக்குவரத்தில் ஆசனங்களை முன் பதிவு செய்தல், நேர அட்டவணைகளை பார்வையிடல், ஊழியர்களின் கடமை நேர அட்டவணையை தயாரித்தல் போன்றவற்றையும் குறிப்பிட முடியும். மேலும் வான்வெளிப் பயணங்களின் போது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்கு இன்றியமையாதது ஆகும். புகையிரத சேவை தொடர்பான தகவல்களை www.eservices.railway.gov.lk இணையத்தளத்திலும், பேருந்து சேவை தொடர்பான தகவல்களை www.ntc.gov.lk இணையத் தளத்திலும் அறிந்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுபோக்கு

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது மேற்குறிப்பிட்ட துறைகளில் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அதிகளவு பொழுதுபோக்கு துறையினிலேயே அனைத்து தரப்பு மக்களிடையேயும் புழக்கத்தில் உள்ளது. தொலைக்காட்சி, வானொலி, கணினி, கையடக்க தொலைபேசியில் விளையாடுதல், படம் பார்த்தல், பாடல் கேட்டல், சமூக வலைத்தளங்களின் பயன்பாடு என்பனவற்றை அதிகளவு அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்தி வருகின்றோம்.

தொடர்பாடல்

தொடர்பாடல் துறை என்று பார்க்கும் போது அதி நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தகவல் பரிமாற்றத்திற்கு தொலைபேசி, கையடக்க தொலைபேசி, smart phone, கணினி, வலைப்பின்னல் பேருதவி செய்து வருகின்றது. சமூக வலைத்தளங்கள், மின்னஞ்சல், குறுஞ்செய்தி என்பன தகவல்களை உடனுக்குடன் காலதாமதம் இன்றி பரிமாறிக்கொள்ள உதவுகின்றது.

வங்கித்துறை

வங்கித்துறையில் தகவல் தொழில்நுட்பமானது தன்னியக்க வங்கி கணக்கு கணித்தல் முறை, தன்னியக்க அட்டை (ATM) பயன்பாடு, Online banking, Online banking - Passbook, SMS service போன்றவையும் நடைமுறையில் உள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு பல்வேறுபட்ட துறைகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது தனது கிளைகளை பரப்பி தனது ஆளுமையினை நிலைநாட்டியுள்ளது. எனினும் எமது நாட்டில் அபிவிருத்தியடைந்த நகர்ப்புற மக்களிடையே அதிகளவு இந் தொழில்நுட்ப பயன்பாடு காணப்படுகின்றது. இத்தகைய நவீன தொழில்நுட்பங்களின் சுவடு படியாத மக்களும் எம் நாட்டில் உள்ளனர். வசதி வாய்ப்பின்மை, தொழில்நுட்ப அறிவு இன்மை என்பன முக்கிய காரணமாக இருக்கின்றது. இருப்பினும் வசதி இருந்தும் புதிய தொழில்நுட்பங்களை கற்றறிந்து அதனை உபயோகிக் ஆர்வமின்னை காரணமாக புறந்தள்ளுகின்றனர். இந்நிலை முழுமையாக மாறுகின்றதோ அன்று எமது இலங்கை நாடானது அபிவிருத்தியடைந்த நாடாகும் என்பதில் ஐயமில்லை. எனவே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது எவ்வாறு நாட்டின் வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றதோ அழிவுக்கும் வழிவகுக்கும் சந்தர்ப்பங்கள் உள்ளதால் தகுந்த எச்சரிக்கையுடனும், வினைத்திறனுடனும், தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி ஜெ. அமிர்தலிங்கம் ஆசிரியர்
வ/ பெரியதம்பனை ம.வி

# சிறுவர்களைப் பாதுகாப்போம்.

**சுரக்ஷா மாணவர் காப்புறுதி**

"நிதமும் காப்போம் - நாட்டின் குழந்தைகளை" எனும் தலைப்பில் செயற்படுத்தப்படும் சுரக்ஷா மாணவர் காப்புறுதி குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு 2017ம் ஆண்டிற்கான வரவு செலவு முன்மொழிவிற்கு அமைவாக அரசினால் அறிமுகம் செய்யப்பட்டு தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஒரு வேலைத்திட்டமாகும்.

அறிவு மற்றும் திறனில் முழுமைபெற்ற பிள்ளைகளை சமூகமயப்படுத்துவதே கல்வி அமைச்சின் முக்கிய குறிக்கோளாக இருப்பதனால் மாணவர்களுக்கு பாதுகாப்பான சூழல் இருப்பது அத்தியவசியமாகும். ஆதலால் மாணவச் செல்வங்களின் உடல் மற்றும் உள சமூகநிலை நன்நிலவுகைக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பாடசாலையினுள்ளும் அதற்கு வெளியிலும் ஏற்படும் நோய்கள், விபத்துக்கள் மற்றும் குறைபாடுகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கையாக மாணவர் சுகாதார காப்புறுதித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

**இக்காப்புறுதித்திட்டத்தின் நோக்கங்களாவன.**

01. நோய் விபத்து மற்றும் உபாதைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களின் போது அவசர சுகாதார சேவைக்கு உட்படுத்தி பிள்ளைகளின் நலனை சீக்கிரமாக உதவி செய்வதினூடாக தினமும் பாடசாலை வருகையை அதிகரித்தல்.
02. கடுமையான உபாதைகளுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களில் தேவையான சிகிச்சைகளுக்கு உதவி புரிதல்.
03. 13 வருட தொடர்ச்சியான பாடசாலைக் கல்விக்கான பங்களிப்பை அதிகரித்தல் போான்ற நோக்கங்களின் அடிப்படையில் "சுரக்ஷா" காப்புறுதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

"சுரக்ஷா" காப்புறுதித் திட்டத்தின் மூலமாக இலங்கையின் அனைத்துப் பாடசாலை மாணவர்களும் நன்மை பெறுவார்கள். கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடும் 1 இருந்து 13ம் தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களும் விசேட கல்வி அலகுகளில் கல்வி பயிலும் வயது 5 முதல் 21 வரையிலான வயதெல்லை கொண்ட அனைத்து இலங்கை மாணவர்களும் இக்காப்புறுதியில் பயனாளிகள் ஆவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காப்புறுதியானது கல்வி அமைச்சினால் வருடாந்த ஒப்பந்தங்களுக்கு உள்ளாகும் காப்புறுதி நிறுவனங்களினால் செல்லுபடியாகும் திகதியில் இருந்து ஒரு வருட காலத்தினை காப்புறுதி வழங்கப்படும் அதற்கமைவாக வருடத்தின் 365 நாட்களும் நாள் ஒன்றுக்கு 24 மணிநேரம் தழுவுமாறு காப்புறுதி வழங்கப்படும்.

**இக்காப்புறுதி வசதிகள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

01. **சுகாதாரக் காப்பீடு**
    1. வதிவிட வைத்திய சிகிச்சைகளுக்காக ரூபா 200000 (அரச/ தனியார்)
    2. வெளி சிகிச்சைகளுக்காக ரூபா 20,000
    3. கடுமையான நோய்களுக்கான சிகிச்சைகளுக்காக ரூபா 200,000 அல்லது அதற்கு மேல்

02. **விபத்துக்காப்பீடு**
    1. முழுமையான நிரந்தரமான உடல் ஊனத்திற்காக ரூபா ரூ 200,000 ரூபா 150, 000 தொடக்கம் ரூபா 200, 000 வரை

03. **ஆயுட்காப்புறுதி**
    1. பெற்றோரின் சிறப்பின் போது ரூபா 200 000 (ஒருவருக்காக)
       A. தாய் தந்தை இருவருக்கும் உரித்தாகும்.
       B. குடும்பத்தில் பாடசாலை செல்லும் சகல பிள்ளைகளுக்கும் நன்மைகள் கிடைக்கும்
    2. மாணவர் இறப்பின் போது மரணச் சடங்குகளுக்காக ரூ. 150,000 வழங்கப்படும்

04. **விசேட நன்மைகள்**
    தனியார் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் செலவில் 20% கழிவு மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

மேற்படி நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சகல பாடசாலை மாணவர்களும் தாங்கள் "சுரக்ஷா" காப்பீட்டுத்திட்டத்தின் பயனாளிகள் என்பதை உறுதிப்படுத்தும் "சுரக்ஷா" மாணவர் காப்பீடு அட்டையைப் பயன்படுத்த வேண்டும்.

மாணவர்களுக்கு "சுரக்ஷா" காப்பீட்டு நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் போது கல்வி அதிகாரிகள் பாடசாலைப் பொறுப்பாளர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைப் பொறுப்புக்கள்

01. மாகாணக்கல்விச் செயலாளரின் தலைமையில் அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பங்குபற்றலுடன் குழுவொன்று அமைக்கப்பட்டு தேவையான பரிசீலனைகளையும் நடுநிலைவகிப்பதையும் மேற்கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. மாகாண கல்வித் திணைக்களம், வலயக்கல்விக் காரியாலயம், பாடசாலை ஆகியவற்றின் பொறுப்புக்களாக அதிகாரியொருவரை அல்லது ஆசிரியர் ஒருவரை நியமித்தல்.

03. பாடசாலை மாணவர்களின் தகவல்களை சரியாக வழங்குதல் வேண்டும்.

04. காப்பீட்டு நன்மையைப் பெறும்போது தகவல்களை உறுதிப்படுத்தல் வேண்டும்.

05. நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களின் விபரங்கள் அடங்கிய சேவையொன்றை (பௌதிக அல்லது கணினி மயப்படுத்தப்பட்ட) பாடசாலையின் பேணிவருதலும் அவற்றை உரியநிறுவனங்களுக்கு வழங்குதலும்.

06. பாடசாலைக்குப் புதிதாக பிள்ளைகள் சேர்த்துக்கொள்ளப்படும் போது உடனடியாக உரிய பிரிவுகளுக்கு தகவல் வழங்குதல்.

07. காப்பீட்டு நன்மைகள் தொடர்பான அனைத்து தகவல்களையும் தொடர்ச்சியாக மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பாடசாலைச் சமூகத்துக்கும் தெளிவுபடுத்தல்.

08. நன்மைகளைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் தோன்றும் போது மத்தியதரச் செயற்பாட்டில் மாணவர் காப்பீட்டு நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

கல்வி அமைச்சும், அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட் நிறுவனமும் இணைந்து அறிமுகப்படுத்தியுள்ள "சுரக்ஷா" காப்புறுதித் திட்டத்தின் நன்மைகள், நிபந்தனைகள், பொறுப்புக்கள் தொடர்பாக பொது மக்களைத் தெளிவுபடுத்துவதற்கு கல்வி அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டிய விடயங்களில் முக்கியமானது காப்புறுதி அட்டையை இழக்கும் போது அல்லது காணாமல் போகும்போது தாமதமின்றி அருகாமையில் உள்ள "அலியான் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டட்" கிளையொன்றுக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் அல்லது 0112369 369 என்ற அவசர எண்ணுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

"சுரக்ஷா" காப்புறுதித்திட்டத்தை பெற்றோர்கள் விளங்கிக் கொண்டு சிறுவர்களை நிதமும் காப்போம் நிகழ்ச்சித்திட்டத்தின் பயனைப் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா. இராசதுரை BA (Hons), MA
மாவட்ட கலாசார உத்தியோகத்தர்
கிளிநொச்சி மாவட்டம்

## இந்திய உளவியலும் மேலைத்தேய உளவியலும்.

தன்னுடலை மட்டுமன்றி வேறொன்றினையும் அறிந்திராத ஆதிகால மனிதன் காலம் செல்லச் செல்ல உடலினுள்ளே உறுபொருள் ஒன்று உண்டு என உணரத்தொடங்கினான். தனது உடல் ஓரிடத்தில் செயலற்றுக்கிடந்த போதும் தான் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று பல அனுபவங்களை பெறுவதுபோன்ற உணர்வுகளைப் பெற்றான். இவ்வனுபவங்கள் உடலுக்குரியவை அல்ல உடலினுள் உறையும் வேறொரு சக்தியின் செயலென அவன் எண்ணினான். இச்சக்தியின் இயல்புகளை ஆராயத் தோன்றியதே உளவியல் எனலாம்.

உளவியலானது Psychology என ஆங்கிலத்தில் எடுத்தாளப்படுகின்றது. இது Psyche எனும் கிரேக்க அடிச்சொல்லிலிருந்து எழுந்ததாகும். Psyche என்பது உள்ளம் அல்லது ஆன்மா எனவும் logos என்பது முறை அல்லது கல்வி எனவும் பொருள்படும். அதாவது உள்ளத்தின் தொழிற்பாடுகள், லௌகீக உலகிற்கு அதன் பிரதிபலிப்புக்கள், மற்றும் அது அறிவினைப் பெறுகின்ற வழிகள் பற்றியுமான ஓர் ஆய்வு ஆகும். உள்ளம் பற்றிய இயலே உளவியல் எனப் பொதுவில் எடுத்தாளப்படுவதையும் காணலாம். இவ்வுள்ளம் எனும் சொல்லாட்சியானது மனம், ஆவி, உயிர், ஆன்மா போன்ற பல சொற்பதங்களாலும் எடுத்தாளப்படுகின்றது.

உளவியல் சிந்தனைகளின் வளர்ச்சிப் போக்கு முறையாக வகுக்கப்பட்ட காலத்திற்கு முற்பட்ட உளவியல், முறையாக வகுக்கப்பட்ட ஆனால் விஞ்ஞான முறைக்கு முற்பட்டகால உளவியல், விஞ்ஞான முறைசார்ந்த உளவியல் என மூன்றாக வகுத் தாராயப்படுகின்றது. தொன்மைவாய்ந்த பண்படாச்சிந்தனைகள் வகுக்கப்பட்ட காலத்திற்கு முற்பட்ட உளவியல் எனவும், அரிஸ்டோடிலின் "ஆன்மாவின் இயல்பு" எனும் நூலுடன் ஆரம்பித்த உளவியல் - விஞ்ஞான முறைக்கு முற்பட்ட உளவியல் எனவும், விஞ்ஞான அறிவு விருத்தியுடன் ஆரம்பமாகி இன்றுவரை வளர்ந்து வருகின்ற உளவியல் விஞ்ஞான முறைசாந்த உளவியல் எனவும் பகுத்தாராயப்படுகின்றது.

அரிஸ்டோட்டில் (Aristotle) என்ற கிரேக்க தத்துவ அறிஞர் எழுதிய "ஆன்மாவின் இயல்புகள்" என்ற நூலே உளவியல் பற்றி முதலில் எழுந்த நூலாகும். இவரது நூலும் இதற்குப்பின்னர் வெளிவந்த அறிஞர்கள் பலரது நூல்களும் ஆன்மா, உள்ளம் ஆகியன பற்றி விரிவான பல கருத்துக்களைத் தந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியல் பற்றிய சிந்தனைகள் வளர்ந்து வந்தகாலத்தில் ஆன்மாபற்றி நிலவிய பல கருத்துக்கள் பொருத்தமற்றதாக அமைந்தன. மேலும் ஆன்மா என்பது தெளிவற்ற, நிச்சயமற்ற ஓர் எண்ணக்கருத்தென்பதும் எடுத்தாளப்பட்டது. ஆன்மா என்ற ஒன்று இல்லையென அறிதியிட்டுக் கூறுவாரும் இருந்தனர். இதனால் உளவியலை வரையறை செய்யும்போது ஆன்மா என்னும் பதத்தை விலக்கி உள்ளம் அல்லது மனத்தின் செயல்களை விபரிக்கும் இயல் என விளக்க முற்பட்டனர்.

உள்ளம் அல்லது மனம் என்பதும் ஆன்மா என்பதைப்போல் தெளிவற்றதாய் இருந்ததால் இவ்விளக்கமும் சிறப்புடையதாய் அமையாததால் உளவியலை நனவு பற்றிய உளவியல் எனவிளக்கமுற்பட்டனர். இக்கருத்து 19ம் நூற்றாண்டுவரை பெரிதும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாயினும் இதிலும் குறைபாடுகள் இருக்கத்தான் செய்தது. உளப்பகுப்பாய்வு கொள்கையினை முன்னேடுத்தவரான சிக்மன் புறோயிட் (Sigmund Freud) என்பவர் எமது நடத்தைகளுக்கு முக்கிய காரணியாக அமைவது நனவிலியே தவிர நனவுநிலையல்ல எனும் புரட்சிகரமான சிந்தனைகளை முன்வைத்தார். எனினும் இக்காலத்தய உளவியலாளர்கள் மனித நடத்தை அனுபவங்கள் பற்றிய விஞ்ஞானமே உளவியல் ஆகும் எனப்பொதுவில் வரைபு செய்தனர். இங்கு நடத்தை எனும்போது வெளிப்படையாகத் தோன்றுகின்ற நடத்தைகள் மாத்திரமன்றி சிந்தனை, உணர்ச்சிவசப்பட்ட கற்பனை, துணிவு, போன்ற உள்ளார்ந்த நடத்தைகளும் உளவியல் ஆய்வுக்குட் படுத்தப்படுகின்றன.

மனித நடத்தைகளை முழுமையாகப் பரிசோதனைக்கு உட்படுத்தியது மட்டுமல்லாது பிராணிகள், விலங்குகள் போன்றவற்றையும் உளவியல் ஆய்வுக்குட்படுத்தினர். இதன்மூலம் மனித நடத்தைப்போக்குகளை எளிதாக பகுத்தறிந்து கொண்டனர். இதனால் உளவியல் பற்றிய வரைவிலக் கணமானது மேலும் விரிவடைந்து மனித, விலங்குகளின் நடத்தை பற்றி ஆராயும் இயலாக எடுத்தாளப்படுவதாயிற்று. ஜோன் வொட்சன் (Johnwatson) மற்றும் ஸ்கின்னர் (Skinner) போன்றோர் உளவியல் என்பது நடத்தை பற்றிய விஞ்ஞானம் என வலியுறுத்தி நின்றனர்.

பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலும் அதற்குப் பிற்பட்ட காலங்களிலும் மைய நரம்பு, நரம்பின் மின்னியல் தன்மை, உயிரியல் இயந்திரச் செயற்பாடு ஆகியவற்றில் ஏற்பட்ட வளர்ச்சியும், ஆய்வுகூடம் மற்றும் பரிசோதனைச்சாலைகளின் தோற்றமும் வளர்ச்சியும் உளவியலை விஞ்ஞான நிலைக்கு உயர்த்தியது. உளவியலின் தந்தை என அழைக்கப்படும் வில்ஹெம் வுண்டினால் (Wilhelm Wundt) முதலாவது உளவியல் பரிசோதனைச்சாலை அமைக்கப்பட்டது. இவர் பரிசோதனை முறையுடன் அகநோக்கு முறையினையும் எடுத்தாண்டதுடன் உள்ளம் சார்ந்த போக்குகளின் எல்லா நிலைகளையும் பரிசோதனை மூலம் ஆராய முடியாதென்பதையும் ஏற்றுக் கொண்டவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனொரு இயந்திரமன்று என்றும் மனித நடத்தைக்குப் பின்னணியாக மனம் என்ற ஒன்று உண்டென்றும் மனித நடத்தையை இயக்கியும் கட்டுப்படுத்தியும் வருவது அதுவென்றும் சிலர் எடுத்தாண்டனர். சிக்மன் புறோயிட் (Sigmund Freud) என்பவர் கனவுகளுக்கும் வாழ்வுக்கும் இடையிலுள்ள சம்பந்தங்களை விளக்கும் வகையில் எழுதிய "கனவுகளின் வியாக்கியானம்" எனும் தனது நூலில் மனித உளநடத்தைகளுக்கு நனவுநிலை மாத்திரமன்றி நனவிலி நிலையும் காரணமாக உள்ளதென்பதனை தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலைத்தேய உளவியல் சிந்தனையானது, கிரேக்கம், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, அமெரிக்கா போன்ற பல நாடுகளிலும், கீழைத்தேய உளவியலானது குறிப்பாக இந்தியா, சீனா, தீபெத், ஜப்பான் போன்ற நாடுகளிலும் வளர்ச்சி பெற்றுள்ளது. இவ் உளவியல் சிந்தனைகளை, உளவியலாளர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், நடத்தையியலாளர்களும், பிற்பட்ட காலங்களில் உளவியற் கல்லூரிகளும் வளர்த்து வந்துள்ளன.

கீழைத்தேய உளவியல் பகுப்பில் முக்கிய சிந்தனையான இந்திய உளவியல் சிந்தனையானது இந்தியாவில் தோன்றி வளர்ந்த ஓர் பழமை வாய்ந்த சிந்தனையாகும். இவை வேதங்கள், உபநிடதங்கள், பிராமணங்கள், பகவத்கீதை, தத்துவசாத்திரங்கள், தோத்திரநூல்கள் ஆகிய இந்திய தரிசனங்கள் வாயிலாக தோன்றி தத்துவ சிந்தனையுடன் இணைவுற்று அகநிலை சார்ந்த ஆராய்ச்சியிலான வளர்ச்சி பெற்று ஓர் மனதினை பயிற்சிகள் மூலம், தியானத்தின் மூலம் ஒருமைப்படுத்தி உயர் நிலை அடைவதற்கான வழிகளை ஆராய்கின்ற இயலாக வளர்ந்து வருகின்றது.

இந்த உளப்பகுப்பாய்வாளர்களும் ஏனையோரும் மனதில் மாற்றம் ஏற்படும்போது உடலில் பெரும் மாற்றம் ஏற்படுவதனையும் உடலில் மாற்றம் ஏற்படுகையில் மனதிலும் மாற்றம் ஏற்படுகின்றமையையும் ஏற்கின்றனர். மனதில் பாதிப்பு ஏற்படும்போது அதன் விளைவாக உடலிலும் பெரும் மாற்றம் ஏற்படுவதை நாம் காண்கின்றோம் தாங்க முடியாத துன்பத்தை அனுபவிக்கின்ற ஒருவனின் மனம் பாதிக்கப்படும்போது அவன் சோர்வுற்று, மெலிவுற்று, சோபையிழந்து காணப்படுவான். இது அடி மனநிலையின் வெளிப்பாடேயாகும். இங்கு அகநிலைச்செயற்பாடுகள் தொடர்பான ஆய்வுகள் புறச்செயற் பாடுகளின் ஆய்வுகள் மூலம் பெறப்படுவதை புலப்படுத்துகிறது.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு உட்பட்டகாலங்களிலேயே மேற்குலகமானது உளவியலின் முக்கியத்துவத்தை உணர்ந்து வெறுமனே தத்துவரீதியாக அல்லது ஊகத்தின் அடிப்படையிலான ஆய்வு அல்ல எனவும் அன்றாட நடைமுறை வாழ்க்கையின் தேவைகளுக்குப் பொருத்தப்பாடு அடைவதில் ஓர் அத்தியாவசியமான அம்சம் என்பதையும் அறிந்துகொண்டது இதற்கு மாறாக பல நூறு வருடங்களாக இந்துக்கள் சமய உண்மையின் மலர்ச்சிக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாக மட்டும் உளவியலைப் பயன்படுத்தாது மருத்துவத்துறைக்கு உதவியதுடன், ஆரோக்கியம், சமநிலை, மற்றும் அமைதியான வாழ்வுக்கான திறவுகோலாகவும் உளவியலைப் பயன்படுத்தி வந்துள்ளனர். பொதுவாக குறிப்பிடுகையில் மேற்குலகில் விசேடமாக அமெரிக்காவில் பல்வேறு காரணங்களுக்காக உளவியலின் பயன்பாட்டு அம்சங்களே மக்களைக்கவர்வதாக இருந்தன. உதாரணமாக மருத்துவத்துறையில் நரம்பு மண்டலத்தின் மீது மனத்தின் விளைவு பற்றிய ஆய்வுக்கு மேலும் மேலும் கவனம் செலுத்தப்பட்டு வருவதைக் குறிப்பிடலாம்.

மனிதனது நடவடிக்கைகளைத் தூண்டுகின்ற சக்திகளை நவீன உளவியலாளர்கள் தெளிவாக ஆராய்ந்து வருகின்றனர். இருந்த போதிலும் கீழைத்தேய மேலைத்தேய சிந்தனைக் கருத்துக் களிடையே வேறுபட்ட அம்சங்கள் காணப்படுகின்றன. மனிதனுக்கு பல்வேறு உந்துதல்களும் இயல்பான தூண்டல்களும் உள்ளன என்பதை இந்து உளவியலாளர்கள் ஏற்றுக்கொண்ட போதும், பாலியல் தூண்டலும் அதிகாரத்திற்கான திடசித்தமும் மிகமுக்கியமான தூண்டலாக இருப்பதையும், மனித இயல்பின் அடிப்படை உண்மை இது என்ற பிரய்ட் மற்றும் அட்லர் (**Adler**) ஆகியோரின் கோட்பாடுகளை ஏற்கவில்லை.

டாக்டர் வில்லியம் பிரவுணின் கருத்துக்கள் இந்து உளவியலாளர்களின் கருத்துக்களை ஒத்ததாக உள்ளன. ஏனெனில் இவரது அபிப்பிராயப்படி மனிதனின் நடத்தையையும் செயற்பாட்டினையும் விளக்குவதற்கு பாலியலோ, அல்லது அதிகாரத்திற்கான திடசித்தமோ போதுமானதாக இருக்கவில்லை.

உளவியலானது சுயநினைவு உளத்தளத்தின் ஆய்வுடன் மட்டும் நில்லாது அடிமனதின் செயற்பாடுகளையும் ஆய்வுக்குட்படுத்துகின்றது. நினைவுத்தளத்தில் (**Conscious Plane**) நிகழ்கின்ற சில உளவியல் ரீதியான நிலைகளையும் செயற்பாடுகளையும் யாராலும் அவதானிக்க முடியும் ஆனால் உள்ளத்தின் அடிமனநிலையில் (**Subconscious**) நிகழ்கின்ற செயற்பாடுகளை அறிவதற்கு ஊடுருவுகின்ற பகுப்பாய்வுத்திறனும், விவேகமும், உள்ளுணர்வு ரீதியான நோக்கும் தெளிவான பார்வையும், மிக அதிகமான பொறுமையும் தேவையாகும். மனிதர்களின் நடத்தைகளை அவதானித்து அவர்களது பழக்க வழக்கங்களை அறிந்து கொள்வதன் மூலம் அந்நடவடிக்கைகள் உருவாவதற்கான மூல காரணத்தைக் கண்டறிவதற்கு உளப்பகுப்பாய்வாளர்கள் முயல்கின்றனர். தற்காலத்து மேலை நாட்டு உளவியலாளர்கள் பலரும் ஏனைய உளவியலாளர்கள் சிலரும் மனிதனின் நடத்தையும் அவனது நினைவுநிலைச் செயற்பாடுகள் பலவும் இந்த அடிமனத்தினாலேயே தீர்மானிக்கப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர்.

பிரெய்ட் (**Ferud**), யுங் (**Jung**) ஆகிய உளவியலாளர்களின் கருத்துப்படி உள்ளத்தின் பெரும் பகுதி எமக்குத் தெரியாதவாறு மூடப்பட்டுள்ளது என்கின்றனர். இவ்வகையில் இந்து உளவியலாளர்கள் இவர்களது கருத்துக்களுக்கு உடன்பாடு உடையவர்களாக விளங்குகின்றனர். உள்ளத்தினை ஒரு பனிப்பாறைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிடமுடியும் நீரின் மேற்பரப்பில் பனிப்பாறையின் ஒரு சிறிய பகுதி மட்டுமே தென்பட்டபோதும் மூழ்கியுள்ள பகுதியிலேயே முக்கிய சக்தி உள்ளது. மேற்பரப்பிலிருந்து முழுப்பாறையின் அளவினை ஒருவரால் சுலபமாக எடைபோட்டு விடமுடியாது எனினும் "டைட்ரானிக்" (Titanic) கப்பலைப்போன்ற பெரியகப்பலை அழிப்பதற்கான சக்தி அதனிடமுள்ளது. இதே போன்று மூடப்பட்டுள்ள மனமும் (Submerged mind) அடிமனநிலையும் (Subconscious State) நினைவுச் செயற்பாடு களைத் தீர்மானிப்பதற்கு போதுமான சக்தி கொண்டதாகவுள்ளது. அங்கு என்ன சக்திகள் மறைந்துள்ளன என்பது பெரும்பாலும் எமக்குத் தெரியாதுள்ளது மறைந்துள்ள இவ்வுளச்சக்திகளை இந்து உளவியலாளர்கள் சம்ஸ்காரங்கள் (Sanskaras) எனஅழைப்பர். இது தொடர்பான கருத்துக்களை சுவாமி விவேகானந்தரின் ராஜயோகம், பதஞ்சலியின்யோகசூத்திரம் போன்ற நூல்களின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

மனிதன் அடிப்படையில் அழிவுப் போக்கினைக் கொண்டவன் என்ற மேலைத்தேய உளவியலாளர்களின் சிந்தனையை இந்து உளவியலாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மனிதனது மனத்தில் நித்தியமான மகிழ்ச்சிக்கும் சிரஞ்சீவியாக வாழ்வதற்கும் ஒரு தூண்டல் உள்ளதென்ற முடிவுக்கு இவர்கள் வருகின்றனர். இதனை ஸ்பினோசா (Spinoza) என்பவரும் உறுதிப்படுத்தியுள்ளார். அழிவைத்தேடுகின்ற அல்லது தற்கொலை செய்யத்தூண்டும் போக்கானது மனிதனிடம் அடிப்படையாகவும் இயல்பாகவும் அமைந்தது அல்ல. துவேசம், யுத்தம் மற்றும் ஏனைய அழிவுச்செயற்பாடுகள் மகிழ்ச்சிக்கான இத்தூண்டலை முறையற்றவகையில் பிரயோகிப்பதாலும் தவறாகப் புரிந்து கொள்வதாலும் இவை ஏற்படுகின்றன.

டாக்டர் வில்யம் "மக்டூகல்" (Dr. William Mc Dougall) மனிதனின் நடவடிக்கைகளுக்குப் பின்னாலுள்ள தூண்டற்சக்தியை அர்த்தப்படுத்துவதில் பிரொய்ட் மற்றும் அட்லரின் கருத்துக் களிலிருந்து மாறுபடுகின்றார். மனிதனின் நினைவுநிலை மற்றும் அடிமனநினைவுநிலைச் செயற்பாடுகள் நோக்க முள்ளவை என இவர் நம்பியபோதும் பாலியல் தூண்டல், அல்லது அதிகாரத்திற்கான திடசித்தம் (Will) ஆகியவற்றை இவரால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. நினைவுநிலை யாவற்றுக்குப் பின்னாலும் ஒரு நோக்கம் உள்ளதென இவர் தீர்க்கமாகக் கூறுகின்றார்.

இந்து சமய உளவியலாளர்கள் நினைவுநிலையை நான்கு நிலைகளாக விளக்குகின்றனர். அவை தூக்கம், கனவு, விழிப்புநிலை, மற்றும் மேன்மை நினைவுநிலை என்பனவாகும். இவற்றை சுசப்தி, சுவப்பனம், ஜக்ரத் மற்றும் துரியை எனவும் அழைப்பர். தூக்கம் மற்றும் கனவுநிலையை அடிமனநிலையில் உள்ளடக்கி மேற்கத்தேய உளவியலாளர்கள் இவற்றை மூன்று நிலைகளாக விளக்குகின்றனர். மேன்மைநினைவுநிலை பற்றி ஆய்வினை மேலை நாட்டு உளவியலாளர்கள் அநேகர் கருத்திற் கொள்ளவில்லை. எனினும் பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லியம் ஜேம்ஸ் என்பவர் அதன் வெளிப்பாடுகளை "பல்வேறு சமய அனுபவங்கள்" என்ற நூலில் விளக்கியுள்ளார். மற்றும் டாக்டர் முல்லா பிறின்பெல்ஸ் என்பவர் "நவீன உளவியலின் பரிணாம வளர்ச்சி" என்ற நூலினூடாகவும் விளக்கியுள்ளார். டியுக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் றைன் (Rhine) தனது நூலான "உள்ளத்தின் புதிய வெளிப்பாடுகள்" எனும் நூலில் அதீதகிரகித்தல் உணர்வுகள் (Extrasensory perception) பற்றி தெளிவாக ஆராய்ந்துள்ளார்.

உளரீதியாக தகவல் பெறுதலும் எதிர்காலத்தில் நிகழப்போவதை மனதால் அறிவதும் அதித புலனுணர்வுச் சக்திகளின் வெளிப்பாடாக காணப்படுகின்றது. இவ் அதீதபுலனுணர்வுச் சக்திகளின் பிரயோகமானது மேன்மைநினைவு நிலையை அடைவதற்கு தடையாக இருக்கக்கூடாது. இக்கருத்துக்கள். பதஞ்சலியின் யோகக்கோட்பாடுகளிலும் ஸ்ரீஇராமகிருஸ்ணரின் போதனைகளிலும் வலியுறுத்தப் படுகின்றது. சிலசமயங்களில் உளரீதியாக தகவல் பெறுதலும் எதிர்கால நிகழ்வுகளைக் கூறுவதும் யோகப்பயிற்சிகள் மூலமும் மனத்தினை சரியான தியானத்தினால் செம்மைப்படுத்திய நிலையிலும் வெளிப்படுவதாக சொல்லப்படுகின்றது. யோகப்பயிற்சிகளை செம்மையாக செய்கின்றபோது அதீத புலனுணர்வுக் கிரகித்தல்கள் இடம் பெறுவதாகவும் அதன்மூலம் பௌதீகவிதிகள் கட்டுப்படுவதாகவும் பதஞ்சலி முனிவர் குறிப்பிடுகிறார்.

மேல்நாட்டு உளவியலாளர்களின் பரிசோதனை மற்றும் ஊகவழி முறைகளுக்கும் இந்துக்களின் உள்ளுணர்வு ரீதியான யோகப்பயிற்சிகளுக்கும் இடையே தெளிவான வேறுபாடுகள் காணப்படுகின்றன. உள்ளத்தின் உள்ளக நிலைகளையும் தூண்டல்களையும் விளங்கிக் கொள்வதற்கு வழமையானதும் வழமையற்றதுமான வெளிவாரி வெளிப்பாடுகளை விளங்கிக்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒரு வெளிப்பாட்டுக்கு வெவ்வேறு காரணங்கள் இருக்கலாம் இதனை தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும். ஒரு பகிடிக்கு, மூடனொருவன் மூன்று முறை சிரிக்கிறான். இங்கு ஏனையோர் சிரிப்பதை பார்த்து முதலில் அவன் சிரிக்கிறான். அதனை அவன் விளங்கிக் கொள்ளும்போது மீண்டும் சிரிக்கிறான். பின்பு முதற் தடவையில் அப்பகிடியை விளங்கிக்கொள்ளாத அளவுக்கு தான் ஒரு முட்டாளென்று நினைத்து சிரிக்கிறான். இங்கு வெவ்வேறு மூன்று காரணங்களால் சிரிப்பு ஏற்பட்டது போன்று வெளிவாரியான ஒரு வெளிப்பாடும் வெவ்வேறு உள்ளக உணர்வுகள் அல்லது தூண்டல்களால் ஏற்பட முடியும் என்பது புலனாகிறது. இதன் விளைவாக அர்தப்படுத்தல் முறையால் மனதின் உள்ளகத்தன்மையின் நம்பத்தகுந்த விளக்கத்தை வழங்க முடியாதுள்ளது. ஏனெனில் சைகோசிஸ் போன்ற நோய்கள் மனநிலைகளில் வெவ்வேறு அடிமன மற்றும் நினைவுநிலைத்தூண்டல்களை ஏற்படுத்தியிருக்கலாம் ஆதலால் முழு மனதின் தெளிவானதும் முடிவானதுமான விளக்கத்தை வழங்குகின்ற உளவியலின் வரலாற்று வழிமுறைகளுக்கு இந்துக்கள் தம்மை அர்ப்பணித்துள்ளனர் என்பது புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலை நாட்டு உளவியலின் அர்த்தத்தில் இந்து உளவியலானது பரிசோதனை ரீதியற்றதாக இருப்பதால் உளவியல் ஆய்வின் வலிதான தன்மையைப் பெறமுடியாது என்ற சந்தேகத்தன்மை மேலைத்தேயத்தில் காணப்படுகிறது. இருந்த போதிலும் இந்து உளவியல் அனுபவரீதியில் ஆய்வு செய்யப்பட வில்லையென ஒரு போதும் சொல்ல முடியாது ஏனெனில் மனதினது அனுபவத்தின் அடிப்படையிலேயே ஆய்வுகள் இடம் பெற்றிருப்பது கண்கூடு.

இந்து உளவியலின் வரலாற்று மற்றும் உள்ளுணர்வுரீதியான வழிமுறை என்பது சிந்தனை, உணர்வு, மற்றும் திடசித்தம் உட்பட நபரின் முழு மனதினையும் பயிற்றுவிப்பதை இது குறிப்பதாக அமைகிறது. மனதின் வெளிவாரியான வெளிப்பாடுகளின் அர்த்தப்படுத்தல்கள் எப்பொழுதும் நம்பகமானதாக இருக்காது என்பதால் உளவியல் ரீதியான உண்மைகளும் அபிவிருத்தியும் தனிநபரின் மனவளர்ச்சியினூடாக சரிபார்த்து விருத்தி செய்ய முடியுமென இந்து உளவியலாளர்கள் உறுதியாக நம்புகின்றனர். உளவியல் ரீதியான அபிவிருத்தியின் வழிமுறைகளை உண்மையாக பின்பற்றுகின்ற ஒருவரால் தனித்துவமான வளர்ச்சியை அடைய முடிவதுடன் பல நபர்களின் அனுபவங்களினூடாக கண்டறியப்பட்ட கோட்பாடுகளை சரிபார்த்து கொள்ளவும் முடியும். இவற்றில் இந்து உளவியலாளர்கள் நம்பிக்கை கொண்டிருப்பதால் விஞ்ஞானரீதியானவர்களாகவும் இலங்கியலுடையவர்களாகவும் விளங்கு கின்றனர். மேல்நாட்டு உளவியலானது தலைசிறந்த உளவியலாளர்களினால் இயங்கியற் தன்மையுடை யதாக எடுத்தாளப்படுகின்றது. இந்து உளவியலும் தனிநபரின் மனதை அதனுள் மறைந்துள்ள சக்திகள் யாவற்றினையும் வெளிப்படுத்துவதற்குப் பயிற்றுவிப்பதால் இயங்கியலுடையதென்பதாகும். உளவியல் ரீதியான பயிற்சிகளால் மனதின் இயங்குநிலைச் சக்திகள் வளர்ச்சி பெற்று ஏனையோரின் உணர்ச்சிகளையும் ஏனைய உளச்செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்து மனதினை சக்திமிக்கதாக்கு கின்றது.

இந்து உளவியலாளர்கள் மனதின் வெவ்வேறு தொழிற்பாடுகளை தனித்தனியாக பரிசீலிப்பதிலும் பார்க்க முழுமனதின் ஆய்விலும் அபிவிருத்தியிலும் பிரதானமாக ஆர்வமுள்ளவர்களாக உள்ளனர். மேல்நாட்டுப் பரிசோதனை உளவியலாளர்கள் உளச் செயற்பாட்டின் குறிப்பான கட்டங்களில் ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றனர். மேல்நாட்டு உளவியலின் தனது மதிப்பீட்டில் பேராசிரியர் ஹொக்கிங் (Hocking) கூறுகையில் "உள்ளம் பற்றிய விஞ்ஞானங்கள் எமக்கு வழங்கியிருப்பது உள்ளத்தைப் பற்றியது அல்ல.... ஆனால் மனதிற்கான பதிலீடுகளேயாகும் அவற்றை மனத்தின் அண்மை என அழைக்கலாம்" என்றார். நரம்புகளிலிருந்து வேறாகவும் தனியாகவும் மனம் இயங்குகின்றது என்பதை இந்துக்கள் ஏற்றுக்கொள்ளுகின்றனர் என்பதை இங்கு நினைவு கூருவது பொருத்தமானதாகும்.

மேலைத்தேய உளவியலாளர்கள் உளத்தொழிற்பாடுகளை அவர்களின் பரிசோதனை முறைகளில் தனித்தனியாக கையாளுவதன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளத்தொழிற்பாட்டின் வெவ்வேறு கட்டங்கள் குறித்து அக்கறை கொண்டவர்களாக இருக்கையில் இந்து உளவியலாளர்கள் முழு மனதின் ஆய்வில் பிரதானமாக ஆர்வம் கொண்டவர்களாகவுள்ளனர். ஏனெனில் நினைவுநிலை, நினைவிலிநிலை, மேன்மை நினைவுநிலை, கிரகித்தல், திடசித்தம், செயற்பாட்டில் விருப்பு, போன்ற வேறுபட்ட தொழிற்பாடுகளை உண்மையில் பிரிக்க முடியாதென அவர்கள் கருதுவதனாலேயேயாகும். மேலும் இவை ஒன்றுக்கொன்று தொடர்பு பட்டவையுமாகும்.

ஒரு சிந்தனையானது கவர்ச்சி அல்லது வெறுப்பு, இன்பம் அல்லது துன்பம், அன்பு அல்லது துவேசம் போன்ற உணர்வுகளினூடாக ஏற்படுகின்றது. சிந்தனையையும் உணர்ச்சியையும் வேறாக்கி தனியாக அவதானிக்க முடியாது. அத்துடன் சிந்தனையை உள்ளத்தின் செயற்பாட்டிலிருந்து பிரித்து அவதானிக்கவும் முடியாது. அல்லது அறிவின் உள்ளடக்கம் மற்றும் அதன் வெளிப்பாடு ஆகியவற்றி லிருந்து உணர்ச்சிகளை வேறாக்கவும் முடியாதுள்ளது. சிந்தனை உணர்ச்சி, திடசித்தம் ஆகிய பிரிக்க முடியாதவாறு இணைக்கப்பட்டுள்ளதால் இந்து உளவியலாளர்கள் மனதை விருத்தி செய்து ஒன்றிணைக்க முயலும்போது இத்தொழிற்பாடுகளை சேர்த்தே ஆய்வு செய்கின்றனர். முழுமையான அபிவிருத்தியை எட்டும்போது மட்டுமே அடைய முடியுமென அவர்கள் கருதுகின்றனர். இவர்களின் கருத்துப்படி உள்ளத்தின் முழுமையான ஒருங்கிணைப்பின்றி மனதின் நிலையை முழுமையாக ஆய்வு செய்யவோ அல்லது அறியவோ முடியாது என்ற கருத்துக்களை புலப்படுத்துவதாக அமைகிறது.

அநேகமாக அமெரிக்க உளவியலாளர்கள் மனதின் இயங்குசக்திக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அதாவது உள்ளமானது எவ்வாறு செயற்பட்டு பிரதிபலிக்கின்றது என்பதனைக் கண்டறிவதற்காக உடலின் செயற்பாடுகளை அறிவதுதான் இவர்களின் பிரதானமான ஆர்வமாகவுள்ளது. மறுபுறத்தில் இந்து உளவியலாளர்கள் முழு மனத்தையும் புரிந்து கொண்டு அதனைப் பலப்படுத்த முயல்கின்றனர். ஆகையால் இவர்கள் குணவியல்பு மற்றும் ஆளுமையின் விருத்தி அக்கறை கொண்டவர்களாக உள்ளனர்.

பதஞ்சலியின் காலத்திற்கு முன்பே (கிட்டத்தட்ட 150 கி.மு) உளவியற் கோட்பாடுகளை இந்தியாவில் கற்பித்த அதிகளவிலான உளவியலாளர்களின் முக்கியத்துவம் குறித்து நாம் குறைத்து மதிப்பிட முடியாது. உபநிடதங்கள் மற்றும் பகவத்கீதை சாங்கிய, பௌத்த முறைகளில் பிரயோக உளவியல் கற்பிக்கப் பட்டிருக்கின்றது. இவற்றில் உள்ளம் முழுமையான ஞானம் அடைவதற்கான அறிவுறுத்தல்களையும் வழிமுறைகளையும் விளக்கியுள்ளனர்.

உயர்வான சமய அனுபவத்தை அடைவதற்கான வழிகளை இந்துக்கள் விளக்குகையில் அவர்களாலேயே பிரதானமாக உளவியல் விஞ்ஞானம் விருத்தி செய்யப்பட்டது. உயர்வான நினைவு நிலையை அடையக்கூடிய வகையில் மனதைப்புரிந்து கட்டுப்படுத்துவதற்கு பல வழிகளையும் பயிற்சிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கியுள்ளனர். பதஞ்சலியின் கோட்பாடுகளின்படி மனம் ஒரு நிலைப்பட்டு ஆழமான தியானநிலையை அடையும் போது மனம் முழுமையாக தெளிவுபெற்று நரம்பு மண்டலத்தின் மட்டுப்படுத்தல்களைக் கூடகடந்து செல்லக்கூடிய தாகவுள்ளது. அத்துடன் வேறொரு தளத்தை உடனடியாகவும் நேரடியாகவும் மனதினால் அடைய முடியும். இந்த நிலையில் மனம் உண்மையை அனுபவிக்கிறது. இது ராஜயோகத்தில் விவேகானந்தரால் விரிவாக விளக்கப்பட்டது.

மனத்தினால் நினைவு நிலைக்கு அப்பாலும் செல்லமுடியும். நிலைவிலிச் செயற்பாடானது நினைவு நிலைக்கு அப்பாலுள்ளது போன்று நினைவுநிலைக்கு மேலாகவும் வேறொரு செயற்பாடு உண்டு. அங்கு நான் என்ற முனைப்பான உணர்வு இருக்காது ஆழமான தூக்கத்திற்கு ஒருவன் செல்லும்போது அவன் நினைவுநிலைக்கு அப்பாலுள்ள ஒரு தளத்திற்கு செல்கிறான். இங்கு அவன் சுவாசிக்கிறான். உடலை அசைக்கிறான் நித்திரையிலிருந்து அவன் விழிப்புறும்போது நித்திரைக்குச் சென்ற அதேமனிதனாக உள்ளான். நிதிதிரைக்குச் செல்லமுன் அவனுக்கிருந்த அறிவின் அளவு மாறவேயில்லை. ஞானமும் ஏற்படவில்லை. ஆனால் ஒரு மனிதன் தியானத்தின் மூலம் சமாதிக்குள் செல்லும்போது அவன் ஒரு முட்டாளாக அதனுள் சென்றாலும் ஒரு ஞானியாக (Sage) வெளி யேறுகிறான்.

இந்து உளவியலாளர்களின் கருத்துப்படி உள்ளமானது யோகப் பயிற்சியினூடாக ஒழுக்கக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படும் போது உடலின் மென்மையான நரம்பு இளையங்கள் ஒரு மாற்றத்தைப் பெறுகின்றன. உடல் மற்றும் உளச்சக்திகள் சீராக்கம் பெற்று அதன்விளைவாக உணர்வுச் சமநிலை விருத்திபெறுகிறது. மேன்மை நினைவுநிலை உணர்வை அனுபவித்த ஒரு மனிதன் முழுமனதையும் (நினைவுநிலை, அடிமனநிலை, மேன்மைநினைவுநிலை) விளங்கிக் கொள்கிறான். நரம்பு மண்டலத்தின் துணையின்றி மனம் தனியாக செயற்படுகின்ற ஒரு நிலையை மனிதன் அடைவதாக சுவாமி பிரமானந்தாவின் போதனைகளில் கூறப்பட்டுள்ளது.

இவற்றிலிருந்து இந்திய உளவிய சிந்தனைகள் தத்துவக் கருத்துக்களோடு இணைவுற்று மனிதனின் அகச்செயற்பாடுகளையும் அச்செயற்பாடுகளால் புறத்தில் வெளிப்படுகின்ற செயல்கள் என்பவற்றினையும் ஆராய்வதுடன் மருத்துவத்துறை, மற்றும் ஆரோக்கியமானவாழ்வு, மனத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய யோக, தியானப் பயிற்சி முறைகள் எனப்பலதரப்பட்ட பார்வையில் உளவியலை நோக்குகின்றது. மேலைத்தேய உளவியல் சித்தனையானது புறவயத்தன்மை கொண்டதாக பரிசோதனை மற்றும் ஊக வழிமுறைகளுடன் கூடிய ஆய்வாக, உளச்செயற்பாட்டின் குறிப்பிட்ட சில கட்டங்களை ஆய்வு செய்வதாக அமைந்திருப்பது புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி. பிறிஸ்கா எல்சி ராஜன்
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், செட்டிகுளம்.

# அறநூல்கள் காட்டும் பெண்கள்- இல்லாள்

அறநூல்கள் அதிக அளவில் எழுந்தமையினால் அறநெறிக்காலம் என சங்கமருவிய காலம் அழைக்கப்படுகின்றது. அறத்திணை, புறத்திணை மரபு தழுவிய சங்க கால வாழ்க்கை முறையானது அக்காலத்தின் இறுதிப்பகுதி தொடக்கம் மாற்றங்களுக்கு உள்ளாகத்தொடங்கியமை, களப்பிரர் ஆட்சிமுறை, சமண பௌத்த மதங்களின் வரவும் தாக்கங்களும் சைவ வைணவ சமயங்களின் வரவும், வடமொழி இலக்கிய செல்வாக்கு, முதலியவை அறநூல்கள் சங்கமருவிய காலப்பகுதியில் அதிகம் எழக் காரணங்களாயின.

திருக்குறள் , நாலடியார், ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், இன்னாநாற்பது, இனியவைநாற்பது, பழமொழிநானூறு, நான்மணிக்கடிகை, ஆசாரக்கோவை, முதுமொழிக்காஞ்சி ஆகியவை அறநூலாக தோற்றம் பெற்றன. மேற்கூறிய அறநூல்களில் இல்லாள் பற்றி குறிப்பிடப்படுவனவற்றை பற்றி இங்கே நோக்கலாம்.

அறநூல்கள் முக்கியப்படுத்துகின்ற பெண்களுள் இல்வாழ்க்கையில் ஈடுபடும் பெண்கள் முதன்மையிடம் பெற்றுள்ளனர். "இல்லாள்" இல்லத்தை ஆள்பவள் என்ற விதத்தில் சிறப்பிற்குரியவளாகின்றாள்.

திருக்குறள் இல்லாள் பற்றி விரிவாக கூறுகின்றது. இல்லாள் தன் கணவனையே தெய்வமாக கொண்டு அவனைத் தொழுது நித்திரை விட்டெழுதல் வேண்டும். அப்படிப்பட்டவள் மழையை நோக்கி "பெய்" எனக் கூறினால் மழை கூட பெய்யும் என்கிறது திருக்குறள்.

திரிகடுகம் கூறும் இல்லாள் விரதங்களை முறையாகச் செய்கின்ற தபசி குடிமக்களுக்கு நன்மை செய்கின்ற அரசன் ஆகியோரையும் அந்நிலைக்கு உயர்த்துவது என கூறுகிறது.

நாலடியார் மாட்சியுள்ள மனைவியில்லாத வீடு, மேகம் தவழும் மாடி கொண்டதாயிருந்தாலும் அணிகலன்கள் விளங்க ஒளி வீசினாலும் அது காடு என்றே குறிப்பிடுகின்றது.

சிறுபஞ்சமூலம் இல்லாளின் விருந்தோம்பற் கடமையை வற்புறுத்துகின்றது. ஒரு குடம் நீரைக் காய்ச்சி குடிக்கத்தக்க துன்பம் வந்த போதும் கடல் நீர் முழுவதும் பருகத்தக்க துன்பம் வந்த போதும் கடல் நீர் முழுவதும் பருகத்தக்க உறவினர் வந்தாலும் விருந்தோம்பலாகிய தன் குணத்தை ஒழுக்கமாகக் கொண்டு ஒழுகும் பெண்ணே இல்வாழ்க்கைக்குப் பெருமை தரக்கூடியவள் என்று விருந்தோம்பலிற்கும் முதன்மை இடம் கொடுக்கின்றது. மேலும் இல்லறம் நடத்தும் திறமை பற்றியும் கூறுகிறது. பெண் எத்தகைய நிலையாயினும் அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவரிடிந்தமையால் நான்கு பக்கமும் வழிகளையுடையதாய் மிகவும் சிறியதாய் எல்லா பக்கமும் மேல் வழியாய் தன்மேல் மழைநீர் ஒழுகினாலும் இல்லறம் நடத்தும் திறமையை பெற்றிருக்க வேண்டுமெனவும் குறிப்பிடுகின்றது. மேலும் கணவன் உண்ட மீதி உணவை மனைவி உண்ணுதல் பற்றியும் வற்புறுத்துகின்றது. இத்தகைய கடப்பாடுகளை மீறுவோர் கண்டனத்திற்குள்ளாகின்றனர். "அடி" என்று எதிர்த்து நிற்பவள், "யமன்" என்றும் அதிகாலை சென்று சமைக்கத்தொடங்காதவள், "அரிய நோய்" என்றும் இம் மூவரும் தம்மை மனைவியாகக் கொண்ட கணவருக்கு "கொல்லும்படை" என்றும் குறிப்பிடப்படுகின்றது.

பெண்ணுக்குரிய கடமைகள் என்ற ரீதியில் பெண்ணை, தாய், மனைவி, நண்பி ஆகிய மூன்று நிலைகளில் பார்க்கின்றது. தாய் இல்லறத்தை கவனிப்பவள், மனைவி கணவனைப் போற்றி அவனுக்குரிய கடமைகளை சரிவர நிறைவேற்றுபவள், நண்பி விருந்தினரை உபசரிப்பவள் என்று சிறுபஞ்சமூலம் கூறுகின்றது. திருக்குறள் இல்லறம் நடத்தினால் பெருஞ்சிறப்புடைய மேல் உலகவாழ்க்கை பெண்ணுக்கு கிட்டுமென்று குறிப்பிடுகின்றது. நன்மக்களைப் பெறுவதனையும் இல்வாழ்க்கையின் அணிகலனாக திருக்குறள் குறிப்பிடுகின்றது.

திருக்குறள் பெண்ணுக்குரிய நல்லொழுக்கம் பற்றி முக்கியமாக கற்புடைமையைப் பேணவேண்டுமென்று கூறுகின்றது. "மனஉறுதி" என்பது கற்பு என திருக்குறள் கூறும் வரைவிலக்கணம் ஆகும். கற்பின் காவல் பற்றி பெண்ணை வீட்டுச் சிறையிலிட்டு காவல் செய்வதால் பயனில்லை, பெண்ணே தனது திறமையால் தன்னைக் காப்பதே சிறந்தது என்று குறிப்பிடுகின்றது. நாலடியார் கற்பு என்பதற்கு "தன்னைப் பெறவேண்டும் என்னும் ஆசையால் விரும்பித் தன் பின்னே நிற்பவர் இல்லாதபடி செய்துகொள்ளும் குணம்" என்று கூறுகின்றது. "கற்பின் காவல்" என்பதனை, தவறு சிறிதுமற்ற வாள்வீரனின் காவலுக் குள்ளிருப்பினும் அத்தகைய பெண்கள் குற்றம் சிறிதும் செய்யாதிருக்கும் காலம் சிறிது, ஒழுக்கமற்ற காலமே பெரிது எனக் குறிப்பிடுகின்றது.

சிறுபஞ்சமூலம் இல்லறப்பெண்ணின் காவலுக்கு அறிவில்லாதவர்களை ஏற்படுத்தினால் சோற்றுக்குக் காக்கையைக் காவல் வைத்தது போலாகும் எனவும் கற்பினை அழிவுவராமல் காப்பவர்கள் கணவன், கணவனுடன் பிறந்தவன், தன் மாமன், மகன், தந்தை ஆகிய ஐவருமாவர் என்றும் குறிப்பிடுகின்றது. அறநூல்களில் பெண்களுக்குரிய இயல்புகள் அடக்கமுடைமை, கற்பு நெறிகளுடன் கணவனுக்குத் துணையாக குடும்ப வாழ்வை நடத்துபவளாக இல்லாள் என்பவள் இடம்பெறுகின்றாள். பெண்ணுக்குரியதான ஒழுக்கமும் அதன் கடமைகளும் வாழ்க்கை முறைகளும் வற்புறுத்தப்படுகின்றன. அறநூல்களில் பெண்களுக்கான ஒழுக்க விழுமியக் கோட்பாடுகள் ஆணாதிக்கம் சார்ந்த அறக் கருத்து நிலையுடையதாகவுள்ளது. ஒழுக்கம், அறம் சார்ந்து இருபாலாரதும் பொதுப்பண்பிலானது என்பதனை தெளிவுற உணர்தல் அனைவருக்கும் அவசியமானதொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்தமிழ் இனியன் செ.ஸ்ரீநிவாசன்**
மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்
வவுனியா.

# சமூகப் பாதுகாப்பிற்கு வழி கோலும் மனிதனின் இலக்கியத் தேடல்

இன்று எமது சமூகத்திலே பல்வேறு விதமான பிறழ்வுகள் இளம் சமூகத்தினரிடையே ஏற்படுகின்றன. இன்றைய சமூகத்தில் இளம் தலை முறையினரை மனதிலாவது நிந்திக்காத ஒருவர் கூட எம்மிடம் இல்லை எனலாம். ஏன் எனில் மூத்தோரை மதியாமை, தாய் தந்தையரை ஆதரிக்காமை, ஆசிரியர்களை போற்றாமை, என ஒருபுறமிருக்க... போதைப்பொருள் பாவனை, வாள்கலாச்சாரம் , வன்முறை அடாவடி,மற்றவரை நையாண்டி செய்தல், முயற்சியின்றி வெட்டிப்பொழுது போக்குதல் ,இளம்பெண்களை வம்புக்கு இழுத்தல, மற்றவர்பற்றி தவறான பார்வை என பல பண்புகள் அரங்கேறுகின்றன. இவை சமூகத்தின் ஏற்றத்திற்கும் மாற்றத்திற்கும் ஏற்றவையல்ல. பண்பட்ட வளமான இளம் சமூகம் ஒன்றை நாம் உருவாக்க வேண்டும்.

“ **ஈன்றுபுறந்தருதல் எம் கடன் சான்றோன் ஆக்குதல் தந்தை கடன்”**

என்று நாம் கடமையை தனியே பெற்றோரிடம் சுமத்திவிட்டு நின்று வேடிக்கை பார்க்க முடியாது. இது சமூகத்தின் பொறுப்பு. இன்று எரிமலை ஒன்றின் உச்சியில் நாமும் சமூகமும நின்று கொண்டிருக்கிறோம். யுத்தம் ஓய்ந்து ஒரு தசாப்தம் கடந்தாலும் மழை விட்டும் தூவானம் நிற்காத நிலை தான் அனைத்திலும் எம் நிலை. இளம் பிள்ளைகள் இன்று அதிகம் கோபப்படுகிறார்கள், தோல்விகளை தாங்கும் திராணியற்றவர்களாக உள்ளனர், அதிக சிந்தனைச் சிதறலுக்கு உட்படுகிறார்கள் . இதனை கருத்தில் கொண்டு தான்,

**“கிளிபோல பேசி.. குயில் போல பாடி ...**
**மலர்போல சிரித்து... குறள் போல வாழு..”**

என ஒரு கவிஞன் கனவு கண்டான்.

**“மனதோடு கோபம் நீ வளர்த்தாலே பாவம்**
**மெய்யான அன்பே தெய்வீகமாகும”**

என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து வாழவேண்டும் .

இன்று எது சரி எது பிழை என்பதை நாம் புரிவதில்லை. எல்லாவற்றையும் நம்புகிறோம். போலியான நட்புகள் உறவுகளும் அப்படித்தான் . இவற்றை நாம் அடையாளம் காணும் திறனை வளர்க்க வேண்டும். மற்றவர் எமக்கு செய்கின்ற துன்பங்களுக்கும் அவர்களுக்கு நன்மை செய்ய முற்படவேண்டும். பழிக்குப்பழி வாங்கும் மனோ பாவத்தை அகற்ற வேண்டும் .

**மன்னிக்கத்தெரிந்த உள்ளம் மாணிக்க கோயிலடா...**

என்ற உன்னதத்தை மனதில் இருத்த வேண்டும். எதையும் எளிமையாக எடுத்துக் கொள்ளப்பழகவேண்டும். அப்படி இருப்பின் நாம் என்றும் மற்றோரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றப்படுவோம்.இதற்கு இலக்கியத்தில் பல ஆதாரங்கள் உள்ளன. சிலப்பதிகாரத்திலே மாதவியிடம் சென்ற கோவலனை மீண்டும் வரவழைக்க தேவந்தி, கண்ணகியை தெய்வத்தை வழிபடும்படி கூறுகிறார்.

**"சோமகுண்டம் சூரிய குண்டம் மூழ்கி**
**புண்ணியத்துறைகளில் நீராடி எழுந்து**
**காமனை வழிபட்டால் கணவனை அடைந்து இன்புறுவர்"**

என்று கூறுகிறார்...இதற்கு பொறுமையே வடிவமான கண்ணகி..**பீடு அன்று**..அது பெண்களுக்கு பெருமையல்ல கணவன் தானாகவே வருவதே பெருமையென காத்திருக்கிறாள். இப்படி பொறுமையான மனநிலையை வைத்துக்கொண்டால் எமக்கு ஆசை, களவு, கோபம் வராது. மாறாக நாம் அன்பு, நன்றி, கருணை உள்ளம் கொண்டவர்களாக வாழ முடியும். இராமாயணத்திலே இராமனின் பொறுமையும், எதையும் ஏற்றுக் கொள்ளும் மனநிலையும் இன்றைய சமூகத்திற்கு இளைஞர்களுக்கு வர வேண்டும். இதனை விளக்கும் அற்புதமான காட்சி இது.

**"ஆதிசூழ் உலகமெலாம் பரதனே ஆழ, நீ தாழ் இருஞ்சடைகள் தாங்கி,**
**ஆங்கருந்தவமேற்கொண்டு, பூழி வெங்கானம் நண்ணி,**
**புண்ணியத்துறைகள் ஆடி, ஏழ் இரண்டு ஆண்டின் வா..."**

என்று கைகேயி சொன்ன காட்சியில் இராமபிரான் சொன்ன பதில் நீங்கள் அறியாததல்ல..மிகச்சாதாரணமாக..கூறுகிறான் ...

**"மன்னவன் பணியன்றாகில், நும்பணி மறுப்பேனோ..,**
**என் பின்னவன் பெற்ற செல்வம்,அடியனேன் பெற்றதன்றோ...!**

என்கிறான். இப்படி குணங்கள் உள்ளவன் மனிதனாகப் பிறந்தாலும் தெய்வநிலைக்கு உயர்வான் என்பது தான் இலக்கியங்கள் காட்டி நிற்கும் உண்மை.

இன்று மனிதர்களிடையே விட்டுக்கொடுப்புக்களும் இல்லாது போய்விட்டன.

**"விட்டுக் கொடுப்பவன் கெட்டுப் போனதில்லை**
**கெட்டுப் போனவன் விட்டுக் கொடுத்ததில்லை"**

என்ற மகாபாரத வாழ்க்கையை நாம் உதாசீனம் செய்கிறோம். யார் பெரியவர் ஆகிறார்கள் என்றால் இராமனைத்தேடி பரதன் செல்ல குகனுக்கு தன்னுடன் வந்தவர்களை அறிமுகம் செய்யும் போது கோசலை பற்றிய பரதனின் வார்த்தைகளே நல்ல சாட்சி..

**"உலகு ஈன்றானை முன் ஈன்றானைப் பெற்றதால்,**
**பெறும் பெரும் பெரும் செல்வம் ,**
**யான் பிறந்ததால் துறந்த பெரியால்"** என்று பரதன் இராமனின் தாய் கோசலையை உயர்த்திப் பேசும் இடம் இங்கு பொருந்தக்கூடியது. விட்டுக்கொடுப்பின்மை தான் இன்று பல குடும்பங்களே பிரிவினைகளை நாடி நிற்க காரணமாகும்.

மற்றவர்களை அவர் மாண்புகளை மதிக்கக் கற்றுக்கொள்ளும் சமூகத்தை நாம் காண வேண்டும். மனிதரை மனிதர் அன்பு செலுத்த வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேசனைக்காணா இடத்து நெஞ்சாரத்துதித்தல்....
ஆசானை எவ்விடத்தும் அவ்வாறே.... ',
வாசமனையாளைப் பஞ்சணையில் ....மைந்தர் தமை நெஞ்சில்.....
வினையாளை வேலை முடிவில் .....என்ற ஔவையின் கூற்றை மனதில் கொண்டு பாராட்டு வழங்க வேண்டும். பிறரைப் பாராட்டுவது நீ உன்னையே பாராட்டுவதற்கு ஒப்பானது என கூறுவார்கள். மற்றவரை அவர் சிறியோராயினும் பெரியோராயினும் வியக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

"மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று மிதியாமை கோடி பெறும்,
உண்ணீரஉண்ணீர் என்று உபசரியார் தம்மனையில் உண்ணாமை கோடிபெறும்,
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு கூடுதல் கோடிபெறும்,
கோடானகோடி கொடுப்பினும் தம்முடைநா கோடாமை கோடிபெறும்"

என்ற ஔவையின் வாக்கை மதியாதார்வாசல் மிதிக்காதே என்று கண்ணதாசன் சொன்னதும் நிதர்சனமானவை.

இன்று பலரும் தாமே தமது செயலில் துறை போனவர்கள் என இறுமாந்து இருக்கிறார்கள். மற்றவர்கள் மீது இலகுவாக குறை காணுவது..ஆராயாது விமர்சிப்பது..இதுவும் நல்ல சமூகம் உருவாக தடையாக இருப்பதில் ஒன்று தான். எல்லோரும் இந்நாட்டு மன்னர்களே என்ற உயர்ந்த தத்துவத்தை புரிந்து கொண்டால் எல்லோரிடமும் ஒரு தனித்தன்மை சிறப்புள்ளதை உணர்ந்து கொண்டால் , மனிதனை மனிதன் போற்றும் பக்குவத்தை வளர்த்துக் கொள்ளமுடியும். இங்கும் ஔவைதான் முன்நிற்கிறார்.

"வான்குருவியின் கூடு வல்லரக்குத்தொல்கறையான்,
தேன்சிலம்பி... யாவர்க்கும் செய்தரிதலால்
யாம்பெரிது வல்லோமே என்று வலிமைசொல வேண்டாங்காண் ...."

என்ற மூதாட்டியின் வாசகங்கள் என்றும் எப்போதும் இந்த சமூகத்திற்கு மருந்திடுகின்ற நல்ல ஒத்தடங்கள்.

மனிதர்கள் வளர்ந்தால் மட்டும் போதாது. 18 வயது தாண்டிவிட்டால் உலகத்தையே பிடித்துவிட்ட பிரமை பலருக்குத் தோன்றுகிறது. பிறகு 28 வயது வரும் போது தான் வாழ்க்கை புரியத்தொடங்குகிறது. கண் கெட்டபிறகு சூரிய உதயம் பிரஜோசனமற்றது. அந்த புத்தி நன்மைக்கு பதிலாக அது சமூகத்திற்கு தீங்கையே விளைவிக்கும். சமூகத்தின் மீது வெறுப்பைத்தூண்டுகிறது. அதனால்தான்,

"ஆளும் வளரனும் அறிவும் வளரனும்
அதுதாண்டா வளர்ச்சி..உன்னை ஆசையோடு,
ஈன்றவளுக்கு அதுவே நீ தரும் மகிழ்ச்சி" என்று

சொல்லிவைத்தார்கள்.

மனிதனாக வாழ்ந்திட வேண்டும்
மனதில் வையடா...வளர்ந்துவரும் உலகத்திற்கே
நீ வலது கையடா..!

என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிளிபோலபேசி.. குயில்போல.. பாடு...மலர்போல.. சிரித்து... குறள் போல வாழு...." என்ற

நெறிமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

"மனதோடு கோபம் நீ வளர்த்தாலே பாவம்

மெய்யான அன்பே தெய்வீகமாகும்..." என்பதை உணர்ந்து தெய்வநிலைக்கு உயர முயற்சி செய்தால் சமூகத்தில் நல்லவிடயங்களே எப்போதும் நடந்தேறும்.மனதில் இனிமை குடிகொள்ளும் காண்பவை எல்லாம் தெய்வம் போல தெரியும்.

"அவன் பூவிரியும் சோலையிலே மணப்பான்
இசைப் பூங்குயிலின் தேன் குரலில் இருப்பான்
குளிர் மேகமென தாகத்தையே தணிப்பான்
தளிர் கொடி விளையும் கனியெனவே இனிப்பான் "

என்ற உயர்ந்த மனநிலை தோன்றும்.இந்த நல்லமனமே மகாகவி பாரதிக்கு **"எங்கெங்கு காணிலும் சக்தியடா"** என்று பார்க்கத் தோன்றியது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற சிந்தனையை இளையோரிடம் வலுவாகப்புகுத்த வேண்டும். **"தாயைப்போற்றி வீழ்ந்தவனுமில்லை தாயைத்தூற்றி வாழ்ந்தவனுமில்லை"** **"கண்களை விளக்காக்கி ,கைகளைத்தொட்டிலாக்கி, இரத்தத்தைப்பாலாக்கி"** எம்மை வளர்க்கும் தாய்க்கு நாம் தலைவணங்க வேண்டும்.

"பாலூட்டும் அன்னை நடமாடும் தெய்வம்
அறிவூட்டும் தந்தை நல்வழிகாட்டும் தலைவன்"

"அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம்
தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம்
இரண்டும் இருந்தால் பேரை வாங்கலாம்
பேரை வாங்கினால் ஊரை வாங்கலாம்"

என்பதும் உண்மை வார்த்தைகள் தான். இவற்றை எல்லாம் நாம் எப்படி ஒன்றாகக் கடைப்பிடிப்பது..என்ற கேள்வி எழலாம். இதற்கு ஒரே வழி கற்பது தான். அதுவும் இளமையில் மாணவர்கள் நன்றாகக்கற்க வேண்டும்.சிறுவர்கள் நாளைய தலைவர்கள். பிள்ளைகள் கல்வியை கண்போல காக்கவேண்டும்.

**"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கை நன்றே..!"**
**"கற்கமறுப்பவன் வாழமறுக்கிறான்"** என்பதால் கல்வியை தவறாது கற்றால் மனித ஒழுக்கம் தானாக கூடிவரும். அதனால் தான் பெற்றோரே **"ஆயிரம் செல்வங்கள் ஈதலிலும் பிள்ளைக்கு சீராய்த்தரும் கல்வி மேல்"** என்றார்கள். பெரியோர். கல்வியாலும் பண்பினாலுமே இலக்கியத்தாலும் பிறழ்வற்ற உயர்ந்த சமூகத்தை நாம் உருவாக்க முடியும் எனலாம். அவ்வாறன கல்விதரும் அரிய பொக்கிஸமே இலக்கிய அறிவும் தேடலும் இதனை தேடிச் சுவைத்து வாழப்பழகி விட்டால் வாழ்க்கைப் பயணம் எளிதாகும். எப்போதெல்லாம் ஒரு சமூகம் உயர்ந்து நிற்கிறதோ அங்கெல்லாம் இலக்கியப்படைப்புக்கள் , பேச்சுக்கள் , ஆக்கங்கள் , இயல் இசை நாடகங்கள் எல்லாம் மக்களை வழிநடத்தி இன்புற்றிருக்க வைக்கும் சுவாசமாக காலக்கண்ணாடிகளாக விளங்கியுள்ளன, என்பதை நினைவில் கொள்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ. கஜேந்திரகுமார் M.A ,J.P
(இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)

# ஆடி அமாவாசை விரதத்தின் சிறப்பு

சந்திரனுக்குரிய கடக ராசியில் சூரியன் பெயர்ச்சியாகும் ஆடி மாதத்தில் வரும் ஆடி அமாவாசை தினம் ஒரு சிறந்த தினமாகும். ஜோதிட ரீதியாக பார்க்கையில் சூரியன் ஒரு மனிதனின் தந்தைக்கு காரகனாகிறார். சந்திரன் தாய்க்கு காரகனாகிறார். இந்த இருகிரகங்களும் கூடி வருகிற இம்மாதத்தில் மறைந்த நம் பித்ருக்கள் அல்லது முன்னோர்களை வழிபடுவதற்கான தினம் ஆடி அமாவாசை ஆகும். ஆடி அமாவாசையன்று விரதம் மேற்கொள்ளும் முறைகளை தெரிந்து கொள்வோம்.

இந்த ஆடி அமாவாசை தினத்தன்று அதிகாலை பிரம்ம முகூர்த்த நேரமான 4 மணியளவில் துயிலெழுந்து குடும்பத்தில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் தலைக்கு ஊற்றி குளித்து விடவேண்டும். பின்பு உணவு மற்றும் வேறு பானங்கள் ஏதும் அருந்தாமல் வீட்டின் பெண்கள் மறைந்த முன்னோர்களுக்கு விருப்பமான உணவு பண்டங்களை தயாரிக்க வேண்டும். வீட்டின் பூஜையறையை சுத்தம் செய்து அரிசி மாவு கோலமிடவேண்டும். பின்பு ஒரு மர பீடத்தை வைத்து அதன் மீது ஒரு வெள்ளை துணியை விரித்து, நமது முன்னோர்களில் ஆண் மற்றும் பெண்ணை குறிக்கும் வகையில் ஒரு வேட்டியையும் ஒரு புடவையையும் வைக்க வேண்டும்.

அந்த பீடத்திற்கு இரு புறமும் குத்துவிளக்கில் தீபமேற்றி, தூபங்கள் கொளுத்தி, பழங்கள் மற்றும் தயாரிக்க பட்ட உணவுகளை படையலாக வைத்து, முதலில் உங்கள் குலதெய்வத்தை வணங்கி பீடத்தில் வைக்கப்பட்ட துணிகளை நம் முன்னோர்களாக பாவித்து, கற்பூர ஆரத்தி காட்டி வணங்க வேண்டும். குடும்பத்தில் உள்ள அனைவரும் தங்களின் முன்னோர்களை இம்முறையில் பூஜிக்க வேண்டும். இந்த பூஜையின் போது ஆடி அமாவாசை விரதம் இருப்பவர்கள் காலை உணவை உட்கொள்ளாமல் விரதம் இருக்க வேண்டும்.

பூஜையை முடித்த பின்பு படையலில் சிறிதை எடுத்து நமது முன்னோர்களின் அம்சமாக கருதப்படும் காகங்களுக்கு உண்ண வைக்க வேண்டும். பின்பு நீங்கள் வணங்கும் இறைவனை குறித்த மந்திரங்கள், பாடல்களை பாடி. தியான நிலையில் இருக்க வேண்டும். மதியம் ஆன உடன் முன்னோர்களின் விருப்பமாக சமைக்கப்பட்ட உணவுகளை உண்டு உங்களின் விரதத்தை முடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இன்றைய தினத்தில் உணவு, ஆடை மற்றும் பிற எந்த வகையான தான தர்ம காரியங்களை செய்வது இறந்த முன்னோர்களது ஆசிகள் என்றென்றும் அக்குடும்பத்தின் சந்ததியினருக்கு பெற்று தரும். பரம்பரையில் ஏற்பட்டிருக்கும் தேவ மற்றும் பித்ரு சாபங்களை போக்கும். துர்மரணம் அடைந்து நற்கதி அடையாமல் இருக்கும் முன்னோர்களின் ஆன்மா சாந்தமடையும்.குடும்பம் மற்றும் தொழிலில் உள்ள அனைத்து விதமான தடைகளும் நீங்கும். துயரங்கள் அனைத்தும் விலகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











# வௌவாலை சந்திரசேகரீச்சரம்

அருவியாற்றங்கரைப் பிரதேசத்தில் தொன்மைச் சிறப்புப் பெற்றதும், திருக்கேதீச்சர ஆலயத்துடன் சமகாலச்சிறப்புடையதாகவும், பஞ்ச ஈச்சரங்களில் முதன்மை ஈச்சரமாகவும் வௌவாலை சந்திர சேகரீச்சரம் காணப்படுகின்றது. வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிலே, கப்பாச்சி என்னும் கிராமத்தை அடுத்து வௌவாலைப் பிரதேசம் காணப்படுகின்றது. எல்லாள மன்னனது காலப்பகுதியில் வௌவாலை இராசதானியாக சிறப்புப் பெற்றுள்ளமைக்கான சான்றுகள் காணப் படுகின்றன. பல்வேறுபட்ட காலங்களில் பலவகையான தாக்கங்களிற்கு முகங்கொடுத்த இவ்வாலயம், ஈற்றில் போத்துக்கேயர் காலத்தில் முற்றாக அழிக்கப்பட்டது. 17ம் நூற்றாண்டில் கண்டி அரசில் பல ஆண்டுகள் கைதியாக வாழ்ந்து பின் தப்பியோடிய ஆங்கிலேயனான "றொபர்ட் நொக்ஸ்" தனது பயண அனுபவத்தைக் குறிப்பிடும் போது, அருவியாற்றங்கரையில் சிறப்புப் பெற்றிருந்த வௌவாலை சந்திரசேகரீச்சரம் பற்றியும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வௌவாலை சந்திரசேகரீச்சரத்தின் ஆலய வெளித்தோற்றம் அழிக்கப்பட்டாலும், வௌவாலை தீர்த்தக்கேணி இன்றும் வற்றாநீர்நிலையாக அடியவர் களுக்கு அருள்பாலித்து வருகின்றது. இக்கேணி தென்னிந்தியாவிலிருந்து கரையொதுங்கிய வீரவராயன் செட்டியால் புனரமைக்கப்பட்டதோடு இந்தியாவிலிருந்து சந்திரசேகரீச்சரருக்கு வெங்கலத் தினாலான சிலையினை கொணர்வித்து பிரதிஷ்டை செய்தமையால், ஏற்பட்ட காரணப்பெயரான வெங்கலச்செட்டி என்பதே பிற்காலத்தில் இப் பிரதேசம் முழுமைக்குமான பெயராக வெங்கலச் செட்டிகுளம் என்ற பெயர் நிலைக்க காரணமாக அமைந்தது. சந்திரசேகரீச்சரர் ஆலயம் இன்று பிரதேச ஆலயமாக மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் புனர்நிர்மாணம் பெறத் தொடங்கியுள்ளது. அருவியாற்றுத் தொன்மைப் பொக்கிஷங்களில் வௌவாலை சந்திரசேகரீச்சரம் முதன்மையானதாகும்.

-இரா.ஜயமோகன்

Printerd By. New Sky Printers, Vavuniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org